# THOLCAPYAM

## PORULATHIKARAM

WITH

PERÁSIRIAR'S COMMENTARIES

*(SEYYULYAL & MARAPYÁL)*

EDITED BY


Rao Bahadur S. BAVÁNANDAM PILLAI

F. R. H. S. (Lond.) & M. R. A. S. (Lond.)

MEMBER OF THE TAMIL BOARD OF STUDIES AND OF THE TAMIL COMPOSITION COMMITTEE, MADRAS UNIVERSITY; MEMBER OF THE TEXT-BOOK COMMITTEE OF THE MADRAS EDUCATIONAL DEPARTMENT AND OF THE TAMIL COMMITTEE OF THE MADRAS SCHOOL BOOK & LITERATURE SOCIETY.



PUBLISHED BY

LONGMANS, GREEN & CO.,

167, MOUNT ROAD, MADRAS,

BOMBAY AND CALCUTTA.

1917

Printed by Thompson & Co, at the "Minerva" Press,
33 Popham's Broadway, Madras

*"Grammar, though a difficult study, is absolutely necessary search after philosophical truth..................and is no necessary in the most important questions concerning religion and Civil Society."—Horne Tooke.*

ௐ

# தொல்காப்பியம்

## பொருளதிகாரம்

[பேராசிரியர் உரையுடன்]

(செய்யுளியல், மரபியல்.)


ராவ் பஹதூர்-ச. பவானந்தம் பிள்ளை அவர்கள்

எப். ஆர். எச். எஸ். (லண்டன்.) எம். ஆர். ஏ. எஸ். (லண்டன்.)

[சென்னை சர்வகலாசாலையின் தமிழ்க் கல்விச்சபை, தமிழ் வியாசச்சபை
இவற்றின் அங்கத்தினர். சென்னை 'கல்வி' இலாகாவைச்
சேர்ந்த 'டெக்ஸ்ட்புக் கமிட்டி' அங்கத்தினர். சென்னை
'ஸ்கூல்புக் அண்ட் லிட்டரேச்சர் சொஸைட்டி'
தமிழ்க் கமிட்டி அங்கத்தினர்.]


பதிப்பித்தது.


லாங்மென்ஸ் க்ரீன் அண்ட் கம்பெனியார்
167, மவுண்ட் ரோட், சென்னை.
பம்பாய், கல்கத்தா.

1917



[ரிஜிஸ்தர் செய்தது.]

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு.''—திருக்குறள்.

"நேர்பசைச்சீர் நந்தையொழிந் தேனைப் பதினொரு
நேராதி முன்பினிரண் டொன்றகற்றிச் சீராக
நீங்கிய வாறுக நிரைமுதல் பதநாக
வீங்கிரு *நூற்றொன்ப தென்."

எனவும்,

"நேர்முத லொன்ப திபற்சீ ருரிவெண்சீ
ராகியினி யிவ்விரண் டாகவொழிப்ப நேர்பொது
வெண்பாசீர் நந்தை நிரைமுதல் விழ்ந்ததைச
யந்தாதி பையபத்தா றாம்"

எனவும்,

"நேரசை யந்தாதி டனறிக நலசகலை பா
வாசலி ருங்கறுப த்தாம்."

எனவும்,

"அவ்வகை யந்தாதி மூந்நூற் றிருபத்தைந்
திவ்வகை முப்பாற் கியற்ற."

எனவும் இவ்வுரைச்சூத்திரங்களான் அந்தாதி முந்நூற்றிரு பத்தைந்தும் ஆயினவாறு அறிந்துகொள்க.

இனிச் சீரந்தாதி நூற்றுப்பத்தானகு. (164)

ஆவை ஆசிரியத்து வருங்கால் நேர்பசைச்சீரிரண்டும் நேமா விரண்டுமென நான்சனுவுந் தத்தம் முதனிலந்தொடங்கி ஒரோ வொன்று அவ்வாறுக வாரா திருபத் நான்காம். இனி நிரை முதற் சீருள் நிரைபசைச்சீ ரிரண்டும் புளிமாவு மென மூன்றொழிந்து ஒழிந்த பத்துச்சீரானும் வருங்கால் அவை உறழ்ந்த அடி பன்னிரண்டலும் முதனிலம் புணரும் பெருக்கமலத்திரண்டுமாக வைத்

* 'நூற்றொருபதென' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம். இது தவறுதல் கண்டுகொள்க.

தது ஒழித்து ஒரோவொன்று எவ்வேழாக எழுபதாம். *ஆக, அகவற்றொடை தொண்ணூற்று நான்காம.

இனி வெண்பாவினுள் வருங்கால் நேர்பசைச்சீரிரண்டுந் தேமா விரண்டும் நிரைமுதல் வெண்சீரிரண்டும் நிரைமுதல் நிரையீறுகலிற் கணவிரி எட்டுமாகச் சீர் பதினொன்கும் ஒழித்து ஒழிந்த சீர் பதின்மூன் றனும் பெற்ற அடி தொண்ணூறும். அவற்றுள் வரகும் அரவும புளிமாவும் என்னும் மூன்றும் பெற்ற அடி பத்தொன்பதாகலின், அவற்றுள் வரகிற்குப் பெருகியசீலத்து மூன்றும, அரவும் புளிமாவுஞ் சுருங்கிய சீலத்தும பெருகியசீலத்தும ஒரோவொன்றாக நான்குமாக ஏழுமொழித்து ஒரோவொன்று நான்காகப்பெற்ற அடி பனனிரண் டாம். காருருமு, மா வருவாய் எனனும இரண்டனுடனும்பெற்ற அடி பன்னிரண்டனுள் பு தனிலத்து முமமூன்றாக ஆறொழிததுப் பெற்ற தொடை இருமூன்றும். பாதிரிபேழும மாசெல்வாயுமென எட்டனு னும் பெற்ற அடி ஐம்பத்தொன்பதாகலின் அவறறுள ஈரெழுத்துப் பாதிரி மூன்றுஞ சுருஙகிய சீலத்து ஒரோவொன்றும் பெருகியசீலத்து இவவிரணடுமாக மும்மூனறொன்பதும, ஒழிநத மூவெழுததுப பாதிரி நான்கும், மாசெலவாயுமென ஐந்தும் சுருஙகியசீலத்து இவவிரண்டா கப் பத்துமெனப, பதமெொனபதுங களைநது பெற்றதொடை நாற்பதா மெனக் கொளக. ஆகக் களையும சீலம முபபததிரணடு ஒழிதது ஒழிநததொடை வெண்பாவிறகு ஐமபததெட்டாயின.

இனிக கலிப்பாவினுள வெணசீர் நானகனுடனும பெற்ற அடி இருபஃதாகலின, அவற்றுண மாசெலவாட உறழ்நத அடி ஐநதினும் ஏறியசீலத்திரண்டும, புலிவருவாய் உறழ்நத அடி ஐநதினுஞ சுருங்கிய சீலத்திரணடும், ஒழிந்த மாவருவாய் புலிசெல்வாய்கள இரணடும முன் னும் பின்னும் ஒரோவொனறாக நான்காகும; ஆக எட்டுக்களைய ஒரோவொன்று மும்மூனறாகப பெற்றதொடை பன்னிரண்டாம். ஆக மூன்று பாவிற்குஞ் சீரநதாதி நூற்றறுபத்து நான்காம.

* பொருட்டொடர்புக்கு இன்றியமையா இச்சொல் முன அச்சுப் பிரதியில் இல்லை.

"வண்டொன்று தேமா விரண்டு வலிபதுபன்
னொன்றொடச்சீ ரந்தாதிக் கீரேழாம் நேராதி
பத்தும் புளிமா வரகிரண்டும் வெள்ளைக்கா
மொத்த கலிக்குரிச்சீர் நான்கு."

எனவும்,

"நிரைநிரைபத் தெவ்வேழா மூன்று மிரண்டு
முதனில னீக்கிமூன் றாக வகவலி
னேராதி நான்கு மெழுவாய் நிலத்தொடங்கி
யாறாகு மந்தாதிச் சீர."

எனவும்,

"ஆக வகவற்சீ ரந்தாதி
நால்வகை யாக நவிற்று."

எனவும்,

"வாகு பெருநிலத்து மூன்றாகற்றி மற்றை
யாவு புளிமா வரகிரண்டு மாற்றி
முதனிலத்துக் காருருமு மாவருவாய் மும்மூன்
றெனவுரை யந்தாதிக் கீண்டு."

எனவும்,

"ரெழுத்துப் பாதிரிமூன் றீரருகு மோரிரண்டாய்
மூவெழுத்துப் பாதிரிகு முன்னிரண்டாய் மாசெல்வா
டொன்றற்கு மவவா றெழுத்துரைப்ப நாறபஃதாம்
வெண்டொடைச்சீ ரந்தாதி வேறு."

எனவும்,

"விரித்தசீ ரந்தாதி வெண்டொடை யைம்ப
தெனபபடு மெட்டுமே லிட்டு."

எனவும்,

"மாசெல்வா யீற்றம புலிவருவாய் மற்றிடத்து
மேனை யிரண்டு மிரண்டிடத்து மாக
விரண்டிரண்டு நீக்கிச்சீ ரந்தாதி தன்னாற்
கமைந்த தொடைநான்மூன் றும்."

எனவும்,

"பாத்தோறும் வந்தசீ ரந்தாதி பாற்படுப்ப
நூற்றோ டறபத்து நான்கு."

எனவும் இவ்வாற்றானே சீரந்தாதியாமா றுரைத்துக் கொள்க.

"அந்தாதி யோரிரண்டு மாகத் தொடைநானூற்
றெண்பான்மே லொனபா னெனல்"

இனி, விட்டிசைத்தொடை கூறுங்கால் எழுத்தினானும் எழுத்தில் ஓசையானும விட்டிசைத்தல் இருவகைப்படும்.

"அ உ மறியா வறிவி லிடைமகனே
நொஅலைய னின்னாட்டை நீ."

என்பதெழுத்தினானாகியது.

விட்டிசையின் இறுதியடி வல்லொற்றடுப்பின் விட்டிசை வல்லொற்றெதுகை யென்பாரும் உளர். ஆண்டு வல்லொற்றெதுகை யாமாறுகாமையின் அது வேண்டுவதன்று; வேண்டினும் விட்டிசை யெனவே அடங்குமென்பது.

"த என்று தாமிசைப்ப தாகியே தண்ணுமைகேட்
டெ என் றெழுந்தா டலர்."

என்பது குறிப்புவிட்டிசை.

இவை கட்டளையடிக்கண் வருங்கால் ஏரோவொன்று நூற்றறுபத்து நான்காகி மூந்நூற்றிருபத்தெட்டாம். (328.)

அவை வருங்கால் நேர்பசைச் சீரிரண்டும் ஓரெழுத்துத் தேமாவும் போதுபூவிரண்டும் ஒழித்தொழிந்த தேமாவும் பாதிரியிரண்டும் ஒன்றிக் கலிப்பாவிற்குத் தொடை நாற்பஃதாகவும், இரண்டு விட்டிசையுந் தொகுப்பப் பூமருதிரண்டும் நேர்முதல் வெண்சீரிரண்டுமாக ஒன்பதுசீரும் பற்றி விட்டிசைக்குமெனவுங் கொள்க. அவற்றை அகவற்றொடை ஒரோவொன்றெழுபதாகவும், வெண்டொடை ஒரோவொன்றைம்பத்து நான்காகவுங் கலிப்பாவிற்குத் தொடை நாற்பஃதாகவும் இரண்டுவிட்டிசையுந் தொகுப்பத் தொடை முந்நூற்றிருபத்தெட்டாமினவாறு கண்டுகொள்க. இவை ஆசிரியததுப் பதினொன்கும் வெண்பாவினுளொன்பதுமாக இருபத்துமூன்று சிலவ களைந்து பெற்றன.

"நேர்பிரண்டு நேர்பு முதலிய சீர்நான்கு
மோரெழுத்துத் தேமாவும் விட்டிசைக் கொன்றுவா
மேனை யிரைமுதற் சீர்களு மிவ்வாறே
யாகா தனவென் றறி."

எனவும்,

"அகவற்கேழ் நேராதி யொன்பதும்வெண் பாவிற்
குளவென் றுரைக்கப் படும்."

எனவும்,

"வெள்ளையு ளொன்ப தகவலி னீரேழாய்க்
கொள்ள விருபத்து மூன்றுகுந்—துள்ளலுட்
போரேறு பாதிரி பூமருது மாசெல்வாய்
மாவருவா யெட்டும் வரும்."

எனவும்,

"அகவற் கெழுபதா மைம்பத்து நான்கா
மிகரற்ற வெள்ளைக்குத் துள்ளல்—புகரற்ற
நாற்பதாய் விட்டிசை நூற்றறு பத்துநான்
கேற்பதா மோரொன் றெனல்."

எனவும்,

"இருவிட் டிசைபுர்நூற் றீரொருபத் தெட்டா
வருவித்துக் கோடல் வழக்கு."

எனவும் இவற்றைப் பதநெகிழ்த்துரைக்க.

"விகற்பமா றந்தாதி விட்டிசைநான் கேற்றி
யிசைத்தவீ ரைந்து தொடையாற் றொடைத்தொகை
மூவா யிரத்தோடு முந்நூற்று முப்பத்தா
றுமா றறிந்து கொளல்."

"இருபத் திரண்டு மிலைபத்து மாக
வருவித்த முப்பத் திரண்டா னொருபத்தின்
மூவா யிரத்தொரு நூற்றைம்பத் தாறைந்நூற்
றேடோரைம் பத்திரண் டேற்று"

என விவை உரைச சூத்திரம். ஆகத்தொடை முப்பத்திரண்டனுந் பெற்றன பதின்மூவாயிரத் தெழுநூற்றெட்டு. (13,708)

412. சொல்லிய தொடையொடு வேறுபட் டியலிற்
சொல்லியற் புலவது செந்தொடை யென்ப.

இது, மேற் செந்தொடையாமெனக் கூறியதுணர்த்துகின்றது; எய்தாததெய்துவித்ததூஉமாம்.

இதன் பொருள்: மேற்கூறப்பட்ட தொடை எல்லாவற்றோடும் ஒவ்வாது வரின் அதனை இயற்சைச்சொல்லாற் செய்யுள் செய்யும் புலவரது செந்தொடையென்று சொல்லுப ஆசிரியர், என்றவாறு.

எனவே, விகாரப்படச் செய்யுள் செய்யுஞ் செந்தொடை இன்றென்றுரும். அது,

"இருங்கழி மலர்ந்த வள்ளிதழ் நீலம்
*புலாஅல் மறுகிற் சிறுகுடிப் பாக்கத்
தினமீன் வேட்டுவர் ஞாழலொடு மலையு
மெல்லம் புலம்ப நெகிழ்ந்தன தோளே." (அகம்-269)

* 'புலாஅனுற மறுகிற் சிறுகுடிப் பாக்கத்தின் மீன்வேட்டுவர்' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம்.

எனவும்,

> "செயிரறு முகந்துரை பிதிரப் படுதிரைப்
> பராரைப் புன்னை வாங்குசினை தேம்ப"

எனவும் வரும்.

> "பூத்த வேங்கை வியன்சினை யேறி
> மயிலின மகவு நாட
> னன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே"

என்பதும் அது.

இயலினென்றதனான் இரண்டடியால் தொடை பெற்று நின்று இரண்டடி பெற்றெதுகையாகிப்பவை தம்முள் தொடுக்குங்காற் செவ்வன் தொடுப்பினும அதனைச் செந்தொடை யென்றது இரண்டடி யெதுகையென்றாம். இனி ஓரடி இடையிட்டுத் தொடுத்தவழியுந் தொடர்ந்த அடி இரண்டுஞ் செந்தொடையாமாயினும் மூன்றாமடி எதுகைபடத் தொடுத்தன் மாத்திரையானே அதனை இடையிட்டெதுகையென்றுங் கொள்ளப்படும். என்னை? அவ்வெதுகை ஆண்டுச் சிறந்தமையி னென்பது. அவை முன்னர்க் காட்டுதும்.

> "முன்பொழுது முன்சொல்லுந் தாரிடமா மந்திலையே
> பின்பொழுது பின்செல்லு செய்தலா - னன்பிலவே
> கொல்யானை யேசப்போக சோற்சோதை மாமேற்ற
> பல்டாகை மன்னர் மறை"

என வரும். இஃது இவ்விரண்டிகளது கூட்டத்துக் கண்ணன்றி வாராவாயினுங் கட்டளையடிக்கு அகப்பட்ட தொடையோடுங் கூறினார், கட்டளையடிச்சண் வருந தொடையே சிறந்தனவென்று கொள்ளினுங் கொள்ளற்கவெனபான; ஒழிந்த தொடையுள்ளுமென்று கூட்டித் தொடைகூறினானென்பது. இனிச் செந்தொடை கட்டளையடிக்கண் தொடையாங்கால் ஓரெழுத்துத் தேமா ஒழித்து ஒழிந்த சீரெல்லா வற்றினும் வருமென்பது. இம்மூவகை அடியினானும் பெற்ற தொடை யெல்லாந் தொகுப்பத் தொடை ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பதாம்.

அவற்றோடும் இரண்டடியெதுகை இரண்டும் இடையீடுங் கூட்டத் தொடை ஐஞ்ஞூற்றைம்பத்திரண்டாம்.

“நுந்தையில் செந்தொடை யைஞ்ஞூற்று நாற்பான்மே
லொன்பானை யோரிடையிட் டோரிரட்டி
வந்த வெதுகை யிரண்டென வைத்தைஞ்ஞூற்
றைம்பத் திரண்டென றறி.”

என்பது உரைச்சூத்திரம். ஆக முப்பத்துமூன்று தொடையும் அறுநூற் றிருபத்தைந்து அடியுட் களைவன களைந்து பெற்ற தொடைவிரியெல் லாந் தொகுப்பப் பெற்ற தொடை பதின்மூவாயிரத் தெழுநூற்றைந் துடன் இரண்டடியெதுகை யிரண்டும் இடையீடொன்றுங் கூட்டத் தொடை பதின்மூவாயிரத் தெழுநூற் றெட்டாயினவாறு கண்டு கொள்க.

“தொடையின பகுதி முழுவதூஉஞ் சொன்மற்
றடியி னறுநூற் றிருபத்தைந் தாயி
னடிய திலக்கண மாமதுவென் றஞ்சிப்
பிறதொடைமூன் றேற்றினா பின”

இவ்வாறு தொடை கூறப்பட்ட தொடைபகுதியெல்லாம் அவ் வச்சூத்திரங்கடோறுமெடுத்தோதாது கட்டளையடிக்கும் அல்லாவடிக் கும் பொதுவகையாற் கூறி வந்தானாசிரியனும் ‘மெய்பெறு மரபிற் றொடைவகை’ (தொல்-செய்-101) என்னுந் தொடைச் சூத்திரத் திற் கேற்பதாம். அவற்றை அவ்வச்சூத்திரங்களுட்போலக் கூறி வந்ததாமென்றது. முற்கூறிய முப்பத்து மூனறு தொடையினையும் அறுநூற்றிருபத்தைந்தடியோடு மாறியக்கால் இருபதினாயிரத் தறுநூற் றிருபத்தைந்து தொடையாகற்பாலனவாம். அன்னவை தொடைக் குந் தளைக்குமாகாதன களைந்து கொள்ளப் பதின்மூவாயிரத் தெழு நூற்றைந்தாயினவென்பது. ஆறாயிரத்துத் தொள்ளாயிரத் திருபது விலங் களையப்பட்டன. இங்ஙனம் இவைகளைந்து பெற்றதொடை யோடும் இரண்டடியெதுகை இரண்டும் இடையீடொன்றுங் கூட்டத் தொடை பதின்மூவாயிரத் தெழுநூற்றெட்டாயின. (௪00)

413\. மெய்பெறு மரபிற் றொடைவகை தாமே
ஐயீ ராயிரத் தாறைஞ் ஞூற்றொடு
தொண்டுதலை யிட்ட பத்துக்குறை யெழுநூற்
றொன்பஃ தென்ப வுணர்ந்திசி னோரே.

இது, மேற்கூறிய தொடையுள் ஒருசீரான் வரையறையுடைமையின் அவற்றை அடிக்கட்போலத் தொகுத்தோதுகின்றது. விரித்ததூஉந் தொகுத்ததூஉமாம். என்னை ? கட்டளையடியோடுபட்ட தொடைவிகற்பம் முற்கூறிய சூத்திரங்களுட் பெற்றமையானும் அவற்றையும் ஈண்டுத் தொகுத்துக் கூறினமையானுமென்பது.

இதன் பொருள் : மெய்பெறு மரபில் தொடைவகை-கேட்டார்க்குத் தொடைப்பாடு வெளிப்படும் இலக்கணத்தவாகிய தொடைக் கூறுபாடு; 'தாமே' என்பது பிரித்துக்கூறியவாறு; ஐயீராயிரத்தாறைஞ் ஞூற்றொடு-பதின்மூவாயிரத்தோடு ; தொண்டுதலையிட்ட பத்துக் குறை எழுநூற்றொன்பஃது-எழுநூற்றெட்டு, என்றவாறு.

தொடைப்பகுதி பதின்மூவாயிரத் தெழுநூற் றெட்டென்று சொல்லுப ஆசிரியரென்பது இதன் பொழிப்பு. மெய்பெறு மரபினிவை யெனவே, விளங்கத் தோன்றுதனவுந் தொடையுளவென்பதாம். அவை இணை கூழை மேற்கதுவாய் கீழ்க்கதுவாய் கடையிணை கடைக்கூழை இடைப்புணர்ப்பின எனசசொல்லுப. பிறவும் வேறுபடுத்துக் கூறுவார் கூறுவனவெல்லாம இதனுனே தழீஇக்கொள்ளப் படுமென்பது.

தொடைவகை யென்பது கட்டளையடியோடு வருமெனப்பட்ட முப்பத்துமூன்று தொடையும் பிறவாற்றான் வருமெனப்பட்ட இரண்டடியெதுகையென இருகூற்றனவுமென்றவாறு. ஐயீராயிரத்தாறைஞ் நூற்றொடு என்பது உம்மைத்தொகை. தொண்டு தலையிட்ட என்பது ஒன்பானையகப்படும் மொழியாகவுடைய வென்றவாறு. அது செய்த வென்னும் பெயரெச்சமாகலின் எழுநூற்றொன்பதென்னும் பெயர் கொண்டு முடியும். எனவே, எழுநூற்றொருபத்தெட்டா மென்றாஞ்சிப்

பத்துக்குறை எழுநூற்றொன்பது என்றானென்பது. எனவே, ஆண்டு நின்ற ஒன்பானோடுந் தொண்டுதலையிட்ட ஒன்பானையுங் கூட்ட *எழுநூற்றெட்டாயினவென்றவாறு.

அஃதே கருத்தெனின், 'பதினேழு வாயிரத் தெழுநூற் றெட்டென-மொழியப் பட்டன தொடைதெரி வகையே' என அமையும்; இவ்வாறு அரிதும் பெரிதுமாகச் சூத்திரஞ்செய்த தென்னையெனின், அங்ஙனமே அதனை ஞாபகப்படச் செய்தான் ஆசிரியன் ஒருகாரணம் நோக்கி. என்னை? இத்தொடைகளை அடியோடு மாறுங்காற் குறைக்கப்படுவன உளவென்பதூஉம், அவை தொண்டு தலையிட்ட ஐந்துபத்தளவும் ஆறுமுதலாகக் களையப்படுமெனபதூஉங் கோடற்கென்பது. ஒன்பதென்று இருகாற்சொல்லிய வதனான் அங்ஙனங் குறைக்கப்படு நிலங்கள் ஒன்பது பகுதியவாமெனக் கொள்க. அவையாவன, ஐம்பத்தொன்பது ஐம்பத்தாறு நாற்பத்தைந்து நாற்பது முப்பத்தொன்பது, முப்பத்திரண்டு முப்பத்தொன்று இருபத்து மூன்று ஆறு என ஒன்பது பகுதியாற் குறைவனவாயின. இங்ஙனம் ஐம்பத்தொன்பது நிலத்தினவாகலால் தொண்டுதலையிட்ட பத்தென்றானெனவும் ஒன்பதுந் தொண்டுமென இருகாற் கூறிடவதனான் அங்ஙனங் களையுநிலம் ஒன்பஃதெனவுங் கொள்ளப்பட்டது.

> "பாய பதினா யிரமென் றிலனோ
> ராயிர மென்றா னதனானும் - ஆயதன்றிப்
> பத்துங் குறைத்த படித்தானு மொன்பதென
> றுய்த்துக் கொளற்பாற றொருங்கு"

எனவும்,

> "ஓரொன்ப தேற்றிய மோரொன்ப திட்டுரைத்து
> மீரொன்பது மிகுத்தா னீங்கியற்று - ளோரொன்ப
> தைம்பான்மே லேறவு மைந்தந்த மாய்க்குறைத
> லொன்பான் வகைதமென் றோர்ந்து"

எனவும்,

---

* 'எழுநூற்றெட்டாயின வென்பது' எனவும் பாடமுண்டு.

"ஆறென்றான் மூவா யிரமென்னு தாங்கதனு
லாறந்த மாங்குறையு மாறு"

எனவும்,

"ஐம்பத்தொன் பானேழெட் டைடயொன் பதநாற்பஃ
தொன்பா னுடைமுப்பஃ தெண்ணான்கு முப்பத்தொன்
றென்பா னிருபத்து மூன்று றெனக்குறைப்ப
வொன்பான் பகுதி யுள"

எனவும் இவ்வுரைச் சூத்திரங்களான் அவை குறைசகப்படுமா றறிந்து முறைக்க. இவற்றுள் ஒன்பது சிலங் களைப்படும் மோனைமுதலாயின தொடை ஐந்தற்கும் ஒரெழுத்துத் தேமா உரித்தென்றிராயின், அதனை நுாறைதை நூறைதையென்று இருசால் தொடுக்கவேண்டும்; தொடுத்தவழி அடிமோனையுந் தலையாகெதுகையும் அடியெதுகையும் மூன்றுமெழுத்தொன்றெதுகையுமென நான்கு தொடை பெறப்படுமாகலின, அவற்றுள் அதனை என்ன தொடையென்றுமோவெனின், செய்யுள் செய்த ஆசிரியன பலதொடைப்படச்செய்து வைத்தவழி, அவற்றுட் சில களைந்து ஒன்று கோடற்குக் காரணமின்மையின் அவையனைத்துங் கோடுமென்பது. அல்லாதார் முதனின்ற தொடையே கொண்டொழிகவென்ப.* அது குற்றம். என்னை,

"செங்காற் பைந்தினை யிதண மேறிப்
பைங்காற் சிறுகிளி சடியோ டநதை"

என்றவழி எதுகையும் முரணும வந்தவழி இவற்றுண் முதற்கண் இன்னதொடையென்று துணிடலாகாமையின் அது சிரம்பாதாகலான

* 'தொடைபல தொடுப்பினுந் தளைபல விரவினும்
முதல்வந் ததனுன் மொழிந்திசிற் பெயரே.'

என்பது யாப்பருங்கலப் 53-ஆவது சூத்திரம். இச்சூத்திரத்துக்கு விருத்தியுரைகாரர் 'ஒரு செய்யுளகத்துத் தொடைபல தொடுத்துவந்தாலும், தளைபல விரவிவந்தாலும் அவற்றை முதல்வந்த தொடையாலும் முதல்வந்த தளையாலும் பெயர்கொடுத்து வழங்குக' எனப் பொருளுரைத்து, அவிநயம், காக்கைபாடினியம், நத்தத்தம் முதலிய பண்டையிலக்கண நூல்களினின்று மேற்கோள் காட்டுகின்றார்.

அது வந்ததொடை யெல்லாவற்றானும் விரித்துத் தொடைகூறுதல் அமையுமென்பது. என்போலவோவெனின் எழுத்தும் அசையுஞ் சீரும் அடியும் அங்ஙனம் முதல் வந்ததனான் எண்ணுந் தொகையும் பெயருங்கொடுத்து வழங்காதவாறு போலவென்பது. அல்லதூஉந், தொடைகளெல்லாந் தம்மையுணரும் மாத்திரையானே தனித்தனி வருதல் இலக்கணமென்பதூஉம் இல்லையென உணர்க. என்னை ? பல உறுப்புக்கொண்டதோர் செய்யுளென்றமையின்.

இனி, ஓரெழுத்துத் தேமா முதற்கணிற்ப அடியிறுதிக்கண்ணும் இயைபு வருதலின அசைசீா ன்றறழ்ந்த அடிக்கண இயைபுவருதற்கு ஆராய்ச்சியின்றென்பது. ஒழிந்த தொடைக்குரியவல்லவெனபபட்ட சீருள அவைவாராமையும், உரியவெனப்பட்ட அவற்றுள் அவை வருமாறும முறையிற்கொண்டு உதாரணங கண்டுகொள்க.

இனி, இக்காலத்துள்ள ஆசிரியருள் ஒருசாரார தொண்டுதலையிட்ட பத்துக்குறை யெழுநூற்றொன்றெனப் பாடந்திரிப்பாரும், இன்னொருசாரார் *எழுநூற்றொன்று மெனப் பாடந்திரிப்பாரும் உளர். ஒருபகுதியார் ஒன்றுமென்பன முற்றுவினையென்ப. மெய பெறுமரபிற றொடைவகை பத்துக்குறை யெழுநூறென்னும் எண்ணினோடு ஒன்றுமெனக் கூட்டுப. பதின்மூவாயிரத தறுநூற்றுத் தொண்ணூற்றொனபது என்பது அவர்கருத்து.† ஒன்றுமெனபதனை எண்

---

* 'எழுநூற்றொன்று மென்ப பாடந்திரிப்பாரும்' என்பதுமுன் அச்சுபபிரதியிற் கண்ட பாடம.

† 'தொண்டுதலையிட்ட பததுககுறை யெழுநூற் — றொன்றுமெனப்' எனப்பாடங்கொண்டு, 'தொடைவிகற்பம பதின்மூவாயிரத் தறுநூற்றுத் தொணணூற்றொனபதாம்' எனப் பொருளுரைத்தவர் உரையாசிரியர்.

பேராசிரியா கொணட பாடமேகொண்டு, 'ஒன்பது தலையிலே வைதத பத்துசகுறைந்த எழுநூற்றொன்பது......என்பது, ஆறாயிரத் திருநூற்றுத் தொண்ணூற்றொனறு' எனப் பொருள் வேறுகொண்டார் நச்சினார்க்கினியர்.

'பதின்மூவாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற்றொன்பதென்பாரும், வரம்பிலவென்பாரும என இருதிறத்தராசிரியர்' என்றார் யாபபருங்கல விருத்தியுரைகாரர். (யாப்பருங்கலவிருத்தி—49-வது சூத்திரவுரையிற் காண்க.)

ளுட்பெயர் முற்றுமமைபப்பத்ததென்பாரும் அதுவே கூறுப. அவரறி யார். அவ்வாறு சூத்திரஞ்செய்வது ஆசிரியர் கருத்தன்று. அல்லதூஉம், 'ஒன்பஃ தென்ப வுணர்ந்திசி னோரே' என்பது பழம்பாடமாகலா னும் அஃதமையாதென்பது. அவ்வாறு கொள்வார்க்குத் தொடை பதின்மூவாயிரத் தறுநூற்றுத் தொண்ணூற்றொன்பதாகலும் பிழைக்கு மென மறுக்க. என்னை ? அறுநூற்றிருபத்தைந்தடியினையுந் தமக்குப் பொருந்துமாற்றான் இருபத்திரண்டு தொடையோடும் பெருக்குங்கால் அவர்க்கும் ஓரடிக்கண்ணே தொடைகோடல் வேண்டுமாகலானும், அங்ஙனங் கொள்ள இரட்டைத்தொடை முதலாயின அறுநூற்றிரு பத்தைந் தாகாமையானு மென்பது.* (௪0௮)

## 414. தெரிந்தனர் விரிப்பின் வரம்பில பல்கும்.

இது, மேற்கூறிய தொடைக்காவதோர் புறனடை.

இதன் பொருள்: அறுநூற்றிருபத்தைந்து அடியோடு மாறிப் பெற்றதொடை பதின்மூவாயிரத்தெழுநூற்றெட்டெனப்பட்டனமேல், இனி அவ்வடி ஒன்றன்கண்ணேயன்றி ஒன்றிநிற்ப நின்றவடி அறு

* "இச்சூத்திரத்திற்குத் 'தொண்டு தலையிட்ட பத்துக்குறை யெழுநூற் றொன்றுமெனப' என்று பாடமோதிப் பதின்மூவாயிரத் தறுநூற்றுத் தொண்ணூறென்பாரும் (1), இனிப் 'பத்துக்குறை யெழுநூற் றொன்றுமென்ப' என்று பாடமோதித் தொண்டுதலையிட்ட பத்துப்பத்தொன்ப தென்பாரும் (2), இனித் 'தொண்டு தலையிட்ட பத்துக்குறை யெழுநூற்றொன்று மெனப' என்று பாடமோதிப் பதின் மூவாயிரத் தறுநூற்றுத் தொண்ணூற் றொன்பதென்பாரும் (உரையா சிரியர்) 3, இனிப் 'பத்துக்குறை யெழுநூற்றொன்பஃதென்ப' என்று பாடமோதி, இதனை மிகவும் நலிந்து பொருள்கொண்டு பதின்மூவா யிரத்தெழுநூற்றெட்டென்பாரும் (பேராசிரியர்) 4, எனப் பலபகு தியராசிரியர். இவற்றுள் நல்ல தாய்த்துணர்ந்துகொள்க" என்பர் நச்சினார்க்கினியர். இதனால் நச்சினார்க்கினியர்க்கு முன் நால்வர் இந் நூற்கு உரைசெய்துள்ளனர் என்று தெரிகிறது.

நூற்றிருபத்துநான்கனையுந் தந்து தந்து தடுமாற வந்து தோன்றுந் தொடைவிகற்பமும் இருசீரடிமுதலாக எண்சீரடியீறாகக் கிடந்த அடி வேறுபாட்டின்கணெல்லாம் இத்தொடைகளைக்கூட்டவும் பிறவிகற்பத் தொடைகளைக்கூட்டவும் வருந் தொடைப்பகுதி வரையறையின்றிப் பலவாம், என்றவாறு.

வரையறை உடையனவற்றுக்கன்றி வரையறைகூறுதல் பயமின்றாகலின் ஒழிந்த விகற்பமெல்லாங் கூறிபலிலங்கூறிற்றிலனென்பதூஉம்'மெய்பெறு மரபிற் றொடைவகை'(தொல்-செய்-101) எனப்பட்டன வரையறையுடைமையின் அதுகூறினனென்பதூஉஞ் சொல்லினான இச்சூத்திரத்தானென்பது.

இனி ஐந்துதொடை, விகற்பத்தொடை பலவற்றோடுங் கூட்டவும் பிறவாற்றான் விரிப்பவும் வரம்பிலவாமென்பாருமுளர். அவை எவ்வாறு விரிப்பினும் வரம்பிலவல்லவெனமறுக்க. வரம்பிலவென்பது வரையறை கூறப்படாவென மேலுரைத்ததே உரை. * (௧௦௨)

* "(இச்சூத்திரம்) எய்திபதன்மேற் சிறப்புவிதியுணர்த்துதல் நுதலிற்று. இதன் பொருள் : மேற்சொல்லப்பட்ட தொடையினை ஆராய்ந்து விரிப்பின் வரம்பிலவாகி விரியும், என்றவாறு. அவையாவன, மோனை எதுகை முரண் இயைபு அளபெடை என்பனவற்றின்கண், இணை கூழை முற்று மேற்கதுவாய் கீழ்க்கதுவாய் கடையிடை கடையிணை பின்கடைக் கூழை இடைப்புணர் என வேறுபடுத் துறழ்ந்து, எழுத்தந்தாதி, அசையந்தாதி, சீரந்தாதி, அடியந்தாதி எனவும்; உயிர்மோனை, உயிரெதுகை, நெடின்மோனை, நெடிலெதுகை, வருக்கமோனை, வருக்கவெதுகை, இனமோனை, இனவெதுகை எனவும்; மூன்றாமெழுத் தொன்றெதுகை, இடையிட்டெதுகை, ஆசெதுகை எனவும் இவ்வாறு வருவனவற்றை மேற்கூறிய வகையினான், எழுத்து வேறுபாட்டினா னுறழவும்; சீரனிறைபாகிய பொருள்கோள் வகையானும், ஏகபாதம் எழுகூற்றிருக்கை முதலாகிய சித்திரப்பாக்களானும் உறழவும் வரம்பிலவாகி விரியும்" என்பது உரையாசிரியர் உரை.

415. தொடைவகை நிலையே யாங்கென மொழிப.

இதுவுமது. மேல் ஒருசாரான் வரையறையுடைமையிற் கூறப்பட்டனவென்புழி, ஒழிந்தன வரையறையின்மையிற் கூறப்படாதெனவுங் கூறினோனைக் கண்ட மாணுக்கன், வரம்பில்லன தொடுக்கப்படா சொல்லென ஐயுற்றானை அவையுந் தொடுக்கப்படுங் கண்டாயெனக் கூறினமையின ஐயம அறுத்ததெனவும் அமையும்.

இதன் பொருள்: தொடையது பகுதி வழக்கே அவ்விரண்டு மென்ப, என்றவாறு.

எனவே, அப்பகுதியுளொன்று தெரித்திலமென்பது இதன் கருத்து. ஆங்கென்றதனை மேற்பகுத்த இரண்டிடமுங் கொள்க. ()

416. மாத்திரை முதலா *வடி நிலை காறு
நோக்குதற் காரண நோக்கெனப் படுமே.

இது, சிறுத்தமுறையானே நோக்குணர்த்துகின்றது. நாற்சொல் வழக்கினைப் பாவிற்படுப்பது மரபென்றான். எனவே, ஆண்டு நோக்கி புணரப்படுவதொன்றின்றிச் செய்யுளுள்ளும் வழக்கியல்பினவாகி வெள்ளைமையுமாய்க் காட்டுவனவாயின. அவ்வாறன்றி நோக்கென்ப தோர் உறுப்புப்பெறினே அது செய்யுளாவதாகலான் அது கூறுகின்றா னென்பது.

இதன் பொருள்: மாத்திரையும எழுத்தும அசைச்சிலையுஞ் சீரும் முதலாக அடிவரம்புந்தொடையும் நோக்குடையவாகச் செய்தல் வன்மையாற் பெறப்படுவது நோககென்னும்உறுப்பாவது, என்றவாறு. †

---

* 'அடிநிறைகாறும' என்பது நச்சினார்க்கினியர் கொண்டபாடம்.

† "மாத்திரைமுதலாக அடிநிலைகாறும் நோக்குதலாகிய கருவி நோககென்று சொல்லப்படும். காரணமெனினும் கருவியெனினும் ஒக்கும். நோக்குதற் காரணமென்பதனை உண்டற்றொழிலென்றாற் போலக் கொள்க. அஃதாவது, யாதானும் ஒன்றைத் தொடுக்குங்கால் கருதியபொருண் முடியுங்காறும பிறிது நோக்காது அது தன்னையே நோக்கி நின்ற நிலை. 'அடிநிலைகாறும்' என்றதனால் ஓரடிக்கண்ணும் பலவடிக் கண்ணும் நோக்குதல் கொள்க. அஃது ஒரு நோக்காக

கேட்டார் மறித்துநோக்கிப் பயன்கொள்ளுங் கருவியை நோக்குதற் காரணமென்றுனென்பது. அடிநிலைகாறுமென்பது ஓரடிக்கண்ணேயன்றியுஞ் செய்யுள் வந்த அடி எத்துணையாயினும் அவை முடிகாறு மென்றவாறு. வரலாறு:

" முல்லை வைந்நுதி *தோன்ற வில்லமொடு
பைங்காற் கொன்றை மென்பிணி யவிழ
இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பிற்
பரலவ லடைய விரலை தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்புபுறங் கொடுப்பக்
கருவி வானங் கதழுறை சிதறிக்
கார்செய் தன்றே கவின்பெறு கானங்
குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நரம்பார்ப் பன்ன வாங்குவள் பரியப்
பூத்த பொங்கர்த் துணையொடு வதியுந்
தாதுண் பறவை பேதுற லஞ்சி
மணிநா வார்த்த மாண்வினைத் †தேர
னுதுக்காண் டோன்றுங் குறும்பொறை நாடன்
கறங்கிசை விழவி னுறந்தைக் குணாது
நெடும்பெருங் குன்றத் தமன்ற காந்தட்
போதவி ழலரி நாறு
மாய்தொடி யரிவைநின் மாணலம் படர்ந்தே." (அகம்-4.)

ஓடுதலும் பலநோக்காக ஓடுதலும், இடையிட்டு நோக்குதலும் என மூன்றுவகைப்படும் " என்று உரைகூறி " அறுசுவையுண்டி..." "அறிவினறநெறி..." " உலகமுவப்ப ......கணவன் " என்பனவற்றை முறையே ஒருநோக்காக ஓடுதற்கும், பலநோக்காய் ஓடுதற்கும், இடையிட்டு நோக்குதற்கும் உதாரணமாகக் காட்டினர் உரையாசிரியர்.

* 'தோன்றத் தில்லமொடு' என்பதும் பாடம்.

† 'தேரின்' என்பதும் பாடம்.

என வரும். இப்பாட்டின் ஓசைமுதலியனவெல்லாங் கேட்டாரை மீட்டுந் தன்னைநோக்கி நோக்கப் பயன்கொள்ள நிற்கும் நிலைமை தெரிந்துகொள்க.

இனி, 'அடிநிலைகாறும்' என்றதனாற் செய்யுண்முழுவதும் எவ்வகையுறுப்புங் கூட்டி நோக்கியுணருமாறுங் கூறுதும். முல்லை யென்பது முதலாகக் கானம் என்பதீறாக நாற்சொல்லியலான் யாப்பு வழிப்பட்டதாயினும் பருவங்காட்டி வற்புறுக்குந் தோழி பருவந் தொடங்கிய துணையேகாணென்று வற்புறுத்தினாளென்பது நோக்கி யுணரவைத்தானென்பது. 'உதுக்காண் டோற்றுந் துறும்போறை நாடன்' என்னுந் துணையுந் தலைமகனது காதன்மிகுதிகூறி வற்புறுத் தினாளென்பது நோக்கியுணரவைத்தான. ஒழிந்த அடிநிலைகாறும் பிரிந்தகாலம் அணித்தெனக் கூறி வற்புறுத்தினாளென்பது நோக்கி யுணரவைத்தானெனப்படும். என்னை? முல்லையென்றது வைந்நுதி யெனறதனை அவை அரும்பியது அணித்தெனபது பெறப்பட்டது; சின்னாள் கழியின வைந்நுதியாகாது மெல்லென்னுமாகலின். இல்ல முங் கொன்றையும் மெலலெனற பிணியவிழ்ந்தனவென்றாள், கரிந்த துணை அவை முதல் கெடாது முல்லையரும்பிய காலத்து மலர்ந்த மையின. இரலை மருப்பினை 'திருப்பு திரித்தன்ன மாப்பு' என் றதூஉம் நீர்தோய்ந்தும் வெயிலுழந்த வெப்பந் தணிந்தில, இரும்பு முறுக்கிவிட்டவழி வெப்பம் மாறாவிட்டவாறுபோல வெம்பா நின்றன பின்னுமெனறவாறு. 'பரலவ லடைய விரலை தெறிப்ப'எனவே பரல் படுகுழிதோறுந் தெளிந்து நின்ற நீர்சுருங்கு விருந்தினமாகலாற் பலகாலும் நீர்பருகியும் அப்பரல் அவலினது அடைகரைவிடாது துள்ளுகின்றன வென அதுவும் பருவந் தொடங்கினமை கூறியவாறாயிற்று. 'கருவி வானங் கதழுறை சிதறி' என்பதூஉம் பலவுறுப்புங் குறைபடாது தொக்குநின்ற மேகந் தனது வீக்கத்திடைக் காற்றெறியப்படுதலின் விரைந்து துளிசிதறினவென அவற்றையும் புதுமைகூறினாள். எனவே, இவையெல்லாம் பருவந் தொடங்கியதென்றமையின்வற்புறுத்துதற்கு இனமாயிற்று. 'தாங்குதுளைப் போலிந்த கோம்சுவற் புரவி' என்பது கொய்யாத உளை பல்கியும் கொய்த உளை பலகாலுங் கொய்யவேண்டு

தலுமுடைய குதிரையென்றவாறு. எனவே, தனது மனப்புகழ்ச்சி கூறியவாறு. அத்துணை மிகுதியுடைய குதிரை பூட்டின வாரொலி விலக்காது மணியொலி விலக்கி வாராநின்றான் அங்ஙனம் மாட்சிமைப் பட்ட மான்றேரனுதலானென்றவாறு. அதற்கென்னை காரணமெ னின், 'துணையொடு வதியுந் தாதுண் பறவை' எனவே பிரிதலஞ்சி யென்றவாறு. மணிநாவொலி கேட்பின் வண்டு வெருவுமாகலின் அது கேளாமை மணிநாவினை இயங்காமை யாப்பித்த மாண்வினைத்தேரனுகி வாராநின்றுனென இவையெல்லாந் தலைமகள் வன்புறைக்கே துவா யின. 'நறுங்கான விழவினுறநீதைக் குறைது நெடுபெருங் குன் றத் தமன்ற காந்தள்' : தெய்வ மலை ஆகலான் * அதனுளமன்ற காந் தளைத்தெய்வப்பூவெனக் கூறி அவை போதவிழ்ந்தாற்போல அவர் புணர்ந்த காலத்துப் புறமணங் கமழ்ந்த நின்கைத்தொடிகள் அவை அரியவாகிப் பிரிந்தகாலத்தும பொன்றுவடிவொத்து மணங் குறை பட்டதுணேயேயால் அவர் பிரிந்துசெய்த தன்மையினென இதுவும் வன்புறைக்கே உறுப்பாயிற்று.◊

* 'அதனுணமன்ற' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம்.

[◊ நோக்கெனபதற்கு இசெய்யுளேயே நச்சினார்க்கினியரும் உதாரணமாகக் காட்டினர். அவர் கூறுமாறு : "வைந்நுனை' என்றத ஞல் அலருந்துணையும் மெல்லென்னுது வன்மையவாய்க் கூரிதாய் நிற் றலின் அரும்பி அணித்தென்பது கூறிற்று. 'இல்லமும் கொன்றையும் பிணி யவிழ்ந்தன' என்றது அவை மரமாகலிற் கடிதிற் கரியாவாக லிற் கடிதிற் கரிந்த முல்லைக்கு முன்னே மெல்லிய பிணியவிழ்ந்தமை கூறிற்று. காய்ந்த இரும்பு முறுக்கிவிட்டவழியும் வெப்பம் மாருத வாறுபோல நீர் தோய்ந்தும், வெயிலுழந்த வெப்பம் இன்னும் தணிந் தில என்பது தோன்ற 'இரும்புதிரித்தன்ன மருப்பு' என்ருர். இரலை குழிதோறும் தெளிந்து நின்ற நீர்க்கு விருந்தினவாதலிற் பலகால் நீர் பருகுதற்குப் பரலையுடைய பள்ளத்தைச் சேர நின்றது என்றதாம். இத்துணையும் பருவந்தொடங்கிய துணையே வற்புறுத்திக் கூறிற்று. 'புலம்பு' முழுவதும் நீங்கிற்றென்னுது ஒருபுடை தோன்றப் புறக்கொ டுத்த தென்றமையின் அதுவும் பருவந்தொடங்கிய துணையே கூறிற்று.

இவ்வாறே பலவும் நோக்கி புணர்தற்குக் கருவியாகிய சொல்லும் பொருளும் எல்லாம் மாத்திரை முதலா அடிநிலைகாறுமென அடங்கக்கூறி நோக்குதற்காரணம் நோக்கென்றுனென்பது. மாத்திரை முதலாயினவுந் தத்தம் இலக்கணத்தில் திரியாது வந்தமையின் அவையும் அவ்விலக்கணம் அறிவார்க்கு நோக்கிப் பயன் கொள்ளுதற்கு உரியவாயினவாறு கண்டுகொள்க. எனப்படுமென்றதனுன் இவ்வாறு முழுவதும் நோக்குதற்குச் சிறப்புடையவெனவும் இவை யிடையிட்டு வந்தன சிறப்பிலவெனவுங் கொள்ளப்படும். பிறவும் அன்ன. (கoச)

தொகுதியையுடைய மேகம் காற்றின் விசையான் விரைந்த கொடுந்துளியைச் சிதறிற்றெனவே புதுமை கூறிற்று. இத்துணையும் பருவந்தொடங்கி யணித்தென்றலின் வற்புறுத்தற் கிலேசானமை நோக்கிற்று. கொய்யாத உளை பெருகுதலும் கொய்த உளை பல்காற் கொய்யப் பெருக வேண்டுதலும் கூறவே குதிரை மனச செருக்குக் கூறிற்றும். அதன் கழுத்து வளையும்படி விசித்தவாரொலி நரம்பிற்கு ஓதிய நால்வகைக் குற்றத்தினும் (நரம்பிற்கோதிய குற்றம் நான்காவன: செம்பகை, ஆர்ப்பு, அதிர்வு, கூடம். இவற்றுள் 'ஆர்ப்பு' என்பது மாத்திரையிறந்த சுருதி = ஓசைவிசைத்தல். சிலப்பதிகாரம் வேனிற்காதை 29,30-வது அடிகளுக்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையைக் காண்க.) ஆர்ப்பென்னும் குற்றம் எய்திய நரம்போசைபோல இசைப்ப என்க. 'பூத்த பொங்கர்' என்பதனுல் பசிப்பிணிதீர நுகரும் பொருளை அது குறைவறக்கொடுப்ப உண்டு மகிழ்ந்து பின்பு தாம் நுகராசின்று வதியும் எனவே, யாமும் இல்லற நிகழ்த்துதற்கும் நுகர்தற்கும் ஏற்ற பொருள்களைக் குறைவறப் பெற்றுப் பின் இன்பநுகர்தல் வேண்டும் என்பது கூறினுளாம். பொங்கரிற் பசிதீர்ந்து துணையொடுவதியும் பறவையும் தாதையுண்கிற பறவையும் கலக்கமுறுதற்கு அஞ்சி மணியொலியை வீக்கிய தேரன் என்றதனுல் காதலும் அருளும் உடைமையின் அவற்றின் பிரிவிற்கும் பசிக்கும் இரங்கினுனெனக் கூறவே, அவை (காதலும் அருளும்) அவற்கு வின்கண்ணும் பெருகும் என்றுளாம். வதியும்பறவை வண்டும் தேனும் என்பதும், தாதுண் பறவை சுரும்பு என்பதும்

417. ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியே
நாலியற் றென்ப பாவகை விரியே.

'நோக்கே பாவே' யென நிறுத்தமுறையானே நோக்குணர்த்திப் பாவுணர்த்தியவெழுந்தான் அதனை இத்துணைப் பெயர் வேறுபாட்ட தெனவும், பொருட்குரிமையவும் அடிக்குரிமையவுமாமாறுஞ்செய்யுட்கு வரையறைவகையான் உரியவாறும் ஒரோசெய்யுட்கண் ஒரோவுறுப்புப் பற்றி வருங்கால் அவ்வுறுப்புக்கள் இத்துணையடியவாகுமெனவும் எல்லாங் கூறுவான் தொடங்கினனாயின். அவற்றுள் இது, பெயர்வேறுபாடும் அஃது இனைத்தென விரியும் உணர்த்துகின்றது. இவ்வுறுப்பு வேறுபாட்டானே, உறுப்பியலாகிய செய்யுளும் இவ்வாறு பெயர் கொள்ள வைத்தானென்பது.

"எங்குமோடி யடற்று சுரும்புசாள், வண்டுசாளமகிழ் தேனினங்காள்"
(சிந்தா-குண-42) எனப் பின்னுள்ளோர் கூறியவாற்றானும் உணர்க. இதனாற் சேணிடை வரவையுணர்த்துப மணிமொலியை வாரொலி கேட்கும் அணிமைக்கண்ணுங் கேளாயாயினை எனவும், அவ்வாரொலி தாதுண்பறவை ஒலிக்கண் அடங்குதலின், கேட்கின்றிலை எனவும் கூறினளாயிற்று. வாரொலி நரம்போசை போறலின் பெருவரவாயிற்று. 'மாண்வினைத் தேரன்' என்றாள், அவனறன் கருத்திற்கேற்ப வினை முடித்தமை தோன்ற; எனவே வன்புறைக் கேதுவாயின. தெய்வந்தங்கும் மலையாதலின் தெய்வமணம் நாறுங் காந்தளினுடைய போதவிழாநின்ற மலர்போல அவர்புணர்ந்த காலத்துப் புதுமணம் நாறும் அரிவை எனவே, அவர் பிரிந்து செய்த்தன்றென வன்புறைக் கேதுவாயிற்று. 'ஆய்தொடி' என்றது தோண்மெலிந்தவழி அயலார்க்குப் புறமறைத்தல் வேண்டிச் செருகுந்தன்மையினறி அணிந்த நிலையே கிடக்கும் தொடி என்றவாறும். இதுவும் பிரிந்து செய்த்தன் றென்றவாறதாம். ஈண்டு 'மாணலம்' என்றது அவன்பிரிவுணர்த்திய காலத்துப் பிரிவிற்கு உடம்பட்டாள் போன்று உடம்படாது நின்ற நலத்தை. அது மெய்ப்பாடாம். இங்ஙனம் கோடல் நோக்கென்று உணர்க."]

இதன் பொருள் : ஆசிரியப்பாவும் வஞ்சிப்பாவும் வெண்பாவுங் கலிப்பாவுமென நாற்கூற்றது பாக்களவற்றுவிரி, என்றவாறு.

'வகை'யென்றதனான் உறுப்பாகிற செய்யுளின் வேறுபட நோக்கி உணரப்படும் இவ்வுறுப்பெனவும், இவற்றுள் வழக்கிற்குரியன செய்யுட்கு வந்தனவும் வழக்கிற்கேயுரியவாகிக் கூறுபடுவனவும், ஒன்றொன்றனோடு விராய்ப் பிறகரும் பகுதியுமெல்லாங் கொள்ளப்படும். பாக்கூற்றுவிரி நான்கெனவே, பாவினை உறுப்பாகவுடைய செய்யுட்கு வரையறைகூறிற்றிலனென்பது பெற்றாம். என்னை? அவற்றுப் போதுங் கால் அவற்றது பெயர்வேறுபாடும் அச்சூத்திரங்களான் அறிதுமென் பது. என்றார்க்கு இவை நான்கேயன்றிப் பாவாமாறு கூறானோவெ னின் இவையின்றித் தூக்குப பிறவாமையின் இப்பாவிலக்கணமும் நோக்கோத்தினுட் கூறினனாகலான் ஆண்டோதியவாறே அமையு மென்பது. இக்கருத்தேபற்றிப் "பாவென மொழியினுந் தூக்கினது பெயரே" என்றார் இந்நூலின் வழிநூல் செய்த *ஆசிரியருமென்பது. உதாரணம் :

"உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை
யலங்குலை யீந்தின் சிலம்பிபொதி செங்காய்
துகில்பொதி பவள மேய்க்கு
மகில்படு கள்ளியங் காடிறந் தோரே" (ஐங்குறு)

என்பது ஆசிரியப்பா உறுப்பாகி வந்த செய்யுள்.

"வசையில்புகழ் வயங்குவெண்மீன்
றிசைதிரிந்து †தெற்கேகினும்" (பத்து-பட்டின-1-2.)

என்பது வஞ்சிப்பா உறுப்பாகி வந்த செய்யுள்.

"வாரிய பெண்ணை வருகுரும்பை வாய்த்தனபோ
லேரிய வாயினு மென்செய்ய-கூரியவேற்

* நந்தத்தனார் என்றார் யாப்பருங்கல விருத்தியுரைகாரர்.
† 'தெற்கெய்தினும்' என்பதும் பாடம்.

கோட்டியானைத் தென்னன் குளிர்சாந் தணியகலங்
கோட்டுமணங் கொள்ளா மூலை.'' (முத்தொள்ளாயிரம்.)

என்பது வெண்பாவுறுப்பு வந்த செய்யுள்.

"அரிதாயவறனெய்தி" (கலி-11) என்பது கலிப்பாவுறுப்பு வந்தது. பிறவும் அன்ன.

இவை இன்ன அடியான் வந்தன வென்பது என்னையறியுமாறெனின் அதுவன்றே தூக்குப் பயம்படுகின்ற இடமென்பது. மூன்றுபாவினை நாற்சீரானும், வஞ்சிப்பாவினை இருசீரானும் முச்சீரானுந் தூக்குக்கொண்டு இத்தூக்காமாறு உணர்ந்துகொள்க.

ஆசிரியம் வெண்பாக் கலி வஞ்சியெனச் சிறப்புமுறையாற் கூறாதென்னையெனின், அஃது 'மூந்து மொழிந்ததன் றலைதடு மாற்றே' (தொல்-மரபியல்-110) என்பாருமுளர். வஞ்சிப்பா முதற்கூறாமையின் அற்றன்றெனபது. மற்றென்னை சருதிடதெனின் ஆசிரியம் வெண்பாவென்று ஒதினவை வழக்கிற்குஞ் செய்யுட்கும் உரிமையின் அவையேபோறலுஞ் சிறப்புடையவென்றசொள்வாருமுனும், அற்றன்று; இவை செய்யுளிலக்கணமாசலான் அவை நான்கும் ஒத்த இலக்கணத்த செய்யுளென்றற்கு இம்முறையான் ஓதினனென்பது. இனி ஒருசாரார் இந்நான்கனையும் ஒன்று மூன்றாக விகற்பித்துக் கூறுப; என்னை? எந்திசை தூங்கிசை ஒழுகிசை என்றாற்போல. அற்றன்று; ஓரெழுத்துமுதல் ஐயெழுத்தீச சீரளவும் உயர்ந்த சீரான்வருஞ் செய்யுட்கு ஒன்று ஒன்றனின் வேறுபட்டொலிக்கும். அவ்வேறுபாடுதோறும் பாவேறுபடா. என்னை?

'எழுத்தள வெஞ்சினுஞ் சீர்நிலை தானே
குன்றலு மிகுதலு மில்லென மொழிப' (தொல்-செய்-43.).

என்றமையினென மறுக்க. அல்லதூஉம் அங்ஙனம் வேறுபாடு கொள்ளின் ஒரோவொன்று ஐந்தாகலுந் தூங்கலோசை ஆறும் ஏழுமாகலுமுடைய வென்பது. (௭0௫)

418. அந்நிலை மருங்கி னறமுத லாகிய
மும்முதற் பொருட்கு முரிய வென்ப.

இது, பாவினைப் பொருட்குரியவாற்றான் வரையறை கூறுவான் தொடங்கிப் பொருட்குரிமை பொதுவகையான் உணர்த்துகின்றது. இது பொருளதிகாரமாகலின் இங்ஙனங் கூறுகின்றான்.

இதன் பொருள் : அந்நிலைமருங்கின் - அம் மேலைச்சூத்திரத்துத் தோற்றுவாய் செய்யப்பட்ட செய்யுளினிடத்து ; அறமுதலாகிய மும்முதல் - அறம்பொருளின்பமென்பன ; அறமுதற் பொருளெனவே அவையும் அவற்றது நிலையின்மையும் அடங்கும் : பொருட்கும் உரிய வென்ப-அப்பொருட்செல்லாம் உரிய நான்குபாவும், என்றவாறு.

அந்நிலைமருங்கினெனவே, அவை மும்முதற்பொருட்கு உரிய வாங்காற் செய்யுளிடத்தன்றித் தாமாக உரிமை பூணுவென்பது. வீடென்பது செய்யுளுள் வாராதோவெனின் அறமுதலென்பது புறப் பாட்டெல்லையாகக் கூறினு னென்பாா நான்கு பொருளுந் தழீஇயுரை ப்ப. இனியொருசாரார் மும்முதற்பொருட்கும் உரியவென்பதனை எச்சப்படுத்திசகொள்ப. அற்றன்று, உலகிற் பொருண்மூன்றனையுங் கூறுவான் அவற்றை மும்முதற் பொருளெனறான், அவையின்றி வீடு பெறுமாறு வேறினமையின் வீடும் ஆணடுக் கூறினுனென்பது.* அல்லாதார் வீடெனனும் பொருண்மை செய்யுட்கண் வாராமையின் அது கூறானென்ப. அங்ஙனங் கருதின் அறமுதற்பொருளுஞ் செய்யுட்கண் வாராவென மறுக்க.† (கUசு)

* "மும்முதற்பொருளெனவே, அவற்றது துணைப்பொருளாகிய அறநிலையின்மையும் பொருணிலையின்மையும இன்பநிலையின்மையும் அடங்குமென்ப. உலகியற்பொருண் மூன்றனையும் இவையெனக் கூறி அவற்றை விடுமாறுங் கூறவே, வீடுங் கூறிற்றாம். அது கூறுதற் குரிய செய்யுளும் மேற் கொச்சகமென்றுணர்க" என்றார் நச்சினார்க் கினியர்.

† "அகத்தியனாரும், தொல்காப்பியனாரும் வீடுபேற்றிற்கு நிமித் தங் கூறுதலன்றி, வீட்டின் தன்மை இலக்கணத்தாற் கூறுரென்று

419. பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பி
னாசிரி யப்பா வெண்பா வென்றாங்
காயிரு பாவினு ளடங்கு மென்ப. (௪0௭)

420. ஆசிரிய நடைத்தே வஞ்சி யேனை
வெண்பா நடைத்தே கலியென மொழிப.

இவை இரண்டு சூத்திரமும் உரையிலைபுநோக்கி உடனெழுதப் பட்டன. மேற் பாவினது விரி நான்கென்றமையின தொகையுமுண் டென்பது பெற்றாம். அவை தொகுக்குங்கால் இரண்டாகித் தொகு மென்பதூஉம், அங்ஙனம இரண்டாமிடத்தும், யாதானும் ஒன்றடக்கி இரண்டாகா முதற்பாவென நாட்டபபடுவன இவை யெனவும், அவை முதலாகத் தோனறி ஆண்டடங்குவன இவை யெனவும் உணர்த்து கின்றது.

இதன பொருள் 'மேற் பாச்கண் விரிந்த பகுதியை உண்மைத் தன்மை நோக்கித் தொகுப்பின் ஆசிரியமும் வெணபாவுமேயாம். அவற்றுள் ஆசிரியத்துட் விசற்பமாகித் தூஙகலோசை விரிந்தடங்கும், வெணபாவின் விகறபமாகிக் கலிபபா விரிநதடஙகும்; அஙஙனம அடங்கி இரண்டாகும் பாவினவகை, என்றவாறு.

"வீடுபேறுவினைநரநெடிநிருநது" என அகவற்சீரான் வஞ்சித் தூக்குப் பிறந்தது. மாசேர்வாய் மாசேர்வாய் மாசோவாய மாசோவாய் என வெண்பாவினுட் கலிபபா பிறநதது. பிறவும் அனன.

---

உணர்க. அஃது 'அநல்லமருங்கின......' எனபதனுன உணர்க. இக் கருத்தானே வள்ளுவனாரு முப்பாலாகச் கூறி மெய்யுணர்தலான் வீடுபேற்றிற்கு நிமித்தங கூறினார்" எனபது தொல்காப்பியம்-சிறப்புப் பாயிரம்-நச்சினார்க்கினியர் உரை.

"வீடென்பது சிநதையுமொழியுஞ் செல்லா நிலைமைத்தாகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறபபடுவதல்லது இலக்கணவகை யாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறபபடுவன ஏனை மூன்றுமே யாம்" என்பது திருக்குறள்-பரிமேலழகர் உரைப்பாயிரம்.

இனி, ஒரு சாரார் வஞ்சிப்பாவினுங் கலிப்பா பிறக்குமாதலின் அது கூறி விரம்பாதென்ப. என்னை?

"விளங்குமணிப் பசும்பொன்னின்
விசித்தமைத்துக் கதிர்கான்ற"

என்னும் இரண்டு வஞ்சியடியும் ஒரு கலியடியாகச் சொல்லப்படுமென்பது அவர் கருத்து. அற்றன்று. அவையிரண்டுமாதற்கோர் கட்டளையழிந்த கலிப்பாவேயெனினும், வஞ்சியடியாதற்கு ஒரு காரணம் இல்லை, தலைகுலுக்கி வலியச் சொல்லினுந் தன் சீரின்மையினென மறுக்க. அல்லதூஉம் ஒன்று ஒன்றனோடு ஒக்குங்காற் பிறப்பித்ததனோடு பிறந்ததொப்ப வேண்டுமென மறுக்க.

"வயலாமைப் *புழுக்குண்டும்
வறளடம்பின் மலாமலைந்தும்" (பத்து-பட்டின-64-65.)

என்றக்காற் கலிப்பாவாகச் சொல்லியவழியும் அத்தூங்கலோசையோடு ஒத்தல்வேண்டும், அதனின் அது பிறந்ததாயினென மறுக்க. அல்லதூஉம் அவ்விரண்டடியுங் கூட்டியவழி அகவலோசையாதலே வலிது. என்னை? தன்றளை விராய வந்தமையின். பண்புறவென்றதனான் ஆசிரியப்பாவும வெண்பாவும இயல்பெனவும், ஒழிந்தன விகாரமெனவுங் கொள்க. எனவே, வெண்பாவெனறதனான் மூன்றுபாவினுந் துள்ளல் கலியோசையும் ஒருவகையான வெண்பாநெறித்தேயாம், இலக்கணக்கலியோசையன்றாயினுமென்பது கொள்க. (கoஅ)

## 421. வாழ்த்தியல் வகையே நாற்பாற்கு முரித்தே.

இது, மேற்கூறிய 'மும்முதற் பொருட்கண்' (தொல்-செய்-106) ஒருசாரானவற்றை வாழ்த்துதல் என்பதோராறும் உண்மையின் அப்பகுதி நான்கு பாவிற்கும் உரித்தென்கின்றது.†

---

* 'இழுக்குண்டும்' என்பது முன் அச்சுப் பிரதிப் பாடம்.

† சூத்திரப் பொருள் ஏடுகளிலும் முன் அச்சுப் பிரதியிலும் காணப்படவில்லை. 'வாழ்த்தியலின் கூறுபாடு நான்கு பாவிற்கு முரித்து' என்பது நச்சினார்க்கினியர் உரை.

நால்வகைப்பட்டது பாவாகலின் அப்பாவினை நான்கென்றான். வாழ்த்தியலென்னாது 'வகை' யென்றதனான் மேற்கூறிய மும்முதற் பொருளின் அறுவகையும் பெரும்பான்மை யெனப்படுமென்பதூஉம், அங்ஙனம் வாழ்த்துங்கால் தனக்குப் பயன்படுதலும் படர்க்கைப் பொருட்குப் பயன்படுதலுமென இருவகையான் வாழ்த்துமென் பதூஉம், முன்னிலையாக வாழ்த்துதலும் படர்க்கையாக வாழ்த்துத லும் என இருவகைப்படுமென்பதூஉம் எல்லாங்கொள்க. அங் ஙனம் வாழ்த்தப்படும் பொருளாவன ; கடவுளும் முனிவரும பசு வும் பார்ப்பாரும் அரைசரும் மழையும் நாடுமென்பன. அவற்றுட் கடவுளை வாழ்த்துஞ் செய்யுள் கடவுள் வாழ்த்தெனப்படும். ஒழிந்த பொருள்களை வாழ்த்திய செய்யுள் அறுவகை வாழ்த்தெனப்படுமென் பது.

"மாநிலஞ் சேவடி யாகத் தூய்நீர்
வளைநரல் பௌவ முடுக்கை யாக
விசும்பு மெய்யாகத் திசைகை யாகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ணாக
வியன்றன வெல்லாம் பயின்றகத் தடக்கிய
வேத முதல்வ னென்ப
தீதற விளங்கிய திகிரி யோனே."

(நற்றிணை-கடவுள வாழ்த்து.)

என்பது தெய்வவாழ்த்து.

"யாழ்கெழு மணிமிடற் றந்தணன்
றாவிற ணிழற்ற வீர்ந்தன்ற லுலகே."

(அகம்-கடவுள் வாழ்த்து.)

என்பதும் அது. முன்னையது தனக்குப் பயன்பட வாழ்த்தியது, பின் னரது உலகிற்குப் பயன்பட வாழ்த்தியது. பிறபாவினும் மருட்பாவி னும் பிறபொருட்கண்வந்த வாழ்த்து வந்துழிக் கண்டுகொள்க.

வாழ்த்தென்பது அறமாகலின் அறமுதலாகிய மும்முதற்பொரு ருள்கள் (தொல்-செய்-106) என்புழி அடங்கும்பிற, இச்சூத்திரம்

மிகையாலெனின், அற்றன்று. புறநிலை வாழ்த்து முதலியன உள; அவை நீக்குதற்கு இது விதந்தோதினனென்பது. வாழ்த்தியலென்றதனான், இயற்கைவாழ்த்தெனப்படுவன இவையெனவும் இனிவரும் புறநிலைவாழ்த்து முதலியன இயற்கைவாழ்த்தெனப்படா ஒருவகையான் வாழ்த்தென்பான் சார்த்தியுணரப்படுவதல்ல தெனவுங்கொள்க. (கoக)

422. வழிபடு தெய்வ நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமி னென்னும் புறநிலை வாழ்த்தே
கலி நிலை வகையும் வஞ்சியும் பெறாஅ.

இது, நாற்பாற்கும் உரித்தன்றி வரையறைப்படும் வாழ்த்து வேறுபாடு உணர்த்துகின்றது.

இதன் பொருள்: நினக்குத் தொழுகுலமாகிய தெய்வம் நின்னைப் புறம்காப்ப, இல்லறம் முதலிய செல்வத்தாற் பழியின்றிப் பூத்த செல்வமொடு புதல்வர்ப்பயந்து, புதல்வரும் இப்பெற்றியராகி எல்லீரும் நீடுவாழ்வீராமினென்று தெய்வத்தைப் புறநிறுத்திவாழ்த்துவது புறநிலைவாழ்த்து. அங்ஙனம் வாழ்த்திய அச்செய்யுள் கலிப்பா உறுப்பாகவும் வஞ்சிப்பாவினும் வருதலில்லை, என்றவாறு.

தெய்வத்தைப் புறநிறுத்தி வாழ்த்துதலிற் புறநிலைவாழ்த்தாயிற்று. வழிபடுதெய்வம் நிற்புறங்காப்ப என்றோதினமையின் வழிபடுதெய்வம் உள்வழியே புறநிலைவாழ்த்தெனப்படுவதென்பது. எடுத்துக்கொண்ட காரியத்துக்கு ஏதுவாகிய கடவுள் நிற்ப அக்கடவுளாற் பயன்பெற நின்றுணோர் சாத்தனை முன்னிலையாக்கி அவற்குக் காரியங் கூறுதலின் இது புறநிலையாயிற்று. 'கலிநிலை வகை'யென்றதனாற் கலிவகைத்தாகிய பரிபாடற்கும் இஃதொக்கும். இனிக் கடவுளாற் காக்கப்பட்ட சாத்தனை வாழ்த்தப்படானெனவுஞ் சொல்லுப. அற்றன்று; கடவுள்வாழ்த்தென்றால் அவ்வாறு பொருள்படாமையினென்பது. இவற்றுக்குச் செய்யுள்:

"இமையா முக்க ணிலங்குசுடர் வாய்ந்த
வுமையொரு பாகத் தொருவன் காப்பநின்
பல்கிளைச் சுற்றமொடு நல்லிதி னநதி
நீடுபல் வாழிய வாய்வாட் சென்னிநின்
னொருகுடை வரைப்பி னீழற் பெற்றுக்
கிடந்த வெழுகட லப்ப
ணகலிரு விசும்பின் மின்னினும் பலவே"

எனவும்,

"திஙக ளிளஙகதிர்போற் றெந்திஙக ளூர்த்தேவன்
மைநதர் சிறப்ப மகிழ்சிறந் து—திங்கட்
கலைபெற்ற கற்றைச் சடைக்கடவுள் காப்ப
நிலைபெற்று வாழியரோ நீ."

எனவும வரும். இனிக் கலிபபாவினுள் வருஙகாற் கடவுண் முன்னிலையாக வரும. என்னை? 'தேவாப் பராஅய முன்னிலைக் கண்ணே' (தொல-செய்-138) எனறமையின். அஃது வாழ்த்தியல் வகையென மேலேயடஙகிற்று. வஞ்சிப்பாவிற்கும் அவ்வாறு கொள்ளப்படும். இச்சூத்திரம் பாவெனனும் உறுப்பிற்குப் பொருள் வரையறுத்தது. மற்று 'நிற்புறஙகாபப'வென ஒருமைகூறிப் 'பொலிமின்' எனப் பனமைகூறியதெனனையெனின், 'வழிபடு தெய்வ நிற்புறங் காப்ப' வென்றமையிற் புதல்வரோடுங்கூட்டிப் பாட அமையுமென்றற்கு அவவாறு கூறினெனனபது. (கஙo)

## 423. வாயுறை வாழ்த்தே யவையடக் கியலே செவியறி வுறூஉவென வவையு மன்ன.

இதுவும் பாக்களை மூன்ருக வரையறுக்கின்றது. வாயுறை வாழ்த்தும், அவையடக்கியலும், செவியறிவுறூஉவும் என மூன்றும் மேலைப் புறநிலைவாழ்த்துப்போல் *வாழ்த்தும்பகுதியவாகலுங் கலி

* 'வாழ்த்தும் பகுதியவாயினும்' என்பது முன் அச்சுப்பிரதிப் பாடம்.

க்கே வகையும் வஞ்சியும் பெருமையுமுடையவென மாட்டெறிந்த வாறு. அவையாமாறு முன்னர்ச் சொல்லுதும்.

இதன்பொருள்: வாய் - வாய்மொழி, உறை - மருந்து; வாயுறை யென்பது சொன்மருந்தெனப் பண்புத்தொகையாம்: இனி வாய்க்கட் டோன்றிய மருந்தென வேற்றுமைத்தொகையுமாம்: மருந்துபோற லின் மருந்தாயிற்று. அவன் சிறப்புக்கூறி வழுத்தி ஒருசாத்தற்குப் பயன்படச் சொல்லினமையின் வாயுறைவாழ்த்தெனப்படுமென்பது. மற்று 'சிற்புறங்காப்ப'வெனப் புறநிலைவாழ்த்திற்கு இடமறியமித்தாஙகு இதற்கும் இடவியமங் கூருரோவெனின, அது மாட்டேற்றுனே அடங்குமென்பது.

அவையடக்கியல் - அவையை வாழ்த்துதல்; அவையடக்குதலென் பது இரண்டாம்வேற்றுமைத்தொகை: அடக்கியலென்பது, வினைத் தொகை; தானடஙகுதலாயின் அடங்கிடலெனவேண்டும், அஃதாவது, அவையத்தாரடஙகுமாற்றால்* இனியவாகச்சொல்லி அவரைபபுகழ்தல்.

செவியறிவுறூஉ - ஒருசாததறகுச செவியறிவுபடுதது அவனை வாழ்த்துதல்; என அவையும அன்ன - என்ற இம்மூனறும அத்தன் மையவேயாம், எனறவாறு.

தெய்வத்தொடுபட்டமையிற புறநிலைவாழ்த்து முற்கூறி இவை பிற்கூறினன். இவற்றுள் வாயுறைவாழ்த்து முன்னிலைக்குரிமையின் அதன்பின்வைத்தான். முன்னிலைககே உரித்தாயினுஞ் செவியறி வுறூஉவினை ஈற்றுக்கண்வைததான, பயம்பெறுவானையே நீ இனன வருணத்தையாவாயென்று புகழ்படவாழ்த்திச சொல்லப்படுதல் வேறு பாடுடைமையினெனபது. இஙஙனம வரையறுக்கின்றது நால்வகைப் பாவாகிய உறுப்பினை நோககியாகலின, அவற்றுள †இவவுறுப்புடைய நால்வகைசசெய்யுட்கும இவவுறுப்பினதிலககணம் எய்துவித்துக்

* 'தன்னை இழித்துககூறி அவரைப்புகழ்தல்' என்றார் நச்சினார்க் கினியர்.

† 'அவ்வுறுப்புடைய' என்பது முன் அச்சுப்பிரதிப் பாடம்.

கொள்ளப்படும். கொள்ளவே, ஆசிரியப்பாட்டும் வெண்பாட்டும் மருட்பாவும் எல்லாவாழ்த்திற்கும் உரியவென்பதூஉங் கலிப்பாட்டும் வஞ்சிப்பாட்டும் புறநிலைமுதலிய நால்வகைப்பொருட்கும் உரியவல்ல வென்பதூஉம் பெற்றாம். என்னை ?

'மருட்பா வேனை யிருசா ரல்லது
தானிது வென்னுந் தனிநிலை யின்றே' (தொல்-செய்-85.)

என்றமையின். (கககூ)

424. வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்புங் கடுவும் போல வெஞ்சொற்
றாங்குத லின்றி வழிநனி பயக்குமென்
றோம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே.

இது, முறையானே வாயுறைவாழ்த்துணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: முற்பருவத்துக் கைத்தும் பிற்பருவத்து உறுதி பயக்கும் வேம்புங் கடுவும்போல வெய்யவாய் இன்சொல்லினைத் தடையின்றிப் பிற்பயக்கு மெனக் கருதிப் பாதுகாத்துக் கிளக்குங் கிளவியினான் மெய்யாக அறிவுறுத்துவது வாயுறைவாழ்த்தெனப்படும், என்றவாறு.

வாயுறையென்பது மருந்தாகலான் வேம்புங் கடுவும்போல என்றானென்பது. அதற்குச் செய்யுள்:

"இருங்கட லுடுத்த பெருங்கண் மாநில
முடையிலை நடுவணத் திடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட வேமங் காவல
ரிடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடு பதியாகப் போகித் தத்த
நாடு பிறர்கொளச் சென்று மாய்ந்தனரே
யதனால், நீயுங் கேண்மதி யத்தை வீயா
துடம்பொடு நின்ற வுயிரு மில்லை

மடங்க லுண்மை மாயமோ வன்றே
முள்ளி வேய்ந்த கள்ளியம் புறங்காட்டு
வெள்ளி போகிய வியலு ளாங்க
ணுப்பிலாஅ அவிப்புழுக்கல்
கைக்கொண்டு பிறக்குநோக்கா
திழிபிறப்பினோ னீயப்பெற்று
நிலங்கல னாக விலங்குபலி மிசையு
மின்னா வைகல் வாரா முன்னே
செய்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பக முழுதுடன் றுறந்தே." (புறம்-363.)

பிறவும் அன்ன. (கஉ)

425. அவை யடக்கியலே யரிறபத் தெரியின்
வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மினென்
றெல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே.*

இது, முறைபானே அவையடக்கியலுணர்த்துகின்றது.

இதன் பொருள் : வல்லாதன சொல்லினும் அவற்றை ஆராய்ந்து கொண்மினென அவையகத்தாரெல்லார்க்கும் வழிபடுகிளவி சொல்லுதல் அவையடக்கு, என்றவாறு.

வல்லுதலென்பது ஒன்று வல்லனாதல்; ஒருவன் வல்லவற்றை வல்லவென்பவாகலான் வல்லாதனவற்றை வல்லாவென்றானென்பது. அதற்குச்செய்யுள் ;

"திரைத்த விரிக்கிற் றிரைப்பினு வாய்போ
லுரைத்த வுரையதனைக் கேட்டு - முரைத்த

---

* "அவையடக்கியலைக் குற்றமற ஆராயின், அறியாதன சொல்லினும் பாகுபடுத்துக் கோடல்வேண்டுமென்று எல்லாமாந்தர்க்குந் தாழ்ந்துகூறல், என்றவாறு" என்பது உரையாசிரியர் உரை.

பயன்றவா செய்வார் சிலரேதந் நெஞ்சத்
தியன்றவா செய்வார் பலர்." *

இது †பூத்தார் அவையடக்கு. 'அரிறபத்தெரியின்' என்றதனானே யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடைய கொச்சக வொருபோகினும் அவையடக்கியல் சிறுபான்மை தொடர்நிலைக்கண் வருமெனக்கொள்க. (கக௫)

426. செவியுறை தானே,
பொங்குதலின்றிப் புரையோர் நாப்ப
‡ணவிதல் கடனெனச் செவியுறுத் தன்றே.

இஃது, இறுதிநின்ற செவியுறைபுணர்த்துகின்றது.

இதன் பொருள் : செவியுறை - செவிமருந்து ; அதுவும் ஒப்பினாகியபெயர் : தானேயெனநின்ற ஏகாரம் பிரிநிலை. பொங்குதலின்றி - பெருக்கமின்றி; (¶புரையோர் நாப்பண் அவிதல் கடன் எனச் செவியுறுத்தன்றே)-பெரியோர் நடுவண் §அடங்கிவாழ்தல் கடப்பாடெனச் சொல்லிச் செவிக்கணிறக உறுத்துவது செவியறிவுறூஉ, என்றவாறு.$

* இது பொய்கையார் பாடிய இன்னிலையில் அறத்துப்பாலின் ஐந்தாவது செய்யுளாகக் காணப்படுகிறது. †நச்சினார்க்கினியர் உரைப் பிரதியில் இச்செய்யுள் 'பூத்தார் அவையடக்கு' என்று காணப்படுகிறது.

‡ 'நவிலுதல்' என்பது மூன் அச்சுப்பிரதிப்பாடம். 'அவிதல்' என்பதே ஏட்டுப்பாடம். பிற உரையாசிரியர்கள் கொண்டபாடமும் இதுவே.

¶ இருபிறைக்குட்பட்ட இப்பகுதி ஏட்டுப்பிரதிகளிலில்லை.

§ 'தங்கி வாழ்தல்' என்பது மூன் அச்சுப்பிரதிப்பாடம். 'நடுவணடங்கி' என்று ஏடுகளிற் காணப்படுகிறது.

$ "செவியறிவுறூஉவாவது பெரியோரான் நகுதலின்றித் தாழ்ந்து ஒழுகுதல் கடனெனச் செவியறிவுறுத்தல்" என்பது உரையாசிரியர் உரை.

அஃது அடங்கி வாழ்வார்க்குப் புகழாதலான் வாழ்த்தின்பாற் பட்டது. அதற்குச்செய்யுள்:

"வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்" (புறம்-6.)

என்பதனுள்,

* "பணியிய ரத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செய்தே
யிறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை முதல்வ ரேந்துகை யெதிரே" (புறம்-6.)

எனவும்,

"என்றுமின்சொல் லெண்பதத்தை யாகுமதி பெரும"

எனவும்,

"பணிவுடைய †னின்சொல்ல னாத லொருவற்
கணியல்ல மற்றுப் பிற" (குறள்-10-5.)

எனவும் வரும்.

இத்துணையும் பாவினது பெயரும் முறையும் எண்ணும் பொருட்கு உரியவற்றுக்கண் வரையறையுங் கூறியவாறு. (கக௬)

## 427. ஒத்தா ழிசையு மண்டில யாப்புங் குட்டமு நேரடிக் கொட்டின வென்ப.‡

---

* 'பணீஇயர்' என்பதும் பாடம். 'பணியரத்தைநின் கொடையே' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம்.

† 'இன்சொலன்' என்பதும் பாடம்.

‡ "இது செய்யுட்கு அடி வரையறுத்தலை நுதலிற்று. ஒத்தா ழிசைக்கலிக்கு உறுப்பாகிய ஒத்தாழிசையும், ஆசிரியப்பாவின்கண் நிலைமண்டிலம் அடிமறிமண்டிலம் என்பனவும், ஒத்தாழிசைக்கும் கொச்சகத்திற்கும் பொதுவாகிய குட்டமும் நாற்சீரடிக்கும் பொருந் தின, என்றவாறு. மேல் ஆசிரியப்பாவின் ஈற்றயலும் இடையினும் முச்சீரும் இருசீரும் ஐஞ்சீரும் அறுசீரும் வருமென்றதனானே எல்லா வடியும் ஒத்துவருவனவுமுளவென மண்டிலங் கூறவேண்டிற்று. கலிப்பாவிற் சுரிதகம் ஈற்றடி முச்சீரானும் ஈற்றயலடி முச்சீரானும் வருமென்றமையால் தாழிசையும் தரவும் நாற்சீரானல்லது பிறவாற் றான் வாராவெனக் கூறல்வேண்டிற்று, குட்டமெனினும் தரவெனி னும் ஒக்கும். இனிக் கலிக்குறுப்பாகிய சின்னங்கள் இருசீரானும் முச்சீரானும் வருதலானும் தனிச்சொல் ஒருசீரான் வருதலானும் வேறோத வேண்டிற்று" என்பது உரையாசிரியர் உரை.

இதுவும் மேனின்ற அதிகாரத்தாற் பாவிலக்கணமே கூறுகின்றது.

இதன் பொருள் : ஒத்தாழிசைக்கலியின்கண்ணும் மண்டிலயாப்பின்கண்ணுங் குட்டம் வருங்கால் அளவடிக்குப் பொருந்தி வருந்தத்தம பாக்கள், என்றவாறு.*

பாவென்பது அதிகாரத்தாற் கொள்ளப்படும். ஒத்தாழிசைக்கலி அளவடியுஞ் சிந்தடி குறளடியும் விராய்வீற்குமாயினும் அளவல்லாவடியேனும் அளவடிக்குப் பொருந்து மாற்ருற் பாக்கொளுத்தப்படுமென்பது.

'அரிதாய வறனெய்தி யருளியோாக் களித்தலும்' (கலி-11) என அளவடிக்கண தூள்ளலோசை வநதது.

* "ஒத்தாழிசையும் - ஒத்தாழ்ந்த வோசையும் ; மண்டிலயாபபும் - மண்டலித்துவரும யாப்பும் ; குட்டமும் - இருசீரும் முச்சீருமாகிக் குறைந்து வருவனவும் ; நேரடிக்கொட்டின என்ப - நாற்சீரடிக்குப் பொருநதின என்று கூறுவர் ஆசிரியர், என்றவாறு. என்றதனல், நாற்சீரடி முரற்கைபடத்துள்ளிவருதலேயன்றித் தாழம்பட வோசை பெற்றும் வருமென்ருர். அதுவே, ஒத்தாழிசையை ஒத்து மூன்ருய் வருமென்று 'ஒத்து மூனருகு மொத்தாழிசையே' (செய்-142) என்புழிக் கூறுமாற்ருன் உணாக. இனி நாற்சரடியாய் வரும் ஆசிரியமும் வெண்பாவும் ஈற்றயலடியும் ஈற்றடியும் முச்சீராய்வருமென முன் விதித்தவை ஒருகால் நாற்சீராயும வருமென்றற்கு மண்டிலயாப்பென்ருர் ; அது மண்டில வாசிரியப்பாவும் மண்டிலவெண்பாவுமாம்...... இனி நாற்சீரடியாய்வரும் ஆசிரியப்பாவும் குட்டம்பட்டு வருமென்ருர். ஆசிரியப்பாவிற்குக் குட்டமாவது குறளடி வஞ்சியும் சிந்தடி வஞ்சியும் பொருந்திவருதல். வெண்பாவிற்குக் குட்டமாவது ஈற்றடியேயன்றி ஏனையடியுங்குறைதல்." என்பது **நச்சினர்க்கினியர் உரை.**

"போரவுணர்க் கடந்தோய்நீ
புணர்மருதம் பிளந்தோய்நீ"

எனக் குறளடிக்கண்ணும் அவ்வாறே துள்ளலோசை வந்தவாறு கண்டுகொள்க.

"நீரின் றண்மையுந் தீயின் வெம்மையுஞ்
சாரச் சார்ந்து தீரத் தீருஞ்
சார லுடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே"

என இஃது இடையடி குறைந்தமையிற் கூட்டமென்னப்பட்டது. நாற்சீரடி யாத்துவருவன மண்டிலயாப்பெனப்படும். அவைபோலக் கூட்டமும் நேரடிக்குப் பாப்பொருந்தின வென்றவாறு.

ஈற்றின் மண்டிலமோதிய தென்னையெனின், அது சொல்லாக் காற் கூட்டமே நேரடிக்கு ஒட்டிவருவன செலவுமாகலினென்பது. மண்டிலமென்பன,

"யாருக் காதலர் மலைமறந் தனரே
யாருக் கட்பனி யாலா தனவே
வேறு மென்றோள் வளைநெகி ழும்மே
கூறுட் தோழியான் யாழு மாறே"

என்றற் றொடக்கத்தன.

ஒத்தாழிசை முன்வைத்ததென்னையெனின், மண்டிலம்போல் வனவுங் கூட்டம்போல்வனவுங் கலிப்பாவினுட் சிறுபான்மையென் றற்கென்பது. அவை அளவடிக்குரிமை யாண்டுப்பெறுதுமெனின், அவை தம்மை உறழுங்கால ஓதிய சீலவகையானும் 'இன்சீர் வகையி னைந்தடிக்கு முரிய' (தொல்-செய்-54) என்னுஞ் சீர்வகையானும் பெறுது மென்பது. இதனது பயன் குறளடிவஞ்சிப்பாப்போலப் பாவேறுபடாவென்பது. ஒட்டிடென்றதனான் இத்துணை போகாது சிறுவரவிற்றாய் வரும் வெண்பாக்கண்ணுமென்பதுகொள்க. (ககூ)

## 428. குட்ட மெருத்தடி யுடைத்து மாகும்.

*இது குட்டத்திற்கோர் சிறப்புவிதி.

இதன் பொருள் : குட்டம் எருத்தடியின்கண்ணும் வரும், என்ற வாறு.

மேல் ஆராய்ச்சிப்பட்ட குட்டம் இடைவருதலன்றி ஒருபாட்டின் ஈற்றயலடிக்கண்ணே வந்தொழிதலும் உண்டன்றே ? அதுவும் பாவிற் கேற்பக் குறைக்கப்படுமென்பான் 'குட்டம் எருத்தடி யுடைத்து மாகும்' என்றான்; குறைத்தற்குக் கூறிற்றிலனெனலவெனென்பது. இதனை இவ் வாறு கூறவே மேற்கூறிய குட்டம் ஒத்தாழிசைக்கட்போல இடை யிடை வருமென்பது பெற்றாம்.

"உடைதிரைப் பிதிர்விற் பொங்கிமுன்
கடல்போ ரோனறல காடிறந் தோரே" (அகம்-17)

என ஈற்றயலடி முச்சீரான வந்தது. பிறவும் அன்ன. (கஉக)

* "என்பது மேலதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று. (இ-ள்.) ஈற்றயலடி முச்சீரான் வரவும் பெறும், என்றவாறு. 'எருத் தடியுடைத்து' என்றதனானே ஈற்றயலடி முச்சீரெனப் பொருள்படு மோவெனின், ஆசிரியப்பாவின ஈற்றயலடி முச்சீரான் வருதலானும், தூக்கியலென ஓதலானும் அவ்வாறு பொருள்படுமென்று கொள்க. .. ......இன்னும் குட்டமெனபதனைத் தரவுகொச்சகமாகிய கொச்சக ஒருபோகிற்கும் பெயராக வழங்கினும அமையும். அவ்வழி ஒத்தா ழிசை என்பதனை ஒத்தாழிசைக் கலியென்க வெனத் தரவையுங் கூட் டிப் பொருளுரைக்கப்படும்" எனபது உரையாசிரியர் உரை.

"முற்கூறிய குட்டம் தரவுக்கும் உரித்தென்கின்றது. (இ-ள்.) தரவினது ஈற்றடி குறைந்துவருதலை யுடைத்தாம் என்றவாறு. எருத்து என்றது தரவை ; அஃது 'எருத்தே கொச்சகம்' (செய்-153) என்பதனான் உணர்க." என்பது நச்சினார்க்கினியர் உரை.

## 429. மண்டிலங் குட்ட மென்றிவை யிரண்டுஞ் செந்தூக் கியல வென்மனார் புலவர்.

*இது, மண்டிலமுங் குட்டமும் வருமிடனுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: மேற்கூறிய மூன்றனையும் இன்ன பாவென்பது உணர்த்தினன் அவற்றுள் இறுதிநின்ற மண்டிலமுங் குட்டமும் ஆசிரியப்பாவினை உறுப்பாகவுடைய, என்றவாறு.

† எனவே, ஒத்தாழிசையாகிற் கலிப்பாவினை உறுப்பாகவுடைத்தென்பது பெறுதும். என்னை?

'ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே
கொச்சக முறழொடு கலிநால் வகைத்தே''

(தொல்-செய்-130.)

என்பவாதலான்.

மேற்கூறிய மண்டிலவாசிரியத்தினை நிலைமண்டிலமெனவும் அடிமறிமண்டிலமெனவும் பெயரிட்டு வழங்குவாரும் உளர். நின்றவாறு நிற்றலும், அடிமறித்துக்கொள்ளினும பொருள் திரியாது நிற்றலுமுடையவென்பது போலும் அவர்கருத்து. அடிமறித்தல் பொருள்

* "என்பது மேற்சொல்லப்பட்டவற்றுள் மண்டிலங் குட்டம் என்பனவற்றுக்குரியதோர் ஓசைவேறுபாடுணர்த்துதல் நுதலிற்று. (இ-ள்.) மண்டிலமாகக்கூறப்படும் பாவும், குட்டமென்று கூறப்படும் பாவும் அகவலோசையியல்பின, என்றவாறு." என்பது உரையாசிரியர் உரை.

† "எனவே, வெண்பாவின்கண் சிறுபான்மை வருமென்றவாறாயிற்று. இரண்டும் அங்ஙனம் வருதல் சான்றோர் செய்யுளுட் காண்க" என்பர் நச்சினார்க்கினியர்.

கோட்பகுதியாகலான் அஃதமையும்; அங்ஙனங்கொள்ளின் நிரனிறை முதலிய பொருள்கோட்பகுதியானுஞ் செய்யுள் வேறுபடுமென மறுக்க. இனிக் குட்டமும் இருவகைத்தென்ப, இணைக்குறளாசிரியப்பா நேரிசையாசிரியப்பாவென. அவை அவ்வாறு கொள்ளின் இழுக்கே. 'குட்ட மெருத்தடி யுடைத்து மாகும்' (தொல்-செய்-116) என்று இருவகையாற் கூறினமையி னென்றலுமொன்று. இனி ஒன்றாக வழங்குதலே வலியுடைத்து. 'குட்ட மெருத்தடி யுடைத்து மாகும்' என ஒருமை கூறியவதனான் ஏறிந்தவழி இரட்டித்துக் குறையவேண்டுமென்பது கொள்க. மற்று ஒத்தாழிசைக்கலியும் மண்டிலயாப்புமென்றவழிக் கலிப்பா முற்கூறியதென்னையெனின், குட்டம் ஆண்டுப பயின்றுவருதலின் ஆசிரியத்திற்குப அதனை முற்கூறினான்; இனி முறையானே வெண்பாக் கூறுமென்பது.

குட்டமென்பது வழக்குச்சொல்லாற் செய்யுளென்பாருமுளர். வாற்சொல்லானுமன்றிச் செய்யுள் செய்யப்படாமையின் அது குட்டமென்றல் நிரம்பாது. ஒத்தாழிசையென்பதும் எல்லாச் செய்யுண்மேலுஞ் செல்லுமெனவும் உரைப்ப. பாவும் இனமுமெனப் பகுத்துரைப்பார்க்காம் அது பொருளாவதென மறுக்க. அல்லதூஉம் ஒரோவொன்றே வருவது ஒத்தாழிசை யெனப்படாவென்பது. செந்தூக்கென்பது ஆசிரியப்பாவென்றவாறு. பாவினைத் தூக்கெனவுஞ் சொல்லுப. இயலவென்பது அப்பாவானே நடக்குமென்றவாறு. இதுவும் இன்ன செய்யுட்கு உரித்தெனப் பாவினை வரையறுத்ததேயாம். (ககஎ)

**430. நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே**
**கைக்கிளை பரிபாட் டங்கதச் செய்யுளோ**
**டொத்தவை யெல்லாம் வெண்பா யாப்பின.**

*இது, வெண்பாவென்னும்உறுப்பினை இன்னுழிப் பாவாமெனப் பொருளுஞ் செய்யுளும் பற்றி வரையறுக்கின்றது.

இதன்பொருள்: நெடுவெண்பாட்டுங் குறுவெண்பாட்டுங் கைக் கிளையும் பரிபாடலும் அங்கதச்செய்யுளுமென ஐந்துந் தம்மின் ஒத்து வெண்பாவென்னும் உறுப்பினனே கூறப்படும், என்றவாறு.

நெடுவெண்பாட்டென்பன தாமுடைய பன்னீரடி உயர்பு, ஏழடியாக வருவனவென்பது. எனவே குறுவெண்பாட்டென்பன இரண்டடியான் மூன்றடியான் வருவன. குறள்வெண்பா சிந்தியல் வெண்பா வெனப்படலும் ஒன்று. எனவே நான்கடியான் வருவன அளவியலவெனப்படும். கைக்கிளைப் பொருணமைத்தாகலின் மருட் பாவினையுங் கைக்கிளையென்றார். பரிபாடலென்பது பரிந்துவருவது; அஃதாவது கலியுறுப்புப்போலாது பலவடியும் ஏற்றுவருவது. அங் கதமென்பது முகவிலக்கு முதலாகிய விலக்குறுப்பாகியும் பிறவாற்றா

* "என்பது, வெண்பாவாமா றுணர்த்துதல் நுதலிற்று. வெண் பாயாப்பாவது, வெணசீரானும்இயற்சீரானும் வெண்டளையானும் செப்ப லோசையானும் அளவடியானும் முசசீர்ற்றடியானும் வருவது. இவற் றிற் கிலக்கணம் ஓதப்பட்டன. ஈண்டோதப்பட்டனவெல்லாம் அவ் வாறு வரும், என்றவாறு. இவையெல்லாம் ஓசையானுக்குமாயி னும், அளவானும் தொடையானும பொருளானும் இனத்தானும் வேறுபடுத்திக் குறியிடுகின்றாரென்றுகொள்க. நெடுவெண்பாட்டா வது அளவடியின நெடியபாட்டு. குறுவெண்பாட்டாவது அளவடி யிற் குறியபாட்டு. கைக்கிளையென்பதூஉம் அங்கதமென்பதூஉம் பொருளாலாகிய பெயர். பரிபாட்டாவது, பரிந்தபாட்டு பரிபாட் டெனவரும்; அஃதாவது, ஒரு வெண்பாவாக வருதலின்றிப் பல வெண்பாவுமாகிப் பல உறுபபுக்களோடு தொடர்ந்து ஒரு பாட்டாகி முற்றுப்பெறுவது. ஒத்தவை என்றது, அளவானும் பொருளானும் இனத்தானும் வேறுபடுக்கப்படாத சமநிலை வெண்பாக்கள்; அவை யாவன, நான்கடியான் வருவன" என்பது உரையாசிரியர் உரை.

னும் அவை பொருளாக வருவன. ஒத்தென்பது இலக்கணத்தில் திரியாதென்றவாறு. இதனது பயம் கைக்கிளை வெண்பாவினான் வரினுங் கலிப்பாவின்பாற் படுமென்பது. பரிபாடலுஞ் சிற்றுறுப்புவகையான் ஒப்புமையுடையவென்பது கொள்க. அல்லதூஉங் குறுவெண் பாட்டும் பலவாகியும் ஒன்றாய் அடங்குமென்பதூஉமாம். இனி அல்லாதார் வெண்பாவினை ஐந்தெனவுஞ் சொல்லுப. அவை தனிச்சொற் பெற்றும் பெறாதும் வருமெனவும் அவ்வாறு வருங்கால் ஈற்றடி ஒழித்து எல்லாந் தனிச்சொற்பெறுதலும் அவற்றை ஒன்றொன்றனோடு பரிமாற்றித் தனிச்சொற்கொடுத்து உறழ்வனவுமாகிப் பலவாமென்பது. அங்கதச்செய்யுளென்பது பண்புத்தொகை. அங்கதமுங் கைக்கிளையும் மற்றைப்பாக்களும் உறுப்பாக வருமெனப்படும். (கக அ)

## 431. கைக்கிளை தானே வெண்பா வாகி
## யாசிரிய வியலான் முடியவும் பெறுமே.

இஃது, எய்திடதன்மேற் சிறப்புவிதியுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: வெண்பா உறுப்பாகி வருமென்றான் அற்றன்றி வெண்பாவினோடு ஆசிரியப்பாவும் உறுப்பாகக் கைக்கிளை வரும், என்றவாறு.

அங்ஙனம் வருவது மருட்பாவாகலாற் கைக்கிளைப்பொருளே மருட்பாவால் வருவதுடைத்தென்பது பெற்றாம். பெறவே, 'கலிநிலை வகையும் வஞ்சியும் பெறா' (தொல் செய்-110) என்புழி விலக்கப்படாத ஆசிரியப்பாவும் உறுப்பாகவருதலின் வாழ்த்தியல்வகையும் புறநிலைவாழ்த்து முதலாயினவாழ்த்துங் கைக்கிளைப்பொருளாக வரும் மருட்பாவென்பது பெற்றாம். கைக்கிளை யதிகாரப்பட்டது கண்டு அதனை ஈண்டுக் கூறினான். ஒழிந்த புறநிலை வாயுறை செவியறிவுறூஉக்களும் பொருளாக மருட்பாவருமெனபது முன்னர்ச்சொல்லும். இவற்றுக்கெல்லாஞ் செய்யுளும் ஆண்டுக் காட்டுதும். (ககக)

## 432. பரிபா டல்லே தொகைநிலை விரியி
## னிதுபா வென்னு மியனெறி யின்றிப்
## பொதுவாய் நிற்றற்கு முரித்தென மொழிப.

இது, பரிபாடற் காவதோர் புறனடையுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: பரிபாடல் வெண்பாவுறுப்பாக இன்னபாவென்ப துணராமைப் பொதுப்பட நிற்றற்கும் உரித்து, என்றவாறு.

"மண்ணார்ந் திசைத்த முழவொடு கொண்டதோள்
கண்ணோ டெனவிழூஉங் காரிகை கண்டார்க்குத்
தம்மோடு நிற்குமோ நெஞ்சு."

எனப் பரிபாடல் உறுப்பாகவந்தது.

"ஆயிரம் விரித்த வணங்குடை யருந்தலைத்
தீயுமிழ் திறலொடு முடிமிசை யான்வர"

என்பது வெண்டளையும் ஆசிரியத்தளையும் விராய் வந்து தன்னலோசைபடச் சொல்லவும்படுதலின் இதுவென்னும் இயனெறியின்றிப் பொதுவாய்நின்றதெனப்படும். உம்மை இறந்தது தழீஇயிற்று. மற்று இது கலிப்பாட்டிற்கும் ஒக்கும் பிறவெனின், ஒவ்வாதாகாதே? ஆசிரியன் இவ்வாறு கூறினமையினென்பது. அல்லதூஉங் கலிக்கு ஒதிய இலக்கணமின்மையானும் பரிபாடலெனவே படும் பெரும்பான்மையுமென்பது. தொகுத்து விரித்த பாநான்கனுள்ளும் வேறுங்கால் அது வெண்பாவினான் யாக்கப்படாது பொதுவகையான யாக்கப்படுமென்றவாறு. (கஉ0)

433. கொச்சக மராகஞ் சுரிதக மெருத்தொடு
செப்பிய நான்குந் தனக்குறுப் பாகக்
காமங் கண்ணிய நிலைமைத் தாகும்.

இது, மேற்கூறியவகையாற் பரிபாடற்கேற்ற பாவுறுப்பினை யெடுத்து விரிகூறி இத்துணை உள்ளுறுப்புடைத்தென்கின்றது. உள்ளுறுப்பெனக் கூறவேண்டுவதென்னை, பண்புபற்றி நான்குறுப்பாண் எண்ணப்படாவோவெனின், அவை எல்லாச்செய்யுட்கும் பொதுவாகலான் அவற்றோடெண்ணாது இவற்றை இப்பாவிற்குறுப்பாகக் கூறினானென்பது. மேல்வருகின்ற கலியுறுப்பிற்கும் இஃதொக்கும்.

இதன் பொருள்: செப்பிய நான்குறுப்புங் கலிக்குறுப்பாகச் சொல்லப்பட்ட வகையானே வரும் அவை ரண்டும், என்றவாறு.

தனக்கென்றதனன் அவையல்ல உறுப்புளவென்பது முன்னர்ச் சொல்லுதும்: 'சொற்சீரடியும்' (தொல்-செய்-122) என்புழிக் காண்க. கொச்சகமென்பது ஒப்பிஞகியபெயர். ஓராடையுள் ஒருவழியடுக்கியது கொச்சகமெனப்படும்.* அதுபோல ஒருசெய்யுளுட் பலகுறள் அடுக்கப்படுவது கொச்சகமெனப்பட்டது. குறிலிணை பயின்ற அடி அராகமெனப்படும். சுரிதகமென்பது அடக்கியலெனப்படும். எருத்தென்பது தரவு.† இவை நான்குறுப்பாகவருவது பரிபாடலென்றவாறு. பெரும்பான்மையுங் கொச்சகவுறுப்புப் பயின்றுவருதலின் அதனை முன்வைத்தான். அராகம எழுவாயாகாமையின் அதனை இடைவைத்தான். சுரிதகமென்பது எஞ்ஞான்றும் ஈற்றதாகலான் அதனை அதன்பின் வைத்தான். எருதனை ஈற்றக்கண் வைத்தான் அதனையின்றி

* கொச்சகம் என்பதற்கு நச்சினார்க்கினியர் கூறிய பொருள் இவ்வியல் 153 ஆவது சூத்திரவுரையில் கீழ்க்குறிப்பாகக் குறிக்கப்பட்டுள்ளது.

† "கொச்சகம் என்பது ஐஞ்சீரடுக்கி வருவனவும், ஆசிரியவடி, வெண்பாவடி, வஞ்சியடி, கலியடி, சொற்சீரடி, முடுகியலடி என்று சொல்லப்பட்ட அறுவகையடியானும் அமைந்த பாக்களை உறுப்பாக வுடைத்தாகி, வெண்பா வியலாற் புலப்படத் தோன்றுவது............ அராகம் என்பது ஈரடியானும் பலவடியானும் குற்றெழுத்து நெருங்கி வரத் தொடுப்பது ; பெருமைக்கெல்லை ஆறடி......... சுரிதகம் என்பது ஆசிரிய வியலானுதல், வெண்பா வியலானுதல், பாட்டிற் கருதிய பொருளை முடித்து நிற்பது. எருத்து என்பது இரண்டடி இழிபாகப் பத்தடிப் பெருமையாக வருவதோர் உறப்பு." என்றார் உரையாசிரியர்.

யும் வரும் பரிபாடலென்றற்கும் இஃது இடைவருமென்றற்கு மென்பது.* உதாரணம்:

"'வானூ றெழிலி †மழைவளந் தந்த
தேனார் சிமய மலையி னிழிதந்து
நான்மாடக் கூட லெதிர்கொள்ள வானூ
‡மருந்தா குந்தீ நீர்மலி துறைமேய்
இருந்தையூ ரமர்ந்த செல்வநின்
றிருந்தடி தலையுறப் பரவுதுந் தொழுதே.' (இது தரவு)

'ஒருசார், அணிமலர் வேங்கை மராஅ மகிழம்
பிணிநெகிழ் பிண்டி § நிவந்தசோ போங்கி
மணிநிறங் கொண்ட மலை;
ஒருசார், தண்ணறுந் தாமரைப் பூவி னிடையிடை

* "பாட்டிற்கு முகம் தரவாதலானும், கால் சுரிதகமாதலானும், இடை நிலைப்பாட்டாகிய தாழிசையும் கொச்சகமும் அராகமும் கொள்ளக் கிடத்தலின், எருத்து என்பது கழுத்தின் புறத்திற்குப் பெயராக வேண்டு மாதலான், அவ்வுறுப்பைத் தரவைச் சார்ந்து கிடத்தல் வேண்டுமென்று கொள்க. 'தரவே யெருத்த மராகங் கொச்சக—மடக்கியல் வகையோ டைந்துறுப் புடைத்தே' என்பது அகத்திய மாதலின், தரவெனப்படுதோர் உறுப்புங் கோடல்வேண்டு மெனின், இவ்வாசிரியர் 'கொச்சகம்' என ஓதியவதனானே, தரவு அவ்விலக்கணத்திற்படு மென்பதும் ஒன்று. பரிபாடற்கண் மலையும் யாறும் ஊரும் வருணிக்கப்படும்; 'அதுதான், மலையே யாறே யூரென் றி—வற்றி—னிலைபெறு மரபி னிகழ்வ தாகும்' என்றுராகலின். இனிச் சுரிதக மின்றியும் பரிபாடன் முற்றுப்பெறும்; 'கொச்சக வகையி னெண்ணொடு விராஅ—யடக்கிய லின்றி யடங்கவும் பெறுமே' என அகத்தியனார் ஓதுதலின்." என்பது இளம்பூரணர் உரை.

† 'மழைவள நந்த' என்பதும் பாடம்.

‡ 'மருந் தாகுதி' என்பதும் பாடம்.

§ 'சிவந்து' என்பதும் பாடம்.

வண்ண * வரியிதழ்ப் போதின்வாய் வண்டார்ப்பக்
கண்விற் றிருக்குங் கயல் ;
ஒருசார், † சாறுகோ ளொத்தத் திளையென மாறுற
விளியோதை பற்றி வீழ வாரந்
திரிநரு மார்த்து நடுநரு மீண்டித்
திருநயத் தக்க வயல் ;
ஒருசார், அறத்தொடு வேதம் புணர்தவ முற்றி
விறற்புகழ் நிறப விளங்கிய கேள்வித்
திறத்திரி வில்லா வந்தண ரீண்டி
யறத்திற் றிரியாப் பதி.' (இவை நான்குங் கொச்சகம்.)

' ஆங்கு, அனையவை நல்ல நனிகூடு மின்ப
மியல்கொள நண்ணி யவை.' (இது கொண்டுநிலை.)

' ‡ ஊர்களிற்றன்ன, மொளியிழை யொல்கிய வேரரு நுதலரும்
புலத்தோ § டளவிய புகழணிந் தோரு
நலத்தோ டளவிய நாணணிந தோரு
$ மடையக் குடையர் புடையர் பூவேந்தி

* 'மரையிதழ்' என்பதும் பாடம்.

† 'காறுகோளோத்தத்திளைபெடன மாறுற' என்பதும் பாடம்.

‡ 'ஊர்களிற்றன்ன செம்மலோடு மவ்வாயிருள் பனிச்சைவரு சிலைப்புருவத் தொளியிழையோங்கிய வொண்ணுதலோரும்' என நச்சினார்க்கினியர் உரைப்பிரதியிற் காணப்படுகிறது.

§ 'அளைஇ' என்பதும் பாடம்.

$ இவ்வடிக்குமுன் 'விடையோ டிகலிய விறனடை யோரும்-நடைபட மேவு நாணிழந் தோருங் - கடனிரை திரையிற் கருநரை யோருஞ்-சுடர்மதிக் கதிரெனத் தூநரை யோரும்' என்னும் இவ்வடிகள் அதிகமாக நச்சினார்க்கினியர் உரைப்பிரதியில் காணப்படுகின்றன. 'மடையர்குடையர்' என்பதும் பாடம்.

யிடைவொழி வின்றி *யடியுறை யாகத்
துளங்கா விழுச்சீர்த் துறக்கம் புரையு
மிருகே ழூந்தி யணிந்த †வெருத்தின்
வரைகெழு செல்வ நகா ;
‡வண்டொடு வண்டியா ழோர்ப்பத்
தண்டா வருவியோ டீர முழவார்ப்பப்
புரீஇ, யண்டர் பாடலோ டாட லொலிக்கூடு
நறவொடு காமம் விரியாப் பிறவு
மனையவை யெல்லா மமையும்
புனையிழை பூஉ முடியு நகர்.' (இவையுமெல்லாங்கொச்சகம்.)'

'மணிமரு டகைவகை நெறிசெறி யொலிவிரி கிமிர்கூந்தற்
றுணைதெளி யொளிதிகழ் தெரியலா மகிழுண்கண் வாணு
[தலார்
மணிமயிற் றொழிலெழில் கலும்மலி கதழ்கடுங் கடாக்களிற்
[றண்ணலவரோ
டணிமிக வல்ல விகப்பப் பிணிநீங்க
வல்லவை யெல்லா மிவைதருந் தொல்சீர்
வரைவாய் தழுவிய கல்சோ கிடக்கைக்
குளவா யமர்ந்தா னகர்' (என்பன முடுகியலடி.)

* 'அடியுறையா ரீண்டி விளைந்தார் விளைவின் விழப்பயன்றுய்க்கும்—துளங்கா விழுச்சீர்த் துறக்கம் புரையும்' என்பது நச்சினார்க்கினியர் உரைப்பிரதிப்பாடம்.

† 'எருத்தி—னனைகெழு' என்பதும் பாடம்.

‡ 'வண்டொடு தும்பியும் வண்டொடை யாழார்ப்ப விண்ட கடதட மேகமோ டதிர்தரத்—தண்டா அருவியோ டிருமுழா வார்ப்ப-வரியுண்ட கண்ணுரோ டாடவர் கூடிப்—புரிவுண்ட பாடலோ டாறுந்தோன்றக்-கூடு நறவொடு காமமகிழ்விரிப்பக்—கூடா நறவொடு காமம் விரும்ப—வினைய பிறவு மிவைபோல் வனவு-மனையவை யெல்லா மிவையும்—புனையிழைப் பூமுடி நாகர் நகர்' என்பது நச்சினார்க்கினியர் பிரதிப்பாடம்.

'*திகழொளி, முந்நீர் கடைந்த வக்கால் வெய்திறம்
புகழ்சால் சிறப்பி னிருதிறத் தார்க்கு
மமிழ்து கடைய வருவலி நாணு
மிகர வருவட மாழியான் வாங்க
வளைவளை காட்டா வுளவினுன் வையம்
புரவெதிர் கொண்டாருந் தாம்;
மணிபுரை மாமலை ஞாறிய ஞால
மணிபோற் பொறுத்தாருந் தாம்;
பணிபுறுசீர்க், கல்லு றுயர்சென்னி யிமயவி லுணைத்
தொல்புகழ் தந்தாருந் தாம்.' (இவையுங் கொச்சகம்.)

'அணங்குடை யருந்தலை யாயிரம் விரித்த
கணங்கொள் சுற்றத் தண்ணலை வணங்கி
நல்லடி யேத்திநிற் பரவுதும்
மெல்லாம பிரிபடற்கவெஞ் சுற்றமொ டொருங்கே'
(என்பது ஆசிரியச் சுரிதகம்.)''

"அறவோ ருள்ளாரு மறைகாப்ப" என்னும் **பரிபாடலுள்,**

"செறுநர் விழையாச் செறிந்தநங் கேண்மை
மறுமுறை யானு மியைக நெறிமாண்ட
தண்வரல் வையை யெமக்கு"

இது வெள்ளைச்சுரிதகத்தான் இற்றது.

'காமங்கண்ணிய நிலைமைத்தாகும்' என்பது, காமப்பொருள் குறித்து வருமென்றவாறு. கண்ணியவென்ற அதனானே முப்பொருளு மன்றிக் கடவுள்வாழ்த்தினும் மலைவிளையாட்டினும் புனல்விளையாட்டினும் பிறவுமெல்லாங் காமங் கண்ணியே வருமென்பது. என்னை?

* 'திகழொளி முந்நீர் கடைந்தக்கால் வெற்புத்-திகழ்பெற வாங்கித்தஞ்சீர்ச் சிரத்தொளிமகர—மறிகடல்வைத்து நிறுத்துப்புகழ்சால் சிறப்பின்—இருதிறத்தோர்க்கும்' என்பது **நச்சினார்க்கினியர்** உரைப் பிரதிப்பாடம்.

"எல்லாம் பிரியற்கவெஞ் சுற்றமொ டொருங்கே" எனத் துணை பிரியாமை காரணமாகத் தொழுதேமென்றலின்.

"காமஞ் சுற்றமோ டொருங்குவின் னடியுறை
யாமியைந் தின்று பொலிகென வைகலு
மேமுறு நெஞ்சத்தேம் பரவுதும்
வாய்மொழி முதல்வவின் றாணிழ றொழுதே"

என்பதும் அது.

இனிச் செப்பிய நான்கென் றெண்ணப்பட்ட நான்கனையுமன்று; அன்னவற்றோடு மேற்கூறிய நான்கு பாவும் இடைவந்து விரவு மென்க. அது நோக்கிப்போலும் பரிபாடல் என்றது.

"அரிமலர் சினைஇய கண்ணை பூவை
விரிமலா புரைபு மேனியை மேனித்
திருஞெமிர்ந்த மார்பினை மார்பிற்
றெரிமணி விளங்கும் பூணை மால்வரை
யெரிதிரிந் தன்ன பொன்புனை யுடுக்கையை"

என ஆசிரியம் வந்தது. "*என்ஞெக்கும் புகழ்விழலவை" என்பது வஞ்சித்தூக்கு. பிறவும் அன்ன காட்டுப. அது பொதுவாய் வீற் றலும் உரிதமெனறதனுன அடங்கும். இனிச் செப்பிய நான்கென் றதனுன் அராகமின்றி வருதலும், கொச்சகம் ஈற்றடி குறைந்து வருத லும் அவ்வழி அசைச்சீராகி இறுதலும் மேற்கலிப்பாவிற்குச் செப்பிய சுரிதகமாதலுங் கொள்க. (கஉக)

434. சொற்சீ ரடியு முடுகிய லடியு
மப்பா நிலைமைக் குரிய வாகும்.

இதுவும் பரிபாடலுறுப்பு உணர்த்துகின்றது.

இதன் பொருள்: எண்ணப்பட்ட இரண்டும் பரிபாடற்குள்ள உறுப்பாய்வரும், என்றவாறு.

* 'விண்ஞெக்குவின் புகழ்விழலவை' என்பதும் பாடம்.

சொற்சீரும் முடுகியலுமென்னாது அடியென்றதனான் மேற்கூறிய அடியொடு தொடர்ந்தல்லது வாராவென்பதாம். சொற்சீரடியாமாறு முன்னர்ச் சொல்லுதும். *முடுகியலடியென்பது முடுகியலோடு விராய்த் தொடர்ந்ததொன்றாகிய வெண்பாவடி. அராகமென்பது தாமே வேறுசில அடியாகி வருவன. இவையன்றிக் † குறிலிணை பயில்வன முடுகியலெனவுங் குறிலிணை விரவிவருவன அராகமெனவுஞ் சொல்லுவாரும் உளர். 'முடுகுவண்ண-மடியிறந் தோடி யதனோ ரற்றே' (தொல்-செய்-234) என்பவாகலின் மேலதே யுரை. 'உரிய'வென்றதனான் இத்துணை பயின்றுவாரா இவ்விரண்டுங் கலிப்பாவினுளென்பதுகொள்க. எனவே, அராகவுறுப்புத் தேவபாணியல்லது அக்கலிக்கண் யாண்டும் வாராதாயிற்று. (கஉஉ)

435. கட்டுரை வகையா னெண்ணொடு புணர்ந்து
முட்டடி யின்றிக் குறைவுசீர்த் தாகியு
மொழியசை யாகியும் வழியசை புணர்ந்துஞ்
சொற்சீர்த் திறுதல் சொற்சீர்க் கியல்பே.

மேலெண்ணப்பட்ட சொற்சீரடியாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: சொற்சீரடி இக்கூறிய நான்கு வகையாலும் வந்து பயிலும், என்றவாறு.

கட்டுரைவகையான் எண்ணொடுபுணர்ந்தது,

"வடவேங்கடந் தென்குமரி, யாயிடை" (தொல் - பாயிரம்.)
எனவும்,

---

* இவ்வியல் 65, 66ஆவது சூத்திரங்களும், அவற்றின் உரையும் ஈண்டு ஒத்து நோக்கற்பாலன.

† "முடிகியலாவது ஐந்தடியானும் ஆறடியானும் ஏழடியானும் குற்றெழுத்துப்பயிலத் தொடுப்பது" என்றார் உரையாசிரியர்.

"அஇஉ, எஒ என்னு மப்பா லைந்தும்." (தொல்-எழுத்-நூன்-3.)

எனவும் இவை கட்டுரைக்கட் சொல்லுமாறுபோல எண்ணின மையிற் கட்டுரைவகையான் எண்ணொடுபுணர்ந்தன. இனி, முட்டடியின்றிக் குறைவுசீர்த்தாகும் இயல்பாய் வருமாறு :

"நின்னொக்கும் புகழ்நிழ லவை" எனவும், "கறையணி மிடற்றி னவை" "கண்ணணி நுதலி னவை" "பிறையணி சடையி னவை" எனவும் வரும்.

'முட்டடியின்றி' என்ற இவை தூக்குப்பட்டு முடியுமடியல்ல என்றவாறு.

மேற்காட்டிய பரிபாடற் செய்யுளுள், 'ஒருசார்' என்பது ஒழியசை; என்னை? அது சீராகலின் அதனோடு சில அசை கூடியன்றி அசையெனப்படாமையின். 'ஆங்கு' எனவருந் தனிச்சொல் வழியசையெனப்பட்டது. என்னை? அஃது அசையாய்நின்று சொற்சீரடியாகலின். மற்றுச சொற்சீரடியினை அசையென்ற தென்னையெனின், இயலசை தானேயும் ஒழியசையாய் நிற்குமென்றற்கென்பது.

"ஒரூஉக், கொடியிய னல்லார் குரலூற்றத் துற்ற
முடியுதிர் பூந்தாது மொய்ம்பின வாகத்
தொடிஇய வெமக்குநீ யாரை பெரியார்க்
கடியரோ வாற்று தவர்" (கலி-88.)

என்புழி 'ஒரூஉ' வெனநின்ற இயலசை தானே ஒழியசையாய் நின்றது.

"உருவது போலுமென் னெஞ்சு ; எள்ளித்
தொகுபுட னாடுவ போலு மயில்" (கலி-33)

என்பது வழியசைபுணர்ந்த சொற்சீரடி ; என்னை ? எள்ளியெனநின்றசீரின்வழித் தொகுபெனவந்தவசை உருவதுபோலுமென்னுந் தொடையொடு பொருந்தி, உருவதுபோலு மென்னெஞ் செள்ளித் தொகுபுடனெனப் புணர்ந்து நின்றாற்போல்வதோர் சுவைமைசெய்து நின்றமையின். கொச்சகம் இடைநிலைப் பாட்டெனப்படாமையின்

"ஆடுவ போலு மயில்" என நாலடியாலும் வருவதாயிற்று, வரையறையின்மையின்.* இங்ஙனம் வந்தமையின் சொற்சீரடிமேல் எண்ணவும்படும். இவை கலிக்கண் வருங்கால் ஒத்தாழிசைக்கண் முடுகியலடி வாராதென்பதூஉஞ் சொற்சீரடி வருமென்றுந் தனிச்சொல்லாகியன்றி வாராதென்பதூஉம் உறழ்கலிக்கண்ணும் முடுகியலடி உரித்தன்றென்பதூஉங் கொள்க.

சொற்சீர்த்திறுதலென்பது : ஓரெழுத்தொருமொழி முதலிய சொற்களெல்லாம் அடியிறுதிக்கண் அடிப்பட முடிந்து அடியாதலிலக்கணத்த அவையென்றவாறு. இனி, ஒழியசையினையும் வழியசையினையுங் கூறினனென்னுமோவெனின், 'சீர்கூ றுத னேரடிக் குரித்து' (தொல்-செய்-49) என்றமையின் ஈண்டு அசைகூறுகாது. அல்லதூஉம் ஆண்டுக் கூறினனப்பட்டதும் ஈண்டுச் சொற்சீரடியெனப்பட்டு அடங்குமென்பதனானுமுடைத்தென்பது. இவையெல்லாம் பரிபாடற்கண்ணதே கூறினனாயினும் ஒழிந்த பாவினுட் சொற்சீரடிவருமெனவிதந்தவழி, அதுவே இலக்கணமாக வரும் ஆண்டுமென்பது. இயல்பென்றதனானே யாண்டும் வரினும் அஃதிலக்கணமென்பது பெற்றாம். அல்லதூஉங் 'தொகைநிலை விரி' (தொல்-செய்-120) என்ற மிகையாற் பரிபாடற்கு உரியவாகக் கண்டுகொள்க. அவை யாவையோவெனின், முடுகியலடி மேற்காட்டிய பரிபாடலுண் †"மணிமருடைகை" என்பது முதலாகக் "குளவா யமர்ந்தா னகர்" என்பதீறுகக் கண்டுகொள்க. (கஉரு)

---

* " 'நொந்து, நகுவனபோ னந்தின கொம்பு ; நைந்துள்ளி-யுகுவது போலுமென் னெஞ்சு ; எள்ளித் - தொகுபுட னாடுவ போலு மயில்; கையி - லுகுவன போலும் வளை' இவை முச்சீரடியான் வந்தனவும், நாற்சீரடியாய் வந்தனவுமாய் நின்றவாறுணர்தற்கு நகுவன, உகுவது, தொகுபுடன், உகுவன எனத் தொடைச் சுவடுபடுத்துக் கூறவே யவற்றின் முன்னின்ற சொற்கள் வழியசை புணர்ந்த சொற்சீரடியாயவாறு காண்க. இவை இடைநிலைப்பாட்டன்றி கொச்சகமாகலின் வரையறையின்றி, 'தொகுபுட னாடுவ போலு மயில்' என நாற்சீரடியான் வந்தது." என்றார் நச்சினார்க்கினியர்.

† இப்பாடலை 381-ஆம் பக்கத்திற் காண்க.

436. அங்கதந் தானே யரிறபத் தெரியிற்
செம்பொருள் கரந்த தெனவிரு வகைத்தே.

இது, முறையானே அங்கதச்செய்யுளுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: அது செம்பொருள் *கரந்தது என்று இருவகைத் தாம் என்றவாறு.

அங்கதமென்பது வசை; அதனை இருவாற்றாற் கூறுகவென்பான் இது கூறினான். அவையாமாறு முன்னர்ச் சொல்லுதும். 'அரிறப' வென்ற தென்னையெனின், அவை புகழ்போன்று வசையாதலும்பட்டுத் தோன்றும் மயக்கமுடையவாதலின் மயக்கமறத் தெரியினென்ற வாறு.

"நூற்றுவர் தலைவனைக †குறங்கறுத் திடுவான்" (கலி-52)

என்பது புகழ்போன்று வசையாயிற்று; என்னை? கொன்றானா யினுங் குறங்கினைக் கதத்தண்டுகொண்டு எற்றுதல் குற்றமாதலின் என்பதறிக. கொடைமடங்கூறுதல் வசைபோன்று புகழெனப்படும். அஃது அங்கதமாகாதென்பான் 'அரிறப'வென்றானென்பது. பிறவும் அன்ன. (கஉ௬)

437. செம்பொரு ளாயின் வசையெனப் படுமே.

இது, முறையானே செம்பொருளங்கத முணர்த்துதல்நுதலிற்று.

இதன்பொருள்: வாய்கரவாது சொல்லப்பட்ட வசையைச் செம் பொருளங்கதமெனப்படும், என்றவாறு.

* 'கரந்துநின்று' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம். இது பொருத்தாமை கண்டுகொள்க. நச்சினார்க்கினியர் இச்சூத்திரத்திற்கும் பொருளுரைக்குமாறு: "வசைச்செய்யுளைக் குற்றமற வாராயிற் செம் பொருளங்கதமும், பழிகரப்பங்கதமும் என இருவகையினையுடைத்து, என்றவாறு."

† 'குறங்கறுத்திட்டான்' என்பது முன் அச்சுப்பிரதிப் பாடம்.

அன்றி,

"இருடீர் விளக்கத் திமிழிசையார் கோவே
குருடேயு மன்றுநின் குற்ற மருடீர்ந்த
பாட்டு முரையும் பயிலா தனவிரண்
டோட்டைச் செவியு முள"

என்பது எழிஇயக்கோவை, அவ்வை முனிந்துபாடியது.

"எம்மிகழ் வோரவர் தம்மிகழ் வோரே
யெம்மிக ழாதவர் தம்மிக ழாரே
தம்புக ழிகழ்வோ ரெம்புக ழிகழ்வோர்
பாரி யோரி நள்ளி யெழினி
யாயே பேகன் *பெருந்தோண் மலையனென்
றெழுவரு ளொருவனு மல்லை யதனா
னின்னை நோவ தெவனோ
முட்டார்க் குறவாக் கட்டி போல
நீயு முளையே நின்னன் னோர்க்கே
யானு முளனே யெம்பா லோர்க்கே
குருகினும் வெள்ளிய தேய்த்துப்
பருகுபா லனவெனச் சொல்லுகுத் தேனே"

எனவும் வரும்.

கலிப்பாட்டினுள் வருவன †வசைக்கூடத்தினுட் கண்டுகொள்க

"அறச்சுவையினன் வைவெயிற்றினன்
மயிர்மெய்யினன் மாசுடையினன்
பொய்வாயாற் புகழ்மேவலன்
மைகூர்ந்த மயலறிவினன்
மேவருஞ் சிறப்பி னஞ்சி
யாவரும் வெரூஉ மாலிக் கோவே."

* 'பொருந்தோண் மலையன்' என்பதும் பாடம்.

† 'வசைக்கூத்தினில்' என்பர் நச்சினார்க்கினியர்.

என்பது வஞ்சிப்பாட்டு. இது வெண்பாவினான் வருதலே பெரும்பான்மை. (கூஉ)

## 438. மொழிகரந்து சொல்லினது *பழிகாப் பாகும்.

இது, பழிகாப்பங்கதம் உணர்த்துகின்றது.

இதன்பொருள் : வசைப்பொருளினைச் செம்பொருள்படாமை இசைப்பது பழிகாப்பங்கதம், என்றவாறு.

மாற்றரசனையும் அவனிளங்கோவினையும் வசைகூறுமாறு போலாது தங்கோனையும் அவனிளங் கோனையும் வசைகூறுங்கால் தாங்கி யுரைப்பர், அவைபோலப் பழிப்பனவென்றவாறு. அது,

"நன்றாய்ந்த செங்கோலாய் நாடிய நின்னிளங்கோக்
குன்றெறிந்த சேந்த னெனமதியா வன்றிறத்து
நின்றொலிக்குந் தானையோ டெல்லா நிகர்த்தார்மேல்
வென்றெறியும் வேலே விடும்"

என வந்த வெண்டொடைச் செய்யுளுட் கண்டுகொள்க. இதனுள் "வென்றெறியும் வேலே விடும்" என்பது முனையகத்துப் படையோடு மென வசைகூறுவான் குன்றெறிந்த சேந்தனைப்போல எறிந்தானெ னப் புகழ்ந்தான்போலக் கூறினானென்பது.

"இன்றுள ளாயி னன்றும னென்றநி
னாடுகொள் வரிசைக் கேற்பப்
பாடுவன் மன்னாற் பகைவரைக் கடப்பே" (புறம்-53.)

என்பதும் அது. (கூடு)

## 439. செய்யுட் டாமே யிரண்டென மொழிப.

மேற்கூறிய இரண்டனையுமே இவ்வகையானும் வகுக்கப்படு மென்கின்றது.

---

* 'பழிகரப்பு' எனவும் பாடம். 'மொழியினது பழிகரப்பா கும்' என்பதும் பாடம்.

இதன் பொருள்: செம்பொருட்செவியுறை, செம்பொருளங்கதம், பழிகாப்புச்செவியுறை, பழிகாப்பங்கதமென நான்கு கூறுபடும் மேற்கூறிய அங்கதமிரண்டும், என்றவாறு.

பாய்த்துள் விச்சுள் என்றாற்போலச் செய்யுள் என்பதூஉந் தொழிற்பெயர். அவையடமாறும் அவற்றது வேறுபாடும் முன்னர்ச் சொல்லுதும்.

இனி ஒருவனுரை: இவற்றுள் தொகைசசூத்திரத்துட் 'கைக்கிளை பரிபாட் டங்கதஞ் செய்யுள்' (தொல்-செய்-118) என்று ஒதி அங்கத முஞ் செய்யுளுமென இரண்டாக கிறுத்தான்; கிறுத்தமுறையானே அங்கதமுணர்த்திச் செய்யுளுணர்த்திய விதந்தானென்பது. அற்றன்று, எல்லாப்பாட்டுஞ் செய்யுளெனப்படுதலின் ஒன்றனையே செய்யுளெனலாகாது. அல்லதூஉம் 'அங்கதச் செய்யு ளென்மனார் புலவர்' (தொல்-செய்-129) என வருகின்ற சூத்திரத்து ஓதுமாதலான் இவையும் அங்கதச்செய்யுளே. மேலைச் சூத்திரத்துள்ளும் அங்கதச் செய்யுளென்பதே பாடமென்பதூஉம் அதனாற் பெறுதுமென்பது. அல்லாத பாடம் ஒதினும் அங்கதச்செய்யுள் செய்கைமேலென அதனைத் தாய்க்கொலையென்றது போல இரண்டாவதன் பொருண்மைப் படுத்துக்கொள்க. (கஉஎ)

**440.* துகளொடுப்பொருளொடும்புணர்ந்தன்றாயிற்**
**செவியுறைச் செய்யு ளதுவென மொழிப.**

இது, மேற்கூறிய அங்கதச்செய்யுட்பகுதி இரண்டனுள் ஒன்று கூறுகின்றது.

இதன் பொருள் : மேற் செம்பொருளும் பழிகாப்புமெனப்பட்ட இரண்டும் அங்கதச்செய்யுளெனப்படுதலேயன்றி, அதனானே அரைசர்க்குப்பொருள்வருவாயாகச் செய்தானேயெனினும் அது செவியுறையங்கதமெனவும் படும், என்றவாறு.

* 'புகழொடும் பொருளொடும்' என்பது உரையாசிரியர் கொண்ட பாடம்.

துகளாவது *படைகுடிகூழமைச்சுநட்பரணென்னும் இவற்றைப் பாதுகாவாதிருத்தல். அரசியலென்பனவற்றுனே தங்கோன் அறியாமல் வருத்த அவை வருமாயின் அவற்றை உள்ளவாறுரைத்தலுமாம் ஒன்று. மாற்றரைசன் நமரது ஊரடுகின்ற நாட்டவர் யாதிவை நுதலியணவேதுவாகப் போய்ச் சார்ந்தவர்க்கு நாட்டழிவுகூறுதலுமொன்று. அன்ன பிறவும் அவற்கு உறுவகையாலானவற்றை உள்ளவாறு உணர்த்திப் பொருள்செய அவர்க்குப் பொருள்செயல்வகை கூறினமையின் அது செவியுறைப்பாற்படு மென்பது. அது,

"†அறவை யாயி னினதெனத் திறத்தன்
மறவை யாயிற் போரொடு திறத்த
லறவையு மறவையு ‡மல்லே யாகத்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவி
னீண்மதி லொருசிறை யொடுங்குத
ஞணுத்தக §வுடைத்திது காணுங் காலே" (புறம்-44.)

என இது செம்பொருட்செவியுறை.$ பிறவும் அன்ன. இவை மூகவிலக்கினுட் பயின்று வருமென்பது. இனி, மொழிகரந்து சொல்லி

---

* 'படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு—முடையா னரசரு ளேறு' என்பது திருக்குறள் (39-1). இதற்கு உரைவகுத்த பரிமேலழகர் 'அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பதே முறையாயினும், ஈண்டுச் செய்யுள் நோக்கிப் பிறழவைத்தார்' என்று கூறினர். ஆயினும் குறளில் ஆசிரியர் வைத்தமுறையே தகுதியுடைத்தென்பது உய்த்து நோக்குவார்க்குப் புலனாம்.

† 'அறவையாயினிற்றெனத்திறவைதன்' என்பது முன் அச்சுப் பிரதிப்பாடம் ‡ 'அல்லையாயின்' என்பதும் பாடம்.

§ 'உடைத்தது' என்பதும் பாடம்.

$ நச்சினார்க்கினியர் 'களியிருமுந்நீர்' என்னும் (35 ஆவது) புறப்பாட்டைச் செம்பொருட் செவியுறை யங்கதத்திற்கு உதாரணமாகவும், 'வள்ளியோர்ப்படர்ந்து' என்னும் (47 ஆவது) புறப்பாட்டை பழிகரப்புச் செவியுறை யங்கதத்திற்கு உதாரணமாகவும் காட்டினர்.

னும் இஃதொக்கும். இனிப், 'புகழொடும் பொருளொடும்' என்பதூஉம் பாடமாக உரைப்ப. புகழும் பொருளும் புணர்ப்பது அங்கதமாயின் அஃதமையும். மற்று, அன்றாயின் ஈண்டாராய்ச்சியின்றென்பது. என்னை ? 'வசையொடு நசையொடும் புணர்ந்தன் றாயி—னங்கதச்செய் யுள்' (தொல்-செய்-129) என மேலோதுமாதலின் இவனென்பது.*

(கஉஅ)

## 441. வசையொடு நசையொடும் புணர்ந்தன் றாயி னங்கதச் செய்யு ளென்மனார் புலவர்.

இஃது, ஒழிந்த அங்கதசெய்யு ளுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : மேற்கூறிய அங்கதசெயயுள் வசையேயன்றி அவ்வசையானே நசை தோன்றசசெய்வது செவியறியுறையெனப் படாது அங்கதசெய்யுளெனவே படும், என்றவாறு.

எனவே, இல்லாதனசொல்லி நகைப்பொருட்டாகச் செய்யினும் அங்கதசெய்யுளெனப்படும் என்றவாறு. அவை விலக்கியற்செய்யு ளுட் கண்டுகொள்க. இதுவுஞ் செம்பொருளாகியும் பழிகரப்பாகியும் வருமெனவுணர்க. எனவே, கூறப்பட்டனவெல்லாம் வெகுளியும் பொருளும் நகையும் பயப்பனவாயின. (கஉகு)

## 442. ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே கொச்சக முறழொடு கலிநால் வகைத்தே.

இது, கலிப்பாவெனப்பட்ட உறுப்பினை இத்துணைப்பகுதியான வருமென்பது வருஞ்செயயுள்பற்றி விரிகூறுகின்றது.*

---

* "'புகழொடும் பொருளொடும்' என்று பாடமோதின் மேல் 'வசையொடு நசையொடும்' என்பது பொருந்தாதாம்" என்றார் நச்சி னார்க்கினியர்.

* "அகத்தியனார் 'இருவயி னொத்து மொவ்வா வியலினுந்-தொடி யிழை மகளிரொடு மைந்த ரிடைவரூஉங்-கலப்பே யாயினும் புலப்பே யாயினு—மைந்திணை மரபி னறிவுவரத் தோன்றிப்—பொலிவொடு புணர்ந்த பொருட்டிறமுடையது—கலியெனப் படூஉங் காட்சித் தாகும்' என இலக்கணம் ஓதுதலின் கலிப்பா அகப்பொருளன வழங்கும்" என்பது இளம்பூரணர் உரை.

இதன் பொருள் : ஒத்தாழிசை—ஒத்தாழிசையென்னும் உறுப்புடைச்செய்யுள் ; ஒத்து ஆழ் இசையை ஒத்தாழிசையென்றான்: அது வினைத்தொகையாகலின் மருவியவகையான் முடியுமென்பது: தாழிசையென்பது தாறுடைய தள்ளலோசைத்தாம்: இது முறைமையிற் பெற்றபெயர்: எனவே, தரவுவேறுபடினும் வேறுபடாதென்பதூஉம், கொச்சகக் கலிபோல்வனவற்றுள்வரும் இடைநிலைப்பாட்டுக்கள் அவ்வாறு தாழமுடையவனறியும் வருமென்பதூஉங்கொள்க. இஃது பண்மை பற்றிய பெற்ற பெயா, தாழிசையின்றியும் ஒத்தாழிசை சிறபான்மை வருதலின. இனி ஒழிந்த உறுபபுநோக்கத் தாழிசை சிறந்தமையின தலைமை ாற பெற்ற பெயரெனவும அமையும்.

"வலிமுன்பின் வல்லென்ற யாககைப் புலிநோக்கிற்
சுற்றமை விலலா சுரிவளா பிதசைய
ரற்றம்பாாத தல்குங கடுஙகண் மறவர்தாங
கொளளுமை பொருளில ராயினும் வம்பலர்
துள்ளுநாக் காண்மாா தொடாந்துயிா வவவலிற்
புளளும் வழங்காப புலமபுகொ ளாரிடை
வெளவேல வலத்திா பொருடால் வேட்கையி
னுளளினி ரென்ப தறிநதன ளெனறோழி." (கலி-4.)

என்பது தாழ்ந்த ஓசைத்தனறி ஒததாழிசைக் கலியுள் தரவுவந்தது. எனவே, இவ் வேறுபாடு கட்டளைக்கலி அல்லாதவழியென்பது பெற்றாம். அஃதன்றே, இதன்றாழிசையுள்ளும் நேரீறறியற்சீரும் வந்ததென்பது. என்னை ?

"சூழ்விரி வகையாா மீவரு மிளமுலை
போழ்திடைப படாமை முயஙகிபு மமையாரென்
றாழ்கதுப் பணிகுவா காதலா மற்றவர்
சூழ்வதை யெவன்கொ லறியே னென்னும்." (கலி-4.)

என்புழி "அறியே னென்னும்" என ஆண்டைத் தாழிசைமூன்றும் இரண்டு நேரீற்றியற்சீரும் வந்தன. பிறவும் அன்ன.

"நீயே, வினைமாண் காழகம் வீங்கக் கட்டிப்
புனைமாண் மரீஇய வம்பு தெரிதியே ;
யிவட்கே, சுனைமா ணீலங் காரெதிர் பவைபோ
லினைநோக் குண்க ணீர்நில் லாவே." (கலி-7.)

எனக் கொச்சகக்கலியுள் இடைநிலைப்பாட்டுத் தாழிசையின்றி வந்தது.* பிறவும் அன்ன.

இனிக், கலிவெண்பாட்டு—கலிப்பாவாகிய வெண்பாட்டு ; இது பண்புத்தொகையாகிய முன்மொழிப்பொருட்டாயிற்று. கொச்சகமென்பதும் உறுப்பினாற் பெற்றபெயர். உறழ்கலியென்பது பொருள்பற்றி வந்தபெயர். ஒத்தாழிசையென்பது தம்மினொத்துவருதற் கட்டளையுடைமையானுங் கலிப்பாவிற்குச் சிறந்து வருமாகலானும் முன்வைத்தான். என்னை இது கலிப்பாவிற்குச் சிறந்தவாறெனின், நூற்றைம்பது கலியுள்ளும் ஒத்தாழிசை அறுபத்தெட்டு வந்தனவாகலின் அது பெருவரவின எனப்பட்டுச் சிறப்புடைத்தாயிற்று. அது நோக்கி முன்வைத்தான் ; இது பாவென்னும் உறுப்பிலக்கணங் கூறுகின்ற இடமாகலின். கலிவெண்பாட்டினை ஒத்தாழிசைக்குங் கொச்சகத்திற்கும் இடைவைத்தான், அதுபோல உறுப்புடைத்தாகியும் வருமென்றற்கு. அதன்பின் கொச்சகப்பா வைத்தான் ; அத் தரவும் போக்குஞ் சிறுபான்மையின்றியும் வருதலின். எல்லாவற்றுப்பின்னும் உறழ்கலி வைத்தான்; அவைபோலாது சுரிதகமின்றி வருதலே பெரும்பான்மையாகலானென்பது. அஃதேல் உறழ்கலியுங் கொச்சகக்கலியுள் அடங்காதே ? அதுவும் அடக்கியலின்றியும் யாப்பினும் பொருளினும் வேற்றுமை உடைத்தாய் வருமாலெனின், அற்றன்று. அடக்கியலின்றி வரின் அடிநிமிர்தலும் ஒழுகிசைத்தாகலும் வேண்டும். உறழ்கலியாயின் அடிநிமிராதும் ஒழுகிசையின்றியும் வருமென்பது. அத்துணையான் இதனை வேறென்பதென்னை ? ஒன்றாக ஓதுகவெனின், மேற்

---

* "கொச்சகத்திற் காயின் தாழிசை, 'நீயே,..... தெரிதியே' எனத் தாழம்பட்ட வோசையின்றிவரும்" என்பது நச்சினார்க்கினியர் உரை.

கூறி வருகின்ற செய்யுளெல்லாஞ் சீரும் அடியும் பாவும் பொருளு மெனச் சிலவுறுப்புவகையான் வேறுபடுகின்றதன்றிப் பிறிதின்மையின் அவ்வேறுபாடுஞ் சிலவாக நோக்கி ஒன்றென்றுமாகலின் அது கடா வன்றென்பது. அல்லதூஉம் நூல்செய்யுங்கால் மரபென்பது வேண்டும். என்னை ?

‘ மரபுநிலை திரியா மாட்சிய வாகி
யுரைபடு நூறா மிருவகை யியல’ (தொல்-மர-93.)

என்பதனான் முதனூற்சாயினும் மரபுவேண்டுதலின். அதுவன்றே நிலம் நீர் தீ வளி விசும்பென்னும் ஐம்பெரும் பூதங்களும் அவற்றி னியைபாகிய பொருளுள்களும் அஃறிணையான் வழங்கினும் பொருளின் இயைபாகிய மக்களுந் தேவரும் முதலாயினாரை உயர்திணைவாய்பாட்டான் வேறுபடுத்து வழங்குகின்றதென்பது. மற்று உறழ்கலியென்னும் வழக்குண்டாயினன்றே மரபொடு மாறுபடுவதெனின், மரபென ஆசிரியர் வழக்கும் அடங்குமாகலின் அது கூறினான்; அல்லாக்கால் ஒழிந்த செய்யுளும் வேறுபாடிலவாமன்றேயென்பது. இனிப் பரிபாடலுங் கலிப்பாவினுள் அடங்குமென்பாரும் உளர். கலியும் பரிபாடலுமெனத் தொகையுள் இரண்டுதொகை நடமின் வேறுகலிக்கு அவ்வாறு கூறுவார் செய்யுள் அறியாதாரென்பது. அல்லதூஉம், அராகவுறுப்பில்லாத முடுகியலடியுங் கொச்சகக்கலியல்லாத கலிப்பாவினுள் உண்டாவதாகலுங் கொச்சகக்கலியுறழ்ந்து வருதலும் உடையவாம். (கசல)

**443. அவற்றுள்,**
**ஒத்தா ழிசைக்கலி யிருவகைத் தாகும்.**

இது, முறையானே ஒத்தாழிசைக்கலியுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: ஒத்தாழிசைக்கலி இரண்டு கூற்றதாம் என்றவாறு.

இதனது பயம் அவை இரண்டுந் தம்முட் டகுதியுடையவென்பது. அவைடாமாறு முன்னர்ச் சொல்லுதும். (கசக)

## 444. இடைநிலைப் பாட்டுத் தரவுபோக் கடையெனா *நடைபயின் றொழுகு மொன்றென மொழிப.

இதன் பொருள் : மேற்கூறிய ஒத்தாழிசை இரண்டனுள் ஒன்று தாழிசையுந் தரவுஞ் சுரிதகமுந் தனிச்சொலுமென நான்கு உறுப்பாகப் பயின்றுவரும், என்றவாறு.

**பயின்று** வருமெனவே இவ்வாறன்றிப் பயிலாது வருவனவும் அதன் பகுதியாயடங்குவனவும் உளவென்பது. அவை தாழிசைப் பின்னர் எண்ணுறுப்புவருங்கால் ஐந்துறுப்புப் பெறுதலும் அவற்றிடை அராகம்பெறின் ஆறுறுப்புவருதலுமென இவையென்ப. அற்றன்று; நூற்றைம்பது கலியுள்ளும் ஒத்தாழிசைக்கலியின் அராகவுறுப்பும் அம்போதரங்கவுறுப்பும் பெற்றுவருவன இன்மையின் அவைபொருளன்றென்பது. மற்று †நடைநவின் றொழுகு மென்றதென்னையெனின் இத்துணை பயின்றுவாராது ஏனையொன்றும் என்றற்கென்பது. தாழிசையினை இடைநிலைப்பாட்டென்பவோவெனின் அவ்வாறுஞ் சொல்லுப, அச்செய்யுள் இடைநிற்றலானென்பது. இனி இடைநிலைப் பாட்டென்பது தாழிசையினை நோக்காது. என்னை ? தாழம்பட்ட வோசையல்லாதனவும் இடைநிலைப்பாட்டாய் வருமாதலினென்பது. அது,

> "காணமை யிருள்பரப்பிக் கையற்ற கங்குலான்
> மாணநோய் செய்தான்கட் சென்றாய்மற் றவனைநீ
> காணவும் பெற்றாயோ காணாயோ மடநெஞ்சே." (கலி-123)

என்பது தாழிசையெனவும் இடைநிலைப்பாட்டெனவும் படும்.

* 'நடைநவின்றொழுகும்' என்பது உரையாசிரியர் கொண்ட பாடம்.

† ஏடுகளிலும் பாடம் இவ்வாறே யுள்ளது. ஆயினும் இவர் கொண்டபாடம் "பயின்றொழுகும்' என்பதேயாதல் மேல் 'பயின்று வருமெனவே......பயிலாது வருவனவும்—' என்பதுகொண்டு தெளியப்படும்.

"இன்னொலிச் சிலம்பினிற் சின்மொழி யைம்பா
றழீஇய தடவர லல்குலுண் வரிவாட
வாராது விடுவாய் தண்ணந்துறைவ தகாய்காணீ."

என்றாற்போல்வன தாழிசையல்லாத இடைநிலைப்பாட்டு. இவ்விருபகுதியுங்கூட்டித் தாழிசையென்னாது இடைநிலைப்பாட்டென்பது இங்ஙனந் தம்முட் பகுதியுடைமையானு மாயிற்று. ஒத்தாழிசைக்கலி இருவகைத்தென்றற்குப் பயனுந் தோற்றுவாய்செய்து போந்ததென்பது. தரவு என்ற பொருண்மை என்னையெனின் முகத்துத் தரப்படுவதென்ப. அதனை எருத்தெனவுஞ் சொல்லுப. என்னை? உடம்புந் தலையுமென வேறுபடுத்து வழங்கும் வழக்குவகையான் உடம்பிற்கு முதல் எருத்தென்பதாகலின். இசைநூலாரும் இத்தரவுமுதலாயினவற்றை முகம் நிலை கொச்சகம் முரியென வேண்டுப. கூத்தநூலார் கொச்சகமுள்வழி அதனை நிலையென அடக்கி முகம் நிலை முரியென மூன்றாக வேண்டுப. அவரும் இக்கருத்திற்கேற்ப முகத்திற்படுந் தரவினை முகமெனவும் இடைநிற்பனவற்றை இடைநிலை யெனவும் இறுதிக்கண் முரிந்து மாறுஞ் சுரிதகத்தினை முரியெனவுங் கூறினாரென்பது.* செந்துறைச் செய்யுள் அடைநிலைபயப்பதின்மையின் அது சிறந்ததன்றென்று அடக்கிமொழிப. உள்ளுறுப்பின் பொருளெல்லாம் ஒருவகையான் அடக்குமியல்பிற்றான் அடக்கியலெனவுங் குறித்த பொருளை முடித்துப்போக்குதலிற் போக்கெனவும் அவையெல்லாம் போதந்து வைத்தலின் வைப்பெனவுங் கூறிய பகுதியைப் பின்னும் பற்றிக் கூறுதலின் வாரமெனவும் எல்லாம் ஒன்றொன்றனை ஒத்தே

---

* "—தரவினை நிலையென அடக்கி முகத்திற்படுந் தரவினை முகநிலையெனவும், இடை நிற்பனவற்றை இடைநிலையெனவும், இறுதியில் நிற்பனவற்றை முரிநிலையெனவும் பரவுதற் பொருண்மையாற் பெயர்கொடுத்தார் செய்யுளியலின்கண்ணு மெனக்கொள்க. இனி, இசைத்தமிழின் வருங்கால் முகநிலை, கொச்சகம், முரி என்ப ஒருசாராசிரியர்" என்றார் அடியார்க்கு நல்லார். (சிலப்-கடலாடு காதை 35-ஆவது அடியின் உரைப்பகுதி காண்க.)

பெயராயின. அடைநிலையென்பது முன்னும் பின்னும் பிறவுறுப்புக் களை அடைந்தன்றி வாராது. அது தனிநின்று சீராதலின் தனிச் சொல்லெனவும்படும்.* இவை நிலையுறுப்பென்றது பாட்டென்ற தென்னையெனின், அவை தாமே பாட்டாயும் வருமிடனுடைய. வருங்கால் அவை ஒன்றும் இரண்டுமே பலவாய் வருமென்பது. இடை நிலைப்பாட்டினைத் தரவிற்கு முற்கூறினான் அது பெயர் பெறுதலின். எனவே தரவு முன்வைத்தலே மரபாயின. ஒத்தாழிசை கூறிய முறையானே தரவு தாழிசை போக்கென்னும் மூன்றுறுப்பானுஞ் சிறு பான்மை வந்து தனிச்சொலின்றி வருதலின் தனிச்சொல்லினை இறு திக்கண் வைத்தானென்பது. இவை போக்கிச் சொல்லுதும். (கசஉ)

445. தரவே தானு நாலடி யிழிபா
ஙாறி ரண்டுயர் பேறவும் பெறுமே.

இது, தரவின் அடியளவுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : மேற்கூறப்பட்ட தரவுதானும் நான்கடிமுத லாய்ப் பன்னிரண்டடிகாறும் வரப்பெறும், என்றவாறு.

எனவே, ஒன்பதுநிலம் பெறுந் தரவென்றவாறாயிற்று. 'உயர் பேறவும்பெறும்' என்றதனாற் பன்னிரண்டடியின் இகந்துவரவும் பெறு மெனக்கொள்க. இதனை எடுத்தோதாது இலேசினாற் கொண்டான் பன்னிரண்டடியின் இகந்தன துள்ளலோசையான் வாராமையின். அது,

"நீரார் செறுவி னெய்தலொடு நீடிய
நேரித ழாம்ப னிரையிதழ் கொண்மார்." (கலி-75.)

என்னும் மருதக் கலிப்பாட்டானுமுணர்க. (கசக)

* 'இடைநிலைப் பாட்டெனினும் தாழிசையெனினும் ஒக்கும். போக்கெனினும், சுரிதகம் எனினும், வாரம் எனினும், அடக்கியல் எனினும் ஒக்கும். அடை எனினும் தனிச்சொல் எனினும் ஒக்கும். தனிச்சொல்லைப் பின் எண்ணியவதனான் தாழிசைதோறுந் தனிச் சொல்வரவும் பெறும் என்றுகொள்க' என்பது இளம்பூரணர் உரை.

446. இடை நிலைப் பாட்டே,
தரவகப் பட்ட மரபின வென்ப.

இது, தரவிற்குச் சுருங்கியன்றித் தாழிசை வாராதென்ப துணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : தரவின் அகப்பட்டது தாழிசை, என்றவாறு.

அகப்படுதலென்பது அகம்புறமென் றிருகூறுசெய்தவழி முற்கூற்றினுட் படுதல். முன்னென இடவகையுங் காலவகையும் பற்றிய இருகூற்றினுள் யாதானுமொன்று கொள்க. எனவே, பதினோரடி முதல் இரண்டடிகாறும் இழிந்துவரப்பெறும் என்றவாறாயிற்று.* அது,

"கருங்கோட்டு நறும்புன்னை மலர்ச்சினை மீமிசைச்
சுரும்பார்க்குங் குழலினோ டிருந்தும்பி யிசையூத
வொருங்குட னிம்மென விமிர்தலிற் பாடலோ
டரும்பொருண் மரபின்மால் யாழ்கொளக் கிடந்தான்போற்
பெருங்கட றுயில்கொள்ளும் வண்டிமிர் நறுங்கானல் ;
சானுமை யிருள்பரப்பிக் கையற்ற கங்குல்வாய்
மாணுநோய் செய்தான்கட் சென்றாய்மற் றவனைநீ
காணவும் பெற்றாயோ காணாயோ மடநெஞ்சே ;
பொறிகொண்ட புள்ளினம் பதிசேரும் போழ்தினாற்

* "(இ-ள்.) தாழிசைக்களவு தரவிற் சுருங்கிவருவது, என்றவாறு. என்றதனால் தரவிற் கோதப்பட்ட நான்கடியின் மிகாது மூன்றடியானும் இரண்டடியானும் வரப்பெறும் என்பதூஉங்கொள்க" என்றார் இளம்பூரணர்.

"(இ-ள்.) தாழிசையாவது தரவிற்குச் சுருங்கின முறைமையினையுடையது, என்றவாறு. அகப்படுதல் என்பது அகம் புறம் என்று இருகூறு செய்தவழி முற்கூற்றினுட்படுதல். முன் காலமுன்னும். எனவே ஆறடிமுதல் இரண்டடிகாறும் இழிந்து வரப்பெறுமென்று கொள்க" என்றார் நச்சினார்க்கினியர்.

செறிவளை நெகிழ்த்தான்கட் சென்றாய்மற் றவனைநீ
யறியவும் பெற்றாயோ வறியாயோ மடநெஞ்சே ;
சொல்லேற்றுச் சுறவினங் கடிகொண்ட மருண்மாலை
யல்லனோய் செய்தான்கட் சென்றாயமற் றவனைநீ
புல்லவும் பெற்றாயோ புல்லாயோ மடநெஞ்சே ;
ஆங்க, எல்லையு மிரவுந் துயிறுறந்து பல்லூ
ழருஞ்ப்பட ரவலநோய் செய்தான்கட் பெறனசைஇ
யிருங்கழி யோதம்போற் றடுமாறி
வருந்தினை யளியையென் மடங்கெழு நெஞ்சே."

(கலி-123.)

என இது தரவகப்பட்ட மரபிற்றாகித் தாழிசைவந்தது.

தரவிற் சுருங்குமென்றது அகப்படுமென்றவா, தரவோடு ஒத்து வருந் தாழிசையென்பதூஉங் கோடற்கு. என்னை ? மக்களகத்துப் பிறந்தானெனறவழி அசசாதியோடொக்கப் பிறந்தானென்பது படு மாகலின்.

" ஞாலமூன் றடித்தாய முதல்வற்கு முதுமுறை
பாலன்ன மேனியா னணிபெறத் தைஇ
நலநீ ருடையேபோற் றகைபெற்ற வெண்டிரை
வாலெக்கர் வாய்சூழும் வயங்குநீர்த் தண்சேர்ப்ப
ஊரல ரெடுத்தார்ப்ப வுள்ளாயநீ துறத்தலிற்
கூருந்தன் னெவ்வநோ யென்னையு மறைத்தாண்மற்
சாரிகை பெற்றதன் கவின்வாடக் கலுழ்பாங்கே
பீரல ரணிகொண்ட பிறைநுத லல்லாக்கால் ;
இணையிவ்வூ ரலர்தூற்ற வெய்யாய்நீ துறத்தலிற்
புணையில்லா வெவ்வநோ யென்னையு மறைத்தாண்மற்
றிணையாருட் டகைபெறத் தொன்னல மிழந்தினி
யணிவனப் பிழந்தன்ன வணைமென்றோ ளல்லாக்கால் ;
இன்றிவ்வூ ரலர்தூற்ற வெய்யாய்நீ துறத்தலி
னின்றதன் னெவ்வநோ யென்னையு மறைத்தாண்மன்

வென்றவே னுதியேய்க்கும் விறனல மிழந்தினி
நின்றநீ ருகக்கலுழு நெடும்பெருங்க ணல்லாக்கால் ;
அதனால்,
பிரிவில்லாய் போல தெய்வத்திற் றெளித்தக்கா
லரிதென்ற துணிந்தவ ளாய்நலம் பெயர்தரப்
புரியுளை *வயமான்றேர் கடவுபு
விரிதண்டார் வியன்மார்ப விரைகநின் செலவே.''

(கலி-124.)

என வரும்.

பன்னிரண்டடியின் இகந்த தரவிற்கும் இவ்வாறே தாழிசை கொள்ளப்படும். மற்று மேற்கூறிய வரையறையில் தாழிசை கூறுக வெனின், ஆண்டு முறைபிறழவைத்தற்குக் காரணங்கூறிப் போந்தா மென விடுக்க. இனிவருஞ் சூத்திரத்திற்கும் இதுவே விடை. மரபினவென்றதனான் மேலைக்சொண்டும் அடிப்படவந்த மரபினாற் சுருங்குமென்பது. எனவே, நான்கடியின் உயர வாராவென்பது கொள்க. இன்னும், மரபினென்றதனாற் சிறுபான்மை ஐந்தடியானும் வருவனவும் உள.

''அரிதே தோழி நாணிறப்பா மென்றணர்தல்'' என்னும் நெய்தற்றிணைக் கலிப்பாட்டினுள்,

'' நகைமுத லாக நட்பினு ளெழுந்த
தகைமையி னலிவ தல்லதவர் நம்மை
வகைமையி னெழுந்த தோண்முத லாகப்
பகைமயி னலிதலோ விலனு மாயிழை
பகைமையிற் கடிதவர் தகையி னலியுநோய்.'' (கலி-137.)

என ஐந்தடியால் தாழிசை வந்தது.

ஆறடியின் வருவன வந்தவழிக் கண்டுகொள்க. மற்று நான் கடியின் இழிந்ததோரடியானுந் தாழிசைவருமாலெனின் வாரா தன்றே ; 'இடைநிலைப்பாட்டே' என்றாராகலின். என்னை ? பாட் டெனப்படுவன ஓரடியான் வாராமையின். (கூஅ)

* 'கலிமான்றேர் என்பதும்' பாடம்.

**447. அடைநிலைக் கிளவி தாழிசைப் பின்னர்
நடைநவின் றொழுகு மாங்கென் கிளவி.**

இஃது, ஆங்கென்னுஞ் சொல் தனிச்சொல்லெனப்படுமென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : தாழிசைப்பின்னர் ஆங்கு, தனிச்சொல்லாய் நின்று பயிலும், என்றவாறு.

ஆங்கென்னுஞ் சொல்லினை எடுத்தோதினன் அது நடைநவின் றொழுகுமாகலின். ஆங்கென்னுஞ் சொல் பயின்று வருமெனவே அல்லாதனவும் உள இத்துணைப்பயிலாதன வென்பதுகொள்க. ஆங்கு என்பது ஏழாம்வேற்றுமை இடப்பொருள் தோன்ற நின்ற சொல்லாகலின் அஃதெல்லாச்செய்யுட்கண்ணுந் தன்பொருண்மைக் கேற்ப நிற்றல் வேண்டும் பிறவெனின், அற்றன்று; அதனை அசைநிலையாகக் கொள்க. அல்லதூஉம், எல்லாச்செய்யுளும் இதன்பொருண்மைக் கேற்பச் செய்யல்வேண்டுமென்றான் மிகைகூறிப் பயந்தின்மையா னென்பது. அசைநிலைபெய்து செய்யுள் செய்தல் மரபாகலின் அஃதமையுமென்பது. நடைநவிலாதன பொருள்பெறவருமென்பது. அவை முன்னர்க் காட்டுதும். (கருகூ)

**448. போக்கியல் வகையே வைப்பெனப் படுமே.***

இஃது, ஒழிந்த சுரிதகம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : போக்கிலக்கணப்பகுதி வைப்பென்று சொல்லப்படும், என்றவாறு.

இங்ஙனங் கூறப்பட்ட உறுப்பினை அடக்கியலெனவும் வாரமெனவுஞ் சொல்லுப. †அடக்கியல் வாரந் தரவோடு ஒக்கச் சொல்லப்

---

* இச்சூத்திரத்தையும் பின்வருகின்ற சூத்திரத்தையும் ஒன்றாகக் கொள்வார் இளம்பூரணர்.

† 'அடக்கியல் வாரந் தரவோடொக்கும்' என்பது இவ்வியல் 141 ஆவது சூத்திரம்.

படுமென்றவாறு. என்றதென்னேக்கியெனின், போக்குதலும் வைத்தலுமென்னும் இரண்டிலக்கணமுடைத்து; வாரமெனச் சொல்லின் முடியுமிலக்கணமே கூறுவான்போலப் போக்கினிலக்கணப் பகுதி வைப்பென்றதனைச் சுட்டிக்கூறப்படுமாகலின்.* (கஙக)

449. தரவிய லொத்து மதனகப் படுமே†
புரைதீ ரிறுதி நிலையுரைத் தன்றே.

இதுவுஞ் சுரிதக முணர்த்துகின்றது.

இதன் பொருள் : தரவியலொத்தும் அதனகப்படும்—சிறு பான்மை தரவும் அதனொடொத்துத் தரவின்பாகம் பெறுதலை இலக்கணமாகவுடைத்து மேற்கூறிய சுரிதகம் : புரைதீர் இறுதி நிலை உரைத்தன்றே—இடைநிலைப்பாட்டுப் பொருளை முடிபுகாட்டி நிற்கும் அதுதான், என்றவாறு.

அகப்படுமென்று அதற்கும் உம்மைகொடுத்தமையின் அஃதிலக்கணமாயிற்று. ஆகவே, அவ்விலக்கணத்திற்கேற்ற தரவின்கண்ணே ஒத்தலும் உயர்தலும் கொள்க. சுருங்கியவெல்லை, ஆசிரியத்திற்கு இழிந்தவெல்லையாகிய மூன்றடிச்சிறுமையிற் கூறுமையிற் சுருங்காது வருவதாயிற்று. ஈண்டும் அகப்படுமெனவே பன்னீரடித்தரவின் பாகமாகிய ஆறடியே சுரிதகத்திற்கு எல்லை என்பதூஉம், இழிந்தவெல்லை கூறுமையிற் பன்னீரடித்தரவிற்காய் ஈற்று மூன்றடிச்சுரிதகம் வருதலும் ஒழிந்த கலிநாலிற்கும் அவ்வாறேவருதலுங் கூறினுனென்பது. இனி வெள்ளைச்சுரிதகத்துக்கும் இஃதெல்லாமொக்கும்.

இனித் தரவியலொத்தல் ஈற்றயலடி முச்சீராகி வாராது மண்டிலமாகி வருதலுஞ் சிறுபான்மையெனக் கொள்க. இறுதிநிலையென்

---

* "செய்யுள் பிறிதொன்றினை யவாவாமற் கடைபோகச் செய்தலிற் போக்கெனவும், முற்கூறிய தரவு தாழிசைகளிற் பொருள்களைக் கொண்டு தொகுத்துவைத்தலின் வைப்பெனவும்படும்" என்றார் நச்சினார்க்கினியர்.

† 'அதனகப்படும்' என்பதும் பாடம்.

பதினை நனிவிரலென்றாற்போலக் கொள்க. நிலையெனப்பட்டது இடைநிலைப்பாட்டு. அதனிறுதியைக் கூறுமெனவே அவற்றுப்பொருளினை முடித்துவிடுக்குமென்பதாம். 'போக்கியல்வகையே வைப் பெனப்படும்' என்றவழி உள்ளுறுப்பின் பொருளினைத் தன்கண்வைக் கப்படுவது சுரிதகமென்றதன்றி இன்ன உறுப்பின் பொருள் வைக் கப்படுமென்றிலாதான் முற்கூறியது பொதுவிதிமாத்திரையேயன்றி இடைநிலைப்பாட்டின் பொருளே பெரும்பான்மையும் வைக்கப்படு மென்பதூஉம் பொதுவிதியாற் சிறுபான்மை தரவின்பொருண்மை வைத்தலுமுடைத்தென்பதூஉங் கூறினான். 'தரவியல்' என்றதனால் தரவோடொத்த பொருட்கேற்றனவுங் கொள்க.

"நச்சல் கூடாது பெரும
விச்செல வொழிதல் வேண்டுவல்" (கலி-8)

என்பது தாழிசைப்பொருண்முடிவு தன்பால் வைக்கப்படுதலின் இறுதியுரைத்தது. 'புரைதீரிறுதி' யென்றதனான் அத்தாழிசைப்பொ ருளையன்றி அவற்றோடு போக்கியற் பொருள் வந்தக்கால் அவ்விரண் டினையும் புரைபடாமற் பொருந்தச்செட்கவென்பது. அது "தன்னசா விழையக்கூடுதல்" (கலி-8) எனப் போக்கியற்பொருளோடு புரைதீர்ந் திற்றது. பிறவும் அன்ன.

"இமையவில் வாங்கிய வீர்ஞ்சடை யந்தணண்" (கலி-38)

என்னுங் குறிஞ்சித்திணைப்பாட்டினுட் "கோடுபுய்க் கல்லா துழக்கு நாடன" என்று உள்ளுறையுவமத்தால் தலைவியது விழுமங்கூறக் கொழுநன் மலைநாடனென வைத்தமையின் அது தரவியலொத்ததா யிற்று. இனி, * "ஞாலமூன் றடித்தாய" (கலி-124) என்னும் நெய் தற்றிணைக் கலிப்பாட்டு அளவியலாற் சுரிதகமொத்தது. † "கருங் கோட்டு நறும்புன்னை" (கலி-123) என்பது தரவிற்கு அடியைந்தாகச் சுரிதகம் நான்கடியாய்ச் சுருங்கிற்று. அஃதேல் தரவகப்பட்டதெனச் சுருங்குதலன்றி ஒத்தற்பொருளும்படுமாயின் தரவகப்படும் போக்கென் றது தரவியலொத்தும் என்றதென்னையெனின், தரவுமென்ற உம்மை யாற் சிறுபான்மை மிக்கு வரவும் பெறும் போக்கென்பது கொள்க.

"பாடின்றிப் பசந்தகண் பைதல் பனிமல்க
வாடுபு வனப்போடி வணங்கிறை வளையூர
வாடெழி லழிவஞ்சா தகன்றவர் திறத்தினி
நாடுங்கா னினைப்பதொன் றுடையேன்மன் னதுவுந்தான்"
(கலி-16.)

என்னும் பாலைப்பாட்டுத் தரவுந் தாழிசையும் நான்கடியாகிஒத்தவழிச்,

"செய்பொருட் சிறப்பெண்ணிச் செல்வர்மாட் டினையன
தெய்வத்துத் திறநோக்கித் தெருமர றேமொழி
வறனோடின் வையத்து வான்றருங் கற்பினு
ணிறனோடிப் பசப்பூர்த லுண்டெனை
வறனோடி விலங்கின்றவ ராள்வினைத் திறத்தே." (கலி-16)

எனச் சுரிதகம் ஐந்தடியாயிற்று. (கஅள)

450. ஏனையொன்றே,
தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே.

இஃது, ஒழிந்த ஒத்தாழிசையுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : அது முன்னிலையிடமாகத் தேவரைப்பராவும் பொருண்மைத்து, என்றவாறு.

எனவே, இஃது அகநிலைச்செய்யுளாகாதென்றான். இதனானே முன்னையது அகநிலை யொத்தாழிசையெனப்படும். மற்றிது 'வாழ்த்தியல் வகையே நாற்பாற்கு முரித்து' (தொல்-செய்-109) என்றவழிச் சொல்லப்பட்டதாமெனின், அஃது உறழ்கலிக்கும் வெண்கலிக்குங் கொச்சகக்கலிக்கும் பொதுவாகலின் அவற்றுக்குத் தேவபாணி விலக்கினுனென்பது. மற்று முன்னிலைக்கணென்ற தென்னையெனின் தெய்வத்தினை முன்னிலையாகச்சொல்லப்பட்டனவன்றி அல்லன தேவபாணி யெனத் தகாவென்பது. என்னை ? யான் இன்ன பெருஞ்சிறப்பின் இன்ன தெய்வமென்று தன்னைத்தான் புகழ்ந்து கூறி நின்னைக் காப்பேன் நீவாழியவெனத் தெய்வஞ்சொல்லிற்றாகச் செய்யுள் செய்தலும்

ஆகாது, வாழ்த்தினுள் அவ்வாறுண்டாயினென்பது. இதனனே படர்க்கையும் விலக்கினனும். ஆகவே, தெய்வம் படர்க்கையாயவழிப் புறநிலைவாழ்த்தாவதன்றித் தேவர்ப்பராயிற்றாகாது பாட்டுடைத்தலைவனெடு கூட்டிச்சொல்லு மென்றானும். இங்ஙனங் கூறவே, பாட்டுடைத் தலைவனைக் கூட்டினுங் கூட்டாக்காலுந் தேவர்ப்பராயிற்றேயாம் முன்னிலையாயினென்பது பெற்றாம். மற்றிவை பாடல்சான்ற புலநெறிவழக்கிற்கன்றித் தேவர்ப்பராயதற்கும் உரியவோவெனின் ஆண்டு அகப்பொருட்குரிமையுடைமையிற் கலியும் பரிபாடலுமென்றதனனே அத்துணையன்றிக் கடவுள்வாழ்த்துப்பொருள்படவும் வருமென்பது ஈண்டுக் கூறினனும். அதுவன்றே ஏனையதெனச் சிறுமைதோன்றப் பிற்கூறியதென்பது. (கரு௯)

451. அதுவே,
வண்ணக மொருபோ கெனவிரு வகைத்தே.

இஃது, அதன்வகையுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : ஏனையொன்றெனப்பட்ட ஒத்தாழிசை, வண்ணக ஒத்தாழிசையெனவும் ஒருபோகெனவும் இரண்டாம், என்றவாறு.

இதன் பயன் ஒத்தாழிசையெனப்படாது இவற்றுளொன்றென்பது அறிவித்தவாறாயிற்று. அஃதென்னைபெறுமாறெனின், மேல் ஒத்தாழிசைக்கலி இருவகைத்தாகுமென்றான்; பின்னர் அவ்விரண்டுனுள் ஒன்றென்றற்கு வண்ணகம் ஒருபோகென வேறுபெயர் கூறவே முன்னரதே ஒருதலையாக ஒத்தாழிசைக்கலியெனப்படுவதென உய்த்துணரவைத்தமையானும் ஏனையொன்றென வேறுபடுத்தமையானும் பெயரும் உடன்கூறாது போத்தந்து வைத்தமையானும் அதனேடு ஓரினத்தவல்லவென்பது பலவாற்றானுங் கொள்ளவைத்தானென்பது. அஃதேல், வண்ணகமும் ஒத்தாழிசையெனப்படாதாம்பிறவெனின் அது மாற்றுதற்கன்றே வண்ணகம் முற்கூறி அதிகாரம்பட வைப்பானாயிற்றென்பது. இக்காலத்தார் ஒருபோகினையும் ஒத்தாழிசையென்று தாழிசையெய்து காட்டுப.

'எருத்தே கொச்சக மராகஞ் சிற்றெண்
ணடக்கியல் வாரமோ டந்நிலைக் குரித்தே'
(தொல்-செய்-153.)

என்புழித் தாழிசையுறுப்பு ஓதாமையின் அது பொருந்தாது. (கருக)

452· வண்ணகந் தானே,
தரவே தாழிசை யெண்ணே வாரமென்
றந்நால் வகையிற் றோன்று மென்ப.

இது, முறையானே வண்ணகவொத்தாழிசை யுணர்த்துகின்றது.

இதன் பொருள் : தரவுந் தாழிசையும எண்ணும் வாரமுமென்னும் உறுப்பு முறையானே வருவது வண்ணகவொத்தாழிசையாம். என்றவாறு.

அது 'முதற்றொடை பெருகிச சுருஙகுமன் னெண்ணே' (தொல்-செட்-145) என்றவழிக் காட்டுதும். வண்ணித்துப் புகழ்தலின் வண்ணகமெனப்படும். என்னை? தரவினுனே தெய்வத்தினை முன்னிலையாகத் தந்து கிறீஇப் பின்னர்த் தெயவத்தினைத் தாழிசையானே வண்ணித்துப் புகழ்தலின் அப்பெயர் பெற்றதாகலின. ஒழிந்த உறுப்பான் வண்ணிப்பினுஞ் சிறந்த உறுபபு அதுவென்க. எனவே, அகநிலைச் செய்யுட்டாழிசை வண்ணித்து வாராவென்பதாம். எண்ணுறுப்பா மாறு முன்னர்ச சொல்லுதும். அவ்வெண்ணுறுப்புத்தான் நீர்த்திரை போல வரவரசசுருஙகிவருதலின் அம்போதரஙகமெனவும் அமையுமாகலின் அதனை அமபோதரங்க வொத்தாழிசைக்கலிப்பாவெனவுஞ் சொல்லுப. இனி வண்ணகமென்பது அராகமென உரைத்து அவ்வுறுப்புடையன வண்ணகவொத்தாழிசையெனவுஞ் சொல்லுவாரும் உளர். எல்லா ஆசிரியருஞ் செய்த வழிநூற்கு இது முதனூலாதலின் இவரோடு மாறுபடுதன் மரபன்றென மறுக்க. இசை நூலுள்ளும் மாறுபடின் அஃது அவர்க்கும் மரபன்றென்பது. மற்று இதற்குத் தனிச்சொல்லோதிய தில்லையாலெனின் அதனையும் அதிகாரத்தாற் கொள்க. (கசo)

453. தரவே தானு,
நான்கு மாறு மெட்டு மென்ற
நேரடி பற்றிய நிலைமைத் தாகும்.

இஃது, ஒத்தாழிசையுள் ஏனையொன்றற்குத் தரவு வேறுபட்ட இலக்கணத்திற்ருகலான் அது கூறுகின்றது.

இதன் பொருள் : இது நான்குமுதற் பன்னிரண்டடியீருக வாராது. தேவபாணிக்காயின் எட்டும் ஆறும் நான்குந் தரவடியாம், என்றவாறு.

இதனனே தலையளவுங் கடையளவும் இடையளவுமென்பன கூறி ஞனும். இங்ஙனங் கூறவே ஒழிந்தவுறுப்பிற்குந் தலையிடைகடை யென்பது கொள்ளப்படும். நேரடி பற்றிய நிலைமைத்தாகும் நான்கு மென்பதனை அளவடியான் வருமென்றற்குக் கூறினுனுமென்பாரு முளர். அற்றன்று; பிற அடி மயங்குவனவும் அளவடியுரியவென் பது முன்னர்க் கூறப்பட்டமையின். மற்றென்னைகருதியதெனின், சம நிலையின்றி வியனிலை வாராவென்பது. இனிப் 'பற்றிய' வென்ற மிகை யானே முற்கூறிய தரவுந் தாழிசையும் அளவடியான் வருதலில்லை யென்பது கொள்க. வருகின்ற ஒத்தாழிசைக்கும் பேரெண்ணிற்குஞ் சிற்றெண்ணிற்கும் இஃதொக்கும். (கசக)

454. ஒத்து மூன்ருகு மொத்தா ழிசையே.

இது, முறையானே ஒத்தாழிசை உணர்த்துகின்றது.

இதன் பொருள்: தம்மின் ஒத்த அளவினவாகலும் ஒத்தபொருள வாகலுமுடைய தேவபாணிக்கண் மூன்ருக வரும் ஒத்தாழிசை, என்ற வாறு.

இவை பொருள் ஒக்குமெனவே முன்னை அகநிலையொத்தாழி சைக்கண் வரும் இடைநிலைப்பாட்டிற் பொருள் ஒவ்வாது வருதலுஞ் சிறுபான்மைவரும். அவை,

"கல்லெனக் கவின்பெற்ற விழவாற்றுப் படுத்தபின்
புல்லென்ற களம்போலப் புலம்புகொண் டமைவாளோ."
(கலி-5)

என இடத்தியல் பொருளொழிய இடப்பொருளோடு உவமங் கூறினன்.

"ஓரிரா வைகலுட் டாமரைப் பொய்கையு
ணீர்நீத்த மலர்போல நீநீப்பின் வாழ்வாளோ" (கலி-5)

என இடப்பொருளொழிய இடத்தியல்பொருளோடு உவமங் கூறினமையின் வேறுபட்டன. ஒத்துவருவன முன்னர்க் காட்டினும்.

## 455. தரவிற் சுருங்கித் தோன்று மென்ப.

இஃது, ஐயம் அறுத்தது; அகநிலையொத்தாழிசைகட்கு இவை போலத் தரவோடொத்து வருமகொலென்றையுறுமைத் தரவிற்சுருங் கித்தோன்று மென்றமையின்.

இதன்பொருள்: மூவகைவண்ணத்தின் தாழிசையுஞ சமநிலைத் தரவிற் சுருங்கித்தோன்றும், என்றவாறு.

வாளாதே தரவென்றமையின இடையளவின்மேற் செல்லும், அடியென்றவழி அளவடிமேற்றாய போலவென்பது. தோன்றுமென் பதனன் இடைநிலையாகிய நான்கடியானும் மூன்றடியானுமன்றி ஐந் தடியானகாதென்பது கொள்க. எண்ணேறு தொடர்தலின் இரண்டடி யானகாதெனபது பெற்றாம். இடையளவுதரவிற் சுருங்குமெனவே கடையளவுதரவினுந தாழிசை சுருஙகுமென்பது உய்த்துணரப்படும். இங்ஙனங கூறாக்கால் ஓரடிமுதலாகத தாழிசைகோடல் வேண்டுமஃ தன்றேயெனபது. தோன்றுமென்றதனற் கடையளவினை ஒழித்து மற்றைத் தரவ்ரணடளவாகக் கொள்வாமெனக்கொள்க.* (கசரு)

* "வாளாதே சுருஙகு மென்றரேனும் 'தோன்றும்' என்றத னல், தரவின் பாதியாகிய நான்கடியும் மூன்றடியுமே தனக்குப் பெரு மைக்கும் சிறுமைக்கும எல்லையென்றுகொள்க. ஈரடியிரண்டும் வந்து தொடர்தலின், நான்கடித் தரவின் பாகமாகிய ஈரடித்தாழிசை யாகாதாயிற்று. இங்ஙனங கூறாக்கால் எழடிப்பெருமையாகத் தாழிசை கோடல்வேண்டும். இதனுற் கூறிய நான்கடியானும் மூன் றடியானுமன்றி ஐந்தடியானும் இரண்டடியானும் வாராதென்பதாா யிற்று" என்றார் நச்சினார்க்கினியர்.

## 456. அடக்கியல் வாரந் தரவோ டொக்கும்.

இது, சரிதகவிலக்கணங் கூறுகின்றது.

இதன்பொருள்: தரவோடு ஒத்துவரும் அடக்கியல்வாரம், என்றவாறு.

அடக்கியல்வாரமென்பது அடக்கும இயல்பிற்றாகிய வாரமென்றவாறு. சிறுத்தமுறையானே எண்ணுறப்புணர்த்தாது மயங்கச்கூறிய தனானே தனிச்சொல் வருனான்று எண்ணீற்றினுஞ் சரிதகத்துமுன்னும் புணர்க்க. அடக்கிடலென்றுன முன்னர்ப் பலவகையாற் புகழப்பட்ட தெய்வத்தினை ஒருபெயர்சொடுத் தடசகிள்ற்றலின். வாரமென்றான் தெய்வக்கூற்றின் மச்சளைப புசழ்ந்த அடி மிகுமாசலினென்பது.

## 457 முதற்றொடை பெருகிச் சுருங்குமன் னெண்ணே

இஃது, எண்ணுறப்பாமா றுணர்த்துகின்றது.

இதன்பொருள்: முதல் பெருகியவழி முதலெண், என்றவாறு.

தொடையென்றதனுல் தலையெண் இரண்டு அளவடியான ஒரு தொடையாகி வருமெனவும், பெருகியென்றதனுன் இரண்டடியான் இரண்டினைநாட்டி அதுவே பற்றி முதல்பெருகிய வென்றதனுன் ஒழிந்த எண்ணுத்தொகை பெறுதலும் நேர்ந்தானும். இதனை முதலெனவே வழிமுறை வருவனவும் எணணளவென்பது பெற்றும். அவை இத்துணையென்பது அறியுமாறென்டதெனின்? முதற்றொடை பெருகியெனறதனுன் இரண்டடியான இரண்டனையும நாட்டி, அதுவே பற்றிச் சுருங்குமென்றமையின் ஈரடியிற் சுருங்கி ஓரடியாதலும ஓரடியிற்சுருங்கி இருசீராதலும், இருசீரிற்சுருங்கி ஒருசீராசவும்* படும். முதலடி இன்னதென்றிலனுயினும அளவடியே சொள்ளப்படும், 'நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே' (தொல்-செய-32) எனறுனுசலின். ஆகவே இருசீரெனப்பட்டது குறளடியாயினும் இவை இரண்டு

* இங்ஙனம் 'ஒன்றற்சொன்று பாதமே சுருங்குதல் கொள்க' என்றார் நச்சினார்க்கினியர்.

தொடர்ந்தன்றி எதுகையாய் அமையாமையிற் குறளடியென்னுனயிருனென்பது. ஒருசீர்க்கும் அளவடிப்படுத்துத் தொடைகோடலொக்கும். என்னை ?

"போரவுணர்க் கடந்தோய்நீ புணர்மருதம் பிளந்தோய்நீ
நீரகல மளந்தோய்நீ நிழறிகழும் படையோய்நீ"

எனவும்,

"ஊழிநீ யுலகுநீ யுருவுநீ யருவுநீ
யாழிநீ யருளுநீ யறமுநீ மறமுநீ"

எனவும் அளவடிப்படுத்தே தொடைகொளப்படுமாகலின்.

அஃதேல் ஒருசீரினுஞ் சுருங்கப்பெறுமோவெனின் கந்தருவ நூலின்கண்ணும் ஒருசீரிற் சுருங்கின வாராமையாகலின் இவரும் பிற நூன் முடிந்தது தானுடம்படுதலென்னும் உத்திவகையான் ஒருசீரிற் சுருங்குதல் நேராரென்பது. மற்று வழிமுறையாற் பாகஞ் சுருங்குதல் பெறுமாறென்னையெனின், 'வகார மிசையு மகாரங் குறுகும்' (தொல்-எழுத்-புள்ளி-35) எனறாற்போல மேலைக் கொண்டுவருகின்றவாற்றாற் பாகமே சுருங்குதல் பெறலாமென்பது. மன்னென்பது ஆக்கத்தின் கண்ணும் வந்ததாகலிற் சுருங்கிப் பலவாமென்பதுகொள்க. எனவே, *இரண்டடியிரண்டும் ஓரடிநான்கும் இருசீரெட்டும் ஒருசீர் பதினாறுமாகி எண்பல்குமென்பது.† இருசீர் குறளடியுமாகலின் ஒருசீரான் வருவன சிற்றெண்ணெனவேபடும்.

* "இரண்டடியான் வருவன இரண்டும், ஓரடியான் வருவன நான்கும் சிந்தடியான் வருவன எட்டும், குறளடியான் வருவன பதினாறும் எனப் பிறநூலாசிரியர் உரைப்பர். இவ்வாசிரியர்க் கவ்வரையறையில்லை என்றவாறும்" என்றார் உரையாசிரியர்.

† "ஈரடியும், ஓரடியும், இருசீரும், ஒருசீருமாய்ச் சுருங்கி வாராதிற்கவும், இரண்டிற்கு நான்கும், நான்கிற் கெட்டும், எட்டிற்குப் பதினாறுமாய் ஒன்றற்கொன்று உறப்புவகையான் இரட்டிக்குமெனக் கொள்க" என்றார் நச்சினார்க்கினியர்.

ஆகவே, ஒழிந்த முதனிலையெண்ணுங் கடையெண்ணும் இடையெண்ணுமென மூன்றுங் கூட்டி எண்ணி சிற்றற்குரியவாயின. இதுநோக்கிப் போலும் எண்ணென்று அடக்காது 'சின்ன மல்லாக் காலை' (தொல்-செய்-146) என ஒருசீரினை வேறுபடுத்து மேற்கூறு கின்றதென்பது.

இனி அளவடியினை நாட்டியே முதற்றொடை பெருகிச் சுருங்குமென்றமையின் அளவடியிற் சுருங்கின இருசீரும் ஒரோவழிச் சின்னமெனப்படும். இனி அல்லாதார் ஈரடியிரண்டினைப் பேரெண்ணெனவும், ஓரடி நான்கினைச் சிற்றெண்ணெனவும், கடையெண்ணினை இடையெண்ணெனவும் ஒருசீரான் வருவனவற்றை அளவெண்ணெனவுஞ் சொல்லுப.* அளவடியாக நோக்கிப் பேரெண் சிற்றெண்ணென்றலுஞ் சின்னம்பட்டவழி இடைநின்றது இடையெண்ணுதலும் எல்லை யளவைத்தாகிய சின்னம் அளவெண்ணுதலும் அமையும். அவற்றுள் இருசீரினை முன்னின்ற சீராகவும், ஒருசீரினை இருசீராகவும அலகுவைப்பினும் அதனை 'அசையுஞ் சீரு மிசை யொடு சேர்த்தி' (தொல் செய்-11) என்பதனான் மறுக்க. இதற்குச் செய்யுண் முன்னர்க் காட்டுதும். (கசஞ)

## 458. எண்ணிடை யொழிதல் ஏதமின்றே சின்னா மல்லாக் காலை யான.

இது, மேலதற்கோர் புறனடை.

இதன்பொருள்: முற்கூறிய எண்களின்றிவருதல் செய்யுட்கு ஏதமின்று சின்னவெண்ணென்று மொழிநது நில்லாவிடத்து, என்றவாறு.

எனவே, சின்னவெண்ணொழியாது மூவகையெண்ணும் ஒழிதலுஞ் சின்னவெண்ணொழியுமிடத்து மூவகையெண்ணும் ஒழியாது வருதலுஞ் சுவையுடைத்தாயிற்று. இடையென்றதனால் தலையெண்

---

*யாப்பருங்கலவிருத்தி யுரைகாரர் பேரெண், சிற்றெண், இடையெண், அளவெண், எனவே கொண்டுள்ளார்.

ணும் இடையெண்ணுமல்லன எட்டு நான்காகியும் பதினாறு எட்டாகி யுங் குறைந்துவருதலுங் கொள்க. மூவகையெண்ணுஞ் சின்னமும் பெற்றுவருதல் சிறப்புடைமை ஏதமின்றென்றதனாற்பெறுதும்.

உதாரணம்:

"'மணிவிளங்கு திருமார்பின் மாமலராள் வீற்றிருப்பப்
பணிதயங்கு நேமியும் பானிறத்த சுரிசங்கு
மிருசுடர்போ லிருகரத்தி லேந்தியமர் மாயோனும்
பங்கயத்தி லுறைவோனும் பாகத்தோர் பசுங்கொடிசேர்
செந்தழற்கண் ணுதலோனுந் தேருங்கா னீயென்பார்க்
கவரவர்த முள்ளத்து ளவ்வுருவா யல்லாத
பிறவுருவு நீயென்னிற் பிறவுருவு நீயேயா
யளப்பரிய நான்மறையா னுணர்த்துதற் கரியோனே.'
(இஃது எட்டடித்தரவு.);

'எவ்வுயிர்க்கு முயிரேயா யியங்குதனின் றொழிலாகி
யவ்வுயிர்க்க ணடங்கியே யருளாது நிற்றலினால்
வெவ்வினைசெய தலையழுந்து வெம்பிறவிக் கடல்சூழ்ந்த
வவ்வினையை யகற்றுமா னிற்பதுநின் னருளன்றே;
பல்லுயிரும் படைப்பதுநின் பண்பன்றே பகலினால்
வல்வினையின் வலைப்பட்டு வருத்தங்கூ ருயிர்தம்மை
நல்வினையே பயில்வித்து நடுக்கஞ்செய் பவைநீக்கி
யல்லல்வா யழுந்தாம லகற்றுவது மருளன்றே;
அழிப்பதுநின் றொழிலன்றே யுறைந்தாலு முய்ரெல்லா
மொழித்தயற்றன் னுணர்வுகளே யொருவாம லுடனிறுத்தி
பழிப்பின்றிப பலகாலு மிப்பரிசே பயிற்றுதலி
னழிப்பதுவு மில்லையா லாங்கதுவு மருளன்றே'
(தரவின் பாகம்பற்றிய நான்கடித்தாழிசை.);

'வேள்வி யாற்றி விதிவழி யொழுகிய
தாழ்வி லந்தணர் தம்வினை யாயினை;
வினையி னீங்கி விழுத்தவஞ் செய்யு
முனைவர் தமக்கு முத்தி யாயினை' (ஈரடியிரண்டு.),

'இலனென விதந்தோர்க் கில்லையு மாயினை;
யுளனென வுணர்ந்தோர்க் குளையு மாயினை;
யருவுரு வென்போர்க் கவையு மாயினை;
பொருவற விளங்கிய போத மாயினை' (ஓரடிநான்கு.)

'பானிற வண்ணனீ; பனிமதிக் கடவுணீ;
நீனிற வுருவுநீ; நிறமிகு கனலிநீ;
யறுமுக வொருவனீ; டாணிழற் கடவுணீ;
பெறுதிரு வுருவுநீ; பெட்பன வுருவுநீ' (இருசீரெட்டு.)

"'மண்ணுநீ; விண்ணுநீ; மலையுநீ; கடலுநீ;
யெண்ணுநீ; யெழுத்துநீ; யிரவுநீ; பகலுநீ;
பண்ணுநீ; பாவுநீ; பாட்டுநீ; தொடருநீ;
யண்ணனீ; யமலனீ; யருளுநீ; பொருளுநீ'' (ஒருசீர்பதினாறு.)

'ஆங்க' (தனிச்சொல்.)

'இனியை யாகிய விறைவனின் னடியிணை
சென்னியின் வாங்கிப் பன்னாள் பரவுது
மலர்தலை யுலகின் மன்னுயிர்க் கெல்லா
நிலவிய பிறவியை நீத்தல் வேண்டி
முற்றிய பற்றொடு செற்ற நீக்கி
முனிமை யாக்கிய மூவர் முத்தியை
மயலற விளித்தநின் மலரடி
யரிய வன்றொ யுரிதினிற் பெறவே' (சுரிதகம்)''

இஃது எட்டடித்தரவும், தரவின் பாகம்பற்றிய நான்கடித்தாழிசை மூன்றும், ஈரடியிரண்டும், ஓரடிநான்கும், இருசீரெட்டும், ஒருசீர் பதினாறுமாகிய நால்வகையெண்ணுந், தனிச்சொல்லும், எட்டடிச்சுரிதகமும் பெற்ற தலைபளவுவண்ணகப் பெருந்தேவபாணி.

"'பலியுருவிற் கேலாத படைமழுவாள் வலனேந்திப்
புலியுரிமேற் பைத்தலைதான் பூங்கச்சை விரித்தமைத்துக்
கண்கவருந் திருமேனி வெண்ணூலின் கவின்பகைப்பத்

தண்கமழ்பூந் தாரிதழித் தலைமலைந்து பிறைதயங்க
மொழிவலத்தான் மயங்காதே முறுவலாற் றேலாதே
விழிவலத்தா னுருவழிந்தோன் வேடங்கண் டுணர்வழியாக்
கலிகெழு கடற்கச்சிக் கமழிளந் தேமாவி
னொலிதளிரு முலைச்சுவட் டுடன்பிறப்ப வுலவுங்கால்'
(இவை எட்டடித்தரவு.)

' நீறேறுந் திருமேனி நெடும்பகலே கிலவெறிக்க
வேறேறிக் கடைதோறு மிடுபலிக்கு வருதிரால்
ஏறேறி யிடுபலிக்கு வரும்பொழுது மிடைபிரியாக்
கூறேறும் பசும்பாகங் கொள்ளுமோ கொள்ளாதோ;
பல்லேற்ற பரிகலத்துப் பலியேற்றன் மேலிட்டு
வல்லேற்ற முலைமகளிர் மனமேற்ப வருதிரால்
வல்லேற்ற முலைமகளிர் மனமேற்ப நீர்வருங்காற்
கொல்லேற்றுக் கறுகிடனுங் கொள்ளுமோ கொள்ளாதோ;
நாணுக மடந்தையர்பாற் பலிக்கென்று நடந்தக்காற்
பூணுகந் தழீஇக்கொளினும் பொங்காது போலுமாற்
பூணுகந் தழீஇக்கொளினும் புகையுயிர்த்துப் பொங்காத
கோணுகம் யாந்தருபால் குடிக்குமோ குடியாதோ.'
(இது தரவின் பாகம்பற்றிய நான்கடித்தாழிசை மூன்று.)

'எரிவளை தரிக்கு மிடவயிற் றொடிக்கை
பரிகல மேந்தும் பசுசிறந் ததுகொல்;
உமையவள் விலக்கவு மொலிகட னஞ்ச
மிமையவர் தம்மை யிரந்துகொண் டனைகொல்'
(இவை ஈரடி இரண்டு.)

'இடையெழு பொழில்கட்கு மிமைப்பளவிற் கொல்லேறே;
கடைதொறு மவைவீற்பக் கற்பித்த வாறென்கொல்;
இரப்புநீர் வேட்டதுகேட் டிமையவரென் பட்டனரே;
பரப்புநீர்க் கங்கையோர் படர்சடையிற் கரந்ததே.'
(ஓரடிநான்கு.)

'பூண்டன வெண்பு; புனைந்தது தும்பை;
ஆண்டன பூதம்; மறைவது வேதம்;
இசைப்பன பல்வேய்; எழீஇயது வீணை;
அசைப்பன வேணி; அதிர்வன பொற்கழல்' (இருசீரெட்டு.)

'எனவாங்கு' (தனிச்சொல்.)

'எல்வளை மகளி ரிடுபலி நசைஇப்
பல்கடை திரிதருஞ் செல்வநிற் பரவுதும்
கொடியணி யேனம் பொடியணிந்து கிடப்ப
வடதிசை வாகை சூடித் தென்றிசை
வென்றி வாய்த்த வன்றுள் விடலை
யிவளவ,
ளிமிழிசை வேங்கடம் போலத் தமிழ்த்து,
நாவலொடு பெயரிய ஞாலங்
காவல போற்றி வாழிய நெடிதே' (சுரிதகம்.)"

இஃது எட்டடித் தரவுந் தரவிற்சுருங்கிய ஒத்தாழிசை மூன்றுஞ் சின்னமல்லா மூவகை எண்ணுந் தனிச்சொல்லுந் தரவோடொத்த அடக்கியல் வாரமும் பெற்று வந்தது.

"'ஆயிரங் கதிராழி யொருபுறங்கோன் றசலத்தான
மாயிருந் திசைசூழ வருகின்ற வரவுணர்த்த
மனக்கமல மலரினையு மலர்த்துவான் றுணைத
லினக்கமல முணாத்துவபோன் றெயவாயும் வாய்திறப்பக்
குடதிசையின மறைவதூஉ மறையென்று கொள்ளாமைக்
கடவுளர்த முறநகாத கண்மலரே கரிபோக
வாரிருளும் புலப்படுப்பா னவனேயென் றுலகறியப்
பாருலகத் திருள்பருகும் பருதியஞ் செல்வகேள்'
(இது தரவு.)

'மண்டலத்தி னிடைநின்று வாங்குவார் வைப்பாராய்
விண்டலத்திற் கடவுளரை வெவ்வேறு வழிபடுவா

ரோங்குலக முழுதுபோர்த் திருவுருவி னொன்றாகி
யாங்கவனை வேறுவே றளித்தியென் றறியாரால் ;
மின்னுருவத் தாரகைநீ வெளிப்பட்ட விடியல்வாய்
நின்னுருவத் தொடுங்குதலா னெடுவிசும்பிற் காணாதா
ரெம்மீனுங் காலைவா யிடைகரந்து மாலைவா
யம்மீனை வெளிப்படுப்பாய் நீயேயென் றறியாரால் ;
தவாமதியந் தொறுநிறையத் தண்கலை யக்கலைதேய்ந்
துவாமதிய நின்னொடுவந் தொன்றாகு மென்றுணரார்
தண்மதியின் னொளிபுக்கந் திருளகற்றுந் தவற்றாற்கோ
லம்மதியம் படைத்தாயு நீயேயென் றறியாரால்'

(இவை தாழிசை.)

'நீராகி நிலம்படைத்தனை ; நெருப்பாகி நீர்பயந்தனை ;
வளரொழிவிற் காற்றெழுவினை ; ஒளிகாட்டி வெளிகாட்டினை'

(இவை இருசீர் நான்கு.)

'கருவாயினை ; விடராயினை ; கதியாயினை ; விதியாயினை ;
யுருவாயினை ; அருவாயினை ; ஒன்றாயினை ; பலவாயினை'

(இவை ஒருசீரெட்டு.)

'எனவாங்கு' (தனிச்சொல்.)

'விரிதிரைப் பெருங்கட லமிழ்தத் தன்ன
வொருமுதற் கடவுணிற் பரவுதுந் திருவொடு
சுற்றந் தழீஇக் குற்ற நீக்கித்
துன்பந் தொடரா வின்ப மெய்திக்
கூற்றுத் தலைபனிக்கு மாற்றல் சான்று
கழிபெருஞ் சிறப்பின் வழிவழி பெருகி
நன்றறி புலவர் நாப்பண்
வென்றியொடு விளங்கி மிகுகம்யா மெனவே' (சுரிதகம்)''

என்பது எட்டடித்தரவுந் தாழிசையும் இருவகைச் சின்னமுந் தனிச்சொல்லுந் தரவோடொத்த சுரிதகமும் பெற்றுவந்த தலையளவு வண்ணகப் பெருந்தேவபாணி.

சின்னமெனவே இருசீரொட்டும் ஒருசீர் பதினாறும் அடங்குமென்றூ ராகலின், இது சின்னமல்லாக்கால் எண்ணிடையிட்டுவந்த வண்ணக வொத்தாழிசையாயிற்று.

இனி, இருசீருமன்றி ஒருசீர் பதினாறாகிய சின்னவெண்பெற்றும் வரும். அது வருமாறு :

"'உறைபதியி னுடனயனை யுந்தியாற் படைத்தோயு
மறைகடல்சூழ் நிலமுதலா யனைத்துலகும் புரப்போயுந்
திருநிறமே கரிபோகத் திருமேகம் பயந்தோயு
மொருநிறமே நிறமாக வொள்ளொளியை யுயிர்த்தோயு
மறுவித்து மார்பென்ன மலர்மகளை வைத்தோயு
நிறத்தோடு நெஞ்சொத்த நிலமடந்தை கணவனுநீ'

(இது தரவு.)

'பின்னமா யொன்றாகும் பெருமாயை யியற்றுவா
யின்னமா யந்தெளிய வெமக்கருளி யிமையவர்க்கு
மன்னமாய் முன்னொருகா லறம்பயந்த வறனுநீ;
குறியாதும் பிழையாத குறிமறைய முதன்மயக்கி
வெறியாதி மலரோற்கு வெளிப்படுத்து வேறுபடுத்
தறியாத மறையெமக்கு மறிவித்த வறவனீ ;
மாறாத மதிகொடுத்து வானவரை மயக்கியுங்
கோறாத மதிவாங்கிக் கொடுத்தருளி யிமையவர்க்குக்
காறாத மதிகாட்டுங் கருணைகூர் காட்சியைநீ'

(இவை மூன்றுந் தாழிசை.)

'வானுநீ நிலனுநீ மதியுநீ விதியுநீ
தேனுநீ யமிர்துநீ திருவுநீ யுருவுநீ
யன்புநீ யருளுநீ யாதிநீ யந்தநீ
யின்பநீ துன்பநீ யின்மைநீ யுண்மைநீ'

(இவை ஒருசீர்ச்சின்னம்.)

'எனவாங்கு' (தனிச்சொல்.)

'நால்வகை யுருவிற் பால்வே றாகிய
கோல முதல்வநிற் பரவுது ஞாலத்து

நல்லவை யாவை யெனாது தீனாது
செல்வ நோக்கிய னெய்தினி வல்லிதிற்
றுயரொடு தொல்வினை நீங்கிப்
பெயராச் சுற்றம் பெறுகம்யா மெனவே' (சுரிதகம்.)

என வரும்.

இதனுள் தரவுந் தாழிசையும் ஒருசீர்ச்சின்னமுந் தனிச்சொல்லுஞ் சுரிதகமும் வந்தவாறு கண்டுகொள்க.

"'கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் றொழுதேத்தக்
கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் வாலுளை
யழல்விழிச் சுழல்செங்கண் ணரிமாவாய் மலைந்தானைத்
தாரொடு முடிபிதிரத் தமனியப் பொடிபொங்க
வாாபுன லிழிகுருதி யகலிட முடனனைப்பக்
கூருகிரான் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய்' (தரவு.)
'முரசதிர வியன்மதுரை முழுவதூஉந் தலைபனிப்பப்
புரைதொடித் திரடிண்டோட் போர்மலைந்த மறமல்ல
ரடியொடு முடியறுப்புண் டயர்ந்தவா கிலஞ்சேரப்
பொடியெழ வெங்களத்துப் புடைத்தநின் புகழாமோ;
கலியொலி வியனுலக கலந்துட னனிநடுங்க
மலியிய லவிராழி மாறெதிர்ந்த மருட்சோர்வு
மாணாதா ருடம்போடு மறம்பிதிர வெதிர்கலங்கிச்
சேணுய ரிருவிசும்பிற் செகுத்தநின் சினமாமோ;
படுமணி யினநிரை பரந்துட னிரிந்தோடக்
கடுமுர ணெதிர்மலைந்த காரொலி யெழிலேறு
வெரிநொடு மருப்பொசிய வீழ்ந்தது கிறம்வேரு
வெருமலி பெருந்தொழுவி னிறுத்தநின் னிகலாமோ.'
(மூன்றுந் தாழிசை.)
'இலங்கொளி மரகத மெழின்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கை மாஅ னின்னிறம்;
விரியிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும்
பொருகளி றட்டோய் புரையு நின்னுடை.' (ஈரடியிரண்டு.)

'கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை;
தண்சுட ருறுபகை தவிர்த்த வாழியை;
யொலியிய லுவண மோங்கிய கொடியினை;
வலிமிகு சகட மாற்றிய வடியினை' (ஓரடிநான்கு.)

'போரவுணர்க் கடந்தோய்நீ; புணர்மருதம் பிளந்தோய்நீ;
நீரகல மளந்தோய்நீ; நிழறிகழும் படையோய்நீ''
(இருசீர் நான்கு.)

'ஊழிநீ; யுலகுநீ; யுருவுநீ; யருவுநீ;
யாழிநீ; யருளுநீ; யறமுநீ; மறமுநீ.' (ஒருசீரொட்டு.)

'எனவாங்கு' (தனிச்சொல்)

'அடுதிற லொருவனிற் பரவுது மெங்கோன்
றொடுகழற் கொடும்பூட் பகட்டெழின் மார்பிற்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைச் செவ்வே லச்சுதன்
றொன்று முதிர்கட லுலக முழுதுட
னொன்றுபு திகிரி யுருட்டுவோ னெனவே.' (சுரிதகம்.)''

இது நால்வகை எண்ணினுள் இறுதிநின்ற எண்ணிரண்டுஞ் சுருங்கிவந்தது. பிறவும் அன்ன. (கசுசு)

## 459. ஒருபோ கியற்கையு மிருவகைத் தாகும்.

இஃது, ஒத்தாழிசை இரண்டனுள் ஏனையொன்றனை வண்ணகவொத்தாழிசை ஒருபோகென இருவகைத்தென்றான் அவற்றுள் ஒருபோகின் வகையுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள் : ஒருபோகும் இருவகைத்தாகும், என்றவாறு.

உம்மை இறந்ததுதழீஇய எச்சவும்மை. இதனது பயம் ஒருறுப்பு இழத்தலின் ஒருபோகாதல் ஒக்குமாயினும் நிகழ்கின்ற உறுப்புத் தம்மின் வேறுதல் அறிவித்தலென்பது. அது முன்னர்ச் சொல்லுதும். (கசுஎ)

460. கொச்சக வொருபோ கம்போ தரங்கமென்
றெப்ப நாடி யுணர்தல் வேண்டும்.

இது, மேல்வகுக்கப்பட்ட இரண்டற்கும் பெயரும் முறையும் உணர்த்துகின்றது.

இதன் பொருள் : கொச்சகவொருபோகும் அம்போதரங்கவொருபோகுமென இரண்டாக உணரப்படும் அவை, என்றவாறு.

கொச்சகம் இழத்தலிற் கொச்சகவொருபோகாயிற்று. *வண்ணகமொருபோகென்றவழி ஒன்றேயாகி நின்ற கொச்சகம் ஒருவழி வாராமையின் அது கொச்சகவொருபோகாம். இனி ஏனையொன்றெனப் பட்ட ஒன்றனுள் வண்ணகப்பகுதிக்குரிய எண்ணுறுப்பு ஒருவழியின்றி யெனப் பிறந்த அன்மொழித்தொகை. அம்போதரங்கவொருபோகு என்பது பண்புத்தொகை.† இடையீடில்லாத நிலத்தினை ஒருபோகென்பவாகலின் அஃது ஒப்பினுகிடபெயர். ஒருபோகென்பதனைத் திரிகோட்டவேணியென்றதுபோலக் கொள்க. (கசஅ)

461. தரவின் ருகித் தாழிசை பெற்றுந்
தாழிசை யின்றித் தரவுடைத் தாகியு
மெண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றியு

* இதுவே எட்டுப்பாடம். 'வண்ணக வொருபோகென்றவழி' என்பது முன் அச்சுப்பிரதிப் பாடம். ஈண்டுச சுட்டியது 'அதுவே, வண்ணக மொருபோ கெனவிரு வகைத்தே' என்னும் 139வது சூத்திரத்தை.

†"கொச்சக உடைபோலப் பெரும் பான்மையும் திரண்டு வருவது கோச்சகம் எனவும், பலவுறுப்புக்கள் முறையே சுருங்கியும் ஒரோவழிப் பெருகியு முருகியும் கடைக்கண் விரிந்து நீர்த்தரங்கம் போறலின் அம்போதரங்கம் எனவும் கூறினர். இவையும் ஒத்தாழிசைப் பகுதியென்பார் போக்கிய வொத்தாழிசையானே ஒருபோகென்று ரெனக் கொள்க" என்றார் நச்சினார்க்கினியர்.

**மடக்கிய லின்றி யடிநிமிர்ந் தொழுகியும்**
**யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடைய து**
**கொச்சக வொருபோ காகு மென்ப.**

இது, முறையானே கொச்சகவொருபோகுணர்த்துதல் நுதலிற்று,

இதன் பொருள் : இந்நாற்பகுதியான்வந்தும் அமையாது பின்னரும் யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடைத்தாகிவருவது கொச்சகவொருபோகாம், என்றவாறு.

'தரவின்றாகித் தாழிசைபெற்றும்' என்பது தனக்கு இனமாகிய வண்ணகத்திற்கு ஓதிய தரவின்றித தாழிசைபெற்று மென்றவாறு. அவை பாணிப்பாட்டாகிய தேவபாணி முதலாயின எனக்கொள்க. என்றார்க்கு அவை தாழிசைபடாயனறி வாராமையின் தாழிசையாயு மென்றெழுஞ் சூத்திரமெனின் அங்ஙனங் கூறில் தரவொடு வருந் தாழிசையிலக்கணத்தவாம் இவையுமென்றஞ்சித் தரவொடுபட்ட தாழிசையன்றிப் புறத்துள்ளன என்றற்கு அது விலக்கினுனென்பது. எனவே இவை ஒத்துமூன்றாதலும் ஒருபொருண்மேல் வருதலுந் தாழம்பட்ட ஓசையவேடாதலும பயிலுமென்பதூஉஞ் சொல்லினுனிற்று. அங்ஙனஞ் சொல்லிய வதனுனே பாணியுளெல்லாம் இரண்டடியானே தாழம்பட்ட ஓசைவிராய்வருதலும முடுகிவருதலும் பெறுதும்.

இனித் தாழிசை மூன்றாகியவழி மூன்றடியானும் நான்கடியானும் வரும். இனிப் பத்தும் பனனிரண்டுமாகி ஒரு பொருண்மேல்வரும் பதினென்றும் அகப்பட்டு நான்கடியின் ஒன்றாது வருதலும் அங்ஙனம் வருங்கால் தாழ்ந்த ஓசை பெற்றும் பெறாதும் வருதலும் அவையும் இருசீர்முதலாக எண்சீரளவும் வருதலுமென்றின்னோரன்ன பகுதியெல்லாம் அவ்வரையறையின்றித் தழுவப்பட்டன. அஃதேல், அவற்றைத் தாழிசையென்ற தென்னையெனின் பெரும்பாலுந் தாழம் பட்ட ஓசையுற்ற வாகலினென்பது. என்றார்க்குத் தரவு விலக்கிய தனுன் எண்ணுஞ் சுரிதகமும் விலக்குண்ணுவாம் பிறவெனின், அற்றன்று; தாழிசைப்பேறு விதந்தோதவே ஒழிந்தன விலக்குண்ணு

மென்பது. மற்றுத் தாழிசை பெறுவதியாதோவெனின், கொச்சக வொருபோகெனப் பொதுவகையாற் செய்யுளெனக்கொள்க. அது நோக்கிப்போலும் பலவுமெண்ணி யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடையதென்று ஒருமை கூறுவானுயிற்றென்றுணர்க. அஃதேல் இரண்டடியான் வருந் தாழிசை பேரெண்ணுகாவோவெனின், அதுவன்றே முதற்றொடை பெருகினன்றி எண்ணெனலாகாமையினென்பது. இவை வருமாறு:

"உளையாழி யோரேழு மொருசெலுவி னடங்குதலான்
விளையாட நீர்பெறு மின்னுருவம் பராவுதுமே."

என்றாற்போலப் பாணிசசெய்யுளுட் பயின்றுவருமென்பது.

இவ்வாறு பலதாழிசை தொடர்பொருளவாகலின் அவற்றைப் பல அடுக்கிவரினுந் தாழிசையாமெனவே இதற்கு வாராவெனப் பட்ட கொச்சகந் தாழிசையின்றி வெண்பாவாகி வருமென்பது உய்த்துணரப்படும. என்னை ? வெண்பாவினுன் வஞ்சி பரிபாடலுட் கொச்சகம் வருமென்றமையின். பஃறாழிசைக் கொசசகமெனவும் அமையும். அவை சிலவருவன சிஃறாழிசைக் கொச்சகமெனப்படும். பிறவும் அன்ன. மற்றுப் பாணியுட் புறத்திணைபலவும் விராய்வருதலின் அது தேவபாணியா மென்ற தென்னையெனின், அவையெல்லாங் காடுகெழு செல்விக்கு பாணிநாட்கூழுந் துணஙகையுங் கொடுத்து வழிபடுவதோர் வழக்குப்பற்றி அதனுட் டாட்டுடைத்தலைவனைப் பெய்து சொல்லப் படுவனவாதலான் அவையெல்லாவாற்றானுந் தேவபாணியேயாமென்பது. என்றார்க்கு ஒரு தாழிசையோ பலதொடர்ந்த வழியோ கொச்சகவொருபோ காவதெனின் வரையறையின்மையின் இருவாற்றானுமாமென்பது. இனித் தாழிசை மூன்றடுக்கியவழி மூன்றடியான் வருமாறு:

"கன்று குணிலாக் கனியுதிர்தத மாயவ
னின்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி ;
பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவ

னீக்குநம் மானுள் வருமே லவன்வாயி
லாம்பலந் தீங்குழல் கேளாமோ தோழி;
கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவ
னெல்லிநம் மானுள் வருமே லவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழி''

(சிலப்-ஆய்ச்சியர் குரவை.)

என வரும்.

இனி நான்கடியான் வருதல் சிறுபான்மை. அவை வந்தவழிக் கண்டுகொள்க.

'தாழிசையின்றித் தரவுடைத்தாயும்' என்பது மேற்கூறிய தாழிசையின்றித் தரவேபெற்று வருதலுமென்றவாறு. பொதுவகையானின்ற கொச்சகவொருபோகு இரண்டு தரவுடைத்தெனப்பட்டது. மேல் தரவின்றாகி யென்றல்போல ஈண்டுந் தாழிசையின்றி யென்றதனல் தாழிசைபொடுபட்ட தரவிலக்கணத்தில் திரிந்துவரும் இத்தரவெனக் கொள்க. அது தரவுகொச்சகமுந் தரவிணைக்கொச்சகமுமென இரண்டாய்வருதலும் நான்கும் ஆறும் எட்டுமாய் வருதல் கடப்பாடின் றென்பதூஉங்கொள்க. உடைத்தெனப்பட்டது தரவெனவே ஒழிந்த உறுப்பு விலக்குண்டன. ஆகியுமென்ற மிகையான் இரண்டுவருதலே பெரும்பான்மையெனவுந் தரவோடொக்கு மெனப்பட்ட சுரிதகம் பெரும்பான்மையும் பெறுஞான்று பெறுவது அதுவேயெனவுங் கொள்க. சுரிதகம்பெறுவன சுரிதகத்தரவிணையென்று வழங்குப. மேல் தனிச்சொற்கு வரையறையின்மையின் அது பெற்றும் பெறுதும் வருமென்பது. மற்றுத் தரவிலக்கணம் இழந்ததாயின் அதனைத் தரவென்று பயந்ததென்னையெனின், தாழம்பட்ட ஓசையின்றி அது வருதல் பெரும்பான்மை யென்றற்கென்பது. எனவே, யாண்டுந் தரவென்பது தாழம்பட்ட ஓசைக்கு ஒருதலைமையின்றி வருமென்பது நேர்ந்தவாறுயிற்று. அது,

''நீறணிந்த திருமேனி நெருப்புருவங் கிளைத்ததுபோற்
கூறணிந்த குங்குமங்கொண் டொருமுலையோர் குறிசெய்ய

வேறணிந்த குவடெறிப்ப வேனிலாற் கெரிவிழித்த
வேறணிந்த வெல்கொடியா யெவ்வுயிர்க்கு றவிர்ந்தனவே"

என்பது தரவுகொச்சகம்.

"பூணாக வென்பணிந்தான் பூதத்தான் வேதத்தான்
கோணாகக் கச்சையான் கோடேந்து கொல்லேற்றான்
மாணாக வெண்ணூலான் வாணுதலாள் பாகங்கொண்
டூணாரும் பிச்சையா னுண்ணாத நஞ்சுண்டான்
வானாறு தோய்ந்த சடையான்வண் மாகத்தான்
*யானோர்வஞ் செய்த விறை;
எனவாங்குப் பாடி யிறைஞ்சுவோர்க் கெல்லாம்
வினைமாசு தீர விளக்காகுந் தோற்றத்
தனைபோய் மறலிக்கு மசசம் பயக்கும்
புனைபூங் கழற்றாண்மேற் பூவொடு நீர்தூவி
மனைமாண்ட பாக முளப்பட வாழ்த்தி
யெனைநாளு மேத்துது மெந்தையை யின்னே
வினையா தொழியுநந் நெஞ்சு."

என்பது தரவிணைக்கொச்சகம். இது சுரிதகம் பெற்று வருவனவுந் தனிச்சொற் பெற்று வருவனவும் வந்தவழிக் கண்டுகொள்க.

மற்றுத் தேவபாணியல்லாத தொடர்பொருட் செய்யுட்கண் தர வின்றித் தாழிசை வந்ததென்னுமோ தாழிசையின்றித் தரவுடைத் தாய தென்னுமோவெனின், அவை யாப்பினும் பொருளினும் வேற் றுமையுடைய தென்றதனுனே ஒன்றற்கொன்று தரவெனப்பட்டுத் தரவு கொச்சகமாமென்பது. என்னை ? ஆறும் எட்டுமெனப்பட்டு வாராமையானும் மூன்றடித்தாழிசையாய் வாராமையானுந் தாழிசை யெனப்படாமையின். அவை தம்பொருளொடு தாம் முடியாமையின் தரவுகொச்சகமாயின. இனி அத்தொடர்நிலையின் முதற்கண்ணின்ற தேவபாணி தன்பொருளொடு தான்முடிதலின் அது விதந்தோதிய தரவுகொச்சகமாம். என்னை ? எருத்தென்பது உடம்பிற்கு முதலா கலினென்பது.

---

* 'யானோர்வம்' என்றும் 'யானோர்தவம்' என்றும் பிரதி பேதங்கள் உண்டு.

'எண் இடையிட்டுச் சின்னங் குன்றியும்' என்பது வண்ணகத்திற்கு ஓதிய எண்ணுஞ் சின்னமுமின்றி ஒழிந்ததாம். தரவு தாழிசை தனிச் சொற் சுரிதகமென்னும் நான்கு உறுப்புடையதுங் கொச்சகவொரு போகாமென்றவாறு. இதற்கு இல்லாத உறுப்பே கூறி, உள்ளது கூறிலன், அல்லாத உறுப்பினையெல்லாம் அவற்றானே கிற்றலை வேண்டியென்பது. உதாரணம்:

"ஆறறி யந்தணர்" "படுபறை பலவியம்ப" "மண்டமர்" "கொலை யுழுவை" "எனவாங்கு, பாணியுந் தூக்கும்" (கலி-கடவுள்வாழ்த்து). என வரும்.

ஏனையொன்றெனப்பட்ட தேவபாணி ஒத்தாழிசையாகலான் உறுப்பொன்றியும் முதனிலை யொத்தாழிசையாசா. ஏனை ஒத்தாழி சையில் உறுப்பிழத்தல் பற்றி 'ஒப்ப நாடி யுணர்தல் வேண்டும்' (தொல்-செய்-148) என்பதனாற், சினன எண் ஏற்பவும் எண் இழந்த தெனப்பட்ட அம்போதரங்க வொருபோகுபோலக், கொச்சகமே யன்றி எண்ணுறுப்பு இழந்ததூஉங் கொச்சகவொருபோ கெனப்பட்ட ஒருபோகாமென்றானென்பது.

'அடக்கியல் இன்றி அடிநிமிர்ந்து ஒழுகியும்' என்பது அடக்கும் இயல்பிற்றல்லாத ஈற்றதாகி ஒருதொடையான அடிநிமிர்ந்தொழுகியு மென்றவாறு. ஒழுகுமெனவே அற்றுவாராது ஒனறேயாகி வருமென் பது. அடிநிமிருமென்றதனன் மேல் அடிவரையறுத்துச சொல்லப் பட்ட தரவு தாழிசை முதலிய உறுப்பு இதற்கில்லையென்றவாறும். அடக்கியல் வாரத்தினை அடக்கும் இயல்பின்றியெனவே இதற்கு வாரம் நேர்ந்தானுமாகலின, ஒழுகுமென்றதனோடு மாறுகொள்ளும் பிறவெனின், அங்ஙனம் படுமாயினும் ஒருகாரணம் நோக்கி அவ்வாறு நேர்ந்தானென்பது. என்னை ? அடி நிமிர்ந்தொழுகுங்கால் 'எழுசீ சிறுதியாசிரியங் கலியே' எனவும் 'வெண்பா வியலினும் பண்புற முடியும்' எனவும் ஓதியவாற்றானே இறுதிநிற்ப ஏனையடியெல்லாங் கலியடியாகி ஒழுகி வாரம்பட்டு நிற்குமென்று கோடற்கென்பது. ஈற் றியாதார் 'வெண்பா வியலாற் பண்புற முடியும், கலியடியுடையதனை

வெண்கலியென்ப. வெண்கலியாமாறு முன்னர்ச் சொல்லுதும். உதாரணம்:

"மழைநுழைத் துப் புறப்பட்ட மதியமு ஞாயிறும்போ
லுழைமுழங்கு வலம்புரியுந் திகிரியு மொளிசிறப்ப
வானிட்ட வில்லேபோற் பசுந்துழாய் பச்சென்னக்
கானின்று கனல்கின்ற கதிர்மூலமேற் கவின்செய்ய
வம்மேகத் திடைப்பிறந்த நசையுருமே றதிசயிப்ப
மைமேனி மருங்கதிர நகத்தரியே வால்புடைப்ப
விண்டோயு மதிணீல வெற்பிடைவேய் மிடைந்தாங்
கெண்டோளு மிடுநீழ லிளங்கதிர் களிகூரக்
கொதியாது கொதித்தெறிந்த கோடெருமைத் தலைமிசை
மிதியாத சீறடி மிதித்தனபோற் றோன்றத்
தாங்கிய புகர்வாளுங் கேடகமுந் தனித்தனி
வாங்கிய கோளரவு மதியமும் போன்றிலங்க
மைதொடுத்த கடற்புறஞ்சூழ் மலையென்ன மணியல்குல்
கொய்துடுத்த பொற்றுகிலின் கொழுஞ்சோதி கொழுந் [தோட்ட
நீனின்ற படிவத்தா னெடியோனை முதற்பயந்த
தாயென்று முதுமறை பரவினும்
யாயென் றல்ல தியாந்துணி யலமே."

என வரும். வெண்பாவினுள் முடியுங் கொச்சகவொருபோகு தேவபாணியாய் வந்தன கண்டுகொள்க.

யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடையதெனவே யாப்பின் வேறுபடுவனவும் பொருளின் வேறுபடுவனவுமென இரண்டாம்.

அவற்றுள், யாப்பின் வேறுபடுதலென்பது மேற்சொல்லின வாறும் இனி வருகின்றவாறுமின்றி யாப்பிலக்கணத்தின் வேறுபடுதல். அவை இருசீர்முதலாக எண்சீர்காறும் வந்த அடி மேற்கூறியவாறன்றி பாநான்கே பெற்றுவருதலும் அவற்றுட் பிற அடி விராய்வருதலும் பாமயங்கிவருதலும் இரண்டும் மூன்றும் நான்கும் அடியுள் ஈற்றடி குறைதலுங், குறையாதவழி இயலசைச்சீர்வருதலும், மூன்றடியாயிற் குறையாது வருதலும், நான்கடிச்செய்யுண் முடியவும் அடியிரண்டு

மிகுதலும், இனவியலின் வேறுபடுதலுங், கடவுட்டொடர்நிலைகள் பல தரவுந் தாழிசையுமாகி இடையிடைச் செய்வனவும், அடக்கியலின்றி அடிப்பட வியிர்ந்தொழுகுமெனப்பட்ட அடக்கியலுடைத்தாகலு மென்று இன்னோரன்ன பலபகுதியுங் கொள்ளப்படும். இப்பகுதியெல் லாம் பொருள்வேறுபட்டவழியும் விகழுமென்பது இரண்டனையும் உடன்வைத்தோதியதனாற் கொள்ளப்படும். என்றார்க்கு வரையறை யின்மையிற் களம்பாடு பொருநர்கட்டுரையுந் தச்சுவினைமாக்கள் சொற்றொடரும் ஏற்று இக்காலத்து உரைநிகழ்ந்தனவும் ஓலைப்பாயிர மும் முதலாயினவெல்லாங் கொச்சகமாகற்கு இழுக்கென்னையெனின், அவையே அடிவரையறையில்லன ஆறென்றவழி உரையெனப் பகுத் தோர்க்கன்றே அது கடாவாவதெனமறுக்க. இவ்வாறுவந்த கொச்ச கங்களை ஒருவரையறைப்படுத்துப் பாத்தோறும் இனஞ்சேர்த்தலும் பண்ணிற்குத் திறம்போலப் பன்னிருபகுதியவாமென்பார் *உரைக்கு மாறு: விருத்தந் துறைதாழிசையென மூன்றனையும் நான்குசெய்யு ளோடும் உறழ்ந்துரைபபப் பன்னிரண்டாமென்பது. மருட்பாவும் பரிபாடலுமோவெனின், அவற்றுக்கு அஃதாராய்ச்சியன்றெனவும் அவற்றை ஒப்பனவெல்லாம் ஒப்பெனமொழிய அடங்குமென்பதூஉம் அவர்கருத்து. இனி நூற்றைம்பதுகலியும் எழுபது பரிபாடலுமே னச்சங்கத்தார் தொகுத்தவற்றுள் ஒன்றனையில்லையென்றார். அஃ திக்காலத்திலும் வீழ்ந்ததின்மையின் அவரிலக்கணத்தினை வழுப் படுத்தென்பது. இனி விருத்தமுந் துறையுந் தாழிசையுமன்றி ஒப்புந் திறனுமென்றாற்போல்வன சிலகூட்டி அறுவகைச் செய்யுளோடுறழ முப்பதாம். இனி அவற்றை விகற்பித்துநோக்க எண்ணிறந்த பகு தியவாம். என்னை ? சீரும் அடியுந் தொடையும் பாவும் முதலாயவற்

* "இவ்வாறு வநத கொச்சகஙகளை யெல்லாம் ஒரு வரையறைப் படுத்துப் பாத்தோறும் இனஞ்சேர்த்திப் பண்ணிற்குத்திறம்போலப் பின்னுள்ள ஆசிரியர் அடக்குவர். அதனை அகத்தியமும் தொல்காப் பியமும் உணர்ந்தவர், அதன் கருத்தறிந்த ஆசிரியர் அவ்வாறடக்கா மைக்குக் காரணங்கூறுவர் - அவர் கூறுமாறு:" என்று மேல்வரும் பே ராசிரியர் மறுப்புரைகளனைத்தையும் எடுத்துக் காட்டியுள்ளார் நச்சி னார்க்கினியர்.

ரோடு குறளடிமுதலாயவற்றை வைத்துறழவும் அவ்வடி தம்மொடு தம்மைப் பரிமாற்றவுந் தம்மொடுபிறவற்றை மயக்கவும் பல்குமாகலின்.

"கொன்றை வேய்ந்த செல்வ னடியிணை
யென்று மேத்தித் தொழுவோ நாமே"
(கொன்றைவேந்தன்-காப்பு),

என்பது இரண்டடியாகலின் வெண்பாவினுள் ஒருசாரனவற்றுக்குங் கலியுள் ஒருசாரனவற்றுக்கும் இனமென்பதுபடும். இனிச் சீருந் தளையும் நோக்க ஆசிரியத்திற் கினமெனப்படும்.

இங்ஙனம் பலவற்றுக்கினமாயினும் இரண்டடியானே ஒரு செய்யுள் வருவது வெண்பாவென்பதுநோக்கி அதற்கினமாக்கி வெண்செந்துறையென்ப. இரண்டடியும் ஒத்துவருதலானும் ஒழிந்த காரணங்களான் நேர்ந்த பாக்கட்கினமாகலே விலக்குதல் அரிதாகலானும் அங்ங [illegible] சிதைந்தனவும் புன்பொருளவாய் வருவனவுஞ் செய்யுளென்பார் அவற்றைத் தாழிசையென்ப. அதற்குக் காரணமின்றென்பது. அல்லதூஉந் தாழ்ந்த ஓசையல்லா ஒன்றைத் தாழிசையெனில் தரவுதாழிசைகளுள் தாழிசையுஞ் சந்தம் அழியல்வேண்டுமென்பது. இனி விழுமியபொருளல்லாதனவற்றைத் தாழிசையென்றற்கு என்னை காரணமெனவும் மறுக்க. அல்லதூஉங,

"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாஅயவ
னின்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ"
(சிலப்-ஆய்ச்சியர்குரவை),

என மூன்றும் மூன்றடியான் முடிந்ததனை ஆசிரியத்தாழிசையெனின் அதனுட்கிடந்த வெண்டளை அதற்கொன்றாதென்னுமென்பது. *இனி இதுவே நான்காகிவரிற் கலிவிருத்தமென்ப. அது,

* 'இனி' என்பது முன் அச்சுப்பிரதியில் இவ்வாக்கிய முடிவிற் காணப்படுகிறது.

"நெருப்புக் கிழித்து விழித்த நெற்றி
யுருப்பிற் பொடிபட் டுருவிழந்த மார
னருப்புக் கணையா னடப்பட்டார் மாதர்
விருப்புச்செய வின்னை விரும்புகின் றாரே"

என்றவழி, இது நான்கடியாசிரியத்திற்குத் தாழிசையாங்கால் இழுக்கென்னையெனவும், வெண்டளைதட்டு வெண்டாழிசையாதற்கு இழுக்கென்னையெனவும், கலித்தளையில்லது கலிப்பாவிற் கினமாயவா றென்னையெனவுங் கூறி மறுக்க. இனிக் குறளடியானுஞ் சிந்தடியானும் வருவனவற்றை வஞ்சிப்பாவிற்கு இனமென்ப. சீரளவொப் பினும் அடி நான்காதலானும் வருஞ்சீர் இயற்சீராதலானும் பாவேறு படுதலானும் அதற்கிவை இனமாகாவென்பது. இனிக் குறளடிச்செய் யுண் மூன்றுவரில் தாழிசையெனவுஞ் சிந்தடிச்செய்யுண் மூன்று வாராவெனவுங் கூறினதற்கும் ஓர்காரணங் கூறல் அரிதென்க. ஒழிந் தனவும் இவ்வாறே இனஞ்சேர்த்திற் பிறிதொரு காரணத்தாற் பிற பாவிற்கும் அவையே இனமாதல் கூட்டி மறுக்க. என்றார்க்கு இங்ங னம் ஒன்றற்கு இனஞ்சேர்த்தல் அரியனவற்றைக் கலிப்பாவென்ற தென்னையெனின், பெரும்பான்மையுங் கலிப்பாவிற்கேற்ற ஓசைய வாகலின் அவையெல்லாவற்றுக்கும் ஒருபரிகாரங் கொடுத்துச் சூத்தி ரத்தினுள் அடக்கினார் இவ்வாசிரியர் 'முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணி' (தொல்-பாயிரம்) என்பது. இது மேலைக்கொண்டு அடிப் படவந்த மரபு. இவையெல்லாம் நான்கடியுள் வருதலே பெரும் பான்மையெனக்கொள்க. எனவே, சிறுபான்மை **பாவைப்பாட்டும் அம்மனைப்பாட்டும்** முதலாயின நான்கடியின் இகந்துவருவனவாயின.

இனி அடக்கியலின்றி அடிகிமிர்ந்தொழுகியது ஒழித்து, ஒழிந்த கொச்சகவொருபோகு முப்பகுதியுந் தம்முறுப்புவகையானே அளவை கொள்ளப்படும். இப்பகுதி பலவாயினும் மரபுபட்டு வந்தவகையானே செய்யுள்செய்யப்படும். இனியவற்றுட் சில வருமாறு:

"நெய்யொடு திரியொக்கச்
செய்யாளைச் சேர்வார்க்குப்

பொய்யாத வுள்ளமே
பொய்யாகல் வேண்டுமே.''

எனக் குறளடி நான்காக வந்தது. இது குட்டம்பட்டு வாராதென்பதன் மேற்பட்டது.

''மையணி கண்டனை வானோர்த
மையனை யாயிரம் பேழ்வாய்ப்
பையர வம்பல பூணு
மெய்யனை மேயது வீடே.''

என்பது முச்சீரடியான் வந்த கொச்சகம். இஃது இயலசைச்சீரானே வந்தவழியுங் கண்டுகொள்க.

''பூண்ட பறையறையப் பூத மருள
நீண்ட சடையா னாடு மென்ப
மாண்ட சாயன் மலைமகள் காணவே காணவே.''

என்பது சிறுபான்மை மூன்றடியான் வந்து இடையடி குட்டம்பட்டது. இது கந்தருவமார்க்கத்தான் இடைமடக்கி நான்கடியாதலும் ஈற்றடி ஒருசீர்மிகுதலு முடைத்தென்பது.

''ஒரு வான்யா றொடுசெ டாடவிப்
பெரு நாகமே பூணும் பெருமா
னரு வாயினு னயினு மன்பர்க்
குரு வாயினு னுள்ளத்தி னுள்ளே.''

என்பது நிரையசைச்சீர் முதற்கண்வந்த அளவடி நான்கான்வந்தது. அசைச்சீரின்றி அளவடி நான்கான்வருவதுந் தாழிசையின்றித் தரவுடைத்தாகியுமென்றவழித் தரவுகொச்சகமா யடங்குமென்பது.

''மண்டிணி கொண்ட மலர்க்கொன்றை மென்மாலை
கொண்டணி செஞ்சடைக் கோட்டிளந் திங்கள் போலப்
பண்டணி யாகப் பலர்தொழுங் கங்கைநீர் வைத்தா
னுண்டணி கொண்ட நஞ்சுண்பார்க் கழிந்தாமே.''

என நாற்சீரடியிரண்டும் ஐஞ்சீரடியிரண்டுமாய் வந்தது.

'இனி அறுசீ ரடியே யாசிரியத் தளையொடு
நெறிபெற்று வரூஉ நேரடி முன்னே' (தொல்-செய்-64)

என்றதுபோல *இலக்கணங்கள் கொச்சகவொருபோகிற்கே உரித்தாகவும் இன்னும் வேறுபட்டதாகவும் வரும். அது,

"கல்லாலந் தண்ணிழற்கீழ்க் கலித்துறை யதுபயந்த காமர் [காட்சி
நல்லானை நல்லா ளொருபாக மாகிய ஞானத் தானை
யெல்லாருமேத்தத் தகுவானை யெஞ்ஞான்றுஞ் சொல்லா [டாருக்
கெல்லாந் துயரல்ல தில்லை தொழுமின் கண்டீர்."

என வரும்.

இவ்வாறே ஒழிந்தனவெல்லாம் பரிமாற்றுப்படுப்பப் பலவாகி வரும். அவை வந்தவழிக் கண்டுகொள்க.

இனி நான்கடியும் ஒத்தவழி மயங்கி வருமாறு:

"தடந்தாட் கொத்த தமனியச் சிலம்பு
படந்தாழ் கச்சைப் பாம்பொடு தழீஇ
வென்றுதி நந்தாதை வியந்துகை துடிகொட்ட
நின்றுடு மழகளிற்றை நினைவாரே வினையிலரே"

என வரும்.

"புனைமலர்க் கடம்பின் பூந்தார்ச் சேந்த
னிணையடி பரவுதும் யாம்"

என்பது இரண்டடியான் ஈற்றடி குறைந்து வந்தது.

"கொன்றை வேய்ந்த செல்வ னடியிணை
யென்று மேத்தித் தொழுவாம் யாமே"
(கொன்றைவேந்தன்)

---

* 'இலக்கணம்' என்பது முன் அச்சுப்பிரதிப் பாடம்.

என்பது இரண்டடியுள் ஈற்றடி குறையாது அடிதோறும் மயங்கச்சீர் இயலசையான் வந்தது. ஒழிந்த மூன்றடியும் நான்கடியும் ஈற்றடியும் குறைதலுங் குறையாதவழி இயலசைச்சீராதலுங் கண்டுகொள்க.

"வானுற நிமிர்ந்தனை வையக மளந்தனை
பான்மதி விடுத்தனை பல்லுயி ரோம்பினை
நீனிற வண்ணநின் னிறைகழ றொழுதனம்."

என்பது மூன்றடியால் தரவு வாராமையின் யாப்புவேறுபட்ட கொச்சகமாயிற்று.

"கடாமுங் குருதியுங் கால்வீழ்ந்த பசைசுப
படாமும் புலித்தோலுஞ் சாத்தும் பரம
னிடாமுண்ட நெற்றியா னெஞ்ஞான்றுங் கங்கை
விடாமுண்ட வார்சடையான் வெண்ணீ றணிந்தென
மெய்யுறு நோயில்லை வேறோ பிறப்பில்லை
யையுறு நெஞ்சில்லை யாவதொன் றில்லை."

என நான்கடியும முடிந்தவழி இரண்டடி வேறுவந்த கொச்சகம். ஒழிந்தனவும பிறவேறுபாட்டான் வருவனவுமெல்லாம் வந்தவழிக் கண்டுகொள்க. இசொல்லப்பட்டனவெல்லாந் தரவுகொச்சகத்தின் பாற் சார்த்திக்கொள்ளப் படுவனவென்ப. வேறும் உள. அவையும் அவ்வாறுதலறிந்துகொள்க. மற்று அங்ஙனங் கூறின் இரண்டடியான் வருவன தாழிசையாகலின், "கொன்றை வேய்ந்த செல்வ *** னாமே."

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை"

(முதுமொழிக்காஞ்சி)

எனவும் வருவன தாழிசையாம் பிறவெனின், தாழிசை இலக்கணஞ் சிதையவரினுந் தாழிசைக் கொச்சகமெனவேபடுமன்றே? தரவிலக்கணம் அழிந்து தரவிரட்டித்துச் சுரிதகம்பெற்றதூஉந் தரவு கொச்சகமாயிற்றுப்போல வென்பது. அல்லதூஉம் "ஓதலிற் சிறந்தன்

றொழுக்க முடைமை" என்பது இரண்டடியின்றி முதுமொழி யாக லானும் "ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்" என்பது பலவற்றுக் கும் பொதுவாகலானும் அஃது இரண்டடி வரையறையுடைய பாட் டெனப்படாது. "கொன்றை வேய்ந்த செல்வனடி" என்பது கந்தருவ மார்க்கமாதலின் ஈண்டை யிலக்கணமெல்லாம் பெறுதல் சிறு பான்மையெனக் கொள்க.

இனிப் பொருளினும் வேற்றுமையென்பது முற்கூறியவகையா னும் மரபுவேற்றுமையானும் ஏற்றவகையான்வந்து பொருள்வேறு படுதல். அஃதாவது, தேவரை முன்னிலையாக்கிச் சொல்லாது படர்க் கையாகச் சொல்லுதலும், மக்களைநாட்டி வெட்சி முதற் பாடாண்டினை இறுதியாகிய புறப்பொருளான் வந்து அதனுக்குரித்தென்று கூறப் பட்டதும், அப்பொருளின் வேறுபடுதலுமெனக் கொள்க. ஏற்ற வகையாற் பொருள்வேறுபாடு கொள்கவெனவே முன்னிலை படர்க்கை யான் வரும் பொருள்வேறுபாடே இஃது ஒதியநான்கு மாமாறு. வேறுபட்டவற்றுக்குமெல்லாம் பொதுவொழிந்த வெட்சி முதற் பா டாண்டினை இறுதியாகிய பொருள்வேறுபாடு வரையறையுடைய வென்பது. என்னை? எடுத்தோதிய நான்கனுள் எண்ணிடை யிட்டுச் சின்னங்குன்றியும் அடக்கியலின்றி அடிநிமிர்ந் தொழுகியும் வரும் பகுதியொழிந்து வருமாகலின் இப்பொருள் வேறுபாடு பாணிச் செய்யுள் இடையிடை விரவிவரினல்லது வேறுவாராதெனக் கொள்க. இவ்வாற்றாற் கொச்சகக்கலிப்பாவினை வரைந்தோதவே ஆசிரியப் பா வும் வெண்பாவும் ஒருபொருண்மேற் பலதொடர்ந்தவழி மூன்றும் ஐந்தும் ஏழும் ஒன்பதுமாகிவருதலும் பிறவாற்றான்வருதலும் வரை யறையிலவாயின. தேவபாணியல்லாத தொடர்நிலைச் செய்யுளெல் லாம் யாப்பு வேறுபாட்டோடு பொருள்வேறுபாடுமுடைய எனக் கொள்க. அவையெல்லாம் அவ்வச்செய்யுளுட் காணப்படும்.

"புகலிரும் பனிச்சோலைப் பொன்மலைபோற் பொலிந்திலங்கி
யகல்விசும்பிற் சுடர்மாட்டி மைம்பூத மகத்தடக்கி
மண்ணக மிருணீங்க மன்னுயிர் படைத்தக்கா
லண்ணலேற் றெழிலூர்தி யருமறை முதல்வனுங்

தண்ணறுங் கமழ்துழாய்த் தாமரைக் கண்ணனும்
வண்ணம்வே றுடம்பொன்றாய் வானவில் லனையரே.''

எனப் படர்க்கையவாய்த் தெய்வம் பராஅதலிற் பொருள் வேறு பட்டது.

"வெண்பலிச் சாந்த முழுமெய்யு மேற்பூசி
யுண்பலிக் கேதிரியு மூர்தி மேலிட்டுக்
கண்பலிக் கென்று புகுந்த கபாலிமுன்
னெண்பலித் தாளிவள் யாது.''

என்பது 'காமப்பகுதி கடவுளும் வரையார்' (தொல்-புறத்-28) எனப்பட்ட பாடாண்டிணையாகலிற் பொருள் வேறுபட்டது. "கன்று குணிலாக் கனியுதிர்த்த மாஅயவன்"* என்பதோவெனின், அது முல்லை நிலத்துக்குத் தெய்வமாகலானும் முல்லைநிலத்தார் தந்தெய்வத் தினை அவ்வாறு அன்புசெய்து முன்னிலைப் புறமொழியாகக் கூறுதலா னும் அது கைக்கிளை யெனப்படாதென்பது. ஒழிந்தனவும் இவ்வாறு வருவன வந்தவழிக் கண்டுகொள்க. மற்று இவற்றையெல்லாங் கொச்சக வொருபோகென்றதென்னை? மற்றைபுறப்புப் பலவிழந்தனவாலெ னின், அங்ஙனமாயினுங் கொச்சகவொருபோகென்னும் பொதுவிதி விலக்குண்ணுமையின் இது பொதுவகையானெய்திய பெயரெல்லாம் அவற்றுக்குமாகுமென்று எய்துவித்தானென்பது. இனிக் கொச்சக வொருபோகென்னுது ஆகுமென்றதனுன் ஒருபோகென்னுது கொச் சகமென்றே வழங்கினும் அமையுஞ் சிறுபான்மையென்பது கொள்க.

462. ஒருபான் சிறுமை யிரட்டியத னுயர்பே.

இஃது, அதிகாரத்தான் மேல்நின்ற †நான்கனுள் இறுதிநின்ற கொச்சகவொருபோகிற்கு அளவுணர்த்துகின்றது; ஒழிந்தவற்றுக்

* சிலப்பதிகாரம்—ஆய்ச்சியர் குரவை.

† மேல் 'தரவின் றாகித் தாழிசை பெற்றும் (1) - தாழிசையின் றித் தரவுடைத் தாகியும் (2) - எண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றியும் (3)-அடக்கியலின்றி அடிநிமிர்ந் தொழுகியும் (4)' என்ற நான்கனுள்.

கெல்லாம் உள்ளுறுப்புப்பற்றி இரண்டளவைகூறி அங்ஙனங் கூறப்படாததற்கும் அவற்றோடு இனம்பற்றி ஈண்டை அளவுகூறினமையின்.

இதன் பொருள்: பத்தடியிற் சுருங்காது இருபதடியினேறுது வரும் அடக்கியலின்றி அடிமிமிர்ந்தொழுகுமெனப்பட்ட கொச்சக வொருபோகு, என்றவாறு.*

முன்னர் நால்வகையாற பகுத்து விரீஇ, அதற்கிடையின்றி 'அது' வென்று ஒருமையாற சுட்டிக்கூறினமையானும் மேல் 'மிமிர்ந்தொழுகும்' என்றக்கால் அடி எத்துணையும் பலவாமென்று ஐயுறுதலை விலக்கல் வேண்டுவதாகலானும் ஏறபுழிக்கோட லென்பதனானுமெல்லாம் அதுவே கொள்ளப்பட்டது. அவற்றக்குச் செய்யுள்:

"தடங்கடற் பூத்த தாமரை மலராகி
யடங்காத முரற்சியா னருமறை வண்டிசைப்ப
வாயிரம பேராழி யவிரிதழின வெளிப்பட்ட
சேயிழை யெனததோன்றுஞ் செழும்பகலி னிரவகற்றிப்
படுவகைப் பனிப்பகை நீங்கப் பருவத்து
விடுமழை மறுத்திடினு மெனமலரின் மதுமழையா
னெடுங்கலங் குளிர்கூர நீாமைகா னிழனறி
யண்டங்கள் பலபயநத வயன்முதலா மிமையோரைக்
கொண்டங்கு வெளிப்படுத்த கொள்கையை யாகலின்
ஒங்குயா பருதிச் செல்வனின்
னீங்கா வுள்ள நீங்கன்மா ரெமர்க்கே."

என்பது பத்தடியிற் சுருங்காது இருபதடியினேறுது வரும் 'அடக்கிய லின்றி யடிமிமிர்ந தொழுகும்' (தொல்-செய்-149) எனப்பட்ட கொசசகவொருபோகெனறவாறு. இருபதடியான் வருவது வந்த வழிக் கண்டுகொளக. (கலo)

* 'மேற்சொல்லப்பட்ட கொச்சக வொருபோகு பத்தடிச் சிறுமையாக இருபதடிப பெருமையாகவரும்' என்று உரைகூறினர் இளம்பூரணர். நச்சினார்க்கினியர், பேராசிரியர் கூறியவாறே ஈற்றில் நின்ற கொசசக ஒருபோகெனக் கொண்டு உரைகூறினர்.

163. அம்போ தரங்க மறுபதிற் றடித்தே
செம்பால் வாரஞ் சிறுமைக் கெல்லை.

மேனின்ற அதிகாரத்தான் இதுவுங் கடவுள்வாழ்த்துப் பொருட்டாகிய அம்போதரங்கவொருபோகிற்கு அடிவரையறை கூறுகின்றது.

இதன்பொருள்: அம்போதரங்கவொருபோகுந் தன் உறுப்பெல்லாங் கூடி அறுபதடித்தாகியும் அதன்செம்பாலாகிய முப்பதடித்தாகியும் அதன்வாரமாகிய பதினைந்தடியாகியுஞ் சிற்றெல்லைபெறும், என்றவாறு.

எனவே, இது தலைபளவம்போதரங்கவொருபோகும் இடையளவம்போதரங்கவொருபோகுங் கடையளவம்போதரங்கவொருபோகுமென மூன்றற்குஞ் சிற்றெல்லை கூறியவாறாயிற்று. அவற்றுக்குப் பேரெல்லை கூறுமாறென்னையெனின் அறுபதிற்றடித்தெனத் தலையளவிற்கு வேறுகூறி அவ்வளவைப்பற்றி அதன்செம்பாலும் அதன் வாரமுமெனப் பாகஞ்செய்து வநதானுகலாற் கடையளவம்போதரங்கத்திற்குச் சிற்றெல்லை பதினைந்தாம். கடையளவம்போதரங்கத்திற்குச் சிற்றெல்லை பதினைந்தாகியவழிப் பேரெல்லை முப்பதின்காறும் உயருமெனவும், இடையளவிற்குச் சிற்றெல்லை முப்பதாகிய வழிப் பேரெல்லை அறுபதின்காறும் உயருமெனவுந, தலையளவிற்குச் சிற்றெல்லை அறுபதாகியவழி அதனையும் இவ்வாறே இரட்டிப்ப அதன் பேரெல்லை நூற்றிருபதாமெனவுங் கொள்ளவைத்தானென்பது. அங்ஙனம் நூற்றிருபதாங்கான் மேனின்ற அதிகாரத்தால் தரவிற்கெல்லை இருபஃதாகவும் அதனேடொப்ப வருதலிலக்கணத்ததாகிய அடக்கியல் இருபதடியாகவும் நாற்பதடி பெறப்படும்.

இனிச், சிற்றெண் பதினாறும் அராகவடி நான்குமாக இருபதடி பெறப்படுங் கொச்சகம் இருமூன்றாகிய பத்தடியின் இகவாது அறுபது அடிபெறு மென்றவாறாயிற்று. இனிப், பதினைந்தாங்கால் தரவு இரண்டடியும், கொச்சகம் மூன்றாகி ஆறடியும், அராகவடி ஒன்றும், சிற்றெண் நான்கும், அடக்கியல் இரண்டுமெனப் பதினைந்தடியாம்.

ஒழிந்த இடையளவிற்குந் தலையளவிற்கும் இவ்வாறே வருமாறறிந்து கொள்க. இவ்வுறுப்புக்கண் மேற்கூறுகின்றானாகலின் ஈண்டு அளவை கூறினனென்பது. கலிப்பாவினுள் உறுப்பிற்கெல்லாம் ஈண்டே வேறுவேறளவை கூறி வருகின்றானாகலின் இவற்றுக்கும் அவ்வாறே ஈண்டளவைகூறி அளவியலுட் கூறானென்பது.

'சூத்திரத் துட்பொரு ளின்றியும் யாப்புற
வின்றி யமையா தியைபவை யெல்லா
மொன்ற வுரைப்ப துரையெனப் படுமே.' (தொல்-மர-103.)

என்பதனான் இதனுள்ளுறுப்பிற்கு அடிவரையறை உய்த்துணர்ந்து *காட்டினாமென்பது. (கருக)

464. எருத்தே கொச்சக மராகஞ் சிற்றெ
ணடக்கியல் வாரமோ டந்நிலைக் குரித்தே.

இது, முன்னர்க்கூறிய அம்போதரங்கவுறுப்பு இவை ஐந்து மெனக் கூறியவாறு.

இதன்பொருள்: தரவும், கொச்சகமும், அராகமும், சிற்றெண்ணும், அடக்கியல்வாரமுமென ஐந்துறுப்புடையது அம்போதரங்க வொருபோகு, என்றவாறு.

தரவெனினும் எருத்தெனினுமொக்கும்.

இனிக் கொச்சகமென்பது ஒப்பினாகியபெயர். என்னை? பல கோடுபட அடுக்கியுடுக்கும் உடையினைக் கொச்சகமென்ப. அது போலச் சிறியவும் பெரியவும் விராயடுக்கியுந் தம்முளொப்ப அடுக்கியுஞ் செய்யப்படும் பாட்டதனைக் கொச்சகமென்றா ராகலினென்பது. இக்காலத்தார் அதனைப் பெண்டிர்க்குரிய உடையுறுப்பாக்கியுங்

---

* 'காட்டினனும்' என்பதுமுன் அச்சுப்பிரதிப்பாடம். 'காட்டினும் நாம்' என்பதேபொருத்த முடைத்தாதல் காண்க.

கொய்சகமென்று சிதைத்தும் வழங்குப.* இவை வெண்பாவாதல் பெரும்பான்மை. 'வழிமுறைசுருங்கியும் வரையறை யெண்ணுப் பெறும் எண்போலாது பாவினுந் தளையினும் வேறுபட்டுப் பலவாகி யும் வருங்கொச்சகமென்பது. அராகமென்பது அறுது கடுகிச்சேறல். பிறிதொன்றுபெய்து ஆற்றவேண்டுந் துணைச் செய்வதாகிய பொன் னினை அராகித்த தென்பவாகலின், அதுவும் ஒப்பினுகியபெயரா யிற்று. என்னை? மாத்திரைநீண்டுந் துணிந்தும் வாராது குற்றெழுத் துப் பயின்று வந்து நடைபெறுதலின். சிற்றெண் என்பது நால் வகையெண்ணினும் இறுதியெண்ணுனமையின் அப்பெயர்த்தாயிற்று. அவ்வுறுப்புக்களிற் கூறியபொருளை அடச்சுமியல்பிற்று வாரமாகலின் அதனை அடக்கியல் வாரமென்றான்.

அதற்குச் செய்யுள்:

" செஞ்சுடர் வடமேரு விருமருங்கின் திரிகின்ற
வெஞ்சுடரு மதியமும்போல் வேலொடுகே டகஞ்சுழல
மாயிரு மணிப்பீலி மணியெருத்திற் றேன்றுங்காற்
சேயொளி கடற்பிறந்த செந்தீயிற் சிறந்தெறிப்ப
மறுவருந்தம் மனத்து வகைத் தழைச்சியான்வளர்த்தெடுத்த
வறுவருந்தம் முலைசுரந் தகடருந்தூ றமுதூட்ட
வாருருவத் தெரிமூன்று மொருங்கவித்தோன் வியப்பெய்த
வீருருவத் தொருபெருஞ்சூர் மருங்கறுத்த விகல்வெய்யோய்
ஆங்கு,
வினையொழி காலத்து வெவ்வெயிற் சோலத்
தனைவருந் தத்த மறம்புரிந் தாங்கு
முனையடு தோற்றத்து முந்நான் குருவிற்

* "பலகோடுபட அடுக்கியுடுக்கும் உடையினைக் கொச்சகம் என்ப வாகலின் அதுபோலச சிறியவும் பெரியவும் விராய் அடுக்கியும் தம்முள் ஒப்ப அடுக்கியும் வரும் செய்யுளைக் கொச்சகமென்றார். இது, ஒப்பி னுகிய பெயர்; இக்காலத்து மகளிர்க்குரியதாய்க் கொய்சகமென்று வழங்கிற்று" என்றார் நச்சினார்க்கினியர்.

கனைகடல் சுட்டது கண்;
தேவரு மக்களுஞ் சீற்றத்தா னஞ்சாமைக்
காவல் புரியுங் கதிர்மதி போலு
மூவிருந் தோன்றன் முகம்;
மடமகள் வள்ளி மணிக்கம் பலம்போல
விடையிடை சுற்றுத லின்றுந் தவிரா
தொடையமை தார்க்கடம்பன் றோள்;
அவ்வழி,
அடியிணை சேரா தவுணர் நுடங்கிப்
பொடிபொடி யாகிய போர்ப்பொடு மாய
விடியுமிழ் வானத் திடைநின்றுங் கூஉங்
கொடியணி கோழிக் குரல்;
விழுசசீ ரமரர் விசும்பிடைத் தோன்றிப்
பழிச்சினின் றார்த்தார் பலர்;
உருகெழு முருகிய முருமென வதிர்தொறு
மெரிசிற கொடுமினை தபவரு மணிமயில்;
பெருகள வருமறை பெறுநெடு மொழியொடு
பொருகள வொளியிசை புகல்வன சிலகுறள்;
சிவந்தனதிசை சிலம்பினமலை
நிவந்தனதலை நிரம்பினகுறை;
ஆர்த்தனமறை ஆடினர்பலர்
போர்த்தன தூகள் பொழிந்தனமலர்;
அங்கனந் தோற்றிய வடுபோர் வென்றியின்
வீங்கிருந் தொடித்தோள் விடலை நினக்கே
யாமறி யளவையிற் றமிழ்புனைந் *தேத்துத
னனிதக்க தாயினு நின்னெதிர
நாணில மாகல் வேண்டும யாணர்க்
கடம்புள களிமயிற் பீலியுந் தடஞ்சுனை

---

* 'ஏத்துக-நின்னி தக்கமாயினும்' என்பது முன் அச்சுப்பிரதிப் பாடம்.

நீரொடு சின்னவயின் மாந்த
வாராப் புலமை வருகமா ரெமக்கே"

என்பது இடையளவம்போதரங்க வொருபோகு.

இவ்வுறுப்புக்களின் அளவு வேறு வேறு கூறுராயினும் அவற்றுக்கு ஏற்றவா றறிந்துசெய்யப்படும். இது நாற்பத்து நான்கடியான் வந்தது. ஒழிந்தனவும் இவ்வாறே வரும். இவையெல்லாம் இக்காலத்து வீழ்ந்தனபோலும். மற்றுக் கொச்சகவொருபோகினை முற்கூறி அதற்கு அளவை பிற்கூறினான், இதற்காயின் அளவை முற்கூறியதென்னையெனின், அங்ஙனம் அளவைபெற்ற அம்போதரங்க வொருபோகின் அளவை இனிக் கூறுது சின்றகலிப்பா மூன்றற்கும் அளவென்ப தறிவித்தற்கென்பது. அஃதேல் இதனையும் அம்போதரங்கத்திற்களவென வரைந்தோதிய தென்னையெனின், அது தலையிடை கடையென மூன்றளவுபெறு மென்றற்கென்பது. இவ்வதிகாரத்தான் வருகின்றவற்றோடு இதற்கு வேற்றுமையிலக்கணம் ஒப்பன அறிந்துகொள்க. வருகின்ற கலிவெண்பாட்டிற்கு 'வெள்ளடியியலாற் றிரிபின்றி வரும்' (தொல்-செய்-153) என்றமையின் அதற்கு இவ்வளவை ஒவ்வாதென்பது. (கசுஉ)

465. ஒருபொரு ணுதலிய வெள்ளடி யியலாற்
றிரிபின்றி வருவது கலிவெண் பாட்டே.

இது, சிறுத்தமுறையானே கலிவெண்பாவாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: ஒருபொருளைக்கருதி மற்றொரு பொருள்படவுஞ் சொற்றொடர்ந்துகிடப்பத் தொடுக்கப்பட்ட வெள்ளையடியால் திரிபின்றி வருவது கலிவெண்பாட்டாம், என்றவாறு.*

---

* "ஈற்றடி யளவும் ஒரு பொருளைக்குறித்து வெள்ளடியியலாற் றிரிபின்றி முடிவது கலிவெண்பாட்டாம், என்றவாறு" என்பது இளம்பூரணர் உரை.

இயலென்றதனுன் வெண்பாவிலக்கணஞ் சிதையாதவற்றுக்கே ஒருபொருள் நுதலவேண்டுமெதெனவும் அவ்வாறன்றித் திரிந்துவரு வனவெல்லாம் ஒருபொருள் நுதலாவென்னுங் கலிவெண்பாவா மெனவுங் கூறியவாறு. வெண்பாவிலக்கணமென்பது கட்டளையாகி வருதலுந் தளைவகையொன்றிவருதலும் பன்னிரண்டடியும் இகந்து வாராமையுமென இவையென்பது மேற்கூறினும். அவ்வாறன்றித் திரிந்துவருங்கால் வாளாதே அசையுஞ் சீரு மிசையொடு சேராதன பாவகை சிதைந்து கலித்தளையோசை எனப்படும். அற்றன்றியுந் தனக்கோதிய சீருந் தளையுஞ் சிதைந்தவழியும பன்னிரண்டடியின் இகந்தவழியுங் கலிவெண்பாவாதற்கு வரைந்துகூறல் வேண்டுவதன் றென்பதூஉம் அவை ஒருபொருள் நுதலாதுவரினுங் கலிவெண் பாட்டாமெனவுங் கூறினும. என்னை ? ஒருபொருள் நுதலிய தினைத் திரிபின்றிமுடிந்த கலிவெணபாட்டெனவே ஒருபொருணுதலி யும் நுதலாதும ஈண்டுக் கூறிய வேறுபாட்டான்வருவனவெல்லாந் திரிபின்றி முடியாதாகலின் வெண்பாட்டெனபது கொள்ளவைத்த மையினென்பது. இனனுந திரிபினறி முடியுமென்றதனுனே ஒரு பொருட்டின்றிப் பலவுறுபபுடைததாகித திரிபுடையதூஉங் கலி வெண்பாட்டுளதென்று கொள்ளவைத்தாணும். அது முன்னர்ச் சொல்லுதும்.

உதாரணம:

“ அரும்பொருள் வேட்கையி னுள்ளந் துரப்ப
* * * சென்ற விளமை தரற்கு” (கலி-18.)

என்பது பன்னிரண்டடியான் வந்து பலபொருணுதலி அமைதலிற் கலிவெண்பாட்டாயிற்று. ஒருபொருள் நுதலியவெனவே சொல்லப் படும் பொருளின் வேறுகிக் கருதியுணரப்படும் பொருளுடையதென் பதூஉம் பெற்றும். என்னை ? இப்பாட்டினுட் பெண்டன்மைக் கேலாத நுண்பொருளினைத் தலைமகனெதிர்நின்று உணர்த்துவாள் செவ்வனஞ் சொல்லாது தலைமகன் பண்டு கூறியன சிலவற்றை வாங் கிக்கொண்டு சொல்லி அவன்மறைத்தானென்பது உணர்த்துகின்ற

பொருண்மை கருதி உணரவைத்தமையின் அவ்வாறாயிற்று. ஒழிந்த பாக்களும் அவ்வாறு ஒருபொருணுதலுமாயினும் அங்ஙனம் நுதலிய பொருள்பற்றிச் செய்யுள் வேறுபடாமையின் ஆண்டாராய்ச்சியின் றென்பது. வெண்பாவிற் குறித்தபொருளினை மறைத்துச்சொல்லாது செப்பிக்கூறல்வேண்டுமாகலானும் இஃது அன்னதன்றி ஒருபொரு ணுதலித் துள்ளினமையானுங் கலிவெண்பாட்டெனப்பட்டதென்பது.

"மரையா மரல்கவர மாரி வறப்ப" (கலி-6.)

என்பது பதின்மூரடியான் ஒருபொருணுதலிவந்த கலிவெண்பாட்டு. நூற்றைம்பது கலியுள்ளுங் கலிவெண்பாட்டு எட்டாகலின் அவற்றுள் ஒருபொரு ணுதலிவருவன பிறவும் உள. அவை வல்லார்வாய்க் கேட்டுணர்க.

இனிப், பன்னிரண்டடியின் இகந்து ஒருபொருணுதலாது வரு மாறு:

"தீம்பால் கறந்த கலமாற்றிக் கன்றெல்லாந்
தாம்பிற் பிணித்து மனைநீஇ
* * * நோயுங் களைகுவை மன்" (கலி-111.)

என வரும். பிறவும் அன்ன.

இனிப், பாவகை சிதைந்தனவுந் தளைவகை சிதைந்தனவும் வந்தவழிக் கண்டுகொள்க. இவையெல்லாங் காமப்பொருண் மேன வாம். எனவே, கட்டளைவகையானுந் தளைவகையொன்றியும் வரும் வெண்பாவாயிற் காமத்திற்கே உரியவெனப்படாவாயின. பிறவும் அன்ன. இனி, அம்போதரங்கவொருபோகிற்கு இடையின்றிக் கலி வெண்பாட்டு வைத்தமையான் "வானூர்மதியம்" போலும் ஒரு சார்த் தேவபாணியுங் கலிவெண்பாட்டேயாம் ஒருபொருணுதலிவரி னென்பது. இதனுள் "ஆட்சியனுகவென்கோ" என்பது வியங் கோளாயினும் அரசன் வாழ்க்கையும் அரங்கிற்கும் ஆடற்கும் இடை யூறின்மையுஞ் சொல்லுவாயாகவென்று தெய்வத்தினை வினை் வாய்ப் புள்வேண்டி னின்றமையின் அது குறித்துணரப்பட்டு ஒருபொருணுத

லியதாயிற்று. கந்தருவ மார்க்கத்து வரியுஞ் சிற்றிசையும் பேரிசையும் முதலாயினபோலச் செந்துறைப்பகுதிக்கே உரியவாகி வருவனவும் கூத்தநூலுள் வெண்டுறையும் அராகத்திற்கேயுரியவாகி வருவனவும் ஈண்டுக்கூறிய செய்யுள்போல வேறுபாடப்பெறும் வழக்கின என்பது கருத்து. இக்கருத்தானே அவற்றை இப்பொழுதும் இசைப்பாவென வேறுபெயர்கொடுத்து வழங்குப. இனி, யாப்பிலக்கணத்திற் கொப்பவே இசைநூலுட் சொல்லப்பட்ட செய்யுளும் உள. என்னை?

"வெண்பா வியலான் விரவுறுப் பின்றித்
தன்பா வகையொடு பொருந்திய பொருளே
வினைவிளங் திற்ற விறுதித் தாகும்"

என்றவழி விரவுறுப்பின்றியென வேண்டாகூறி விரவுறுப்புடையது பொருளொன்று விளையாதென விரவுறுப்பில்லது பொருளொன்று விளங்கிற்ற இறுதித்தாகுமெனவுங் கூறினமையின். எனவே, ஈண்டு ஒரு பொருணுதலி வருமெனப்பட்ட கலிவெண்பாட்டுப் பொருள் வெளிப்படாதெனவும் விரவுறுப்புடையது வெண்பாவியலான் வெளிப்படத்தோன்றும் பொருட்டெனவும் நேர்ந்தானும். அது நோக்கியன்றே வருகின்ற சூத்திரத்து வெண்பாவியலான் வெளிப்படத்தோன்றுமெனக் கலிவெண்பாட்டினையே கருதி ஓதுவானுயிற்றுமென்பது. (கசுரு)

466. தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்து
ஐஞ்சீ ரடுக்கியு மாறுமெய் பெற்றும்
வெண்பா வியலான் வெளிப்படத்தோன்றும்.

இது, மேல் வெளிப்படுபொருட்டெனப்பட்ட வெண்கலி விரவுறுப்புடைமையின் அதனை வேறு கூறுகின்றது.

இதன்பொருள்: தரவும்போக்கும் பாட்டிடை மிடைந்தும்—தரவிற்கும் போக்கிற்கும் இடையின்றிப் பாட்டாகிப் பயின்றுவருதலும்; எனவே, தரவும் போக்கும் முன்னர் ஓதியவகையானே முன்னும் பின்னும் நிற்குமென்பதூஉஞ் சரிதகமாயின் வெள்ளையும் அக

வலுமாய்ப் பாவோடு வந்தழிப்போலத் தனிச்சொற்பெற்றும் பெரு தும் வருமென்பதூஉங் கொள்க. தரவும் போக்குமெனப் பாட்டிறுதி நின்ற போக்கினை முன்வைத்தான் அவை ஓரினத்தவாகலின். என்னை? தரவிறுதி, சீரான் இறுமாறுபோல வெள்ளைச்சுரிதகவிறுதி யும் ஒரோவழிச் சீரானே இறுதலின். அது,

"தாதுசேர் வண்டின் றகைபெறத் தகைஇய
* * * †தோகை வரிபாடக் காண்கும்" (கலி-80.)

என நான்கசையானுமின்றித் தேமாவாயிற்றது. இனிப் பாட்டினைப் போக்கின்பின் வைத்ததனாற் போக்குப்போல நாற்சீரான் இறுவன வும் அப்பாட்டுள் அமையுமென்பது. அது,

"கரந்தாங்கே யின்னாநோய் செய்யுமற் றிஃதோ
பரந்த சுணங்கிற் பணைத்தோளாள் பண்பு." (கலி-141.)

என்றாற்போல வரும். இங்ஙனம் வைப்பவே வருகின்ற ஐஞ்சீரடுக்க லும் ஆறுமெய்பெறுதலும அவறறுக்கனறி ஏலாவாயின. அல்லதூஉம் இதனை இறுதிவைத்தான இதனொடொக்குமென முற்கூறப்படுங் கொச்சகத்தரவும் போக்குமின்றிப பாட்டு மிடைநதே வருமென்பது இவ்வதிகாரததாற் கோடறகெனபது. அது முனனாக் காட்டுதும்.

ஐஞ்சீரடுக்கியும்—வேறுவினறதொரு சீரினை அளவடியுடன் அடுக்கிசசொல்ல ஐஞ்சீராகியும்; ஆறுமெய்பெற்றும்—அவ்வாறே இருசீரடுக்க ஆறுசீர்பெற்றும்; மெய்யென்றதனான் அடுக்குஞ்சீர் முத லும் இறுதியும் வருமென்பது கொள்க: வெண்பா இயலான் வெளிப் படத்தோன்றும—வெண்பாவென்னும உறுப்பினியற்கை சிதையா மற் பொருள்புலப்படத் தோன்றும, என்றவாறு.

இயற்கை சிதையாமல் தோன்றுமெனவே கட்டளையல்லதும் எனப்பட்ட வெண்பாவிலக்கணம் இரண்டுஞ் சிதையாமை வருமென் றாளும், தரவும் போக்குமெனநின்ற உம்மை எண்ணும்மை. பாட் டிடைமிடைந்தென்பது முதலாக வந்த உம்மை மூன்றும் இறந்தது

† 'கோதை பரிபாட' என்பதும் பாடம்.

தழீஇய எச்சவும்மை. என்னை? மேற்கூறிய தனிநிலைவெண்பாட்டே யன்றித் தரவுறுப்பாகவும் என்றமையின். இவ்வாறன்றி அவ்வினைத் தும் எண்ணும்மைகொள்ளின் உறுப்பினையே எண்ணல்வேண்டும். அல்லாக்கால் வினையோடு பெயரெண்ணின் அதன் உறுப்பினையே எண்ணினானாகலானென்பது. அல்லதூஉந் தரவும் போக்கும் முதல் வந்தும் இறுதிவந்துமென அவையும் தம்வினையான் எண்ணவும்படு மன்றோவென மறுக்க. அவற்றுக்குச் செய்யுள் கூறுங்கால் தரவும் போக்கும் பாட்டிடைமிடைந்துதோன்றும். அதுவே ஐஞ்சீரடிக்குப் பெற்றதென்றும் அறுசீரடிக்குப் பெற்றதென்றும் அவையிரண்டும் உடன்பெற்றுத் தோன்றுவதென்றும் இங்ஙனம் விகற்பித்துக் கூறப் படுமென்பது. அவை கட்டளைவெண்பாவான் வருதலும் ஒழிந்த வெண்பாவான் வருதலுமென விகற்பிக்கப்படாவோவெனின், அவ் விகற்பம் அடிக்கல்லது பாவிற்கின்மையானும் ஈண்டுப் பா வேறுபடா மையானும் அங்ஙனம் பகுத்ததனாற் பயனதென்னையெனமறுக்க. வரலாறு:

"சான்றவிர் வாழியோ சான்றவி ரென்றும்
பிறர்நோயுந் தந்நோய்போற் போற்றி யறனறிதல்
*** என்-றுடர்நிலை திரத்த லுந்தலைக்கடனே" (கலி-139.)

என்பது தரவும் போக்கும் பாட்டிடைமிடைந்த கலிவெண்பாட்டு ஆசிரியச்சுரிதகத்தான் வந்தது.

இனி வெள்ளைச்சுரிதகத்தான் வந்தனவும் கண்டுகொள்க.

"கண்டவி ரெல்லாங் கதுமென வந்தாங்கே
பண்டறியா தீர்போல நோக்குவிர் * * *
அருளுறச் செயினுமக் கறனுமா ரதுவே" (கலி-140,)

என்பது தரவும் போக்கும் பாட்டிடைமிடைந்த கலிவெண்பாட்டு ஆசிரியச்சுரிதகத்தாலிற்றதாகலின், இதனுள்

"என்னானும் பாடெனிற் பாடவும் வல்லேன் சிறிதாங்கே'

என்னும் அடி ஐஞ்சீரடிக்கினுள்வந்தது. என்னை?

"பாடெனிற்பாடவும் வல்லேன் சிறிதாங்கே
யாடெனி லாடலு மாற்றுகேன் பாடுகோ"

என்னும் அளவடியிரண்டும் எதுகையாய் அமைந்தவழி என்றுனு மென வேறு நின்ற சீரொடுங்கூடி ஐஞ்சீரடுக்கினமையின். இதனுள் ஆங்கவெனத் தனிசசொல்வந்தது. "காரார்ப் பெய்த" (கலி-109) என்னும் முல்லைப்பாட்டு ஐஞ்சீரடுக்கி வெள்ளைச்சுரிதகத்தானிற்றது.

"அரிதினிற் றோன்றிய யாக்கை * * *
பொருந்தாதார் போர்வேல் வழுதிக் கருந்திறை
போலக் கொடுத்தார் தமர்" (கலி-141.)

என்பதனுள் "வாழிசான்றீர்" "அம்ம சான்றீர்" என ஐஞ்சீரடுக்கி யாங்கு அடுக்கிச் சொல்ல அறுசீராயின. இதற்கும் ஐஞ்சீர் அடுக்கியு மென்றதுபோல அறுசீரடுக்கியுமென்று அடுக்குதற்குத் தொழில் கொள்ளப்படும், ஈண்டு இரண்டளவடி தொடைப்படச் செய்தமையி னென்க. இதனுள்ளும் 'என்றாங்கே' என்பது தனிச்சொல்.

"புரிவுண்ட புணர்ச்சியுட் புல்லாரா மாத்திரை
யருகுவித் தொருவனை யகற்றலிற் றெரிவார்கட்
செயனின்ற பண்ணினுட் செவிசுவை கொள்ளாது"
(கலி-142.)

என்பதனுள் "இனைநபுநொந் தழுதன ணினைந்துநீ டுயிர்த்தனள்" என இயற்சீர் நிரையொன்றியும் பாவேறுபடாமையின் அது கலிவெண் பாட்டாயிற்றென்பது கொள்க.

இங்ஙனம் பாவேறுபடாமையினன்றே,

"உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறாஅய் வாழியென் னெஞ்சு" (குறள்-120-10.)

என்பதனை வெண்பா என்பாமாயிற்றென்பது.* இனி,

* 'செறாஅய் வாழி' என இயற்சீர் நேரொன்றியும் பாவேறுபடா மையின் வெண்பாவெனக் கொண்டார். 'செறாஅஅய்' என்பதுமுன். அச்சுப்பிரதிப்பாடம். இது பேராசிரியர்கொண்ட பாடமல்லவென் பது 289 ஆம் பக்கத்துக் கீழ்க்குறிப்பிற் காட்டப்பெற்றது.

"எல்லிரா வொல்கிய கேள்வ னிவன்மன்ற மெல்ல"
(கலி-142.)

என வெள்ளைச்சுரிதகத்துள் ஐஞ்சீரடியும் வந்தது. வெண்பாவிற்கு முன்னர், 'வெண்டளை விரவியு மாசிரியம் விரவியு மைஞ்சீரடியு முள' (தொல்-செய்-63) என்றுணகலின். மேற் கூறெனவுஞ் சொற்சீரெனவும் கூறப்பட்டனவே ஈண்டு ஐஞ்சீரடிக்கியும் ஆறுமெய்பெற்றுங் கூறுபட்டன எனவுணர்க. இதற்கு ஐஞ்சீரும் அறுசீரும் விதந்தோதவே, மேற் சிறுபானமை பொதுவகையாற் கலிக்கு நேரப்பட்ட சொற்சீரடி ஒத்தாழிசைக்கும் முற்கூறிய கலிவெண்பாட்டிற்குமாயின் எஞ்ஞான்றும் வாராதெனபதூஉம் அதுதானும் இதற்கு வருங்கால் இருசீரின் இகந்துவாராதென்பதூஉங் கூறினனும். இங்ஙனஞ் சொற்சீரடி விலக்கவே அதற்கினமாகிய முடுகியலும் ஒத்தாழிசைக்கு வாராதென்பதாம். அது வெண்கலிக்கோவெனின் வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றுமெனவே விலக்குண்டதனறேவென்க. இனித் தரவிற்கும் போக்கிற்கும் பாடிற்கும இவ்வளவைத்தென்பது அம்போதரங்கத்திற்கு ஓதிய வகையாற் கோடுமெனறமையின் அதற்கேற்ற வகையான் வருவதனறி வேறு வேறு வரையறையிலவென்க. பாட்டிடைமிடையின் எனறமையின ஈண்டுப் பாட்டென்றது கொச்சகத்திற்கேயுரித்தெனபது. மற்று,

"வெண்டளை தன்றளை யிறறளை விரவியும்
வெண்பா வுடையது வெணகலி யாகும்".

எனத் தளைவிரவியும் வெண்பாச சிதையாதவழிக் கலிவெண்பாட்டாமென்று *ஓர் உத்தரஞ் செயயாரே பலவுறுப்பு வந்தவழியும் இது புறனடையாகவெனின், அற்றன்று; வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றுமெனவே இவையெல்லாம் அடங்குதலின் அது வேறு கூறுனென்பது. இனிப் பலவுறுப்பின்றி அவ்வாறு ஒருபாட்டே வரின் அதனை வெண்கலியென்பாரும் உளர். நூற்றைம்பது கலியுள்ளும்

---

* ஏடுகளிலும் இவ்வாறே பாடமுள்ளது. ஆயினும் 'சூத்திரஞ் செய்யாரே' என்றிருத்தல் வேண்டுமெனத் தோற்றுகிறது.

அன்னதோர் கலிவெண்பாட்டின்மையின் அது சான்றோர்செய்யுளோடு மாறுகோளாமென மறுக்க. மற்றுப் பாட்டிடைமிடைந்தென்றவழிப் பாட்டெனப்பட்டது இடைநிலைப்பாட்டென்றுமோ கொச்சகமென் றுமோவெனின், எஞ்ஞான்றுந் தாழம்பட வாராமையின் இடைநிலைப் பாட்டென்னும். துள்ளலுஞ் செப்பலுமென்னும் இருவகைக் கொச் சகமும் ஒருங்குவாராமையிற் கொச்சகமென்னும். கொச்சகமென் னும் பொதுப்பெயரான் அது கூறுராயினும் வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றுமென்றதனுன் வெள்ளைக்கொச்சகமெனப்படும் அவையென்பது. அஃதேற் கொச்சகமென்று ஓதுகவெனின் அங் ஙனம் ஓதின் இது கொச்சகக்கலியாமெனறு கருதினுங் கருதற்கவென் பான் வாளாதே பாட்டென்றுன். இதனாலும் பெற்றும் இது கொச் சகக்கலியல்லாமை. (கநிச)

## 467. பாநிலை வகையே கொச்சகக் கலியென நூனவில் புலவர் நுவன்றறைந் தனரே.

இது, சிறுத்தமுறையானே அகநிலைக்கொச்சகக் கலியுணர்த்து கின்றது. பாநிலைவகையென்பது உம்மைத்தொகை, பாநிலையும் வகையு மென விரியும். பாநிலையென்பது ஆறும்வேற்றுமைத்தொகை.

இதன் பொருள் : மேற்பாவினின்ற வகையானே கொச்சகக் கலியாமென்று *நூலாசிரியர் கூறித் †துணித்தனர், என்றவாறு.

அறைதலெனினுந் ‡துணித்தலெனினும் ஒக்கும். என்னை ? துணித்த கரும்பினை அறைக்கரும்பென்பவாகலின். பாநிலையென்றது யாதனை நோக்கியெனின் இது கொச்சகமாதலான் அதுவும் மேலே ஒருபோகெனக் கூறப்பட்ட கொச்சகப்பாநிலை யெனக்கொள்க.

---

* 'இலக்கணமறிந்த புலவர் கூறினுர் எனப் பொருளுரைத்தார் இளம்பூரணர். நச்சினார்க்கினியர் 'நூலறிந்த ஆசிரியர் கூறித்துணித் தார்' என்றார்.

† 'துணிந்தனர்' என்பது முன் அச்சுபபிரதிப்பாடம். ‡ 'துணி தல்' என்பது முன் அச்சுப்பிரதிபபாடம். இவ்விரண்டு பாடமும் பொருந்தாமை கண்டுகொள்க.

அதனைத் †துணித்தனரென்றதனால் 'தரவின்றாகித் தாழிசைபெற்று' (தொல்-செய்-149) வருமென்ற கொச்சகத்தினை இதற்கு இயை பின்றாக முன்வைத்தமையான் அஃதொன்றனையுந் துணித்து மாற்றி அல்லாத கொச்சகப்பாவினின்ற வகையான் இவ்வகனிலைப்பாட்டுப் போல அகனிலைக்கொச்சகம் வாராவென்றானும். வகையென்றதனான் அதிகாரத்தானின்ற வெண்கலிப்பாவினது பானிலையுங் கொள்ளப்படும். அஃதேல் அதனைப் பானிலையென்னாது வகையென்ப தெற்றுக்கெனின் வெண்கலிப்பாத்,

'தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்து
*  *  *  *
வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றும்'
(தொல்-செய்-154.)

என்றதனான் வெண்பாவிற் சிதையாது வருமென்று உறுத்துக் கூறினு னென்பது. எனவே, பாவொழிந்த உறுப்பெல்லாம் பொருளுைத லாது வெளிப்படத்தோன்றுங் கலிவெண்பாட்டின் உறுப்புவகை யான் வருதலும் உடைத்தென்றவாறு. அங்ஙனம் வருங்கால் இடை நின்ற கொச்சகங்களை 'ஐஞ்சீ ரடுக்கலும்' (தொல்-செய் - 155) என்ற கலிவெண்பாவிற்கு ஓதியவாறே கொள்க. மற்று நூலறிபுலவ ரென வேண்டியதென்னையெனின், தரவு இணைந்து வாராது யாப்பின் வேறுபட்டு ஒருதரவே கொச்சகமாதலுந், தரவிணைந்தவழிச் சுரித கம்பெறுதலும், அவை தனிச்சொல்லுஞ் சுரிதகமும் உடன் பெறுதலுமெல்லாம், யாப்பின் வேறுபட்டனவென்றலும், ஒத்தாழிசை மூன்றடுக்கினும் இவற்றின் வேறுபாடறிந்து கொச்சகமெனக்கோட லுந், தேவபாணியாகாதவழிக் காமப்பொருளே பற்றி வாராது, அறம் பொருளின்பம்வீடென்னும் நான்கும் பற்றிப் பொருள்வேறுபடவருத லும் பாவேறுபடவருதலும் பற்றிக், கொச்சகக்கலியென்று உணர் வோர் நூலறிபுலவரெனவும் *அல்லாதது புலனாகாதெனவும் எல்லாம்

* "அல்லாதார் நூலுணரார் என்பதறி வித்தற்கு 'நூனவில் புலவர்' என்றார்" என்பது நச்சினார்க்கினியர் உரை.

அறிவித்தற்கு நூலறிபுலவர் நுவன்றனறந்தனர் என்றானென்பது. எனவே, கொச்சகக்கலியுள் ஒருசாரனவற்றை இனமென்று வேண்டுவ ராயின் அவை அவ்வப்பாவின் இனங்கட்கு இவ்வகையே கொச்சக மென வேறுபடுமென்றவாறாயிற்று.

உதாரணம்:

"செவ்விய *தீவிய சொல்லி யவற்றொடு * * *
மகனல்லை மன்ற வினி" (கலி-19.)

எனவும்,

"செல்லினிச் சென்றுநீ * * *
அவலம் படுதலு முண்டு" (கலி-19.)

எனவுந் தரவினை அடுக்குதலின் தரவிணைக் கொச்சகமே யெனப்படும். இது நூற்றைம்பது கலியுளொன்றாகலின் வெண்பாவாகியுந் தனித்து வரும். வருங்காற் கலிவெண்பாட்டென்றாயிற்று. ஒருபொருணுதலி இவ்வாறு வரினும் இஃதொக்கும். இது தாழிசையோடுகோடாத் தரவாகலின் வெண்பாவாகியும் வந்தன.

"மாமலர் முண்டகந் தில்லையோ டொருங்குடன்" (கலி-133.)

என்பது தனிச்சொல் இன்றி ஆசிரியச்சுரிதகம்பெற்ற தரவிணைக் கொச்சகம்.

"மின்னொளி ரவிரற விடைபோழும் பெயலேபோல்"
(கலி-55.)

இது தனிச்சொல்லும் ஆசிரியச்சுரிதகமும் பெற்ற தரவிணைக் கொச்சகம். இனிப் பல அடுக்கிய பொருட்டொடராய்வருந் தரவுகொச் சகமும் பொருட்டொடர்நிலையுள் அறம்பொருளின்பம் விராய்வருந் தரவு கொச்சகங்களும் வந்தவழிக் கண்டுகொள்க.

"வெல்புகழ் †மன்னவன் விளங்கிய வொழுக்கத்தான்" (கலி-118)
இது தரவுந் தாழிசையும் போக்கும் முறையானே வந்ததாயினும்,

* 'திவ்விய' என்பதும் பாடம்.
† 'மீனவன்' என்பதும் பாடம்.

'அடைநிலைக் கிளவி தாழிசைப் பின்னர்
நடைநவின் றொழுகு மாங்கென் கிளவி' (தொல்-செய்-135)

என்னும் இலக்கணஞ் சிதையாத தரவிறுதியினுந் தாழிசையிறுதிக டோறுஞ் சொற்சீர் பலவருதலான ஒத்தாழிசையெனப்படாது அதன் வகைத்தாய் எண்ணிடையிட்டுச் சின்னங்குன்றியதென்பதூஉமாயிற்று.

" அருடீர்ந்த காட்சியா னறநோக்கா *னயஞ்செய்யான் "
(கலி-120.)

எனவும்,

" நயனும் வாய்மையு நன்னா நடுவும்" (கலி-130.)

எனவும் அடக்கியலின்றி அடிநிமிர்ந்தொழுகியதுபோலுங் கொச்சகம் வருங்கால் ஒத்தாழிசையும் வண்ணகமும்போலத் தனிச்சொற் பெற் றும் பெறாதும் வரும். நெய்தற்றிணைப் பாட்டுக்கும் இஃதொக்கும். அது வருமாறு:

" கொடியவுங் கோட்டவு நீரின்றி நிறம்பெறப்
பொடியழற் புறந்தந்த பூவாப்பூம் பொலங்கோதை" (கலி-54).

என்னுங் கலியுள் அதனானெனத் தனிச்சொற் பெற்று அடக்கியலில் லாச் சுரிதகத்தோடு அடிநிமிர்ந்தோடிற்று.

" பான்மருண் மருப்பி னுரல்புரை பாவடி" (கலி-21.)

என்னுங் கலிப்பாட்டுத் தனிச்சொல்லும் அடக்கியலுமின்றி அடி நிமிர்ந்தொழுகிற்று.

" எஃகிடை தொட்டகாக் கவின்பெற்ற வைம்பால்போல்" (கலி-32) என்னும் பாலைப்பாட்டும் " அகன்ஞாலம் விளக்குந்தன் பல் கதிர் வாடாக" (கலி-119) என்னும் நெய்தற்றிணைபபாட்டும் அங்ஙன மாமாறு கண்டுகொள்க.

இனி யாப்பின் வேறுபட்ட கொச்சகவொருபோகோடொப்பன வற்றுட் சிலவருமாறு:

* 'பயஞ் செய்யான்' என்பதும் பாடம்.

"மன்று பார்த்து
நின்று தாயைக்
கன்று பார்க்கு
மின்றும் வாரா"

என்பது இருசீர் நான்கடிக் கொச்சகத்தரவு.

"தஞ்சொல் வாய்மை தேற்றி
யஞ்ச லோம்பென் றளித்த
வஞ்சமற் றவர்வாரா ராயி
னெஞ்ச நில்லாதே தானே."

என்பது முச்சீர் நான்கடித் தரவுகொச்சகம்.

"நீயலர் தூற்றத் துயிலா நெடுங்கங்குல்
வாரல ராகி யவரோ வலித்தனைநதா
ராரலார் நாரைகா ளன்றில்கா ளன்னங்கா
ளூரலர் தூற்றபா னுள்ள முகுவேனே"

என்பது நாற்சீரடித் தரவுகொச்சகம்.

"கன்னிநீர் ஞாழற் கமழ்பூங் கானல் யான்கண்ட
பொன்னங் கொடியை யின்றோ னில்லை போலுமான்
மன்னன் காக்கு மண்மேற் கூற்றம் வரவஞ்சி
யின்ன தொன்று படைத்த தாயி னெவன்செய்கோ"

இஃது ஐஞ்சீர்நான்கடித் தரவுகொச்சகம்.

இனிக் கோவையாக்கி எழுத்தெண்ணி அளவிற்படுத்துச் செய்யினும் அவையேயாம்.*

* நச்சினார்க்கினியர் "கோவையாக்கி யெழுத்தெண்ணி அளவிற்படுத்துச் செய்வனவும் தரவு கொச்சகமாம். 'திருவளர் தாமரை .........' (திருக்கோவை-1.) 'போதோ விசும்போ.........' திருக்கோவை-2.) இவை பதினேழும் பதினாறுமாய் வந்த தரவு கொச்சகம்" என்றார்.

"காண்பா *னவாவினுற் காதலன்றன் காதலிமுன் னடவாதிற்ப
நாண்பாலா ளாகுதலா †னன்னுதலுங் கேள்வன்பின் னடவாதிற்ப
வாண்பான்மை குன்ரு வடிவே லவன்றனக்கு மஞ்சொலாட்கும்
பாண்பால் வரிவண்டு பாடு மருஞ்சுரமும் பதிபோன்றன்றே."

என்பது அறுசீர் நாலடித்தரவுகொச்சகம். பிறவும் அன்ன.

"இலங்கொளி வெண்மருப்பி னிடைக்கரந் தூங்கவோ ரேந்தல் யானை
‡கலங்கஞ ரெய்திக் $ கைகுலையக் கலுழிநீர் கடைவாய்ச் சோரச்
சிலம்பொழி குன்றெனச் சின்றது செய்வ தெவன்கொ லன்னுய்"

இஃது அறுசீர் மூன்றடித் தரவுகொச்சகம்.

" தண்ணந் துறைவன் ருர்மேற் போன
வண்ண வண்டு வாரா தற்றே
வண்ண வண்டு வாரா தாயிற்
கண்ணீர் ¶நில்லாதே காண்"

என்பது நான்காசிரியவடியுள் இறுதியடி முச்சீரான் வந்து யாப்பு வேறுபட்டன.

"திணங்கொள் படுபுலா லுணங்கின்று புள்ளோப்ப றிலக்கீடாகக்
கணங்கொள் வண்டார்த் துலாங்கன்னி நறுஞாழல் கையினேந்தி
மணங்கமழ் பூங்கானன் மன்னிமற் றுண்டொ
ரணங்குறையு மென்ப தறியே னறிவனே லடையேன் மன்னே"
(சிலப்-கானல்-9),

என்பது இடையடி குறைந்துவந்தது. இஃது,

---

* 'காண்பான் வரவினுல்' என்பது முன் அச்சுப்பிரதிப் பாடம்.

† 'நன்னுதறன்' என்பதும் பாடம்.

‡ 'கலங்கருஞ் சிரெய்தி' என்பதும் பாடம்,

$ 'கதுவுடங் கவளங் கடைவாய்ச்சோர' என்பதும் பாடம்.

¶ 'நிலனே காண்' என்பதும் பாடம்.

'அறுசீ ரடியே யாசிரியத் தளையொடு
நெறிபெற்று வரூஉ நேரடி முன்னே' (தொல்-செய்-64.)

என்றோதப்பட்டதாயினும் பாமயங்கி வரும் பகுதிபற்றி வேறுகாட்டப் பட்டது.

"புன்னை நீழ னின்றூர் யார்கொ
லன்னை காணின் வாழாள் தோழி."

எனவும்,

"மல்ல லூர விவ்வி றேற்று
பல்பூங் கோதை யில"

எனவும் இவை இரண்டடியான் ஈற்றடி குறையாதுங் குறைந்தும் வந்தன. இன்னும் மேற்கூறிய கொச்சக வொருபோகின் பகுதியுள் ஒழிந்தனவும் இவ்வாற்றான் வருவனவெல்லாம் வந்தவழிக் கண்டு கொள்க.

இனி வகையென்றதனான் வெண்கலியுறுப்புநிலை ஒத்துப் பா வேறுபடுங் கொச்சகம் வருமாறு:

"ஒன்று, இரப்பான்போ லெளிவந்துஞ் சொல்லு முலகம்
புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன்." (கலி-47.)

என்பது தரவுகொச்சகமுஞ் சுரிதகமும் முறையானே வந்து ஆசிரியச் சுரிதகத்தான் இற்றது. இதனுள் ஒன்றெனவும் அவனெனவுஞ் சொற்சீருந் தனிச்சொல்லும் வந்தன. இப்பாட்டு மூன்றனுளொன்று ஓரடிமிக்கு மற்றைய நான்கடியாயே வருதலின் மூன்றும் ஒருபொருண் மேல்வரினும் நூலறிபுலவரான் ஒத்தாழிசையெனப்படாக் கொச்சக மாயிற்று. பிறவும் இன்னோரன்னவற்றாற் கலியோடு இதனிடை வேறுபாடுதெரிந்து உணரப்படும், அஃதறியாதார்க்கு ஒன்றுபோலக் காட்டினுமென்பது.

"வேனி லுழந்த வறிதுயங் கோய்களிறு" (கலி-7) என்னும்

பாட்டுத் தரவும் போக்கும் பாட்டிடைமிடைந்து ஐஞ்சீரடுக்கிவந்தது. இதனுள் தரவடி நான்கும் வெண்பாவாயினும் அச்செய்யுண் முழுதும் வெண்பாவன்மையிற் கொச்சகமாயிற்று. இனி அறுசீரான் வருவனவும் வந்தவழிக் கண்டுகொள்க.

"காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்" (கலி-39)

என்னுங் கொச்சகக்கலியுள்,

"ஏன லிதணத் தகிற்புகை யுண்டியங்கும்
வானூர் மதியம் வரைசேரி னவ்வரைத்
தேனி னிறாலென வேணி யிழைத்திருக்குங்
கானக நாடன் மகன்."

என இடைநின்ற கொச்சகம் ஏற்றடி குறைந்தது;

"புனவேங்கைத் தாதுறைக்கும் பொன்னறை முன்றி
னனவிற் புணர்ச்சி நடக்குமா மன்றோ
நனவிற் புணர்ச்சி நடக்கலு மாங்கே
கனவிற் புணர்ச்சி கடிதுமா மன்றோ"

எனக் கொச்சகம் ஈற்றடி குறையாது வந்தது. இவை இரண்டும் வெண்பா. இதனுள் ஒழிந்தபா மயங்கியவாறு கண்டுகொள்க. "கொடுமிட ஞெஞ்சிலான் ஞூர்போன் மராத்து" (கலி-36) என்னும் பாட்டினுள்,

"பாஅய்ப் பாஅய்ப் பசந்தன்று நுதல்
சாஅய்ச் சாஅய் நெகிழ்ந்தன தோள்"

என முட்டடியின்றிக் குறைவுசீர்த்தாகிய சொற்சீரடி வந்தது. "மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வெளவலின்" (கலி-104) என்னும் முல்லைப்பாட்டினுள்,

"இரிபெழு பதிர்பதிர் பிகந்துடன் பலர்நீங்க
வரிபரி பிறுபிறுபு குடர்சோரக் குத்தித்தன்

கோடழியக் கொண்டானை யாட்டித் திரிபுழக்கும்
வாடா வெகுளி யெழிலேறு கண்டை......"

எனவும்,

" தாளெழு துணிபிணி விசைதவிர் வின்றித் தலைச்சென்று"

எனவும் முடுகியலடி வந்தது.

இவற்றுளெல்லாஞ் சொற்சீரடி வந்தன. ஒழிந்த கொச்சகப் பகுதியும் இவ்வாறே வந்தவழிக் கண்டுகொள்க.

இனித் தரவும் போக்குமின்றிக் கொச்சகம் பல தொடர்ந்திற்றது வருமாறு :

" காலவை, சுடுபொன் வளைஇய வீரமை சுற்றுருடு" (கலி-85)

என்னும் மருதக்கலி உறழ்பொருட்டானமையிற் கொச்சகக்கலியாயிற்று. இவையெல்லாம் பாநிலையெனப்பட்ட கொச்சகமாமெனின், அற்றன்று ; அம்போதரங்கம் அறுபதிற்றடித்தென்றவழி அளவை முற்கூறிய மயக்கினன் இனியெல்லாந் தன்னளவெனப்படுமென்று புகுந்தமையின். இதற்குக் கொச்சகவொருபோகின் அளவை கொள்ளப்படாது, பாநிலைவகைத்தென்னுமையின். பிறவும் அன்ன.

இனிக்கலிவெண்பாட்டெனக் கூறிய உறழ்புடைக்கலிவெண்பாட்டும் ஈண்டுப் பாநிலையெனப்பட்ட கொச்சகப்பகுதியுமென இரண்டும் கொச்சகவுறழ்புடைமையிற் கொச்சகக்கலியென ஒன்றேயாமென மேலைச்சூத்திரத்தோடு இதனை ஒன்றாக வகுப்ப. அற்றன்று; மேல் ஒருபொருள் கரந்து வெளிப்படத் தோன்றின் ஒருபொரு ளுதலியது போலக் கலிவெண்பாட்டாகாமைக்கும் வாளாது கலிப்பாவாதற்கும் காரணமென்னை யெனின், பிறிதொருகூற்றாற் பொருள் கூறுவது கலிவெண்பாட்டென்றதற்கு இடையின்றியே 'வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றும்' (தொல்-செய்-154) கரந்த பொருட்டன்று இது; என்றமையின் இதுவும் வெண்கலியாம். அல்லதூஉம் 'வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றும்' என வேறொரு பாவினை உறழ்

யாகக் கூறுதன் மற்றொருபாவிற்கேதுவாகக் கூறுதலாமோவென மறுக்க. ஒருபொருணுதலிய வெண்பாட்டாயின் ஒத்தாழிசைக்கலி வெண்பாட்டென மற்றையவற்றோடொத்த யாப்புடையதுபோல உடனோதாளுகலின் இதுவும் அவ்வாறு யாப்புடைத்தாகல்வேண்டு மாகலானும் அஃதமையாதென்பது. இங்ஙனம் மயங்குவானை நோக்கி யன்றே நூனவின்றோர்க்கே இவ்வேறுபாடுணரலாவதென்று ஆசிரி யன் ஓதுவானுயிற்றென்பது. மற்று இதற்கு அளவைகொள்ளுமா றென்னை ? மேற் கொச்சகவொருபோகின் அளவு இன்னதென்றிலனு லெனின், அற்றன்று ; வண்ணகத்திற்கு ஓதிய உறுப்பு அமையவரா மையின் அது கொச்சகமேயாமெனவும எண்ணுஞ் சின்னமும் இழந் ததேபற்றி அதுவும் ஒருபோகேயாமெனவும் அடக்கியலின்றி அடி நிமிர்ந்தோடியது வெண்பாவும் ஆசிரியமுமாகி இறுதலின் அடக் கியலில்லாச் சுரிதகம்பெற்றுத் தரவுபோல வருமெனவும் இவ்வா றன்றி ஒபபழியவருமெனவும் மேறகூறினனன்றே ? அங்ஙனங் கூறவே அவ்வுறுப்புக்கள் அவ்வவவளவினவென்பதூஉம் அவற்றிற் சிறிய வேறுபட்டு வருமென்பதூஉம் அஙஙனம் வேறுபடுங்கால் அடிநிமிர்ந்தோடி யதன் இழிந்தவெல்லையின் ஒன்றிற்றென்பதூஉந் தெரிந்தாளும். என்னை ? அடிநிமிர்ந்தோடியதற்கு இழிந்த வெல்லைத்து அடியென்றமையின். இனி அடிநிமிர்ந்தோடியதொவ் வாமையின் அதற்களவை இத்துணையென்று 'ஒருபான் சிறுமை யிரட்டி யதனுயர்பு' (தொல்-செய-150) என விதந்தோதி னன். இங்ஙனம் பல்வேறு வகைப்பட்ட அளவின் வேறுபட்ட வற்றையும் யாப்பின்வேறுபட்டுவருமென்றுன. எனவே, ஈரடி யானே தாழிசைக்கொசசகம் வருமெனவும் அடிநிமிர்ந்தோடியதன் சிற்றெல்லையாகிய பத்தடியளவும் *பாவைப்பாடலும் அம்மானைப்பா டலும் போலுந் தரவுகொச்சகம் வருமெனவும் அமையும். இரண்டடி யின் இழியாவெனவும் எண்ணிடையிட்டுச் சின்னங்குன்றியது வேறு பட்டு ஏழடியும் ஐந்தடியுமாகித் தரவுவரினும் வருமெனவும் எட்டடிப் பாகமாகிய நான்கடியின் உயரா தாழிசையெனவும் எல்லாம் ஆண்டே கொள்ளப்படுமாகலின் அவற்றுக்கு அளவைகூறியதிலனென்று கடா வருவதென்னையென மறுக்க. அஃதேல், தாழிசைக்கொச்சகமாகிய

பாணிச்செய்யுளுந் தரவுகொச்சகமாகிய தொடர்நிலைச்செய்யுளும் முழுவதும் ஒன்றாக நோக்கியக்கால் உயர்ந்த எல்லை கூறாரோவெனின், அஃது அடிவரையறையின் ஓர்செய்யுளாக்கியே அளவைகூறி ஞர் அவை கொச்சகமாயினுந் தரவுகொச்சகமெனப் பெயர்பெறுதலா னென்பது. அஃதேல் அகநிலைக்கொச்சகத்திற்கும் அவையே அள வாம் பிறவெனின், அற்றன்று. அம்போதரங்கம் அறுபதிற்றடித் தென்றவழி அளவை முற்கூறிய மயக்கினுன் இனிக் கூறும் உறுப் புடைக் கலிப்பாவிற்கெல்லாம் அதனளவெனப்படுமென்று புகுந்தமை யின் இதற்குக் கொச்சகவொருபோகின் அளவை கொள்ளப்படாது. பாநிலைவகைத்தென்னுமையின் இவற்றைத் தொகைநிலையளவின் அடியுடையவென்பது 'தொகுநிலை யளவி னடியில' (தொல்-செய்-160) என்புழிச் சொல்லுதும். அஃதேற், பாநிலைவகையே கொச்ச கக்கலி'யென்றவழிக் கொசசகவொருபோகோடு ஒப்பது அளவொழித் தென்பதும் வரைந்தோதுகவெனின், இருவழியொப்பனவும் உளவாத லின் அநஙனங் கூறினுனென்பது. அவை இரண்டடிமுதலாகப் பத் தடியளவும் வருவன தரவுகொசசகக்கலியென மேற்காட்டிய செய்யு ளுட் காணப்படும். (கசுசு)

468. கூற்று மாற்றமு மிடையிடை மிடைந்தும்
போக்கின் றாக லுறழ்கலிக் கியல்பே.

இது, முறையானே உறழ்கலியுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: ஒருவர் ஒன்று கூறுதற்கு மறுமாற்றம் மற் றொருவர் கூறிச சென்று பின்னா ன்றது உறழ்கலி, என்றவாறு.*

போக்கின்றெனவே தரவுபெறுதலும் பாட்டிடைமிடைதலும் ஐஞ் சீரடுக்கலும் ஆறுமெய்பெறுதலும் ஒழிந்த சொற்சீரடிபெறுதலும் பாமயங்கிவருதலும் அம்போதரங்கத்திற்கோதிய அளவை பெறுதலுங்

* "ஒருவர் ஒன்று கூறுதற்கு மறுமாற்றம் மற்றொருவர் கூறிச் சென்று பின்னர் அவற்றை அடக்குவதோர் சுரிதகமின்றி முடிவது உறழ்கலியாம், என்றவாறு" என்பது நச்சினார்க்கினியர் உரை.

மெல்லாம் வெண்கலிப்பாட்டிற்குப்போல மேனின்ற அதிகாரத்தாற் பெறப்படுவதாயிற்று. போக்கின்றுதல் இயல்பெனவே இயல்பின்றி விகாரவகையாற் சில போக்குடையவுமாமென்றுணும். அதுவும் 'பல பொருட்கேற்பினல்லது கோடல்' என்பதனுன் வெள்ளைச்சுரிதகம் ஒழித்து ஆசிரியச்சுரிதகமே கொள்ளப்படும். என்னை? வெள்ளைக் கொச்சகம் பலவந்தவழி ஒன்றனைச் சுரிதகமெனலாகாமையானும் அச் சுரிதகம் இரண்டும் 'போக்கியல்வகையே வைப்பெனப்படும்' (தொல்-செய்-136) எனக் கூறப்பட்ட இலக்கணத்த அல்லவாயினும் 'எழுசீ ரிறுதி யாசிரியங் கலியென' (தொல்-செய்-76) என்றவழி அப்பாட்டு முடிந்து காட்டி நிற்றலானும் அதுவே கொண்டாஞ் சிறு பான்மையென்பது. மற்றுத் தரவின்றி வருவனவும் உளவாலெனின், இதற்குத் தரவுமுதலாயின உறுப்பு விதந்தோதியதிலனுகலின் அஃது ஆராய்ச்சியின்றென்பது. அற்றன்று. தரவும் போக்கும் உடன் கூறியதனுற் போக்கும் பாட்டிடைமிடைந்தும் என்னும் அதிகாரம் பற்றி ஈண்டுப் போக்கு விலக்கினமையின் அதுபொருந்தாது. மற் றென்னை கருதியதெனின், இதற்கு அதிகாரம்பட நிறீஇய கலிவெண் பாட்டு ஓதிய சூத்திரத்திற் பாட்டினை இடைகூறுது தரவும் போக்கும் உடன் கூறியதனுற் போக்கின் இலக்கணத்தனவும் பெறுமென்றுணும். அதனுனே ஈண்டு விலக்குண்ட போக்குப்போலச் சிறுபான்மை தர வின்றியும் வருமென்பது இக்கருத்தினுனன்றே இதனைப் பாநிலை யோடு கூறுது தரவுவகைப்படுங் கொசசகத்தின்பின்னர் வைப்பானு யிற்றென்பது. இனிப் போக்குடையன தரவின்றி வாரா, அவை ஓரினமென்று ஓதப்பட்டமையினென்பது. மற்று இதற்குப் போக் கின்மையும் இலக்கணமாகலின் அதுபற்றியும் பெயர்கொள்ளாமோ வெனின், போக்கின்மை சிறுபான்மை கொச்சகத்திற்கும் உரிமையின் அவ்வகையுரியதோர் இலக்கணம்பற்றிப் பெயர்கூறுனென்பது. மற் றிதனையுங் கொச்சகமென்றக்கால் இழுக்கென்னையெனின், நாடகச் செய்யுட்போல வேறுவேறு துணிபொருளவாகிப் பலதொடர்ந்தமை யிற் பெரிதும் வேறுபாடுடைமை நோக்கியும் இது பொருளதிகாரமாத லாற் பொருட்பாடுபற்றியும் வரலாற்றுமுறைமைபற்றியும் வேறு செய்யுளென்றுனென்பது. என்னை?

'மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை
மரபுவழிப் பட்ட சொல்லி னான' (தொல்-மர-90.)

எனவும் மரபியலுள் ஓதுகின்றமையினென்பது. அல்லாக்காற் கைக்கிளையுஞ் செவியறிவுறையும் வாயுறையும் புறநிலையுமென்னும் நான்கும் மருட்பாவும் ஒன்றேயாகிய செல்லுமன்றோவென மறுக்க.

அவற்றுக்குச் செய்யுள் ; "அரிநீ ரவிழ்நீல மல்லி யனிச்சம்" (கலி-91) என்னும் பாட்டினுள் தரவும் பாட்டும் உடைத்தாகிய பாட்டுத் தாம் ஐஞ்சீரடுக்கியும் ஆறுமெய்பெற்றும் வந்து போக்கின்றிநின்று முடிந்தது. என்றார்க்குக்,

"காணி னெகிழுமென் னெஞ்சாயி னென்னுற்றாய்
பேணுய்நீ பெட்பச செயல்" (கலி-91.)

என்பது வெள்ளைச்சுரிதகமாகாதோவெனின், ஆகாதன்றே? 'போக்கியல் வகையே வைப்பெனப் படுமே' (தொல்-செய்-136) என்ற இலக்கணத்தான் முற்கூறியவற்றையெல்லாந் தொகுத்து இதன்கண் வைத்தில்லாமையினென்பது. அல்லதூஉம், அவ்வாறு முடிதலேயன்றி இன்னும் ஓர்கொசசகம் பெய்து சொல்லி உறழ்ந்தவழியும் அஃதேற்பதாகலான் அஃது ஒருதலையாக அமைந்த தெனப்படாது. என்னை ?

" அன்னதே யாயினு மாகமற் றாயிழாய்
நின்னகை யுண்க முயங்குவாய் நின்னெஞ்ச
மென்னொடு நின்ற தெனின்."

என்றாற்போலப் பின்னுமொனறு தலைமகன் உரைத்தற்கு இடப்பட்டு நின்றமையின் இது போக்கியல்வகைத்தாகிய வைப்பெனப்படாதென்க. இனி அவ்வாறன்றி ஆசிரியசுரிதகம் வந்தவழி அக்கலிப் பாட்டு முடிந்துகாட்டுதலின் அதுவும் அடக்கியலன்றாயினும் அதனைச் சிறுபான்மை வேர்ந்தான் அது வழிநூலாகலின் முதனூல்பறறியென்பது.

"நலமிக நந்திய நயவரு தடமென்றோள்." (கலி-113),

என்னும் முல்லைக்கலி போக்கிலக்கணமில்லாத ஆசிரியச் சுரிதகம் பெற்று உறழ்கலியாயிற்று. "வாரி நெறிப்பட் டிரும்புறந் தாழ்ந்த" (கலி-114) என்னும் முல்லைப்பாட்டுஞ் "சுணங்கணி வனமுலைச் சுடர்கொண்ட" (கலி-60) என்னுங் குறிஞ்சிப்பாட்டும் அது.

> "ஒருஉநீ எங்கூந்தற் கொள்ளல்யா நின்னை
> வெரூஉதுங் காணுங் கடை;
> தெரியிழாய், * * * பரியானும்
> பாடில்கண் பாயல் கொள." (கலி-87.)

என்பது தரவும் போக்குமின்றி வந்த உறழ்கலி. இவற்று ஐஞ்சீரும் அறுசீரும் வந்தன. ஒழிந்த சொற்சீரடி வந்தன பிறவுங் கண்டு கொள்க. (கஉ)

## 469. ஆசிரியப் பாட்டி னளவிற் கெல்லை யாயிர மாகு மிழிபுமூன் றடியே.

இத்துணையும் பாவுறுப்புக் கூறி இனி அப்பாவினுள் உள்ளுறுப் பாகிய அடியளவை கூறுவானெழுந்தான் முறையானே ஆசிரியப்பா விற்கு அளவு கூறுகின்றுனென்பது.

இதன் பொருள்: ஆசிரியப்பாவின் பெருக்கத்திற்கெல்லை ஆயிரம் அடி, சுருக்கத்திற்கெல்லை மூன்று அடி என்றவாறு.

"நீலம்" (ஐங்குறு-கடவுள் வாழ்த்து) என்னும் ஆசிரியப்பா மூன்றடியால் வந்தது. *"மாயோன் மார்பி னாரம் போல" என்பது நான்கடியான் வந்தது. "வேரல் வேலி" (குறுந்-18) என்பது ஐந்தடியான் வந்தது. "தாமரை புரையும்" (குறுந்-கடவுள்வாழ்த்து) என்பது ஆறடியான் வந்தது. "மானிலஞ்சேவடியாக" (நற்றிணை-கடவுள் வாழ்த்து) என்பது ஏழடியான் வந்தது. பிறவும் அன்ன. ஆயிரம் அடியான் வருவனவும் உளவேற் கண்டுகொள்க. ஆசிரியப் பாட்டினெல்லையென்னாது அளவென்றதனான் அதனியற்றாகிய வஞ்

---

* இச்செய்யுளை 227 ஆம் பக்கத்திற் காண்க.

சிப்பாவிற்கும் இவ்வாறே கொள்ளப்படும். இனி வெண்பா நெறித்தாகிய கலியளவை அதனின் வேறுபடுதலின் அதற்கு வேறு விதந்து கூறுமென்பது. (கபிஅ)

470. நெடுவெண் பாட்டே முந்நா லடித்தே
குறுவெண் பாட்டி னளவெழு சீரே.

இது, முறையானே வெண்பாவின் அடியளவு கூறுகின்றது.

இதன் பொருள் : வெண்பாவிற்கு இரண்டும் பன்னிரண்டும் இழிபும் ஏற்றமுமாம், என்றவாறு.

மற்று இவற்றையும் 'ஆசிரியப் பாட்டி னளவிற் கெல்லை' (தொல்-செய்-158) என்றாற்போலக் கூறாது குறுவெண்பாட்டும் நெடுவெண்பாட்டுமெனப் பெயர்கொடுத்ததனாற் பயந்ததென்னை யெனின், குறுமையும் நெடுமையும் அளவியலோடு படுத்துக் கொள்ளப்படுதலின் அளவியல் வெண்பாட்டும் உளவென்பதற்கும் அதுவே சிறப்புடையதென்றற்கும் அங்ஙனங் கூறினனென்பது. இனி அவற்றைத் தத்தம் வகையாகச் சுருக்கப்பெருக்கம் உணருங்கால் உய்த்துக் கொண்டுணர்தலென்பதனான் உணரப்படும். என்னை? நெடுவெண் பாட்டிற்கு உயர்ந்த அளவை பன்னிரண்டடியெனவே, அதன் பாகமாய ஆறு, அளவியல் வெண்பாவிற்கு உயர்ந்த எல்லையெனவும் நெடுவெண்பாட்டிற்கு இழிந்தவெல்லை ஏழடியெனவும் அளவியல் வெண்பாவிற்கு இழிந்தவெல்லை நான்கடியெனவுங் கொள்ளவைத்தமையி னென்பது. இங்ஙனம் அளவியல்வெண்பாச் சிறப்புடைத்தாதனோக்கிப் பதினெண்கீழ்க்கணக்கினுள்ளும் முத்தொள்ளாயிரத்தும் ஆறடியினேறாமற் செய்யுள்செய்தார் பிறசான்றோருமெனக்கொள்க. இக்கருத்தினானே 'அம்மை தானே யடிசிமிர் பின்று' (தொல்-செய்-235) எனக்கூறிய நெடுவெண்பாட்டு நேர்ந்திலர் ஆசிரியர் அதற்கென்பது. அஃதேல் அவ்வளவியல் வெண்பாவுள்ளும் ஆறடியானும் ஐந்தடியானும்வருதல் சிறுபான்மையவாலெனின், அங்ஙனமே செப்பிக்கூறிய மரபிற்றாகிய வெண்பாவினைப் பரந்துபடக்கூறல்

இயல்பன்றாகலின் அவற்றுள்ளுஞ் சுருங்கிய நான்கடியே சிறந்த தென்று அதனையேபற்றிப் பெரும்பான்மையுஞ் செய்யுள்செய்தாராவ ரென்பது. அஃதேற் குறளடிவெண்பா அதனினுஞ் சிறந்ததாம் பிறவெனின், அற்றன்று; செப்பிக்கூறுங்கால் தெரியக்கூறல்வேண்டு மாகலின் அளவியல்வெண்பாவே பயின்றவென்பது. நெடுவெண் பாட்டுப்போலச் சிறப்பின்றாங் குறுவெண்பாட்டுமெனின், 'சிறப் புடைப் பொருளைப் பிற்படக் கிளத்தல்' என்பதனான் அவ்வி ரண்டினுள்ளும் அதனைப் பிற்கூறியது அச்சிறப்பு நோக்கியன்றே வென்பது. உதாரணம்:

"அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று" (குறள்-26-9.)

எனவும்,

"அறிந்தானை யேத்தி யறிவாங் கறிந்து
செறிந்தார்க்குச் செவ்வ னுரைப்பச் சிறந்தார்
செறிந்தமை யாராய்ந்து கொண்டு."

எனவும் இவை குறுவெண்பாட்டு.

"துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
வகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்கால் போல வரும். (நாலடி-1-2)

எனவும்,

"நாண்ஞாயி றுற்ற செருவிற்கு வீழ்ந்தவர்
வாண்மாய் குருதி களிறுழக்கத்-தாண்மாய்ந்து
முன்பக லெல்லாங் குழம்பாகிப்-பின்பகற்
*றுப்புத் துகளிற் கெழூஉம் புனனாடன்
றப்பியா ரட்ட களத்து" (களவழி-1)

எனவும்,

* 'துப்பிற் றுகளில்' என்பதும பாடம்.

"நானாற் றிசையும் பிணம்பிறங்க யானை
யடுக்குபு வேற்றிக் கிடந்த விடித்துரறி
யங்கண் விசும்பி னுருமெறிந் தெங்கும்
பெருமலைத் தூறெறிந் தற்றே *யெரிமணிப்பூ
ணேர்ந்தெழின் மார்பத் தியறிண்டேர்ச் செம்பியன்றெவ்
வேந்தரை யட்ட களத்து." (களவழி-6)

எனவும் இவை அளவியல்வெண்பாட்டு.

"பன்மாடக் கூடன் மதுரை நெடுந்தெருவின்"†

என்பதும் அது. நெடுவெண்பாட்டு வந்தவழிக் கண்டுகொள்க. (கஙிஅ)

## 471. ‡அங்கதப் பாட்டவற் றளவோ டொக்கும்.

அங்கதப் பாட்டிற்கும் வெண்பாவே உறுப்பாகலான் ஈண்டு வைத்தான். இதுவும் மேற்கூறிய இரண்டெல்லையும் பெறுமென்றவாறு.

"இருடீர் விளக்கத் திமிழிசையார் கோவே
குருடேயு மன்றுநின் குற்ற-மருடீர்ந்த
பாட்டு முரையும் பயிலா தனவிரண்
டோட்டைச செவியு முள."

* 'எரிமணிப் - பூணேந் தெழின்மார் பியறிண்டேர்ச் செம்பியன்' என்பதும் பாடம்.

† "பன்மாடக் கூடன மதுரை நெடுந்தெருவி
லென்னோடு நின்றா ரிருவ ரவருள்ளும்
பொன்னோடை நன்றென்றா ளல்லளே பொன்னோடைக்
கியானைநன றென்றாளு மந்நிலையள் யானை
யெருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன்
றிருத்தார்நன் றென்றேன் றியேன்"

இதனைப் பலவிகற்பத்தால் வந்த ஆறடிப் பஃறொடை வெண்பாவுக்கு உதாரணமாகக் காட்டினார் யாப்பருங்கல விருத்தியுரைகாரர்.

‡ 'அங்கதப் பாட்டளவ வற்றோ டொக்கும்' என்பது உரையாசிரியரும், நச்சினார்க்கினியரும் கொண்ட பாடம்.

என்பது நான்கடியான்வந்த அங்கதம். பிறவும் அன்ன. இது மந்திரத்தின் வேறுபட்டு அடிவரத்தாயினமையின் இதுவும் வெண்பாட்டுப் போன்று அமைந்து வரல்வேண்டுமென்றற்கும் இது வேறுபாட்டெனப் படாமையின் அடிவரையின்று கொலென்னும் ஐயந்தீர்த்தற்கும் இதற்கே ஈண்டு அளவைகூறி, அதனோடுங் 'கைக்கிளை பரிபாட்டு அங்கதச் செய்யுள்' (தொல்-செய்-118) என்று ஓதப்பட்ட கைக்கிளைச் செய்யுள் முத்தொள்ளாயிரத்துட் போலப் பலவாயினும் அவற்றுக்கு அளவையும் வெண்பாவின் அளவேயென்று அடக்கினனென்பது. நாற்பாவாக அடிவரைப்படுவன உளவாயினவற்றுக்கும் இஃதொக்குமென்பது மேற்கூறுதும். (கஙக)

472. கலிவெண் பாட்டே கைக்கிளைச் செய்யுள்
*செவியறி வாயுறை புறநிலை யென்றிவை
தொகுநிலை யளவி னடியில வென்ப.

இஃது, எய்தாத தெய்துவித்தது ; அளவை கூறாதவற்றுக்கு அளவை கூறினமையின்

இதன் பொருள் : இவை ஐந்தும் பெருமைக் கெல்லை இத்துணையெனத் தொகுத்துக் கூறுந் தன்மையுடைய அளவால் வரும் அடியையுடைய அல்ல, என்றவாறு.

கலிவெண்பாட்டென்பது ஒரு பொருணுதலுதலால் திரிபின்றி நடப்பதன்றிப் பன்னிரண்டடியின் இகந்துவந்து தரவும் போக்கும் பாட்டிடையிடைந்து வாராது ஒன்றேயாகி வருவதெனக்கொள்க. கைக்கிளைச் செய்யுளென்பது, கைக்கிளைப்பொருட்கு உரித்தாய்வரும் மருட்பாவென்றவாறு. அஃதேல் ஈண்டெய்திய கலிவெண்பாட்டு மொழிந்த கைக்கிளைப்பொருண்மேல் வாராவோவெனின், வருமென்பது 'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்' (தொல்-அகத்-53) என்புழிக் கொண்டாமென்பது. எனவே, வெண்பாட்டல்லாதன

* நச்சினார்க்கினியர் உரையோடு கூடிய பிரதியில் 'புறநிலை வாயுறை செவியறி வென்றிவை' என்று பாடம் காணப்படுகிறது.

கலிப்பாட்டுக்கள் கைக்கிளைப்பொருண்மேல் வந்தவழியும் அவற்றுக்கு அளவை மேற்கூறியவாற்றானே அடங்குமென்பதாயிற்று. செவியறி வாயுறை புறநிலையென்பன மேற் ' கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ' (தொல்-செய்-110) என, ஒழிந்த பாவான் வருமெனப்பட்ட பொருண்மேல் வருஞ் செய்யுள். ஆண்டோதியவற்றிற்கு ஈண்டு அளவைகூறாரோ வெனின் அஃது ஆசிரியமும் வெண்பாவுமாகி வேறுவருதலின் முற்கூறிய வகையானே அடங்குமென்பது. மற்றுக் கொச்சகவொருபோகாகியுந் தொடர்நிலைச்செய்யுட்கண்வருமால் அவையடக்கெனின், அஃது ' யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடைய ' (தொல்-செய் 149) கொச்சக வொருபோகென்றொழிக. 'தொகுநிலையளவின் அடியில' என்பது, விரவுறுப்புடைய வெண்கலியுங் கொச்சகக்கலியும் உறழ் கலியுமென்றிவற்றிற்கு மேல் அம்போதரங்கம்பெற்ற அளவினை முதலாகநாட்டிக் கொண்ட தொகைநிலையளவெனப்பட்ட அடிமேல் அடியிகந்தோடாவென்றவாறு. தொகுநிலையளவென்பது, தலையளவு இடையளவு கடையளவெனப்பட்ட அம்போதரங்கம் மூன்றற்கும் பெருகிய வெல்லையாகி அளவின்விரியாது அவற்றுக்குச சுருங்கிய வெல்லையாகி அறுபதும் முப்பதும் பதினைந்துமெனத் தொக்குநிற்கும் அளவினவாகிய அடிமேலேறாவென்றவாறு. தொகுமளவென்றது தொகுநிலையென்றான் மூன்றுதொகையினும் முப்பஃதாகிய இடைநிலைத்தொகையே கோடற்கென்பது. இன்னென்னும் ஐந்தாமுருபு நீக்கத்தின்கண் வந்தமையின் முப்பஃதடியின் இகந்துவரும் அடி இலவென்றவாறு. இனி, அம் முப்பஃதாகிய தொகுநிலை இவைவந்தற்கும் நீண்டவடிக் கெல்லையாதலின் தொகுநிலையென்றது அளவென்றானென்பது. நீண்டதனை அளவுடைத்தென்பவாகலின். மற்றிங்ஙனம் இவை முப்பஃதடியின்மேல் வாராவென்று பெருக்கத்திற்கெல்லை கூறவே சுருக்கத்திற்கெல்லை வரையறையிலவென்றானும். ஆகவே, இரண்டடியானும் வருமென்றானும் பிறவெனின், அற்றன்று ; ஒருபொரு ளுதலிவருங் கலிவெண்பாட்டாயிற் பன்னீரடி இகவாதென்பது ' திரிபின்றி வருவது கலிவெண்பாட்டு ' (தொல்-செப்-153) என்றவழிப் போதுமாகலின்; ஈண்டு ஓதிய கலிவெண்பாட்டுப் பதின்மூன்றடியிற் சுருங்காதென்பது பெற்றாம். இது கைக்கிளைப் பொருண்மேல் வந்ததாயி

னும் ஒக்கும். ஒழிந்த நான்கும் மருட்பாவாதலான் 'வெண்பா வாகி யாசிரிய வியலான் முடியவும் பெறும்' (தொல்-செய்-119) என்றா ஞகலானும் 'வெண்பா வியலினு மாசிரிய வியலினும் பண்புற முடியும்' (தொல்-செய்-161) என வருகின்ற சூத்திரத்தானும் அவ்விரண்டு பாவின்கூட்டம் இரண்டடியாகி வாராவாகலானும் அவையும் நான் கடியிற் சுருங்காவென்பது உய்த்துக்கொண் டுணரவைத்தானென்பது. என்னை ? கைக்கிளைப் படலத்துள்,

> " போற்றி வெண்பா வாகி மற்றத
> னிறுதி யைஞ்சீ ராசிரி யம்மே "

என்றாராகலின். மற்று மூன்றடியிற் சுருஙகாது ஆசிரியமாதலானும் இரண்டடியிற் சுருஙகாத வெண்பாவாதலானும இவ்வைநதடியிற் சுருஙகாவென்று கொளக. இது 'பண்புற முடியும் பாவின' (தொல்-செய்-161) என மேற்சொலலுமம.

அவற்றுக்குச செய்யுள்: " நெஞசுநடுக்குறக் கேட்டு " (கலி-24), என்பது பதினேழடியான வந்த கலிவெண்பாட்டு. "சுடர்த்தொடீ கேளாய் " (கலி-51) எனபது ஒரு பொருணுதலிய பதினறடியான் வந்தது. " திருந்திழாய் கேளாய" (சலி-65) என்பது இருபத்தொன் பதடியான் வந்த கலிவெண்பாட்டு. ஒழிநதனவும் அன்ன. நூற் றைம்பது கலியுள்ளுங் கைக்கிளைபற்றி இவ்வாறு வருங் கலிவெண் பாட்டுக் காணுமாயினமையிற் காட்டாமாயினும். இலக்கணமுண்மை யின் இலக்கியம் பெற்றவழிக் கண்டுகொள்க.

> " கனவினிற் காண்கோடா கண்ணுங கலந்த
> நனவினுண் முன்விலக்கு நாணுமின் வஙகம்
> பொஙகோதம் போழும் புகாஅரப் பெருமானுர்
> செங்கோல் வடுப்படுப்பச சென்று "
>
> (முத்தொள்ளாயிரம்-59.)

இது கைக்கிளைபற்றி வந்த கலிவெண்பாட்டென்னுமோவெனின், என்னுமன்றே, அது பாடாண்டிணைப் புறப்பொருளாகலானும் ஒரு

பொருளுதலுதல் ஐந்திணைக்கண்ணதேயாகலானும் பன்னிரண்டடியின் இகந்ததன்றாகலானும் வெண்பாவேயாமென்பது. இப்பொருட்பகுதியுணராதாரும், இது மரபென்பதறியாதாரும், நூற்றைம்பது கலியுள்ளும் இவை கோப்புண்டனவென்பது வினையாதாரும் இவற்றுள் ஒரு பொருளுதலியன ஒழிந்தனவெல்லாம் வெண்பாவென்று அடிவரை கூறுதொழிப. அங்ஙனம் மரபழியக் கூறின் ஒருசாத்தனை காட்டி அவனைக் காமுற்று இவன் இன்னவாறாயினுனென ஆசிரியத்தானும் வஞ்சியானும் பொருள்வேற்றுமையுடைய ஒருசார்க் கொச்சகமல்லாத கலிப்பாவினுனுஞ் செய்யுள் செய்தலும் இனி அதனிலையாகிய ஆண்பாற் கைக்கிளை ஆசிரியத்தானும் வஞ்சியானும் வருதலும் பிறவும் இன்னோரன்னவெல்லாம் புலனெறிவழக்கினுட் காட்டல் வேண்டுமெனை மறுக்க. என்றார்க்கு வரைவுகடாதற்கண்ணுந் தலைவனை அன்பிலனாகச் சொல்லுவன பாடாண்டிணைக் கைக்கிளையாகாவோ வெனின், 'அவை' சுட்டியொருவர்ப்பெயா (தொல்-அகத்-54) கொள்ளாமையின் ஆகாவென்பது. அஃதேல் "விடியல்வெங் கதிர்காயும் வேயம லகலறை" (கலி-15) என்னுங் குறிஞ்சிப்பாட்டினுள்,

"கால்பொர நுடங்கலிற் கறங்கிசை யருவிசின்
மால்வரை மலிசுனை மலரேய்க்கு மென்பதோ
புல்லாராப் புணர்ச்சியாற் புலம்பிய வென்றோழி
பல்லிதழ் மலருண்கண் பசப்பநீ சிதைத்ததை"

எனவும்,

"நறவினை வரைந்தார்க்கும் வரைபார்க்கும்" (கலி-99.) என்னும் மருதப்பாட்டினுள்,

"அறனிழ லெனக்கொண்டா யாய்குடை யக்குடைப்
புறனிழற் பட்டாளோ விவளிவட் காண்டிகா
பிறைநுதல் பசப்பூரப் பெருவிதுப் புற்றாளை"

எனவும் இவை சுட்டியொருவர்ப் பெயர்கொள்ளாக் கைக்கிளை வந்தனவாலெனின், அற்றன்று; தலைமக னன்பின்மையே மெய்பாகி

னன்றே அன்னதாவது ; இவை அன்னவின்றி வரைவுகடாவலும் வடலும் காரணமாக அன்பிலனென்று இல்லதுசொல்லினமையின் அவை ஒருதலையன்பாகாவென்பது. மற்று "என்னை, புற்கை யுண்டும் பெருந்தோ ளன்னே" (புறம்-84) என்னும் புறநானூற்றுப் பாட்டும் பெண்பாற் கைக்கிளையாதலின் அதனை ஆசிரியத்தான் வாராதென்றதென்னையெனின், 'ஒத்தவை யெல்லாம் வெண்பா யாப்பின' (தொல்-செய்-118) என்புழிச் சிறுபான்மை தலைவிகூற்றுகியே வருவன் அமையுமென்று போதந்தாமாகலின் அதுவே பெருவிதியாகாதென்பது.

இனிக் கைக்கிளை வருமாறு:

"திருநுதல் வேரரும்புந் * * * தணங்கே" (புற-வெ-மாலை-கைக்-3). இது நெஞ்சிற்கு உரைத்தது எனத் தலைமகள் சொல்லினது ; நற்காமமன்றுமாகலின். இகருத்தினானே, இதனைப் புறத்திணையுட் கொண்டாருங் கைக்கிளைப்படலத்து,

"நெஞ்சிற் குரைத்தலுங் கேட்போ ரின்றி
யந்தர மருங்கிற் கூற்று மல்லது
சொல்லலுங் கேட்டலு மில்லை யாக
வகத்திணை மருங்கி னவகை யானு
மிகத்த லென்ப விவ்வயி னான"

என்றாரெனக்கொள்க.

பாடாண்கைக்கிளைக்கும் எண்டே அளவுகூறுகவெனின், கலிவெண்பாட்டினைக் கைக்கிளையென்னுமாயினன்றே அது கடாவாவது. மருட்பாவிற்குக் கைக்கிளைப்பகுதி உரைந்தோதல் வேண்டுவதின்மையின் அதற்கும் அதுவே அளவாமென்பது. ஒழிந்த மருட்பா மூன்றற்கும் உதாரணம் மேற்காட்டுதும். இக்காலத்தார் ஏறியகடற்றிறமென்னும் பெருந்திணைப்பொருண்மேலுங் காமஞ்சாலாவிளமையோளை ஒழிந்த மகளிரோடுங் கூட்டியுரைக்குங் கைக்கிளைட்பொருண்மேலுங் கலிவெண்பாட்டெனப் பெயர்கொடுத்துச் செய்யுள் செய்பவால்,

அவை அவ்வாறுசெய்தற்கும் அவை மூப்பதிற்றடியின் இகந்து எத்துணையடியினும் ஏற்குமென்றற்கும் என்னை ஒத்தெனின், அவ்வாறு வருமென்பது இந்நூலுட் பெற்றிலமாயினும் இருபதின்சீர்க் கழிநெடிலடியானும் இதுபொழுது செய்யுள் செய்யுமாறுபோலக் காட்டலான் அமையும். அவை புலனெறிவழக்கிற்குச் சிறந்திலவாக லிற் சிறுவரவினவென்றொழிக.* (கசுO)

**473. புறநிலை வாயுறை செவியறி வுறூஉவெனத்**
**திறநிலை மூன்றுந் திண்ணிதிற் றெரியின்**
**வெண்பா வியலினு மாசிரிய வியலினும்**
**பண்புற முடியும் †பாவின வென்ப.**

இது, கைக்கிளை மருட்பாவல்லாத மருட்பாவும் அதுவேபோல வெண்பா முதலாக ஆசிரியம் பின்வந்து முடியுமென்று ஈண்டு அவற் றுக்குடம்பட்டது கண்டு கூறியவாறு. என்னை?

'மருட்பா வேனை யிருசா ரல்லது
தானிது வென்னுந் தனிநிலை யின்றே' (தொல்-செய்-85.)

என்றவழி ஆசிரியம் முன்னர் கிறீஇப் பின்னர் வெண்பாவினைக் கூறி 'வெண்பா வியலினு மாசிரிய வியலினும் பண்புற முடியும் பாவின' என்றமையின். இங்ஙனம் எண்ணப்பட்ட மூன்றுபொருட்கும் இலக்கணம் முனனர்ப் பாவிரியோத்தினுட் கூறினவற்றுக்கு இன்னவாறு செய்யுள் செய்க வென்றற்கு இது கூறினுனென்பது.

---

* "புறப்புறப் பொருளான் வந்து இரண்டுறப்பாயும் ஒருறுப்பாயும் பாவும் பொருளும் வேறுபட்டு வெள்ளடியின் இசந்துவரும் கலிவெண்பாவாகிய உலாச்செய்யுள் அடிவரையின்றி வருமாறும், பெருந்திணைப் பொருண்மேல்வரும் மடற்செய்யுளும் ஒருறுப்பாய் அடியிகந்து வருமாறும் இக்காலத்துக் கூறுகின்றவற்றுட் காண்க" என்றார் நச்சினார்க்கினியர்.

† 'பாவின மென்ப என்பது' முன் அச்சுப்பிரதிப் பாடம். இவ்வாசிரியர் இனங்கொண்டிலரென்பது முன்னர் 86-வது சூத்திரவுரையிற் கூறப்பட்டது.

இதன் பொருள் : இம்மூன்றும் வெண்பா மூன்னும் ஆசிரியம் பின்னுமாய் வரும், என்றவாறு.

திறனிலைமூன்றென்றான், முற்கூறியனவெல்லாம் அகத்திணை ாகலின், இவை புறத்திணையுளல்லது வாராவென்றற்கென்பது. துண்ணிதிற் றெரியினென்பது இவை மூன்றுங் கைக்கிளைமருட்பாப் போல ஆண்பாற்கைக்கிளையும் பெண்பாற்கைக்கிளையுமாகி அகனும் புறனும்பற்றி வாராது ஒருதலைபாகவே புறத்திணையென்று தெரியப் படுவனவென்றவாறு. இதன் பயன், கைக்கிளைமருட்பாப் புறத்திணை யானும் வருமென்பது. இயலென இருகாற் சொல்லியவதனான் இயற்சீர்வெள்ளடியான் வெண்பாவருதல் சிறந்ததெனவும் அதற் கேற்றவகையான் ஆசிரியம் இயற்சீரான்வருதல் சிறந்ததெனவுங் கொள்க. பண்புறமுடிதலென்பது மேற் சிறுமைக்கெல்லை கூறுமை யின் வெண்பாவிற் கிழிபாகிய எழுசீரின்றி எண்சீரான்வரினும் ஆசிரி யத்திற்கிழிபாகிய மூன்றடி வரினும் எருத்தடி குட்டமாகி வரினும் அங்ஙனம் மூன்றடி வந்தவழி வெண்பா நான்குமுதற் பன்னிரண்டள வும் உயரினும் அவையெல்லாம் பண்பெனப்படுவனவெனவும் அல் லன சிறப்பிலவெனவுஞ் சொல்லினவாறு. இக்கருத்தினான் வெண் பாவடி வரையிலவாயினும் ஆசிரியவடி மூன்றிகவாவெனபது கைக் கிளைப்படலத்துள்ளுஞ் சொல்லப்பட்டது. என்னை ?

> "முச்சீ ரெருத்தின தாகி முட்டின்றி
> யெச்சீ ரானு மேகாரத் திறுமே"

என்றாராகலின். 'பாவின'வென்றதனான் அவவிரு பகுதியுந் தத்தம் பாக்கள் வேறு வேறு பெறநிகழுமென்பது. எனவே, இயற்சீர்வெள் ளடி யாசிரியந் தொடுக்குங்கால்,

> "எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
> வுலக்கல் லன்ன பாறை யேறி" (குறுங்-12.)

எனப் பாவினை ஒன்றாகத் தொடுத்தாற்போலத் தொடுத்தல் ஈண்டு அமையாதென்றானும். இவை மூன்றற்கும் உதாரணங் காட்டுங்கால்

மேற் காட்டா துநின்ற பாடாண்டிணைக் கைக்கிளைமருட்பாவிற்கு உதா ரணங் காட்டியே காட்டப்படும். (கசக)

474. *பரிபாட் டெல்லை
நாலீ ரைம்ப தியர்படி யாக
ஐயைந் தாகு மிழிபடிக் கெல்லை.

இது, பரிபாட்டின்கண்வரும் வெண்பாவிற்கு அளவுகூறுகின் றது.†

இதன் பொருள்: பரிபாடற்கு உறுப்பாகிய வெண்பாவுக்கு நானூறடி பெருக்கத்திற்கெல்லையாகவும் இருபத்தைந்தடி சுருக்கத் திற்கெல்லையாகவும் பெறும், என்றவாறு.

அவை பரிபாடலுட் கண்டுகொள்க. (கசஉ)

475. அளவியல் வகையே ‡யனைவகைப் படுமே.

இது, மேற்கூறிய அளவினை வரையறுக்கின்றது.

இதன் பொருள்: இத்துணையும் அளவியலான் ஒருகூறே சொல்லப்பட்டது, என்றவாறு.

எழுநிலத்தெழுந்த செய்யுள்களுள் அடிவரையறையுடையன வற்றுக்குக் கூறினன் ஆண்டில்லாதன அடிவரையின்றிவரும்

---

* 'பரிபாடல்லே' என்பது உரையாசிரியர் உரைப்பிரதியிலும், நச்சினார்க்கினியர் உரைப்பிரதியிலும் கண்ட பாடம்.

† இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் இச்சூத்திரம் பரிபாட் டிற்கு எல்லை கூறுகின்றதென்றனர்.

‡ 'அனைவகைப்படும்' என்பதும் பாடம்.

இலக்கணத்த வென்பதூஉம் இனிக்கூறுதுமென்பதாம் இதனது பயம்.* (கஎரு)

476. எழுநிலத் தெழுந்த செய்யுட் டெரியி
னடிவரை யில்லன வாறென மொழிப.

மேலைச்சூத்திரத்தான் அளவியல் வகையை வரையறைப்படுத்தான்; அடிவரையறையின்மையும் அளவியலென்பதூங் குறிப்புக் கருதா இலக்கணமாகிய செய்யுள் கூறினன் இச்சூத்திரத்தானென்பது.

இதன்பொருள்: அகமும் புறமுமாகிய எழுநிலத்துந் தோன்றிய செய்யுளை ஆராயின் அடிவரையின்றிவரும் இலக்கணத்தளவு ஆறும், என்றவாறு.

இதனனே ஆறென்பதூஉம் ஓரளவியலாயிற்று.† (கஎசு)

477. அவைதாம், நூலி னான வுரையி னான
நொடியொடு புணர்ந்த பிசியி னான
வேது நுதலிய முதுமொழி யான
மறைமொழி கிளந்த மந்திரத் தான
கூற்றிடை வைத்த குறிப்பி னான.

---

* இது "மேற் சொல்லப்பட்டவற்றைத் தொகுத்துணர்த்துதல் நுதலிற்று. (இ-ள்.) இவ்வதிகாரத்துள் அதிகரிக்கப்பட்ட அளவியல் கண்டுச் சொன்ன வகை பெறும்" என்பது இளம்பூரண உரை.

"இது பிறன் கோட்கூறல். (இ-ள்) யான் கூறிய அளவியலின் கூறுபாடு அத்துணைப் பகுதிப்படும், என்றவாறு. என்றது யான் சிறப்புடைத்தெனக் கூறிய பெருமைக்கெல்லை அத்துணைபடுமெனவே, பிறர் பெருமைக்கெல்லை கொள்ளாதது சிறப்பின்று என்றவாறாயிற்று" என்பது நச்சினார்க்கினியர் உரை.

† "எழுநிலமாவன, பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்பன. அவற்றுட் 'பாட்டு' ஒழிந்த ஆறும் அடி வரையில, என்றவாறு" என்பது இளம்பூரணர் உரை.

இது மேற்கூறிநிறுத்த ஆறற்கும் பெயரும் முறையு முணர்த்து தல் நுதலிற்று.

இதன்பொருள்: அடிவரையில்லன ஆறெனப்பட்ட; அவைதாம் நூலின் கண்ணவும் உரையின்கண்ணவும் நொடித்தன்மாத்திரையாகிய பிசியின்கண்ணவும் ஒருமொழிக் கேதுவாகிவரும் முதுமொழிக்கண்ண வும் மறைத்துச்சொல்லுஞ் சொல்லாற் கிளந்த மந்திரத்தின் கண்ண வுஞ் சொல்லுகின்ற பொருளை இடைகரந்து சொல்லுங் குறிப்பின் கண்ணவுமென அறுவகைப்படும், என்றவாறு.

அவற்றுக்கிலக்கணம் போக்கிச் சொல்லுதும். நூலின்கண்ணவு மென்றது சூத்திரச்செய்யுளைநோக்கிக் கூறியவாறு. அதனுள்ளும் அடி வரையுடைய ஆசிரியம்போல் அளவைபெற்று மேலே அடங்குமென் பது. இனி அச்சூத்திரப்பொருளும் உரையின்கண்ணதாகி வருவ தூஉம் ஒருசெய்யுளாம். அதனது விகற்பம் முன்னர்க் கூறுதும். நொடி யொடுபுணர்ந்த பிசியும், ஏது நுதலிய முதுமொழியும் மறைமொழி கிளந்த மந்திரமுங் கூற்றிடைவைத்த குறிப்புமென நான்கும் வழக்கு மொழியாகியுஞ் செய்யுளாகியும் வருதலின் அவற்றுட் செய்யுளையே கோடற்கு அவற்றுக்கு அளவிலவென்றானென்பது. இவை இத்துணை யெனவே மேலைசசூத்திரமும் அளவியலே கூறியவாறாயிற்று. இனி அவைபடும் பகுதி யாவையுங் கூறுகின்றான். நொடியொடு புணர்ந்த வென்ற மிகையான் இதுவன்றி இதுபோல்வது பண்ணத்தியென் பதும் ஒன்று உண்டென்பதுகொள்க. அது முன்னர்ச் சொல்லுதும்.

(கசுரு)

478. அவற்றுள்,
நூலெனப் படுவது நுவலுங் காலை
முதலு முடிவு மாறுகோ ளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
யுண்ணின் றகன்ற வுரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்க லதுவதன் பண்பே.

இது, நூலினது பொதுவிலக்கணமுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: நூலென்று சொல்லப்பட்டவற்று முன்னும் பின்னும் மாறுபடாது தொகுத்தும் வகுத்தும் பொருள்காட்டி அடங்கி னின்றபொருள் விரித்துச் சொல்லப்பட்டுப் பருப்பொருட்டாகாது நுண்பொருட்டாகப் பொருள்விளக்கல் அதற்கிலக்கணம் அது, என்ற வாறு.

இதன் அகலம் உரையிற்கொள்க. (கசுசு)

479. அதுவே தானு மீரிரு வகைத்தே.

அதன் வகை உணர்த்துகின்றது.

இதன்பொருள்: அந்நூற்குப் பகுதி நான்குவகையாம், என்ற வாறு.

அவை முன்னாச் சொல்லுதும். இதனது பயம், மேல் தொகை யினும் வகையினுமென்றதனானே தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்ப்பு என்னும் நால்வகையாப்பிற்குந் தொகையினும் வகை யினும் பொருண்மை காட்டுதல் ஒக்குமென அவையிரண்டும் நான் காதலுமுடையவென்பது. அவை எழுத்து முப்பத்துமூன்றெனத் தொகுத்தவழிக் குறிலும் நெடிலும் இனமுஞ் சார்ந்துவரும் மூன்று மென வகுத்தலும் 'இரண்டு தலையிட்ட முதலா கிருபஃ தறுநான் கீறு' (தொல்-எழுத்-புணர்-1) என வகுத்தலுமென்றாற்போல்வன. உயர்திணை அஃறிணையெனத் தொகுத்து ஐம்பாலென வகுத்தலும் அஃது ஒழிந்த மூவகைநூலிற்கும் இவ்வாறே ஒருவழித் தொகுத்த லும் வகுத்தலுங் கொள்க. (கசுஎ)

480. ஒருபொரு ணுதலிய சூத்திரத் தானு
மினமொழி கிளந்த வோத்தி னானும்
பொதுமொழி கிளந்த படலத் தானு
மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானுமென்
றாங்கனை மரபி னியலு மென்ப.

இஃது, அந்நான்கினையும் பெயரும் முறையு முணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: நூலுள் ஒருபொருளையே நுதலிவருவது சூத்திரமெனவும் இனமாகிய பொருளினையே தொகுப்பது ஓத்தெனவும் பலபொருட்கும் பொதுவாகிய இலக்கணங் கூறுவது படலமெனவும் மூன்றுறுப்பினையுடையது பிண்டமெனவுங் கூறிய மரபினான் இயலும் நூல், என்றவாறு. (கசுஅ)

481. அவற்றுட், சூத்திரந் தானே
யாடி நிழலி னறியத் தோன்றி
நாடுத லின்றிப் பொருணனி விளங்க
யாப்பினுட் டோன்ற யாத்தமைப் பதுவே.

இது, முறையானே சூத்திர இலககண முணாத்துதல் நுதலிற்று.

மேல் ஓதியவற்றுள் ஒருபொருணுதலிய எனப்பட்ட சூத்திரப் பொருள நுதலுங்கால் ஆடி சிறிதாயினும் அகன்றுபட்ட பொருளை அறிவித்தாற்போலத் தோதல்வேண்டாமை அவ்வகன்றபொருள் அடங்குமாற்றான் அச்செய்யுளுள் தோன்றச் செய்து முடிக்கப்படுவது, என்றவாறு. (கசுக)

482. நேரின மணியை நிரல்பட வைத்தாங்
கோரினப் பொருளை யொருவழி வைப்ப
தோத்தென மொழிப வுயர்மொழிப் புலவர்.

இஃது, ஓத்திலக்கண முணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: மேல் இனமொழிகிளந்த ஓத்தென்றான், அங்ஙனம் இனமொழி கிளக்குங்காற் சிதைந்துகிடப்பப் பல ஓத்தாகச் செய்யாது நேரினமணியை நிரலவைத்தாற்போல ஓரினப்பொருளை யெல்லாம் ஒருவழியே தொகுப்பது ஓத்தாவது, என்றவாறு.

நேரினமணியெனவே ஒருசாதியாயினும் தம்மின் ஒத்தனவே கூறல்வேண்டுமென்பதாம். வேற்றுமையோத்தும் வேற்றுமைமயங்கியலும் விளிமரபும் என மூன்றன்பொருளும் வேற்றுமையென ஓரினமென்று ஓரோத்தாக வையாது வேறு வேறு வைக்கப்படுமென்பது. உயர்மொழிப் புலவரென்பது, அங்ஙனம் நூல்செய்தல் உயர்ந்தோர் கடனென்றவாறு. (கஎ0)

## 483. ஒருநெறி யின்றி விரவிய பொருளாற் பொதுமொழி தொடரினது படல மாகும்,

இது, மேற் பொதுமொழிகிளந்த படலமெனப்பட்டதற்கு இலக்கணமுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள் : ஒருநெறியவன்றிப் பல்வேறு வகைப்பட்ட பொருளெல்லாவற்றிற்கும் வேறுவேறு இலக்கணங்கூற நுதலின் அவற்றுக்குப் பொதுவாகி வருவது படலம், என்றவாறு.

பொதுமொழிகிளந்த படலமென்றவழி ஒருநெறிப்பொருட்டுப் பொதுவாகப்பட்டதனை விலக்கி ஈண்டு விரவிய பொருட்குப் பொதுவாக மொழிவதே படலமென்றாரென்ப. அவை அதிகாரங்களாமெனக் கொள்க. (கஎக)

## 484. மூன்றுறுப் படக்கிய தன்மைத் தாயிற் றோன்றுமொழிப் புலவரது பிண்ட மென்ப.

இது பிண்டங் கூறுகின்றது. வாளாதே மூன்றுறுப்படக்கிய பிண்டமென்றான் மேல்; (தொல்-செய்-168) ஈண்டுச் சூத்திரமும் ஓத்தும் படலமுங் கூறிய அதிகாரத்தானே அம்மூன்றனையும் அடக்கிநிற்பது கூறுகின்றானென்பது.

இதன்பொருள்: இம்மூன்று உறுப்பினையும் அடக்கி வருவது பிண்டம், என்றவாறு.

அம்மூன்றனையும் உறுப்பென்னவே, பிண்டமென்பனதாம் உறுப்பினவென்பது பெற்றாம். தொல்காப்பியமென்பது, பிண்டம்; அத

னுள், எழுத்ததிகாரஞ் சொல்லதிகாரம் பொருளதிகாரமென்பன படல மெனப்படும்; அவற்றுள் ஒத்துஞ் சூத்திரமும் ஒழிந்த இருகூறு மெனப்படும். தோன்றுமொழிப் புலவர் அது பிண்டமென்ப, என்ற தனாற் பிண்டத்தினையும் அடக்கி நிற்பது வேறு பிண்டமுளதெனக் கொள்க. அது முதனூலாகிய அகத்தியம்போலும்; என்னை ? அஃது இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழென்று மூன்று பிண்டத்தினை யும் அடக்கி நிற்றலின்.* (கஎஉ)

485. பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென்
றுரைவகை நடையே நான்கென மொழிப.

இஃது, உரையாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள் : உரைப்பகுதிவழக்கு இந்நான்காகு மென்று சொல்லுவார் புலவர், என்றவாறு.

பாட்டிடை வைத்த குறிப்பினானுமென்பது, ஒரு பாட்டு இடை யிடை கொண்டு நிற்குங்கருத்தினான் வருவனவெனப்படும். என்னை ? பாட்டுவருவது சிறுபான்மையாகலின். அவை தகடூர்யாத்திரைபோல்

---

* "சூத்திரம் பல உண்டாகி, ஒத்தும் படலமும் இன்றாகி வரி னும்; ஒத்துப் பலவுண்டாகி, படலம் இன்றாகி வரினும்; படலம் பல வாகி வரினும் அதற்குப் பிண்டமென்று பெயராம், என்றவாறு. அவற் றுள் சூத்திரத்தாற் பிண்டமாயிற்று இறையனார் களவியல்; ஒத்தி னாற் பிண்டமாயிற்றுப் பன்னிருபடலம்; அதிகாரத்தாற் பிண்டமா யிற்று இந்நூல் என்று கொள்க. இவற்றைச் சிறுநூல், இடைநூல், பெருநூல் என்ப" என்றார் இளம்பூரணர்.

வன.* மற்றுப் பிறபாடைவிரவியும் வருவனவோவெனின், அவற்றுள்ளுந் தமிழுரையாயின எல்லாம் பாட்டிடைவைத்த குறிப்பென ஈண்டடங்கும், பிறபாடைக்காயின் ஈண்டு ஆராய்ச்சியின்றென்பது. பாவின்றெழுந்த கிளவியானுமென்பது பாட்டின்றிச் சூத்திரத்திற்குப் பொருளெழுதுவன போல்வன.† சூத்திரம் பாட்டெனப்படாவோவெனின், படா. பாட்டும் உரையும் நூலுமென வேறோதினமையின். அல்லாத சூத்திரத்தாற் சொல்லாத பொருளினை உரையாற் சொல்லித் தொடர்பு படுப்பது பாட்டிடை வைத்த குறிப்பாவது. இஃது அன்னதன்று, வேறொருவன் சூத்திரத்திற் கூறிய பொருளையே மற்றொருவன் கூறுகின்றனுதலானென்பது. ஒழிந்த பாட்டிற்கும் இவ்வாறே பொருளெழுதின் அஃதொக்கும். அவை பாரதம், பருப்பதம் முதலாயின. பொருளொடு புணராப் பொய்ம்மொழியானுமென்பது ஒருபொருளின்றிப் பொய்படத் தொடர்ந்து சொல்லுவன. அவை ‡ ஓர் யானையுங் குரீஇயுந் தம்முட் பாடி இன்னுழிச் சென்று இன்னவாறு செய்தனவென்று அவற்றுக்கியையப் பொருள்படத் தொடர்நிலையான ஒருவனுழை ஒருவன் கற்றுவரலாற்று முறையான் வருகின்றன. பொருளொடுபுணர்ந்த நகைமொழியானுமென்பது, பொய்யெனப்படாது மெய்யெனப்பட்டும் நகுதற்கேதுவாகுந் தொடர்

* சிலப்பதிகாரத்தையும் உதாரணமாகக் காட்டினார் நச்சினார்க்கினியரும், இளம்பூரணரும்.

† "பாவின்றெழுந்த கிளவியானும் என்பது, பாக்கண் மொழி தோற்றின சொல்வகையானும் உரையாம் என்றவாறு. அஃதாவது வழக்கின்கண் ஒரு பொருளைக்குறித்து வினவுவாரும் செப்புவாரும் கூறும் கூற்று. அதுவும் இலக்கணம் பிழையாமற் கூறவேண்டுதலானும் ஒரு பொருளைக் குறித்துச் செய்யப்படுதலானும் செய்யுளாம். இதனைக்குறித்தன்றே 'செப்பும் வினவும் வழாஅ லோம்பல்' (தொல்-சொல்-கிள-13) என்பது முதலாகக் கூறப்பட்ட இலக்கணமென்று கொள்க" என்றார் இளம்பூரணர்.

‡ "ஓர் யானையும் குதிரையும் தம்முள் நட்பாடி" என்று நச்சினார்க்கினியர் உரைப்பிரதியிற் காணப்படுகிறது. இதுவே சரியான பாடமென்று தோன்றுகிறது.

னிலை. அதுவும் உரையெனப்படும். அவையாவன சிறுகுரீஇயுரையும், தந்திரவாக்கியமும் போல்வனவெனக்கொள்க. இவற்றுட் சொல்லப் படும் பொருள் பொய்யெனப்படாது உலகியலாகிய நகைதோற்று மென்பது.* இவ்வகையான் உரை நான்கெனப்படுமென்றவாறு. உரை நடையென்னாது வகையென்றதனான் இவ்வுரைப்பகுதி பிறிதும் ஒன் றுண்டு. அது மரபியலுட் பகுத்துச் சொல்லுதும். (களக)

## 486. அதுவே தானு மிருவகைத் தாகும்.

இஃது, அவற்றின் தொகை கூறுகின்றது.

இதன் பொருள் : அந்நான்கனுண் முதலன இரண்டும் ஒன்றாக வும் ஏனைய இரண்டும் ஒன்றாகவுந் தொகுக்கப்படும் அவ்வாற்றாற் பயன் கொள்ளுங்கால், என்றவாறு.† அவையாவன கூறுகின்றான். (களச)

## 487. ஒன்றே மற்றுஞ் செவிலிக் குரித்தே
## யொன்றே யார்க்கும் வரைநிலை யின்றே.

இஃது, அவற்றது இயல்புணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள : மேனின்ற அதிகாரத்தான் இறுதிநின்ற இரண்டன் தொகுதியாகிய ஒன்று செவிலிக்கே உரித்து. ஒழிந்த இரண்டனுகிய ஒன்று வரைவின்றி எல்லார்க்கும் உரித்து, என்ற வாறு.‡

---

* "நகைமொழியாவது மேற்சொல்லப்பட்ட உரை பொருந்தா தென இகழ்ந்து கூறுதல். அவ்விகழ்ச்சியின் பின்னர்ப் பொருளு ணர்த்து முறை பிறக்குமாதலின், 'பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்' உரைவரும் என்றார்" என்பது இளம்பூரணர் உரை.

† "மேற் சொல்லப்பட்ட உரை இரண்டு வகைப்படும், என்ற வாறு. அது மைந்தர்க்கு உரைப்பனவும் மகளிர்க்கு உரைப்பனவும் ஆம்" என்பது இளம்பூரணர் உரை.

‡ "மகளிர்க்குரைக்கும் உரை செவிலிக்குரித்து; மைந்தர்க் குரைக்கும் உரை எல்லார்க்கு முரித்து, என்றவாறு" என்பது இளம் பூரணர் உரை.

தலைமகளை வற்புறுத்துஞ் செவிலியர் புனைந்துரைத்து நகுவித்துப் போக்குதற்குரியரென்பது இதன் கருத்து. இக்கருத்தேபற்றிப் பிறசான்றோருஞ் "செம்முது செவிலியர் பொய்ந்நொடி பகர" என்றாரென்பது. பிறவும் அன்ன. மற்றுமென்றதனான் அவையன்றி வருகின்ற பிசியுஞ் செவிலியர்க்கு உரித்தென்பதுகொள்க. இனிப் பாட்டிடைவைத்த குறிப்பும் பாவின்றெழுந்த கிளவியும் யாருக்கும் வரைவின்றி வருமாறு அவ்வச்செய்யுளுட் காண்க. (சுஎஇ)

488. ஒப்பொடு புணர்ந்த வுவமத் தானுந்
தோன்றுவது கிளந்த துணிவி னானு
மென்றிரு வகைத்தே பிசிவகை நிலையே.

இது, முறைபானே பிசி இரண்டெனப்படு மென்கின்றது.

இதன் பொருள்: தனகட் கிடந்த ஒப்புமைக்குணத்தோடு பொருந்திவரும் உவமப்பொருளானும் மற்று இனி ஒன்றுசொல்ல ஒன்று தோன்றுந் துணிவிற்றாகச் சொல்லுஞ் சொல்லானுமென்று இவ்விருகூற்றதாகும் பிசி கூறுபடும் நிலை, என்றவாறு.

அவை "பிறைகவ்வி மலைநடக்கும்" என்பது ஒப்பொடு புணர்ந்த உவமம். அஃது யானையென்றாவது.

"முத்துப்போற் பூத்து முதிரிற் களாவண்ணன்
நெய்த்தோர் குருதி நிறங்கொண்டு வித்துதிர்த்து"

என்பது கமுகின்மேற்று.

"நீராடான் பார்ப்பா னிறஞ்செயயா னீராடி
லூராடு நீரிற் காக்கை"

என்பது தோன்றுவது கிளந்த துணிவினான் வந்தது. இது நெருப்பென்றாவது. வகைநிலை யென்ற மிகையான் இவையுஞ் செவிலிக் குரித்தென்பது கொள்க. (சுஎஅ)

489.* நுண்மையுஞ் சுருக்கமு மொளியு முடைமையு
மென்மையு மென்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉ
மேது நுதலிய முதுமொழி யென்ப.

இது, முதுமொழியுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: கூரிதாய்ச் சுருங்கி விழுமிதா யெளிதாகி இயற்றப்பட்டுக் குறித்த பொருளொன்றனை முடித்தற்கு வருமாயின், அங்ஙனம் வந்ததனைப் பொருணமுடித்தற்குக் காரணமாகிய பொருளினைக் கருதுவது முதுமொழியென்ப புலவர், என்றவாறு.

"உழுத வுழுத்தஞ்செய் யூர்க்கன்று மேயக்
கழுதை செவியரிந் தற்றால்-வழுதியைக்
†கண்டன கண்ணீ ருகுப்பப் பெரும்பணைத்தோள்
கொண்டன மன்னோ பசப்பு."

என்றவழி மற்று வழுதியைக் கண்ட கண் நீருகுப்பத் தோள் பசந்தன என்றக்கால் ஒன்றன் வினைபயன் ஒன்று நுகர்ந்ததென்புழிக் குறித்த பொருளியையின்மை கூறியதாயிற்று. அதனைச் சொற்றொடர் இனிது விளக்கின்றாயினும் முற்கூறிய முதுமொழி முடித்ததென்பது. என்னை ? அதன் கண்ணே அது முடித்தற்கேதுவாகிய இயைபின்மை கிடந்தமையினென்பது. இது பருப்பொருட்டன்றி நுண்ணிதாகிச் சொற்சுருக்கமுடைத்தாய் விழுமிதாகி எளிதிற் பொருடோன்றியவாறு கண்டுகொள்க. எனவே, இதுவும் இந்நாற்பகுதித்தெனறவாறு.‡(கஎஎ)

* 'நுண்மையுஞ் சுருக்கமு மொளியுடைமையும்' என்பது முன் அச்சுப்பிரதிப் பாடம்.

† 'கண்ட கருங்கண் இருப்ப' என்பதும் பாடம்.

‡ "பழமொழி இவ்விலக்கணம் பற்றிச் செய்தது" என்றார் நச்சினார்க்கினியர்.

490. நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப.

இது, மந்திரச்செய்யுளுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : சொல்லிய சொல்லின் பொருண்மை யாண்டுங் குறைவின்றிப் பயக்கச் சொல்லும் ஆற்றலுடையராவார் ஆணையாற் கிளக்கப்பட்டுப் புறத்தார்க்குப் புலனாகாமன் மறைத்துச்சொல்லுஞ் சொற்றொடரெல்லாம் மந்திரமெனப்படும், என்றவாறு.

அவை வல்லார்வாய்க் கேட்டுணர்க. தானேயென்று பிரித்தான் இவை தமிழ்மந்திரமென்றற்கு பாட்டாகி அங்கதமெனப்படுவனவும் உள, அவை நீக்குதற்குமென உணர்க. அவை,

"ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச்-சீரிய
வந்தண் பொதியி லகத்தியனா ராணையாற்
செந்தமிழே தீர்க்கசுவா கா"

எனவும்,

"முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி
பரணா கபிலரும் வாழி—யரணிய
வானந்த வேட்கையான வேட்கோக் குயக்கோட
னானந்தஞ் சேர்க்கசுவா கா"

எனவும் இவை *தெற்கண் வாயில்திறவாதப் பட்டி மண்டபத்தார் பொருட்டு நக்கீரர் ஒருவன் வாழவும் ஒருவன் சாவவும் பாடிய மந்திரம் அங்கதப்பாட்டாயின. மேற் பாட்டுரைநூலென்புழி அங்கதமென்றோதினன் இன்ன மந்திரத்தை. இஃது ஒருவனை இன்னவாற்றாற் பெரும்பான்மையுஞ் சபித்தற் பொருட்டாகலின் அப்பெயர்த்தாயிற்று. இக்கருத்தேபற்றிப் பிறரும்,

* 'தெற்கில் வாயில் திறவாத பட்டிமண்டபத்தார் பொருட்டு' என்பது நச்சினார்க்கினியர் உரைப்பிரதிப் பாடம்.

"சிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்" (குறள்-3-8.)

என்றாரென்க. அங்கதப்பாட்டாயவழி அவற்றுக்கு அளவை அங்கதப்பாட்டளவோடு ஒக்குமெனமேற்கூறினானென்பது. (கஎஅ)

491. எழுத்தொடுஞ் சொல்லொடும் புணரா தாகிப்
பொருட்புறத் ததுவே குறிப்புமொழி யென்ப.

இது, முறையானே கூற்றிடைவைத்த குறிப்புணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : எழுத்து முடிந்தவாற்றானுஞ் சொல் தொடர்ந்தவாற்றானும் அச்சொற்படு பொருளானுஞ் செப்பவன பொருளறியலாகாமையின், எழுத்தொடுஞ் சொல்லொடும் புணராது பொருட்குப் புறத்தே பொருளுடைத்தாய் நிற்பது குறிப்பாவது, என்றவாறு.

இதனைப்பாட்டினை நூலென்றவழி வாயமொழியென்றானென், கவியாற் பொருள்தோன்றாது பின்னா இன்னதிதுவெனச் சொல்லி உணரப்படுதலின். இனி, அதனை இதன் தொகைச்சூத்திரத்துக் கூற்றிடைவைத்த குறிப்பென்று ஓதினான் பாட்டிடைப் படுபொருள் பெரிதாகி அதனிடையே குறித்துக்கொண் டுணரினல்லது மெய்ப்படாதென்றற்கென்பது. பிறர் அவற்றைப் பொருளிசையென்று சொல்லுப.

"குடத்தலையர் செவ்வாயிற் கொம்பெழுநதார் கையி
னடக்கிய மூக்கின ராம்."

என வரும் இதனுட் குடமே தலையாகப்பிறநதாரெனவுங் கொம்பெழுந்த வாயினரெனவுங் கையுட்கொண்ட மூக்கினரெனவுங் கூறியக்கால் எழுத்துஞ் சொல்லும் பொருளும் இயல்பிலவாதலுங் குறிப்பினான் அதனைக் குஞ்சரமென்று கொண்டவாறுங் கண்டுகொள்க. பிறவும் அன்ன. மற்றிது பிசியெனப்படாதோவெனின், இது பாட்டுவடிவிற் றாகலின் அற்றன்றென்பது. அஃதேற் பாட்டெனப்படாதோவெனின்,

குறித்த பொருண் முடிய நாட்டாமையின் யாப்பழிந்து, நாற்சொல்லியலான் யாப்புவழிப்படாமையின் மரபும் அழிந்து, பிறவுறுப்புப் பலவுங் கொண்டமையிற் பாட்டெனவும் படாதென்பது. இஃது எழுத்து முதலாக ஈண்டிய அடியெனப்படாமையின் அதனையும் அடிவரையில்லனவற்றொடு ஓதினனென்பது. அல்லாதார் குறிப்பிசைவந்த செய்யுளெல்லாங் குறிப்பெனப்படுமென்ப. அங்ஙனங் கூறிற் குறிப்பிசையுடைய பாட்டினுள் வாராவாகிய செல்லுமென மறுக்க. (களசு)

## 492. பாட்டிடைக் கலந்த பொருள வாகிப் பாட்டி னியல பண்ணத்தி யியல்பே.

இது, பண்ணத்தி கூறுகின்றது.

இதன் பொருள் : பழம்பாட்டினூடு கலந்த பொருளே தனக்குப் பொருளாகப் பாட்டும் உரையும்போலச் செய்யப்படுவன பண்ணத்தி, என்றவாறு.

மெய்வழக்கல்லாத புறவழக்கினைப் பண்ணத்தியென்ப. இது எழுதும் பயிற்சியில்லாத புறவுறுப்புப் பொருள்களைப் பண்ணத்தி யென்பவென்பது. அவையாவன நாடகச்செய்யுளாகிய பாட்டும் அடையும் வஞ்சிப்பாட்டும் மோதிரப்பாட்டுங் கடகண்டும் முதலாயின. அவற்றை மேலதேபோலப் பாட்டெனஞராயினர் நோக்கு முதலாயின உறுப்பின்மையினெனபது. அவை வல்லார்வாய்க்கொண்டுணர்க. (கஅ௦)

## 493. அதுவே தானும் பிசியொடு மானும்.

இதுவும் அது.

இதன் பொருள் : மேற்கூறப்பட்ட பண்ணத்தி பிசியோடொக்கும், என்றவாறு.

அதனை ஒத்தலென்பது அதுவுஞ் செவிலிக்குரித்தென்றவாறு. பிசியொடுமென்ற உம்மையாற் 'பொருளொடு புணராப் பொய்ம்மொழி

யோடும் பொருளொடு புணர்ந்த நகையோடும்' (தொல்-செய்-173) ஒச்சுமென்றுணர்க. தானுமென்ற மிகையாற் பாட்டுநடை வகைக் கூத்திற்கே உரித் தென்பதுகொள்க. (கஅக)

494. அடிநிமிர் கிளவி யீரா றாகும்.

இதுவும் அது.

இதன் பொருள் : அப்பண்ணத்தியின் அடிபபெருககங் கொளக்குங் காற் பன்னிரண்டாம், என்றவாறு.

ஆகுமென்றதனாற் சிறுபான்மை அப்பன்னிரண்டடியின் ஏறியும் வரப்பெறுமென்பது. ஈராறாகுமென்றதனை இது நெடுவெண்பாட் டாகி வருமெனவும் அதுபோல ஆறடியின் இகந்துவாராதெனவுங் கொள்க. (கஅஉ)

495. அடியிகந்து வரினுங் கடிவரை யின்றே.

இதுவும் அது.

இதன் பொருள் : அது முழுதும் அடியாகிவாராது இடையிடை ஒரோவடிப் பெற்று அல்லுழியெல்லாம பரநதுபட்டு வரவும் பெறும், என்றவாறு.

அவை முறசாலத்துளளார் காணுமையிற் காட்டாமாயினும், இக்காலத்துள்ளனவேற் கணடுகொள்க. இலக்கணம உண்மையின் இலக்கியங் காணுமாயினும் ஆமையுமென்பது. (கஅங)

496. கிளரிய வகையிற் கிளந்தன தெரியி
னளவியல் வகையே யனைவகைப் படுமே.

இது, மேலவற்றுக்கெல்லாம் புறனடை.

இதன் பொருள் : எடுத்தோதிய வகையாற் சொல்லியன ஆராயின் அளவியற்பகுதி அக்கூற்றதாம், என்றவாறு.

எடுத்தோதியவகையென்பது நூலும் உரையும் நந்நான் கெனவும், பிசி இரண்டெனவும், முதுமொழியும் மந்திரமுங் கூற்றிடை வைத்த குறிப்பும் ஒரோவொன்றெனவுங் கூறிவந்த வகையாம். அவற்றை இனைத்தென்றெண்ணி அளந்தபகுதியும் அளவியலேயாமாகலின் அவ் வளவிய வடிவரையறை கூறியவாற்றானும் இருவகைப்படும் அளவிய லென்றவாறு. (கஅச)

497. கைக்கிளை முதலா வெழுபெருந் திணையு
முற்கிளந் தனவே முறைநெறி வகையின.

இது, பதின்மூன்ரும் முறைமைக்கணின்ற திணையுறுப்புணர்த்து கின்றது.

இதன் பொருள் : கைக்கிளைமுதற் பெருந்திணையிறுவாய் ஏழும் முன்னர்க் கிளக்கப்பட்டன, என்றவாறு.

முறைநெறிவகையின வென்பது அவற்றுக்கு முறைமையாற் புற மெனப்பட்ட வெட்சிமுதற் பாடாண்பகுதியீருகிய எழுபகுதியோடு மென்றவாறு. எனவே, அவற்றுக்குப் பொதுவாகிய முறையாற் கரந் தையுள்ளிட்டுப் பதினைந்துதிணையுள் ஒன்று செய்யுட்குறுப்பாகி வரல் வேண்டுமெனவும் முன்னோதியவாறே கொள்ளப்படுமெனவுஞ் சொல் லினும். இது சொல்லாக்கால் அவை வரினும் வரும், வாராதொழிய வும் பெறுமென்பதுபடு மென்பது. இது மேல்வருகின்ற கைகோண் முதலியனவற்றுக்கும் ஒக்கும். (கஅ௫)

498. காமப் புணர்ச்சியு மிடந்தலைப் படலும
பாங்கொடு தழாலுந் தோழியிற் புணர்வுமென்
றுங்கநால் வகையினு மடைந்த சார்பொடு
மறையென மொழிதன் மறையோ ராறே.

களவு கற்பெனக் காமத்திணையின் ஒழுகலான் ஆண்டுப் பரந்து பட்டனவெல்லாந் தொகுத்துக் கூறுகின்ருன், அவையுஞ் செய்யுட்

குறுப்பாகலின். அவற்றுள் இது களவென்னுங் கைகோளுணர்த்து தல் நுதலிற்று.

இதன் பொருள் : காமப்புணர்ச்சியும் அது நிகழ்ந்தபின்னர் இடந் தலைப்பாடும் அதன்பின்னர்ப் பாங்கற்குச் சொல்லி அவனாற் கூடுதலும் அதன்பின்னர்த் தோழியைப் பின்னின்று குறைமுடித்துக் கோடலு மென அந்நாற் பகுதிக்கண்ணும் பொருந்திய சார்பினாற் களவொழுக் கம் இதுவென்று கருதுமாற்றாற் செய்யுள்செய்தல் கந்தருவவழக்கம், என்றவாறு.

கந்தருவவழக்கம் மறையோரொழுகிய நெறியாகலான் மறையோரா றென்றானென்பது. எனவென்பது வினையெச்சம். எனவே, பாங் கனுந்தோழியும் உணர்ந்தவழியும் அது மறையோர்வழித்தென்றவாறு. காமப்புணர்ச்சி நிகழ்ந்தன்றி இடந்தலைப்பாடு நிகழாதெனவும் அவ் விடந்தலைப்பாடு பிறர்பயத்தலரிதென்பது அவள் ஆயத்தோடுங் கூடிய கூட்டத்தான் அறிந்த தலைமகன் பாங்கனை உணர்த்தி அவனாற் குறை முடித்துக்கோடலுந் தனவயிற் பாங்கன் அவள்வயிற் பாங்குசெயடாமை கலின் அதன்பின்னர்த் தோழியாற் குறைமுடித்துக் கோடலுமென இந்நான்கும் முறையான் நிகழுங் களவொழுக்கமென்றவாறு.

‘ வேட்கை யொருதலை யுள்ளுதன் மெலித
லாக்கஞ் செப்ப னாணுவரை யிறத்த
னோக்குவ வெல்லா மவையே போறன்
மறத்தன் மயக்கஞ் சாக்கா டென்றச்
சிறப்புடை மரபினவை...... ..’ (தொல்-கள-9.)

என்பனவுங் கைகோளாகாவோவெனின், ஆகா ; கைகோளென்பது ஒழுகலாறாகலான் அவை அவற்றுட் பிறந்த உள்ளநிகழ்ச்சி ஒன்றொன் றனிற் சிறந்து பெருகியக்கால அவ்வப்பகுதியாகுமெனக் கொள்க.

மற்றுக் களவியலுள்,

“ ஆங்ஙனம் புணர்ந்த கிழவோன் றன்வயிற்
பாங்கி னோரிற் குறிதலைப் பெயலும
பாங்கிலன் றமியோ ளிடந்தலைப் படலும்” (இறையனார்-3.)

எனப் பாங்கற்கூட்டம் முற்கூறியதாமெனின், இது கைகோள்கூறிய இடமன்மையின் முற்கூறினும் அமையுமென்பது. மற்று இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகனைப் பாங்கன்கண்டு இவ்வேறுபாடு எற்றினானாயிற்றென்று வினவுமன்றே? அதனாற் பாங்கற்கூட்டம் நிகழ்ந்த பின்னரன்றி இடந்தலைப்பாடு நிகழாதாம் பிறவெனின், அற்றன்று; யாழோர் கூட்டம் உலகியலாதலான் இல்லதனருமாசவே உலகத்தார் நிறையுடையாராகி மறைவெளிப்படாமல் ஒழுகுவாரும் மறைவெளிப்படுத்து விளம்பும் பாங்கனையுடையாரும் இல்லாதாருமெனப் பலவகையராதலின் வினாதல் தலையன்றென்பது. அல்லதூஉந் தன் இடந்தலைப்பாடு நிகழ்வதாயினே துணைவேண்டுமென்பது. என்னை? துணையின்றி நிகழுங் களவு சிறப்புடைத்தாகலானும் பாங்கன் கழறுமென்று அஞ்சி அவனை முந்துற மறைத்தொழுகுமாகலானுமென்பது. களவொழுக்கமெல்லாம் இந்நான்கு வகையானும் அடங்கும். அவற்றுக்குச் செய்யுள் "கொங்குதேர் வாழ்க்கை" (குறுந்-2) என்னும் பாட்டு இயற்கைப் புணர்ச்சிக்கண் நிகழ்ந்த செய்யுள். "சொல்லிற் சொல்லெதிர் கொள்ளாய்" (நற்றிணை-39) என்பது இடந்தலைப்பாடு. "இடிக்குங் கேளிர் நுங்குறையாக" (குறுந்-58) என்பது பாங்கற்கூட்டத்துக்கண் வந்தது. "தலைப்புணைக் கொளினே தலைப்புணைக் கொள்ளும்" (குறுந்-222) என்பது தோழியிற்கூட்டம். பிறவும் அன்ன. (கஅசு)

499. மறைவெளிப் படுதலுந் தமரிற் பெறுதலு
மிவைமுத லாகிய வியனெறி திரியாது
மலிவும் புலவியு மூடலு முணர்வும்
பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே.

இது, கற்பென்னுங் கைகோளுணர்த்துத னுதலிற்று.

இதன் பொருள்: மறைந்தொழுகும் ஒழுகலாறு வெளிப்படுத்தலும் அதன்பின் தமர் கொடுப்பத் தான் அவர் கையாற் பெறுதலுமென்னும் இவ்விரண்டும் முதலாகிய வழக்கு நெறி திரியாது மகிழ்ச்சி

யும புலத்தலும் ஊடலும் உணர்த்தலுமென்னும் நான்குடன் பிரிவுளப் பட ஐந்தும் புணர்ந்தது கற்பென்னுங் கைகோளாம், என்றவாறு.

இவை முதலாகிய வென்றதனால்,

'கொடுப்போ ரின்றியுங் கரண முண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான' (தொல-கற்-2.)

என்றவழிக் கூடிய வதுவைபோல்வன கொளக. அவைதாங் கற் பெனப்படுவதல்லது ஒழுகலாறெனபபடா. என்னை ? இவரொழுக்க முமன்றி வேள்வியாசான் முதலாயினோரும் செபவிக்கும் ஒழுக்க மாகலான். அங்ஙனமாயினும் அவற்றையுங் கைகோளின்பாற் சார்த்தி யுணரப்படுமென்றற்கு ஈண்டுக் கூறினனென்பது.

இனிக் கூறும் ஐந்துந் தலைவனுந் தலைவியும் ஒழுகும ஒழுகலா றெனவே படும். முன்னைய இரண்டும் போலப் பிறர்கொடுககபபட்டன அல்லவென்பது. மலிதலெனபது இல்லொழுக்கமும் புணர்ச்சியும் முதலாயவற்றான் மகிழ்தல். புலவியெனபது புணர்ச்சியான வந்த மகிழ்ச்சி குறைபடாமற் காலங்கருதிக்கொணடு பயபபதோர் உள்ள நிகழ்ச்சி. ஊடலெனபது உளளத்து நிகழ்நததனைக் குறிப்புமொழி யானன்றிக் கூற்றுமொழியா னுரைபபது. அங்ஙனம் ஊடனிகழ்ந்த வழி அதற்கேதுவாகிய பொருளினமையுணர்வித்தல உணர்வெனப் படும். இல்லது கடுத்த மயக்கநதீர உணாத்துதலால உணாத்துத லெனவும் அதனை உணர்தலால் உணர்வெனவுமபடும; புலவிக்காயின் உணாத்தல் வேண்டா, அது *குளிரப்பக்கூறலுந தளிரப்பமுயங்கலும் முதலாயவற்றான் நீங்குதலின். அம்முறையானே கூறி யவற்றுபபின் பிரிதல் கூறினன், அஃது இவை நான்கனோடும் வேறுபடுதலின். அதனை ஊடலோடு வைக்கவே அவவூடலிற் பிறநத தனியும் பிரிவின் பாற் படுமெனபதூஉங் கொள்க. எனனை ? காட்டக்காணாது கரந்து மாறுதலின். இவற்றுக்குச செய்யுள்:

* 'குளிர்ப்பக் கூடலும்' என்பதும் பாடம்.

"எம்மனை முந்துறத் தருமோ
தன்மனை யுய்க்குமோ யாதவன் குறிப்பே" (அகம்-194.)

என்பது மறைவெளிப்பாடு.

"தமர்தர-வோரிற் கூடி யுடன்புணர் கங்குல்" (அகம்-86.)

என்பது தமரிற்பெறுதல்.

"கேள்கேடூன்ற" என்னும (93) அகப்பாட்டினுள்,

"நலங்கே ழாகம் பூண்வடுப் பொறிப்ப
முயங்குகஞ் சென்மோ நெஞ்சே"

என்பது மலிதல்.

"நாணுக் கடுங்குரைய ளாகிப்
புலவி வெய்யள்யா முயங்குங் காலே"

என்பது புலவி.

"நோய்சேர்ந்த திறம்பண்ணி னைபாண னெம்மனை
நீசேர்ந்த வில்வினுப் வாராமற பெறுகற்பின்" (கலி-77.)

என்பது ஊடல்.

"விருந்தெதிர கொளளவும் பொய்சூ ளஞ்சவு
மரும்பெறற் புதல்வனை *முயககங காணவு
மாங்குவந் தொழியுமென் புலவி" (கலி-75.)

என்பது உணர்தல்.

"திறனல்ல யாங்கழற யாரை நகுமிம
மகனல்லான் பெற்ற மகன்" (கலி-86.)

என்பது துனி. துனித்தலென்பது வெறுத்தல். அறுவகைப் பிரி வும் பிரிவெனவே அடங்கும். அவை மேற்காட்டப்பட்டன. (கஅஎ)

500. மெய்பெறு வகையே கைகோள் வகையே.

இது, புறத்திணைக் கைகோளுணர்த்துகின்றது.

---

* 'முயங்கக் காணவும்' என்பதும் பாடம்.

இதன் பொருள் : பொருள்கள் பெற்ற கைகோட்பகுதி அகத் திணைக் கைகோளே, என்றவாறு.

கைகோளென்பது ஒழுக்கங்கோடல். எனவே, அகத்திற்குப் புறனாயினும் புறத்திணைக்குக் கைகோள் அவ்வாறு வேறுவகைப்படக் கூறப்படாத பொதுவகையானே மறைந்த ஒழுக்கமும் வெளிப்பாடு மென இரண்டாகி அடங்கும் மறையென்றவாறு. அவை வெட்சியுள் ளும் ஒழிந்த திணையுள்ளுங் காட்டப்பட்டன. (௧௮௮)

501. பார்ப்பான் பாங்கன் றோழி செவிலி
சீர்த்தகு சிறப்பிற் கிழவன் கிழத்தியோ
டளவியன் மரபி னறுவகை யோருங்
களவினிற் கிளவிக் குரிய ரென்ப.

இது, கூற்றென்னும் உறுப்புணர்த்துகின்றது.

இதன் பொருள் : எணணப்பட்ட அறுவருங் களவொழுக்கினுள் நிகழ்ந்த கிளவிகூறிநராகவல்லது ஒழிந்தோர் கூறிநராகச் செய்யுள் செய்யப்படார், என்றவாறு.

பார்ப்பானென்பான் நன்றுந் தீதும் ஆராய்ந்து உறுதிகூறுவா னெனப்படும். பாங்கனென்பான் அவ்வாறன்றித் தலைமகன் வழிநின் றொழுகி வருமாகலின் அவனை அவன்பின் வைத்தான். தோழி அவன் போனறும பெணபாலாகலின அவளைப் பின்வைத்தான். செவிலிமாற்றருஞ் சிறுவரவிற்றுதலின் அவளை அவளின்பின் வைத் தான். அவரிற சிறந்தமையிற சீர்த்தகு சிறப்பிற் கிழவனையுங் கிழத்தி யையும் அவர்பின் வைத்தான். அவவிருவருள்ளுந் தலைமகனது கூற்றே பெருவரவினதாகலின் அவளை ஈற்றுக்கண வைத்தானென் பது. உதாரணம் :

"சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை" (கலி-9.)
என்பது பார்ப்பான் கூற்று.

" காமங் காம மென்ப காம
மணரகும் பிணியு மன்றே வினைப்பின்
முதைச்சுவற் கலித்த முற்று விளம்புன
மூதா தைவந் தாங்கு
விருந்தே காமம் பெருந்தோ ளோயே" (குறுந்-204.)

என்பது பாங்கன்கூற்று.

"ஏனல் காவ லிவளு மல்லள்"

என்பது தோழிகூற்று.

"பெயர்த்தனென் முயங்கயான் வியர்த்தன னென்றனள்"
(குறுந்-84.)

என்பது செவிலிகூற்று.

"பாலு முண்ணாள் பழங்கண் கொண்டு
னணிபசந் தனளே வினவுதி"

என்பதும் அது.

"கேளிர் வாழியோ கேளிர" (குறுந்-280.)

என்பது கிழவன்கூற்று.

"விளங்குதொடி முன்கை வளைந்துபுறஞ் சுற்றி
னின்மார் படைதலி னினிதா கின்றே"

என்பது கிழத்திகூற்று. பிறவும் அன்ன. (௧௮௧)

502. பாணன் கூத்தன் விறலி பரத்தை
யாணஞ் சான்ற வறிவர் கண்டோர்
பேணுதகு சிறப்பிற் பார்ப்பான் முதலா
முன்னுறக் கிளந்த கிளவியொடு தொகைஇத்
தொன்னெறி மரபிற் கற்பிற் குரியர்.

இதன் பொருள் : இவ்வெண்ணப்பட்ட எல்லாருஞ் சொல்லிய சொல்லாகச் செய்யுள் செய்யப்பெறுங் கற்பினுள், என்றவாறு.

முன்னுறக்கிளந்த கிளவியென்பது பொருளோக்கிற்று. இசையின் பின்னரது நாடகமாகலிற் பாணன்பின் கூத்தனைவைத்தும், பெண் பாலாகலான் விறல்பட ஆடும் விறலியைக் கூத்தன்பின் வைத்தும், அவ்வினத்துப் பரத்தையரை அதன்பின் வைத்தும், பொருட்குஞ் சிறந்தாராகலின் நற்பொருள் உணரும் அறிவரை அவர்பின் வைத்தும், எதிலராகிய கண்டோரை அவர்க்குப்பின் வைத்துங் கூறினனென்பது. இவ்வாற்றான் இவரோடு முன்னர்க் களவொழுக்கத்திற் கூறிய அறு வருங் கூறப்பெறுவரென்றவாறு. தொன்னெறிமரபின் என்றதனாற் பாகனுந் தூதனுங் கூறவும் அமையும். அவை புறப்பொருட்குச் சிறந்துவரும். அவற்றுக்குச் செய்யுள் :

"செவ்வழி நல்யா ழிசையினென் பையெனக்
கடவுள் வாழ்த்திப் பையுண் மெய்சிறுத்
தவர்திறஞ் செல்கவெனக் கண்டனென் யானே" (அகம்-14.)

எனபது பாணன்கூற்று.

"ஆடலிற் பயின்றனை யென்னோ
தென்னுரை யுண்டலிற் றெளிதல் வேண்டும்"

என்பது கூத்தன் கூற்று.

"மரநதலை மணநத நனந்தலைக் கானத்து" (நற்றிணை-394.)
என்னும் நற்றிணைபபாட்டுக் கண்டோர்கூற்று.

"விதையா கொன்ற முதையற் பூழி" (நற்றிணை-121.)
என்னும் நற்றிணைப்பாட்டுப் பாங்கன் கூற்று.

ஒழிந்தனவுங் கற்பியலுட் கூறியவாற்றான் அறிக. (கசo)

503. ஊரு மயலுஞ் சேரி யோரு
நோய்மருங் கறிநருந் தந்தையுந் தன்னையுங்

கொண்டெடுத்து மொழியப் படுத லல்லது
கூற்றவ ணின்மை யாப்புறத் தோன்றும்.

இதன் பொருள்: இவ்வெண்ணப்பட்ட அறுவகையோருஞ் சொல்லிய சொல்லாகச் செய்யுள்செய்யப்பெறார், என்றவாறு.

இவை களவிற்குங் கற்பிற்கும் பொது. கொண்டெடுத்துமொழியப்படுதலல்லதென்பது இவர் கூற்றாகப் பிறர்சொல்லினல்லது இவர் தாங் கூறாரென்றவாறு. அவை

"ஊஉ ரலரெழச சேரி சல்லென" (குறுந்-262.)

எனவும்,

"தெரிகலை நோக்கிச * * * சாய்த்தாா தலை" (கலி-39.)

எனவும் வருவன போல்வன.

'யாபபுறததோனறும' எனறதனுன அகததிணைககண இவவாறு நிலைபெற்றதென்பது. எனவே, புறத்திணைக்கண் கூறவும் பெறுமென்பது. இது நோககிப்போலுங் கூருதாரையுங் கூறுவாராயிற்றென்பது. நோய்மருநகழிநரை இடைவைத்தான் முன்னைய மூன்றும் பெண்பாலெனவும் ஒழிநதன ஆணபாலெனவும் அறிவித்தற்கென்பது. எனவே, நோய்மருங்கறிநர் பெண்பாலும ஆண்பாலுமாயினுரென்பது. (கக௧)

504. கிழவன் றன்னொடுங் கிழத்தி தன்னொடு
நற்ருய் கூறன் முற்றத் தோன்ருது.

இஃது எய்தாத தெய்வித்தது. விலக்கியல் வகையாதல் விதித்ததெனவும் அமையும்.

இதன் பொருள்: கிழவனேடுங் கிழத்தியோடும இடையிட்டு நற்ருய் கூறுதல் நிரம்பத்தோன்ருது, என்றவாறு.

நற்றாய் என்று ஒருமை கூறியவதனால் தலைமகள் தாயையேகொள்ளப்படும். இதனானே தந்தை தன்னை யென்பன போல்வனவற்றும் இஃதொக்கும். முற்றவென்றதனால் தானே தலைவனாதலால் தலைவன்தமர் டாவருங்கூறார், முற்கூறப்பட்டார் அல்லரென்பதுகொள்க. முற்றாதென்னாது தோன்றாதென்றதனாற் புறத்திணைக்கண் இவை வரைவின்றி வழக்கினோடு பொருந்துமாற்றாற் கொள்ளப்படுமென்பது. கிழவன்றன்னொடும் கிழத்திதன்னொடும் கூறாரெனவே அல்லுழிச் சொல்லப்படும் நற்றாயென்பதாம். அஃது,

"எம்வெங் காம மிடையை தாயின்
*　　*　　*
அறிந்த மாக்கட் டாகுக தில்ல
*　　*　　*
மென்றோ ளஞ்ஞை சென்ற வாறே" (அகம்-15.)

என வரும். (கககஉ)

505. ஒண்டொடி மாதர் கிழவன் கிழத்தியொடு
கண்டோர் மொழிதல் கண்ட தென்ப.

இதன் பொருள் : தலைமகனோடும் தலைமகளோடும் இடைச்சுரத்துக்கண்டோர் மொழிதல் அறியப்பட்டது, என்றவாறு.*

ஒணடொடிமாதர் கிழவனெனவே அவவிருவர் கூட்டத்துக்கண்ணுமனறி அவவிருவரோடுந் தனித்துழிக் கூற்றில்லையென்றவாறு.

* "ஒண்டொடி மாதராவாா நற்றாயும் தோழியும் செவிலியும். இவரொடும் தலைவனொடும் கண்டோர் கூறுதல் காணப்பட்ட தென்றவாறும். எனவே, ஏனையோர் கேட்பக் கூற்றில்லை யென்றவாறு" என்பது இளம்பூரணர் உரை. "ஒள்ளிய தொடியினையுடைய செவிலியோடும் தலைவனோடும் தலைவியோடும் இடைசசுரத்துக் கண்டோர் மொழிதன் முதனூலிற் கண்டதென்றவாறு" என்பது நச்சினார்க்கினியர் உரை.

கண்டதென்ற மிகையான் இடைச்சுரத்துக்கண்டோர் செவிலிக்குரைப்பனவுங் கொள்க. அவை,

" இளையண் மெல்லியண் மடந்தை
அரிய சேய பெருங்கான் யாறே "

எனவும்,

" அணித்தாய்த் தோன்றுவ தெம்மூர்
மணித்தார் மார்ப *சேர்ந்தனை சென்மே "

எனவும் வரும்.

இதனுள் ஒண்டொடி மாதர்கிழவன் எனச் செவ்வனந்தோன்றக் கூறியது தலைமகனையாதலின்,

" வில்லோன் காலன கழலே தொடியோண்
மெல்லடி மேலவுஞ் சிலம்பே " (குறுந்-7.)

என்பது செவிலிக்குக் கண்டோர் கூறியது. (ககரு)

506. இடைச்சுர மருங்கிற் கிழவன் கிழத்தியொடு
வழக்கிய லாணையிற் கிளத்தற்கு முரியன்.

இதுவும் கூற்றுவிகற்பமே கூறுகின்றது.

இதன் பொருள் : இடைச்சுரத்து உடன்போகிய கிழத்தியோடும் இவன் நீதி நூல்வகையாற் கிளத்தற்கு முரியன், என்றவாறு.

நீதிநூல்வகையாற் கிளத்தலென்பது கிழத்திதன் தமர் இடைச்சுரத்துக் கண்ணுறின் அவர்கேட்பத் தலைவிக்குச் சொல்லுவானாய் வழக்கியல் கூறுதலு முரியனென்பது. வழக்கியலாணை யென்றதனான் நீதிநூல் விதிபிறழக் கூறின் அஃது இராக்கதம்போன்று காட்டுமென்பது. உம்மையாற் கிழத்தியோடு வழக்கியலாணையானன்றி மருட்டிக் கூறவும் பெறுமென்பது.

---

* 'சேர்ந்தன' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம்.

" அழிவிலர் முயலு மார்வ மாக்கள்
வழிபடு தெய்வங் கட்கண் டாஅங்
கலமரல் வருத்தந் தீர யாழநின்
னலமென் பணைத்தோ *ளெய்தின மாகலிற்
பொரிப்பூம் புன்கி னெழிற்றகை யொண்முறி
சுணங்கணி வனமுலை †யணங்குகொளத் திமிரி
நிழல்காண் டோறு நெடிய வைகி
மணல்காண் டோறும் வண்ட றைஇ
வருந்தா தேகுமதி வாலெயிற் றோயே
நறுந்தண் பொழில கானங்
குறும்பல் லூரயாஞ் செல்லு மாறே." (நற்றிணை-9.)

என்பதனுள் வருந்தாதேகுமதியெனவே வழிபடு தெய்வங் கட்கண்டால் விடுவார் இல்லாதது போல நின்னை விடுதல் எனக்கு அறனன்றெனக் கூறி மெல்லெனச் செல்கவென மருட்டிக் கூறியவாறு காண்க. (கககச)

50 . ஒழிந்தோர் கிளவி கிழவன் கிழத்தியொடு
மொழிந்தாங் குரிய முன்னத் தினடுத்தே.

இதுவுங் கண்டோர் கூற்று.

இதன் பொருள்: மேலைச்சூத்திரத்துக் கூறிய தலைமகனையுந் தலைமகளையும் ஒழித்து ஒழிந்தோரெனப்படுவார் கண்டோரெனப்படுப. அவர்கூற்றுங் கிழவன் கிழத்தியொடு மொழிந்தாங்கு வழக்கியலாணையிற் கிளத்தற்கும் உரியராகி முன்னத்தினடுத்துக் கூறுப, என்றவாறு.

முன்னத்தினடுத்தென்பது அதிகாரத்தான் அறநூற்குத்தக ஒத்தினடுத்துரைப்பவென்றவாறு. அவை,

" பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினு மலைககவை தா மென்செய்யு
நினையுங்கா லும்மக ளுமக்குமாங் கனையளே " (கலி-9.)

என்றாற்போல்வன.

* 'எயதினமாயின்' எனபதும பாடம.
† 'அணங்குபடத் திமிரி' என்பதும் பாடம்.

இவ்வாறு வழக்கிடலாணையாற் கிளவாது வாளாதே அவரைக் கண்டனமெனவும் அவரின்னுழிப் புகுவரெனவுஞ் சொல்லுவன 'கண்டோர் மொழிதல் கண்டதென்ப' (தொல்-செய்-193) என புழிக் கூறினும். (கசக)

## 508. மனையோள் கிளவியுங் கிழவன் கிளவியு நினையுங் காலைக் கேட்குந ரவரே.

இது, கேட்போரென்னும் உறுப்புணர்த்துகின்றது.

இதன் பொருள் : முன்னர்க் கூற்றிற்குரியரெனப்பட்ட பன்னிருவருட் கேட்டற்குரியார் தலைமகனுந் தலைமகளும் ஒழிந்து ஒழிந்த பதின்மரும், என்றவாறு.

அவர் கேட்பனவும் அவ்விருவர் கிளவியுமேயெனவுந் தத்தங் கிளவி கேளாரெனவுங் கூறியவாறு. மனையோள் கிளவியுங் கிழவன் கிளவியுமெனபதனை மேற்போயின கூற்றிற்குங் கூட்டியுரைக்க. உரைக்கவே கூறுவனவுங் கேட்பனவுமெல்லாம் அவ்விருவர் கிளவியுமேயெனவுந் தத்தங்கிளவி கூறவுங் கேட்கவும் பெறுரெனவுங் கூறியவாறாயிற்று. இங்ஙனம் விலக்குப்பட்டனவற்றுள் வேறுபடவருவனவும் மேற்கூறுகின்றும். மற்றுக் கூற்றுக்கு உரியரெனப்படுவோர் அவ்வயின் தலைவியுந் தலைவனுங் கூறக் கேளாரோவெனின் அவை தங்கிளவியாகலின தாங்கேட்டல் விதந்தோதவேண்டுவதன்றென்பது. 'நினையுங்காலை' யென்றதனுல் தலைமகள் சொல்லக்கேட்போருந் தலைமகன் சொல்லக் கேட்போருந் தலைவனுந் தலைவியுந் தம்முட் கேட்டனவற்றுக்குரியனவும் ஆராய்ந்து கொள்ளப்படும் மேற்கூறிய வகையானென்பது. எனவே, தலைமகன் கூறப் பரத்தைகேட்டலுந் தலைமகள் கூறப் பரத்தைகேட்டலும் முதலாயின புலனெறி வழக்கிற்கெய்தாதன விலக்கப்பட்டன. ஒழிந்தனவற்றுட் சில வருமாறு :

> "விளங்குதொடி முன்கை வளைந்துபுறஞ் சுற்ற
> நின்மார் படைதலி னினிதா கின்றே"

என்னுந் தலைமகள் கூற்றுத் தலைமகன்கேட்டது.

"நின்கேள் புதுவது பன்னூலும் பாராட்ட
யானு மிதுவொன் றுடைத்தென வெண்ணி"

எனவும்,

"மாலையு முள்ளா ராயிற் றலைவர்
யாங்கா குவநகொல் பாண" (அகம்-14.)

எனவும்,

"முயங்கின் றனனென் மெய்யென் றனைஇ" (அகம்-17.)

எனவும்,

"*ஒண்டா ரகலமு முண்ணுமோ பலிமே" (குறுந்-362.)

எனவும்,

"நல்லீரு மெனமெசய்த் ரென்னை நகுதிரோ" (கலி-142.)

எனவும் இன்னோரன்னவெல்லாந் தோழியும் பாணனுஞ் செவி லியுங் கண்டோரும் அறியாநிற்பக் கேட்பத் தலைமகள் கூற்றுவந்தன. பிறவும் அன்ன.

"இடிக்குங் கேளிர் நுங்குறை யாக" (குறுந்-58.)

எனவும்,

"எலுவ சிறாஅ ரேமுறு நண்ப" (குறுந்-129.)

எனவும்,

"வளர்க பாக வொருநின் கிழிய"

எனவும்,

"பேரமர் மழைக்கணின் றோழி யறியே
லாரஞ் செவ்வன் களைபா யோவென" (கலி-60.)

எனவுஞ்,

"சான்றவிர் வாழியோ சான்றவி ரென்னும்" (கலி-139.)

* 'தண்டாரகலமும்' என்பதும் பாடம்.

எனவும் இவை பார்ப்பானும் பாங்கனுந் தோழியுங் கண்டோருங் கேட்போராகத் தலைமகன் கூற்று நிகழ்ந்தன. பிறவும் அன்ன. இனி 'ஒன்றித்தோன்றுந் தோழி' (தொல்-அகத்-39) என்றமையின் தோழிகூற்றுந் தலைமகள் கூற்றேயாமென்பது. (கஅ௫)

509. பார்ப்பா ரறிவ ரென்றிவர் கிளவி
யார்க்கும் வரையார் யாப்பொடு புணர்ந்தே.

இதுவுமது.

இதன் பொருள்: இது மேற்கூறிய பார்ப்பாரும் அறிவருங் கூறியகூற்றுக கேட்போரை இன்னாரென்று வரையப்படாது, என்றவாறு.

'யார்க்கும்' என்றது அகத்திணையோர்க்கும் புறத்திணையோர்க்கு மென்றவாறு. யார்க்கும் வரையா ரெனறதனை எச்சப்படுத்துச் சிலர்க்கு வரையப்படுமென்பது கொள்க. என்னை? பார்ப்பார்கூற்றுத் தலைமகனுஞ் செவிலியும் நற்றாயுங் கேட்பினல்லது பிறர்கேளார். அறிவர் கூற்றுந் தலைமகளுந் தோழியுஞ் செவிலியும் நற்றாயுங் கேட்டற்குரியர்.

புறத்திணைக்கண்ணும் பொது வியற்கரந்தையோர்க்கும பார்ப்பார் கிளவி இயலாவெனவும் அறிவர்கிளவி எறகுமெனவும் பிறவு மின்னோரன்ன கொள்க. யாப்பொடுபுணாநதென்பது அகப்பொருளும் புறப் பொருளுமாக யாக்கப்படுஞ் செய்யுளெல்லாவற்றோடும பொருந்து மென்றவாறு. இவர் கிளவி வரையப்படாதெனவே அவர்வாயிலாகிய வழித் தலைமகள் வாயின்மறுத்தலில்லையெனபதூஉம புறத்திணைத்தலை வர்க்கும அவ்வாறே வழிநிற்றல் வேண்டுமென்பதூஉங் கூறியவாறு பிற்று. என்னை? அறிவரெனப்படுவோர் மூன்றுகாலமுந் தோன்ற நன்குணர்ந்தோரும் புலனன்குணர்ந்த புலமையோரு மாகலானும், இனிப் பார்ப்பாரும் அவ்வாறே சிறப்புடையராகலானும், அவர்வழி நிற்றல் அவர்க்குக் கடனாகலானுமென்பது. (கஅள)

## 510. *ஒருநெறிப் பட்டாங் கோரியன் முடியுங் கருமம் நிகழ்ச்சி யிடமென மொழிப.

இதனுள் இடமெனப்பட்ட உறுப்புணர்த்துகின்றது.

இதன் பொருள் : பலவும் ஒருவழிப்பட்டு ஓரிலக்கணத்தான் முடியுங் கருமநிகழ்ச்சியை இடமென்று கூறுப, என்றவாறு.

இடமெனினுங் களமெனினும் ஒக்கும். ஒரு செய்யுட்சேட்டால் இஃது இன்னவிடத்து நிகழ்ந்ததென்று அறிதற்கேதுவாகிய தோர் உறுப்பினை இடமென்றானென்பது. ஒரு நெறிப்படுதலென்பது ஒரு வழிப் பலவுந்தொகுத்தல். ஓரியலென்பது அவற்றுக்கெல்லாம் இலக்கணமொன்றுதல். அஃதாவது, காட்சியும ஐயமுந் துணிவும் புணர்ச்சியும் பிரிவச்சமும் வன்புறையுமென்று இன்னோரன்ன எல்லாம் ஒரு நெறிப்பட்டு இயற்கைப்புணர்ச்சியென்னும ஓரிலக்கணத்தான முடியு மென்பது. கருமநிகழ்ச்சியென்பது காமப்புணர்ச்சியென்னுஞ் செயப் படுபொருணிகழ்ச்சி. அஃது இடமெனப்பட்டது. இது வினைசெய் யிடம். நிலமாயின முன்னர்த் திணையெனப்பட்டன. காலம் முன் னர்ச் சொல்லுதும்.

"எலுவ சிறாஅ ரேமுறு நண்ப" (குறுந-129.)

என்னும் பாட்டும்,

> "சேஎியர் வாழியோ சேஎியர் நாளுமென
> னெஞ்சுபிணிக் கொண்ட வஞ்சில் லோதிப்
> பெருநதோட் குறுமகள் சிறுமெல் லாகம்
> மொருநாள் புணரப் புணரி
> னரைநாள் வாழ்க்கையும் வேண்டலென் யானே"
>
> (குறுந்-280.)

என்னும் பாட்டும் பாங்கற்கூட்டமே இடனாக ஒருவழிப்பட்டன. என்னை? நின்வேறுபாடு எற்றினானாயிற்றென்று வினவிய பாங்கற்கு இதனினானாயிற்றென்று உரைத்ததூஉம் அதற்குப் பாங்கன் கழறி

* இச் சூத்திரம் இளம்பூரணர், நச்சினார்க்கினியர் உரைப்பிரதி களில் இல்லை.

னே எதிர்மறுத்ததூஉமென இரண்டும் பாங்கற்கூட்டத்துப் பட்டு ஓரியலான் முடிந்தன. அவை மேற்கூறியவகையானே கண்டு கொள்க. (கக அ)

511. *பரத்தை வாயி லெனவிரு கூற்றுங்
கிழத்தியைச் சுட்டாக் கிளப்புப் பயனிலவே.

இது பயனில் கூற்றுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: பரத்தையும் வாயில்களுமென்னும் இரண்டு வேறுபாட்டினகண்ணும் எழுந்த கிளவி கிழத்தி கேட்பாளாகக் கருதிச் சொல்லாக்காற் பயமில, என்றவாறு.

கிழத்தியைச் சுட்டுதலெனவே பாங்காயினோர் கேட்பச் சொல்லினும் அமையுமென்பதாயிற்று.

"செறிதொடி தெளிர்ப்ப வீசிச் சிறிதிய
னுலமந்து வருகஞ் சென்மோ தோழி" (அகம்-106.)

என்றக்கால் தலைவிக்குப் பாங்காயினோர் கேட்பச் சொல்லிக்கூறல் வேண்டுமென்பது. வாயில்களுந் தலைமகளை உடன்காப்ப அல்லது சொல்லாராதலான தலைமகள் கேட்பாளாகச் சொல்லவேண்டுமென்பது. சுட்டாக்கிளப்புப் பயனிலவென்றதனான் வாயில்கள் கூறுவனவுங் கிழத்திக்குப் பாங்காயின தோழி கேட்பச் சொல்லினும் அமையும். அவற்றுக்குச்செய்யுள் .

"நருயிர் மாதராகலி
னிவளுந் தேரா துணறன மனனே"

இது கிழத்திகேட்ப வாயில்கள் கூறியது. தோழிகேட்பச் சொல்லியதூஉமாம். (கக க)

* 'பரத்தை வாயிலெனவிரு வீற்றும்' என்பது இளம்பூரணர் உரைப்பிரதியிலும் நச்சினார்க்கினியர் உரைப்பிரதியிலும் கண்டபாடம்.

512. வாயி லுசாவே தம்முளு முரிய.

இதன் பொருள் : மேனின்ற அதிகாரத்தால் தலைமகளைச் சுட்ட, ஒருவரொருவர்க்குரைப்பார்போல வாயில்கள் தம்முட் கூறவும் அமை யும், அவையுந் தலைமகள் கேட்பன, என்றவாறு.

அதற்குச் செய்யுள் :

"தண்ணந் துறைவன் கொடுமை
நம்மு ளாணிக் காப்பா மெமே" (குறுந்-9.)

எனபது பாணர்க்குரைத்தது. உடமை எதிர்மறை. கேட்கு நள அவளென்றவாறன்றித் தம்முள தாங் கேட்டல் சிறுபான்மை யெனக்கொள்க. (உ00)

513. ஞாயிறு திங்க ளறிவே நாணே
கடலே கானல் விலங்கே மரனே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
யவையல பிறவு நுவலிய நெறியாற்
சொல்லுந போலவுங் கேட்குந போலவுந்
சொல்லியாங் கமையு மென்மனார் புலவர்.

இது, கேளாதன சில பொருள், கேட்டனவாகப் பொருளியலுள் வழுவமைக்கப்பட்டனவற்றை இலக்கணவகையாற் கூறினவுங் கேட் குநவும் ஆகற்கண்ணும் ஆராய்கின்றுரெனனபது.

இதன் பொருள் : ஞாயிறுந் திங்களும் அறிவும் நாணுங் கடலுங் கானலும் விலங்கும் மரனும் பொழுதும் புள்ளும் நெஞ்சும் இன்னோ ரன்னபிறவும் மேற பொருளியலுள 'செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கியும்' (தொல்-பொரு-2) என்று பொதுவகையாற் கூறியவாற் றுன் அவைதாஞ் சொல்லுவனபோலவுங் கேட்பனபோலவுஞ் சொல்ல அமையும், எனறவாறு.

ரண்டுக் கூற்றும் உடன்கூறினுன் மேலிவற்றை வரையறுத்துக் கூற்றிற்கு உரியவென்றிலனுகலின. புலம்புறுபொழுதென்பது மாலை யும் யாமமும் எற்பாடுங் காருங் கூதிரும் பனியும் இளவேனிலும்

போல்வன. பிறவுமென்றதனால் புல் புதல் முதலியன கொள்க. அவற்றுட் சிலவருமாறு :

> " கதிர்பகா ஞாயிறே கல்சேர்தி யாயி
> னவரை நினைத்து நிறுத்தென்கை நீட்டித
> தருகுவை யாயிற் றவிருமென் னெஞ்சத்
> துயிர்திரியா மாட்டிய தீ" (கலி-142.)

என்றாற்போல்வன கண்டுகொள்க. (உ0க)

## 514. இறப்பே நிகழ்வே யெதிர தென்னுந் திறத்தியன் மருங்கிற் றெரிந்தன ருள்ளப் பொருணிகழ் வுரைப்பது கால மாகும்.

இது, காலமுணர்த்துகின்றது.

இதன் பொருள் : *மூன்றுகாலத்தினும் நிகழ்கின்ற நிகழ்ச்சி †அச்செய்யுளுட்டோன்றச் செய்யிற் காலமென்னும் உறுப்பாம், என்றவாறு.

பொருணிகழ்ச்சியைக் காலமென்றதென்னை? காலமென வேறு பொருள் இல்லதுபோலவெனின், அஃது ஆண்டாராய்ச்சியின்று நியாயநூலாராய்ச்சி யெனக.

" வில்லோன் காலன கழலே * * * " (குறுந-7.)

என்னும் பாட்டினுள் வில்லோனும் தொடியோளும் பொருளெனப்படுமே; " வேய்பயி லழுவ முன்னி யோரே " என்பது அப் பொருணிகழ்ச்சியான் இறந்தகாலமெனப்படும். அப்பாட்டிறகுச் சிறந்தார் அவராகலின் அவரே பொருளாயினாரென்பது.

* 'மூன்றுகாலத்தினையும்' என்பதும் பாடம்.
† 'அச்செய்யுட்டோன்ற' என்பதும் பாடம்.

" மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே "
(குறுந்-71.)

என்பது நிகழ்காலம்;

" பகலும் பெறுவையிவ டடமென் றோளே " (கலி-49)

என்பதெதிர்காலம்.

புறத்திற்கும் இவ்வாறே இன்றியமையாதெனபது பெரும்பொழுது சிறுபொழுதென்பன ாண்டுத திணையெனப்பட்டடங்கின. என்னை ? முதலுங் கருவும் உரிப்பொருளுங் கூட்டித் திணையாகலின்.

515 இதுநனி பயக்கு மிதனு னென்னுந்
தொகைநிலைக் கிளவி பயனெனப் படுமே.

இது முறையானே பயனெனனும உறுபபுணர்த்துகின்றது.

இதன் பொருள்: இது மிகவும பயக்கும இதனுனென்னத் தொகுத்துச சொலலப்படுபொருள பயனெனனும உறுபபாம், என்றவாறு.

" * மாறுக் காதலர் மலைமறந் தனரே * * * மாறே."

என்னும பாட்டுத் தோழி தூதுவிடுவாளாதற் பயன்பட வந்தது. இவவாறெல்லாப் பாட்டும பயனுறுப்பாகவன்றி வாராமையுணர்க. இவை புறத்திற்கும் ஒக்கும். (உ0௬)

516. உய்த்துணர் வின்றித் தலைவரும் பொருளான்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும்.

இது, மெயபபாட்டுறுப்புணர்த்துகின்றது.

இதன் பொருள : உய்த்துணாசசியினறி அவவிடத்து வந்த சொல்லப்படும்பொருள் தானே வெளிபபட்டாங்குக் கண்ணீரரும்பன் மெய்ம்மயிர் சிலிர்த்தன் முதலாகிய சத்துவம் படுமாற்றான் வெளிப்படச செய்வது மெய்ப்பாடென்னும் உறுப்பாம், என்றவாறு.

---

* இச்செய்யுளை 371 ஆம் பக்கத்திற் காண்க.

கவிப்பொருளுணர்ந்தால் அதனானே சொல்லப்படு பொருள் உய்த்து வேறுகண்டார்க்கு அறிதலை மெய்ப்பாடென்றான், அது தேவருலகங்கூறினும் அதனைக் கண்டாங்கறியச் செய்தல் செய்யுளுறுப்பாம் என்றவாறு. அவை,

"மையற விளங்கிய மணிமரு ளவ்வாய்தன்
மெய்பெறா மழலையின் விளங்குபூ ணனைத்தர"

(கலி-81.)

என்றாற்போல வருவன. தலைவரும் பொருளானெனவே நோக்குறுப்பாதல், உணர்ந்தபொருள் பிழம்பினைக் காட்டுவது; மெய்ப்பாடென்பது இதன் கருத்து. இக்கருத்தினாற் 'கவி கண்காட்டும்' எனவுஞ் சொல்லுப. (உ0அ)

517. எண்வகை யியனெறி பிழையா தாகி
முன்னுறக் கிளந்த முடிவின ததுவே.

இஃது, எய்திய திகந்துபடாமைக் காத்தது.

இதன் பொருள் : இதுவும் மேற் கூறப்பட்ட மெய்ப்பாடே, பிறிதிலக்கணத்தனவென்று கொள்ளற்க, என்றவாறு.

எனவே,

'நகையே யழுகை யிளிவரன் மருட்கை
யச்சம் பெருமிதம் வெகுளி யுவகை' (தொல்-மெய்ப்-3.)

என அவை நந்நான்காமெனவும் மெய்ப்பாட்டியலுட் கூறியவாறெல்லாம் பிறவாற்றான் வேறுபடுவனவுங் கொள்ளப்படுமென்றவாறு. (உ0௯)

518. சொல்லொடுங் குறிப்பொடு *முடிவுகொளியற்
புல்லிய கிளவி யெச்ச மாகும். [கை

இஃது, எச்சங் கூறுகின்றது.

* 'முடிவுகொளியல்' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம்.

இதன் பொருள் : கூற்றினானுங் குறிப்பினானும் முடிக்கப்படும் இலக்கணத்தோடு பொருந்திய கிளவி எச்சமென்னும் உறுப்பாம், என்றவாறு.

முடிவுகொளியற்கை யெனவே செய்யுளின்கணணை தன்றிப் பின் கொணர்ந்து முடிக்கப்படுமென்பது பெற்றாம். உதாரணம் :

"செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
* * * காந்தட்டே" (குறுந்-1.)

எனச் செய்யுண்முடிந்தவழியும், இவற்றான் யாங் குறையுடையேம் அல் லமென்று தலைமகற்குச்சொன்னாளேல் அது கூற்றெச்சமாம். என்னை? அவ்வாறு கூறவுஞ் சிதைந்ததின்மையின். தலைமகட்குச் சொன்னா ளேல் அது குறிப்பெச்சம். என்னை? அது காணப்பாயாகிற் காமெ னத் தலைமகளை இடத்துய்த்து நீக்கிய குறிப்பினளாகி அது தான் கூறு ளாகலினென்பது. (உ0௬)

519. இவ்விடத் திம் மொழி*யிவரிவர்க்குரியவென் றவ்விடத் தவரவர்க் குரைப்பதை முன்னம்.

இது, முன்னமென்று கூறப்பட்ட உறுப்புக் கூறுகின்றது.

இதன் பொருள் : யாதோரிடத்தானும் யாதானு மொருமொழி தோன்றியக்கால் இம்மொழி சொல்லுதற்குரியாருங் கேட்டற்குரியா ரும் இன்னாரென்று அறியுமாற்றான் அங்ஙனம் அறிதற்கு ஓரிடம் காட்டி அவ்விடத்துக் கூறுவாற்குங் கேட்பாற்குமேற்ற செய்யுட்க ளாகச் சொல்லுவது முன்னம், என்றவாறு.

இவரிவர்க்குரியவென்று அறியான் செயயுட்கேட்டானெனவும், அவ்விடத்தவரவர்க் குரைக்கவென்றான் ஆசிரியனெனவுங் கொள்க. என்றென்பது எனவெனபதுபோலச் சொல்லினெச்சமாதலும் வினை யெச்சமாதலும் உடைமையின் இஃது 'எனவெ னெச்சம் வினையொடு

* 'இவரிவர்க்குரியரென்று' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம்.

முடிமே' (தொல்-சொல்-எச்-42) என்பதோர் வினையெஞ்சி நிற்கும். அவ்வினை தான் எச்சமாகலான் உரைப்பதையென்னும் வினைகொண்டு முடியுமென்பது.

"யாரிவ னெங்கூந்தற் கொள்வா னிதுவுமோ
ரூராண்மைக் கொத்த படிறுடைத்து" (கலி-89.)

என்றக்கால் இம்மாற்றஞ் சொல்லுகின்றாள் தலைவியெனவுஞ் சொல்லப்பட்டான் தலைமகனெனவும் முன்னத்தான் அறியப்படுத்தலின் இது முன்னவுறுப்பாயிற்று. ஒழிந்தனவற்றிற்கும் இஃதொக்கும். இவையெல்லாம், அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாகக் கூறுகின்றானென்பது. (உ0எ)

520. இன்பமு மிடும்பையும் புணர்வும் பிரிவு
மொழுக்கமு மென்றிவை யிழுக்குநெறி யின்றி
யிதுவா கித்திணைக் குரிப்பொரு ளென்னது
பொதுவாய் நிற்றல் பொருள்வகை யென்ப.

இது, பொருள்வகை கூறுகின்றது.

இதன் பொருள்: இன்பமுந் துன்பமும் புணர்தலும் பிரிதலும் ஒழுக்கமுமெனபபட்ட இவை இழுக்காதவாற்றான் இத்திணைக்கு இது பொருளென்று ஆசிரியனோதிய உரிப்பொருளன்றி அவற்றுக்கெல்லாம் பொதுவாகப் புலவனாற் செய்யப்படுவது பொருட்கூறெனப்படும், என்றவாறு.

வகையென்றதனாற் புலவன்றான் விரித்தல் வகைத்துப் பொருளென்றுகொள்க. அஃதன்றிச் செய்யுள் செய்தலாகாதென்பது இதன் கருத்து. அவை,

"பிடிக்கை யன்ன பின்னகந் தீண்டித்
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ"
(அகம்-9.)

என்றாற்போலச் செய்யுள் செய்தவன் தானே வகுப்பன வெல்லாங் கொள்க. இது பாலைப்பாட்டினுள் வந்ததாயினும் முல்லை முதலாய வற்றுக்கும் பொதுவாமென்பது. பொதுமையென்பது எல்லாவுரிப் பொருட்கும் ஏற்கப் பலவேறு வகையாற்செய்தல். (உ0அ)

521. அவ்வ மாக்களும் விலங்கு மன்றிப்
பிறவவண் வரினுந் திறவதி னாடித்
தத்த மியலின் மரபொடு முடியி
னத்திறந் தானே துறையெனப் படுமே.

இது, துறையென்னு முறுப்புணர்த்துகின்றது.

இதன் பொருள் : ஐவகை நிலத்திற்கும் உரியரெனப்படும் பல் வேறு வகைப்பட்ட மக்களும் மாவும் புள்ளும் ஒழிவந்தவாறன்றிப் படைத்துச் செயினும் அவ்வத்திணைக்கேற்ற இலக்கணமும் வரலாற்று முறைமையும் பிறழாமைச செய்யின் அது மார்க்கமெனப்படும், என்ற வாறு.

"ஊர்சகா னியந்த பொதும்பரு ணீர்க்கால்" (கலி-56.)

என்னுங் கலியினுள்,

"சொழுவிழன் ஞாழன் முதிரிணர் கொண்டு
கழுமமுடித் தழுத கண்கூடு கூழை"

என செய்தற்றலைமகள்போலக் கூறி அவளை மருதநிலத்துக் கண்டான் போல "ஊர்க்கா னியந்த பொதும்பருள்" எனவுஞ் சொல்லிப் பின் னர்க் குறிஞ்சிப் பொருளாகிய புணர்தலுரிப்பொருளான் முடித்தான்; அவ்வாறுமயங்கச்செய்யினுங் குறிஞ்சித் துறைபபாற்படச் செய்தமை யின் அத்துறைபுறப்பான் வந்ததென்பது. இதுவும் மேலைப் பொருள் வகைபோலப் புலவராற் செயதுகொள்ளப்படுவதாகலான் அதற்குப் பின் வைத்தானென்பது. மற்று 'எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்' (தொல்-அகத்-19) என்பதனான் இது முடியாதோவெனின், அது, கருப்பொருண் மயங்குதற்குக் கூறினன், இது மக்களையன்றித்

தலைவனுந் தலைவியும் மயங்குமாறும் நான்குதிணையும ஒன்றொன்றனோடு மயங்குமாறுங் கூறி அது புலவராற் செய்துகொள்ளுவதோர் உறுப்பெனவும் ஓதிவந்த இலக்கணத்ததன்றாயினும் அது பெறுமெனவுங் கூறினானென்பது. (உ0௬)

522 அகன்றுபொருள்கிடப்பினும் அணுகிய நிலையினு
மியன்றுபொருண்முடியத் தந்தனருணர்த்தன்
மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்.

இது, மாட்டென்னும உறுப்புணர்த்துகின்றது.

இதன் பொருள் : பொருள கொள்ளுங்கால் அகன்று பொருள் கிடப்பச் செய்யினும அணுகிக் கிடப்பச் செய்யினும் இருவகையானுஞ் சென்று பொருள்முடியுமாற்றாற் கொணர்ந்துரைப்பச் செய்தலை மாட்டென்னும் உறுப்பென்று சொல்லுவார் செய்யுள் வழக்கின், என்றவாறு.

இதுவும நால்வகைப் பொருள்கோளன்றி வேறு புலவரது செய்கை. அது,

" முட்டாச் சிறப்பிற் பட்டினம பெறினும
வாரிருங் கூந்தல் வயங்கிழையொழிய
வாரேன *வாழிய நெஞ்சே" (பத்து-பட்டின-218-220.)

என நின்றது, பின்னர்,

" வேலினும் வெய்ய கானமவன
கோலினுந் தண்ணிய தடமென தோளே"

(பத்து-பட்டின-300-301.)

எனச் செயததாகச் சென்றுபொருள் கோடலின் அஃது அகன்று பொருள் கிடப்பினும் இயன்று பொருண்முடிய உரைப்பதாம.

---

* 'வாழியென் னெஞ்சே' என்பதும் பாடம்.

"திறந்திடுமின் தீயவை பிற்காண்டு மாத
ரிறந்து படிற்பெரிதா மேதம்" (முத்தொள்ளாயிரம்-42.)

என்பது அனுகிய நிலையெனப்படும். மாட்டுதலென்பது கொளுத்துதல். (உ௪௦)

## 523. மாட்டு மெச்சமு *நாட்ட லின்றி
## யுடனிலை மொழியினுந் தொடர்நிலை பெறுமே.

இது, மேற்கூறியவற்றுள் ஒரு சாரனவற்றுக்குப் புறனடை.

இதன் பொருள் : மேற்கூறிய எச்சமும் மாட்டும் இன்றியும் அச்செய்யுளுட் கிடந்தவாறே அமையச்செய்யவும் பெறுஞ் செய்யுள், என்றவாறு.

எச்சமும் மாட்டும் என்னுது மாட்டு முற்கூறிய தென்னையெனின் எச்சம் முதலாகிய ஐந்து உறுப்பும் இவ்விதி பெறுமென்று கோடற்கு எதிரென்று தழீஇயினுனென்பது. †உதாரணம் :

"வாரா ராயினும் வரினு மவர்நமக்
கியாரா கியரோ தோழி * * *
என்னு மினள்சொ லென்னு தோரே" (குறுந்-110.)

என்பது எசசமின்றிவநதது.

"தாமரை புரையுங் காமர் சேவடி" (குறுந்-கடவுள்வாழ்த்து.)

என்பது முன்னமின்றி வந்தது.

"மருந்தெனின மருநதே" (குறுந்-71.)

என்பது பொருளின்றி வந்தது.

"ஈயற்புற்றத் தீம்புறத் திறத்த" (அகம்-8.)

என்பது துறைவகையின்றி வந்தது.

"யானே யீண்டையேனே" (குறுந்-54.)

---

* 'நாட்டமின்றி' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம்.

† பேராசிரியர் மேற்சூத்திர வுரையில் மாட்டுக்கு உதாரணமாகக் காட்டிய பட்டினப்பாலை அடிகளை நச்சினுர்க்கினியர் இப்புறனடைச் சூத்திரத்துக்கு உதாரணமாகக் கொண்டுள்ளார்.

என்பது மாட்டின்றி வந்தது. இடைநின்ற மூன்றனை இலேசினாற் கொண்டு இரண்டினை எடுத்தோதினான் இவை இரண்டும் அவற்றது துணையின்றி அமையாச் சிறப்பினவல்ல என்றற்கென்பது. (உகக)

524. வண்ணந் தாமே நாலைந் தென்ப.

இது, முறையானே ஈற்றுநின்ற வண்ணம் இத்துணைப்பகுதித் தென்கின்றது.

இதன் பொருள் : வண்ணம் இருபது வகைப்படும், என்றவாறு.

வண்ணமென்பது சந்தவேறுபாடு. நூல் பலவாகி வேறுபடினும் அவை ஈண்டடங்குமென்பதூஉம் அவ்வேறுபாட்டானெல்லாஞ் சந்த வேற்றுமை செய்யவென்பதூஉங் கூறியவாறு. அது நுண்ணுணர் வுடையார்க்குப் புலனாமென்பது. (உகஉ)

525. அவைதாம்,
பாஅ வண்ணந் தாஅ வண்ணம்
வல்லிசை வண்ண மெல்லிசை வண்ண
மியைபு வண்ண மளபெடை வண்ண
நெடுஞ்சீர் வண்ணங் குறுஞ்சீர் வண்ணஞ்
சித்திர வண்ண நலிபு வண்ண
மகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ண
மொழுகு வண்ண மொரூஉ வண்ண
மெண்ணு வண்ண மகைப்பு வண்ணந்
தூங்கல் வண்ண மேந்தல் வண்ண
முருட்டு வண்ண முடுகு வண்ணமென்
றாங்கன மறிப வறிந்திசி னோரே.

இது, மேற்கூறப்பட்ட வண்ணங்களது பெயர்வேறுபாடு கூறுகின்றது.

இதன் பொருள்: மேற்சொல்லிய நாலேந்து வண்ணமும் இவ்விரு பது பெயர் வேறுபாட்டினவென்று சொல்லுப அவற்றை உணர்ந்த ஆசிரியர், என்றவாறு.

இது முறையாயினவாறென்னையெனின இது வரலாற்று முறைமையென்றற்கு ஆங்கனம் அறிப அறிந்திசிஞேரென்ருனென்பது. அவையாமாறு சொல்லுகின்ருன். (உகங)

526. அவற்றுட், பாஅ வண்ணஞ்
சொற்சீர்த் தாகி நூற்பாற் பயிலும்.

இது, சிறுத்த முறைபானே பாஅவண்ண முணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : பாஅவண்ணமென்பது நூற்பா வண்ணம், என்றவாறு.

எற்றுக்கு? நூற்பாற்பயிலுமெனறமையின். இது சொற்சீரடித்தாகி வருமென்பது. இதனுட் பயிலுமெனவே அந்நூற்பாவினுளல்லது அகவலுள் இத்துணைப் பயிலாதென்பது. இது 'வடவேங்கடந் தென்குமரி' (தொல்-பாயிரம்) எனவும், 'எழுத்தெனப்படுப, அகரமுத னகர விறுவாய் முப்பஃ தென்ப' (தொல்-எழுத்து-நூன்-1) எனவும், 'அவற்றுள், அஇஉ,எஒ என்னு மப்பா லைந்தும்'(தொல்-எழுத்-நூன்-3) எனவும் பயினறுவரும்.

"பெரியகட்பெறினே" (புறம்-235) என்பது சொற்சீராகி அகவலுட் பயிலாதுவந்தது. சொற்சீரடியென்னுது சொற்சீரென்ருன் அடியோடு தொடராதுஞ் சொற்சீர் வருமாதலினென்பது. இவை 'நன்றுபெரிதாகும்' (தொல்-சொல்-உரிச்-45) என்ருற்போல வேருகிசிற்பன. இவை கலியுள்ளும் பரிபாடலுள்ளுஞ் சொற்சீர்வருமென மேற்கூறினுகலின் அவற்றுள்ளுஞ் சந்தவேற்றுமைப்பட்டன பாஅ வண்ணமேயாமென்பது. (உகச)

**527. தாஅ வண்ண**
**மிடையிட்டு வந்த வெதுகைத் தாகும்.**

**இதன் பொருள்:** இடையீடுபடத் தொடுப்பது தாஅவண்ணம், என்றவாறு.

அவை பொழிப்பும் ஒரூஉவு மாகலின் எதுகையென வரைந்து கூறினானென்பது. அடியிடையிட்டு வருவது தொடைவேற்றுமையாவ தல்லது வண்ணவேற்றுமை யாகாதெனபது. ஒருசெய்யுளுட் பல அடிவந்தால் அவை எல்லாம் இடையிட்டுத் தொடுத்தல்வேண்டுமோ வெனின், வேண்டா; அவை வந்தவழித் தாஅவண்ண மெனப்படுமென் பது. எனவே, இவ்வண்ண வகைகளெல்லாஞ் செய்யுண்முழுவதுமே பெறுவனவாகக் கொள்ளக்கிடந்தனவல்ல. இவற்றை உறுப்பென்ற தன்மையாற் கந்தருவ நூலார் வண்ணங் கூறியவாறுபோல ஒருசெய்யு ளுட் பலவும் வரப்பெறுமெனபதாம். அவை "உலக முவப்ப வல னேர்பு திரிதரு" (திருமுரு-1) எனவும், "உள்ளாா கொலலோ தோழி முள்ளுடை" எனவும வரும. பிறவும அன்ன. (உகரு)

**528. வல்லிசைவண்ணம் வல்லெழுத்துப்பயிலும்.**

**இதன் பொருள்:** வல்லிசைவண்ணம வலலெழுத்துப பயின்று வரும், என்றவாறு.

வல்லெழுத்துப் பயின்றுவருதலான் அப்பெயாத்தாயிற்று. "முட் டாச் சிறப்பிற் பட்டினம பெறினும்" (பத்து-பட்டின-218) எனவும், "முட்டாட்டாமரைத் துஞ்சி" (பத்து-திருமுரு-73) எனவும வரும. பிறவும் அன்ன. (உகசு)

**529. மெல்லிசைவண்ண மெல்லெழுத்து மிகுமே.**

**இதன் பொருள்;** மெல்லெழுத்து மிகுவது மெல்லெழுத்துவண் ணம், என்றவாறு.

ஒரு செய்யுண்முழுவதும் ஓரினத்தெழுத்தே பயிலச்செய்தால் இன்னாதாதலின் இவை உறுப்பெனப்பட்டு இடையிட்டு வருமென்று

னென்பது. அவ்வாறு செய்யின் அவை மிறைக்கவியெனப்படும். ஒழிந்த எழுத்திற்கும் இஃதொக்கும். "பொன்னி னன்ன புன்னை நுண் டாது" என மெல்லெழுத்துப் பயின்றவாறு. (உகஎ)

## 530. இயைபு வண்ண மிடையெழுத்து மிகுமே.

இதன் பொருள் : இடையெழுத்து மிகுவது இயைபுவண்ணம், என்றவாறு.

"அரவினதிர வுரீஇய வரகு கதிரின்" என இடையெழுத்து மிகுவநதமையின் இயைபுவண்ணமாயிற்று. மென்மைவன்மைக்கு இடைநிகர்வாகிய எழுத்தான் வருதலின் இயைபுவண்ணமென்றார். (உகஅ)

## 531. அளபெடை வண்ண மளபெடை பயிலும்.

இதன் பொருள் : இரண்டளபெடையும பயிலச செய்வன அளபெடைவண்ணமாம, என்றவாறு.

"மராஅ மலரொடு விராஅயப் பராஅம" என்பது அளபெடைவண்ணம். "கண்ணண் டண்ணெனக் கண்டுங் கேட்டும்" (பத்து-மலைபடு-352) என்பதும் அது. (உகக)

## 532. நெடுஞ்சீர்வண்ண நெட்டெழுத்துப்பயிலும்.

இதன் பொருள்: நெட்டெழுத்துப் பயின்றுவருவது நெடுஞ்சீர் வண்ணம், என்றவாறு.

அது "மாவா ராதே மாவா ராதே" (புறம்-273) என்பது. நெடிதாய் வருவது நெடுஞ்சீரெனப்பட்டது. (உஉ0)

## 533. குறுஞ்சீர் வண்ணங் குற்றெழுத்துப் பயிலும்.

இதன் பொருள் : குற்றெழுத்துப் பயில்வது குறுஞ்சீர்வண்ணம், என்றவாறு.

"குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி" (அகம்-4.) என வரும். (உஉக)

534. சித்திர வண்ணம்

நெடியவுங் குறியவு நேர்ந்துடன் வருமே.

இதன் பொருள் : சித்திரவண்ணம் நெட்டெழுத்துங் குற்றெழுத்தும் ஒப்பவிராஅய்ச் செய்யப்படுவது, என்றவாறு.

அது " சார ணாட நீவர லாறே" எனவரும். சித்திரவண்ண மென்பது பலவண்ணமடச் செய்வதாகலின் அப்பெயர்த்தாயிற்று. (உஉஉ)

535. நலிபு வண்ண மாய்தம் பயிலும்.

இதன் பொருள் : ஆய்தம் பயின்று வருவது நலிபுவண்ணமாம், என்றவாறு.

அது, " அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை " (குறள்-18-8) எனவும், 'எஃகான் றஃகா னொன்க னுருபிற்கு' (தொல் எழுத்-புணர்-21) எனவும் வரும் நலியென்பது, ஆய்தம். (உஉ௩)

536. அகப்பாட்டு வண்ணம்

முடியாத் தன்மையின் *முடித்தன மேற்றே.

இதன் பொருள்: அகப்பாட்டுவண்ணமென்பது இறுதியடி இடையடி போன்று நிற்பன, என்றவாறு.

அவையாவன, முடித்துக் காட்டும் ஈற்றசை ஏகாரத்தா னன்றி, ஒழிந்த உயிரீற்றானும் ஒற்றீற்றானும் வருவன. அவை,

' தவழ்பவை தாமு மவற்றோ ரன்ன' (தொல்-மர-5.)

" உண்கண் சிவப்ப தெவன்கொ லன்னாய் "

எனவும்,

" கோடுயர் வெண்மணல் மேறி
யோடுகலன் காணுந் துறைவன் றோழி."

எனவும்,

* 'முடித்தன் மேற்றே' என்பதும் பாடம்.

"ஆணமில் பொருளெமக் கமர்ந்தனை யாடி"

எனவும், (கலி-கடவுள்வாழ்த்து.)

"சென்றீ பெருமதிற் றகைக்குநர் யாரே" (அகம்-46)

எனவும், இவை ஆசிரிய ஈற்றன.

"குளிறு குரலருவக் குன்றத் திதண்மேற்
களிறு வருவதுகண்டு வெளிலென்ன
லாயினன் பின்னை யணங்கிற் றுயிரளித்துப்
போயினன் யாண்டையான் போம்"

என இதனுள் இறுதியடி முடியாத்தன்மையின் முடிந்ததாகலின் அகப்பாட்டுவண்ணமாயிற்று. "கொடியுவணத் தவணரோ" என்க் கலிப்பாவுள் அரோவந்து பின் முடியாததன்மையின் முடிந்தது. ஆ ஈ ஊ ஏ ஐ ஓ என்பனவற்றுள் ஆசிரியம் இறுமென வரையறுப்பாருண் மையின் அவ்வச்சொல்லானே அவை முடிந்தனவென்று கொள்வ லெனின், அங்ஙனம் வரையறையிலவென்பது மேற்காட்டிய உதார ணங்களால் அறிந்தாமாகலின் அசசடா வண்ணமென வரையறுப்பார் மேற்றெனவிடுக்க. (உஉச)

537. புறப்பாட்டு வண்ண
முடிந்தது போன்று முடியா தாகும்.

இதன் பொருள் : புறப்பாட்டுவண்ணமென்பது இறுதியடிப் புறத்ததாகவுந் தான் முடிந்ததுபோல நிற்றல், என்றவாறு.

"*இன்ன செய்திநீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பக முழுதுடன் றுறந்தே"

என்புழி ஈற்றடல் முன்னிய வினையேயென முடிந்தது போன்று முடியாதாயிற்று. (உஉரு)

* 'இன்னுவைகல் வாராமுன்னே செயனீ முன்னிய வினையே' என்பது நச்சினார்க்கினியர் உரைப்பிரதிப்பாடம்.

538. ஒழுகு வண்ண மோசையி னொழுகும்.

இதன் பொருள்: முற்கூறிய வகையானன்றி ஒழுகியலோசையாற் செல்வது ஒழுகுவண்ணம், என்றவாறு.

ஒழிந்தனவும் ஒழுகுமாயினும் அவை வேறுவேறிலக்கணமுறையின என்பது.

"அம்ம வாழி தோழி காதல
ரின்பனி மென்ற வாடை யோடு
புன்கண் மாலை யன்பின்று நலிதலின்"

என வரும். (உஉ௬)

539. ஒரூஉ வண்ண மொரீஇத் தொடுக்கும்.

இதன் பொருள்: யாற்றொழுக்குப்போலச் சொல்லியபொருள் பிறிதொன்றனோ அவாவாமை அறுத்துச்செய்வது ஒரூஉவண்ணம், என்றவாறு.

ஒரீஇத்தொடுத்தலென்பது எல்லாத தொடையும் ஒரீஇச் செந்தொடையால் தொடுத்தலெனபாரும் உளர். செநதொடையுந் தொடையாகலான் அற்றனறெனபது. அது,

"யானே யீண்டை யேனே *யென்னலனே
யானு நோயொடு கான லஃதே
துறைவன் றம்மூ ரானே
மறையல ராகி மன்றத் தஃதே." (குறுந்-97.)

என வரும்.

"சிறியகட் பெறினே" (புறம்-235) எனபதும் அது.

யாப்புப் பொருளுணர்க்கியவாறுபோல இது பொருளுணர்க்காது ஓசையே கோடலானும் அடியிறந்து கோடலானும் யாப்பெனப் படாது. (உஉ௭)

* 'என்னல திலனே' என்பது முன் அச்சுப்பிரதிப்பாடம்.

540. எண்ணு வண்ண மெண்ணுப் பயிலும்.

இதன் பொருள் : எண்ணுப் பயில்வது எண்ணுவண்ணம், என்ற வாறு.

இஃது அடியெண்ணுப்பயிறலான் எண்ணுவண்ணமெனக் காரணப்பெயராயிற்று. அவை,

"நன்னற வியள நறும்பூ ணத்தி
துன்னருங் கடுந்திறற் றேற்றங் காட்டினளே"

என்றாற் போல்வன.

"நுதலுந் தோளுந் திதலை யல்குலும்" (அகம்-119.)

என்பதும் அது. (உ௨அ)

541. அகைப்பு வண்ண மறுத்தறுத் தொழுகும்.

இதன் பொருள் : அறுத்தறுத்துப்பயில்வது அகைப்பு வண்ணம், என்றவாறு.

இது விட்டுவிட்டுச் சேறலின் அகைப்புவண்ணமென்னும் பெயர் பெற்றது.

"வாரா ராயினும் வரினு மவர்நமக்
கியாரா கியரோ தோழி" (குறுந-110.)

என்புழி ஒருவழி நெடில்பயின்றும் ஒருவழிக் குறில்பயின்றும் அறுத் தொழுகிய அகைப்புவண்ணமாம். (உ௨க)

542. தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும்.

இதன் பொருள் : தூங்கல்வண்ணந் தூங்கலோசைத்தாகி வருவது, என்றவாறு.

வஞ்சியென்பது, வஞ்சிக்குப்போல இதுவும் அற்றுச் சேறலுடைத்தென்பது.

"யானூடத் தானுணர்த்த யானுணரா விட்டபின்
றானூட யானுணர்த்தத் * தானுணர்ந்தான்"
(முத்தொள்ளாயிரம்-104.)

எனவின்ற தொடர்நிலைச்சண்ணே அத்தூங்கல் கண்டுகொள்க. இக் கருத்தறியாதார் கலிப்பாவினுள் வஞ்சிப்பாப் பிறக்குமெனவும் வஞ்சி யுட் கலிப்பாப் பிறக்குமெனவும் மயங்குப. (உ௲0)

543. ஏந்தல்வண்ணஞ்,
சொல்லிய சொல்லிற் சொல்லியது சிறக்கும்.

இதன் பொருள்: சொல்லிய சொலலானே சொல்லப்படும் பொருள் சிறப்பசெய்வது ஏந்தல்வண்ணம், என்றவாறு.

ஏந்தலென்பது மிகுதல்; ஒருசொல்லே மிக்குவருதலின் ஏந்தல் வண்ணமென்றாயிற்று. அது,

"வைகலும் வைகல் வரச்சண்டு மஃதுணரார்"
(நாலடி-4-9.)

என வரும். (உ௲௧)

544. உருட்டு வண்ண மராகந் தொடுக்கும்.

இதன் பொருள்: உருட்டிச் சொல்லப்படுவது அராகமாகலின் அராகந்தொடுப்பது உருட்டுவண்ணமாம், என்றவாறு.

"உருமுரறு சருவிய பெருமழை தலைஇய" (அகம்-158.)

எனவும்,

"எரியுரு வுறழ விலவ மலர" (கலி-33.)

எனவும் வரும். இது நெகிழாது உருண்டவோசையாகலிற் குறுஞ்சீர் வண்ணமெனப்படாது உருட்டுவண்ணமெனப்படு மென்பது. (உ௲௨)

545. முடுகுவண்ண
மடியிறந் தோடி யதனோ ரற்றே.

தானுணரான்' என்பதும பாடம்.

இதன் பொருள் : முடுகுவண்ணமென்பது அராகந்தொடுத்த அடியோடு பிற அடிபடத் தொடர்ந்தோடுவது, என்றவாறு.

அது,

"நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇத்
தகைமிகு தொகைவகை யறியுஞ் சான்றவ ரினமாக
வேய்புரை மென்றோட் பசலையு மம்பலும்" (கலி-39.)

என வரும்.

இவற்றைக் கொச்சகம் அராகமெனவுஞ் சொற்சீரடியும் முடுகிய லடியுமெனவும பரிபாடற்கு வேறுபடுத்தோதினன் இவ்வேறுபாடு நோக்கியென்பது. (உ௯௯)

546. வண்ணந் தாமே யிவையென மொழிப.

இது புறனடை.

இதன் பொருள் : வணணமென்பன சநதமாதலான் அச்சந்த வேற்றுமை செய்வன இவையல்லதில்லை, என்றவாறு.

நான்குபாவினோடும் இவற்றை வைத்துறழவும் அவைமயங்கிய பொதுப்பா இரண்டினோடும் உறழவும் நூற்றிருபதாகலும், உயிர்மெய் வருசகமெல்லாவற்றோடும் உறழ்ந்து பெருக்கின் எத்துணையும் பல வாகலும், இனிப்பிறவாற்றாற் சிலபெயர் கிறீஇ அவற்றால் உறழ்ந்து பெருக்க வரையறையிலவாகலும் உடையவாயினும் இவ்விருபது வகையானல்லது சந்தவேற்றுமை விளஙகாதென்பது கருத்து. (உ௯௬)

547. வனப்பிய றானே வகுக்குங் காலைச்
சின்மென் மொழியாற் றாய பனுவலோ
டம்மை தானே யடிநிமிர் பின்றே.

இது தொகைச் சூத்திரத்துள் 'ஆறுதலையிட்ட வந்நாலைந்தும்' (தொல்-செய்-1) எனக் கூறுசெய்து கிறீஇப், பின்னர் எட்டுறப்புக் கூறினனன்றே ? இவை அவற்றொடொத்த இலக்கணத்த அன்மை யான; என்னை ? அவை ஒரோசெய்யுட்கே ஓதிய உறுப்பாகலானும்

இவை பலசெய்யுளுந் திரண்டவழி இவ்வெண்வகையும் பற்றித் தொடுப்பதாமெனக் கூறப்பட்டதாகலானுமென்பது. இவற்றை வனப்பென்று கூறப்படுமாறென்னை? அச்சூத்திரத்துப் பெற்றிலமாகலி னெனின், வனப்பென்பது, பெரும்பான்மையும் பல உறுப்புந்திரண்ட வழிப் பெறுவதோர் அழகாகலின் அவ்வாறு கோடும். அதனாற் பல செய்யுளும் உறுப்பாய்த்திரண்டு பெருகிய தொடர்நிலையதே வனப் பென்னும் பெயர்ப்பகுதிவகையான் ஏற்பதென்பது. அஃதேல், இவ் வெட்டுந் தனிவருஞ் செய்யுட்கண் வந்தால் அழகு செய்யாவோ வெனின், அவைபோல் இவை செய்யுட்குமாகும் என்றற்கன்றே அவ் விருபத்தாறுறுப்போடும் இவற்றை ஓரினப்படுத்து ஓதியதென்பது. அஃது இயைபிற்கொப்ப வாராதென்பது முன்னர்ச் சொல்லுதும். இதனானே முன்னையுறுப்புக்கள் தொடர்நிலைச செய்யுட்கு வருமென் பதூஉங்கொள்க. அல்லாக்கால், மாத்திரை முதலாகிய ஒரோவுறுப் பான் அழகுபிறவாதாகிய செல்லும் இவற்றையே வனப்பென்று ஒரோ செய்யுட்கே கொள்ளினென்பது. இங்ஙனம் இருபத்தாறும் எட்டு மென வகுப்பவே அவை அகமென்பன, தனிநிலைச்செய்யுண் முற் கூறப்படா, இத்தொடர்நிலைச் செய்யுட்கு முற்கூறுமென்பது. இனி, இவற்றைச சூத்திரத்தான் வனப்பென்னுங் குறியெய்துவிக்கவேண்டு வானகச் சூத்திரத்தை, 'வனப்பியறுனே வகுக்குங் காலைச் சின்மென் மொழியாற் றய பனுவலின்' என்பது பாடமாக உரைத்தானென்க. அதுவும் அறிந்தவாறே கொள்க.

இதன் பொருள் : சிலவாயமெல்லியவாய சொல்லோடும் இடை யிட்டு வந்த பனுவலிலக்கணத்தோடும் அடிநிமிர்வில்லது அம்மையாம், என்றவாறு.

அடிநிமிராதெனவே அம்மையென்பது முழுவதும் ஒருசெய்யு ளாகல் வேண்டும். வேண்டவே, அஃது உறுப்பன்றாகிய செல்லும். அதனை உறுப்பெனல் வேண்டுமாதலான் அடிநிமிராதெனப்பட்ட செய்யுள் உறுப்பாக அவை பலதொடர்ந்து முடிந்து ஈண்டுச் செய்யு ளாமென்பது. சிலவாகவென்பது எண்ணுச்சுருங்குதல். மெல்லிய வாய்ச் சிலவாய சொற்கள், எழுத்தினான் அகன்றுகாட்டாது சில

வெழுத்தினுன் வருவது. அடி ஸிமிராதென்றது ஐந்தடியின் ஏறு தென்றவாறு.

தாயபனுவலோடென்றது அறம்பொருளின்பமென்னும் மூன்றற்கும் இலக்கணஞ்சொல்லுப, வேறிடையிடை அவையன்றியுந் தாய்ச் செல்வதென்றவாறு. அஃதாவது பதினெண்கீழ்க்கணக் கெனவுணர்க. அதனுள் இரண்டடியானும ஐந்தடியானும் ஒரோசெய்யுள் வந்தவாறும், அவை சிலவாய மெல்லிய சொற்களான வந்தவாறும், அறம் பொருளின்பமென அவற்றுக்கு இலக்கணங் கூறிய பாட்டுப பயின்றுவருமாறுங் கார்நாற்பது களவழிநாற்பது முதலாயின வந்தவாறுங் கண்டுகொள்க.

" பொருள்கருவி காலம வினையிடனோ டைந்து
*மருடீர வெண்ணிச் செயல் " (குறள்-68-5.)

என்பது இலககணங கூறியதாகலிற பனுவலோடென்றான்.

" மலர்காணின மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று." (குறள்-112-2.)

என இஃது இலக்கியமாகலாற் றாயபனுவ லெனப்பட்டது. இவை தனித்துவரினும அவ வனபபெனப்படும். தாவுதலெனபது இடையிடுதல். இவவிருவகையுஞ் செயயுளெனப்படும். அம்மையெனபது குணப்பெயர். அமைதிபபட்டு சிறறலின் அம்மையெனறாயிற்று. அதனுள் உறுப்பாகிய பாட்டுக்கடோறும் மாத்திரை யுறுப்பு முதலாகிய உறுப்பினுள் ஏற்பன பலவும் வருமாறும், இவ்வனப்பினுள் ஏற்பன பலவும் வருமாறும் அறிந்துகொள்க. (உகூ)

## 548. செய்யுண் மொழியாற் சீர்புனைந் தியாப்பி னவ்வகை தானே யழகெனப் படுமே.

இஃது, இரண்டாமெண்ணுமுறைமைக்கணின்ற அழகுணர்த்துதல் நுதலிற்று.

---

* 'இருடீர' என்பதும பாடம்.

இதன் பொருள் : திரிசொற் பயிலாது செய்யுட் பயின்றுவரும் மொழிகளாற் சீரறுத்துப் பொலிவுபட்ட யாப்பின்பொருள அழகு, என்றவாறு.

அவ்வகையென்றதனால் அவை வேறுவேறு வந்து ஈண்டிய தொகைநிலைச் செய்யுளென்றவாறு. அவையாவன நெடுந்தொகை முதலாகிய தொகையே டென்றவாறு. அழகு செய்யுண்மொழி யென்றதென்னையெனின் அது பெரும்பான்மையாற் கூறினான். அம் மொழியானே இடைச்சங்கத்தாருங் கடைச்சங்கத்தாரும் இவ்விலக் கணத்தாற் செய்யுள் செய்தார், இக்காலத்துச் செய்யினும் விலக்கின் றென்பது. மற்று மூவடிமுப்பது முதலாயின அம்மையெனப் படுமோ அழகெனப்படுமோவெனின் தாயபனுவலின்மையின் அம்மை யெனப்படாவென்பது. இவற்றுள்ளும் ஒரோ செய்யுட்கண்ணே மாத்திரை முதலாகிய உறுப்பும் ஏற்றவகையான் வருவன அறிந்து கொள்க. ஒழிந்தனவற்றிற்கும் இஃதொக்கும். (உருசு)

549. தொன்மைதானே
உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே.

இது தொன்மைபுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : தொன்மையென்பது உரைவிராய்ப் பழைமை யவாகிய கதைப்பொருளாகச் செயப்படுவது, என்றவாறு. அவை பெருந்தேவனாரால் பாடப்பட்ட பாரதமும், தகடூர் யாத்திரையும் போல்வன.* (உருஎ)

550. இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியா னடிநிமிர்ந் தொழுகினுந்
தோலென மொழிப தொன்மொழிப் புலவர்.

---

* 'சிலப்பதிகாரமும் இதன்பாற்படும்' என்றார் நச்சினார்க்கினி யர்.

இது, முறையானே தோலென்னும் வனப்புணர்த்துதல் நுதலிற்று. அஃதிருவகைப்படும்: கொச்சகக்கலியானும் ஆசிரியத்தானுஞ் செய்யப்படுவன. 'யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது' என்றவழித் தேவபாணியுங் காமமும் பொருளாகவன்றியுங் கொச்சகக் கலி வருமென்றமையாலன் அவை மேல் வருதல் ஈண்டுக் கொள்ளப் பட்டது.

இதன் பொருள் : இழுமென் மொழியான் விழுமியது நுவலி னும்-மெல்லென்ற சொல்லான் அறம்பொருளின்பம்வீடென்னும் விழுமிய பொருள் பயப்பச்செய்யினும்; அவை செய்த காலத்துள்ளன கண்டிலம் : பிற்காலத்து வந்தன கண்டுகொள்க. பரந்த மொழியான் அடி நிமிர்ந்து ஒழுகினும்-ஆசிரியப் பாட்டான் ஒருகதைமேல் தொடுக்கப் படினும் அவையும் பொருட்டொடர்நிலை ; தோல் என மொழிப தொன்மொழிப் புலவர் - தோலென்று சொல்லுப புலவர், என்ற வாறு.

தொன்மொழியென்றா பழைய கதையைச் செய்தல்பற்றி. இது முன்வருஞ் சூத்திரத்தானும் பெறுதும். (உ௱அ)

551. விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே.

இதன் பொருள் : விருந்துதானும புதிதாகத் தொடுக்கப்படுந் தொடர்நிலைமேற்று, எனறவாறு.

தானுமென்ற உம்மையான் முன்னைத் தோலெனப்பட்டதூஉம் பழைய கதையைப் புதிதாகச் சொல்லியதாயிற்று. இது பழங்கதை மேற்றன்றிப் புதிதாகச் சொல்லப்படுதல் ஓம்புதல் உடைமையின் உம்மையான் இறந்ததுதழீஇயினுனென்பது. புதுவது கிளந்த யாப்பின் மேற்றென்றதென்னையெனின், புதிதாகத் தாம் வேண்டியவாற்றாற் பலசெய்யுளுந் தொடர்ந்துவரச் செய்வது. அது முத்தொள்ளாயிரமும், பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதிச் செய்யுளுமெனவுணர்க. கலம்பகம் முதலாயினவுஞ் சொல்லுப. (உ௧௧)

**552.** ஞகாரை முதலா னகாரை யீற்றுப்
புள்ளி யிறுதி யியைபெனப் படுமே.

இஃது இயைபுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள வென்னும் பதினொரு புள்ளியீற்றினுள் ஒன்றனை இறுதியாகச் செய்யுஞ் செய்யுள் பொருட்டொடராகவுஞ் சொற்றொடராகவுஞ் செய்வது இயைபெனப் படும், என்றவாறு.

இயைபென்றதனானே பொருளும் இயைந்து சொல்லும் இயைந்து வருமென்பது கருத்து. சீத்தலைச் சாத்தனாற் செய்யப்பட்ட மணிமேகலையுங் கொங்குவேளிராற் செய்யப்பட்ட தொடர்நிலைச் செய்யுளும் போல்வன. அவை னகார ஈற்றான் இற்றன. மற்றையீற்றான வருவனவற்றுக்கும் எண்டிலக்கணம் உண்மையின் இலக்கியம் பெற்றவழிக் கொள்க. இப்பொழுது அவை வீழ்ந்தனபோலும். பரந்தமொழியான் அடிநிமிர்ந்தொழுகிய தோலோடு இதனிடை வேற்றுமை யென்னையெனின், அவை உயிரீற்றவாதல் பெரும்பான்மையாகலான் வேறுபாடுடைய சொற்றொடரான் வருதலுமுடையவென்பது. சொற்றொடரென்பது அந்தாதி யெனப்படுவதென்றதனான் உயிரீற்றுச் சொற்றொடர் சிறுபான்மை யென்பது கொள்க. (உசо)

**553.** சேரி மொழியாற் செவ்வி திற்கிளந்
தோதல் வேண்டாது குறித்தது தோன்றிற்
புலனென மொழிப புலனுணர்ந் தோரே.

இது புலனுமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: சேரிமொழியென்பது பாடிமாற்றங்கள். அவற்றானே செவ்விதாகக் கூறி ஆராய்ந்து காணுமைப் பொருட்டொடரானே கொடுத்துச் செய்வது புலனென்று சொல்லுவர் புலன் உணர்ந்தோர், என்றவாறு.

அவை விளக்கத்தார்க்கூத்து முதலாகிய நாடகச் செய்யுளாகிய வெண்டுறைச் செய்யுள் போல்வனவென்பது கண்டுகொள்க. (உ௬௪)

554. ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத் தடக்காது
குறளடி முதலா வைந்தடி யொப்பித்
தோங்கிய மொழியா னாங்கன மொழுகி
னிழைபி னிலக்கண மியைந்த தாகும்.

இஃது, இறுதிநின்ற இழைபிலக்கண முணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : ஒற்றொடுபுணர்ந்த வல்லெழுத்து அடக்காது-வல்லெழுத்துப் பயிலாது; குறளடி முதலா ஐந்து அடி ஒப்பித்து-இருசீரடி முதலாக எழுசீரடியளவும் வந்த அடி ஐந்தனையும் ஒப்பித்து; ஒப்பித்தலென்பது பெரும்பான்மையான் நாற்சீரடி படுக்கப்பட்டென்ற வாறு; ஓங்கிய மொழியான்-நெட்டெழுத்தும் அந்நெட்டெழுத்து போல் ஓசை எழும் மெல்லெழுத்தும் லகாரளகாரங்களும் உடைய சொல்லான் ; ஆங்கனம் ஒழுகின்-இவையுஞ் சேரிமொழியாற் செவ்வி திற்கிளந்து தேர்தல் வேண்டாது பொருள்படச் சென்று நடப்பின் ; இழைபின் இலக்கணம் இயைந்ததாகும் இழைபென்று சொல்லப்படும் இலக்கணத்தது, என்றவாறு.

அவையாவன, கலியும் பரிபாடலும் போலும் இசைப்பாட்டாகிய செந்துறைமார்க்கத்தனவென்பது. இவற்றுக்குக் காரணந் தேர்தல் வேண்டாது பொருள் இனிது விளங்கல் வேண்டுமென்றது அவினயத்திற்கு உரியவாதல் நோக்கியென்பது. மற்றிதனை வெண்டுறைச செய்யுட்குமுன் வைப்பினெனின், இஃதிசைப்பாட்டாகலின் இனி வருகின்றது இசைத்தமிழாகலின் அதற்குபகாரப்பட்ட இதனை இந் திச்கண் வைத்தானென்பது.* (உ௬௫)

* "இனி, யாப்பருங்கலம் முதலியவற்றிற் கூறிய சித்திரக்கவியினையும் ஈண்டுச் சேரக் கூறகவெனின், யந்திரமும் மந்திரமுமாய்த் தெய்வத்திற்கேயுரியவாகக் கூறும் மிறைக்கவி இம் முத்தாறுறப்பும் போல அகனைந்திற்குரிய சான்றோர் செய்யுட்குறுப்பாய் வாரா என்றும், அகத்திணைக்குரிய மரபு வழுவிற்றென்றும் தொல்காப்பியனார் கூறாமையானும்; அவற்றதிலக்கணங் கூறிய ஆசிரியரும், அவற்றிற்கு

555. செய்யுண் மருங்கின் மெய்பெற நாடி
யிழைத்த விலக்கணம் பிழைத்தன போல
* வருவ வுளவெனினும் வந்தவற் றியலாற்
றிரிவின்றி முடித்த றெள்ளியோர் கடனே.

இஃது, இவ்வோத்திற்கெல்லாம் புறனடை கூறுகின்றது.

இதன் பொருள் : செய்யுளிடத்துப் பொருள்பெற ஆராய்ந்து தந்திரம்செய்யப்பட்ட இலக்கணத்தின் வழீஇயினபோன்று †பின் தோன்றுவனவுளவேன் முற்கூறப்பட்ட இலக்கணத்தோடு திரியாமல் முடித்துக் கோடல் அறிவுடையோரது கடன், என்றவாறு.

அவை எண்சீர் முதலாயின வரிற் கழிநெடிலடிப்பாற் சார்த்திக் கோடலும் ஏது முதலியது முதுமொழியோடு பாட்டிற்கு இயைபின்றியுந் தொடர்பு படுப்பனவும் யாப்பென்னும் உறுப்பின்பாற்கோடலும் பிறவும் ஈண்டோதாதன உளவெனின் அவையுமெல்லாஞ் செய்யுளிலக்கண முடிபாகு மென்றவாறு. (உசரு)

இலக்கியம் சான்றோர் செய்யுட்களுட் காணுமையின், வடவெழுத்தொரீஇய எழுத்தொடுபுணர்ந்த சொல்லானன்றி வடவெழுத்தாற் பெரும்பான்மை வரச் செய்யுட்டாமே செய்து இலக்கியமாகக் காட்டினாராதலானும்; யாமும் மிறைக்கவியிலக்கணம் ஈண்டுக் கூறுமாயினும்'' என்பது நச்சினார்க்கினியர் உரை.

* 'வருப வுளவேனும்' என்பது நச்சினார்க்கினியர் கொண்ட பாடம்.

† 'பின்னொன்று வருவனவுளவேன்' என்பது முன் அச்சுப் பிரதிபாடம். ஏடுகளில் 'பின்றோன்றுவனவுளவேன்' என்ற பாடமே காணப்படுகிறது.

செய்யுளியல் முற்றிற்று.

ஒன்பதாவது

# மரபியல்

556. மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பிற்
பார்ப்பும் பறழுங் குட்டியுங் குருளையுங்
கன்றும் பிள்ளையு மகவு மறியுமென்
றென்பதுங் குழவியோ டிளமைப் பெயரே.

என்பது சூத்திரம். இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், மரபியலென்னும் பெயர்த்து. இதனானே ஒத்து நுதலியதூஉம் மரபு உணர்த்துதலென்பது பெற்றாம். மரபென்ற பொருண்மை என்னை யெனின், கிளவியாக்கத்து மரபென்று வரையறுத்து ஓதப்பட்டனவுஞ் செய்யுளியலுண் மரபென்று வரையறுத்து ஓதப்பட்டனவுமன்றி; இரு திணைப்பொருட்குணனாகிய இளமையும் ஆண்மையும் பெண்மையும் பற்றிய வரலாற்றுமுறைமையும், உயர்திணை நான்கு சாதியும் பற்றிய மரபும், அஃறிணைப் புல்லும் மரனும் பற்றிய மரபும், அவைபற்றி வரும் உலகியன்மரபும், நூன்மரபுமெனா இவையெல்லாம் மரபெனப்படு மென்பது. மற்றுப் பொருள்களின் இளமைப்பற்றி வரும் மரபுகூறி னான் மூப்புப்பற்றி வரும் மரபு கூறானோவெனின், அது வரையறை யின்மையிற் கூறானென்பது. மற்று மேல ஓத்தினோடு இவ்வோத் திடை இயைபென்னையெனின், முன்னர் வழக்கிலக்கணங் கூறியதன் பின் செய்யுளிலக்கணஞ் செய்யுளியலுட் கூறினான், அவ்விரண்டற்கும் பொதுவாகிய மரபு ஈண்டுக் கூறினமையின் இது செய்யுளியலோடு இயைபு உடைத்தாயிற்று. மற்று வழக்கிலக்கணஞ் செய்யுட்கும் பொது வாகலின் இங்ஙனம் இரண்டற்கும் பொதுவாகிய மரபினையுஞ் செய்யு ளியலின்முன் வைக்கவெனின் அவ்வாறு வழக்குஞ் செய்யுளுமென்று இரண்டுமல்லாத நூலிற்கும் ஈண்டு மரபு கூறினமையின் இது செய் யுளியலின் பின் வைக்கப்பட்டது.

இவ்வோத்தின் முதற்சூத்திரம் என்னுதலிற்றோவெனின் எல்லாப் பொருளின்கண்ணும் இளமைக்குணம்பற்றி நிகழுஞ் சொல் இவையென்று வரையறுத்துக் கூறுகின்றது.

இதன் பொருள்: மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பின்-விலக்கருஞ் சிறப்பிற்றாகிய மரபிலக்கணங் கூறின் ; பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும் கன்றும் பிள்ளையும் மகவும் மறியும் என்று ஒன்பதுங் குழவியோடு இளமைப்பெயர் - குழவியோடு இவையொன்பதும் இளமைப்பெயர், என்றவாறு.

மேலன எட்டுங் குழவியுமென இளமைப்பெயர் ஒன்பதாயின. குழவியோடொன்பதென்னாது ஒன்பதுங் குழவியோடென மயங்கக்கூறியவதனாற் போத்தென்பதும் இளமைப்பெயரெனவும் பிறவும் வருவன உளவாயினுங் கொள்ளப்படும். இவற்றையெல்லாம் மேல் வரையறுத்து இன்னபொருட்கு இன்னபெயர் உரித்தென்பது சொல்லும். 'மாற்றருஞ் சிறப்பின்' என்றதனானே இவை ஒருதலையாகத் தத்தம் மரபிற் பிறழாமற் செய்யுள் செய்யப்படுமென்பதூஉம், ஈண்டுக் கூறுதனவாயின வழக்கொடுபட்ட மரபு பிறழவுஞ் செய்யுளின்பம் படின் அவ்வாறுசெய்யவென்பதூஉங் கூறியவாறாயிற்று.

> " அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப்
> பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பரிதி" (பெரும்பாண் - 1-2.)

> " நும்மினுஞ் சிறந்தது நுவ்வை யாகுமென்
> *றன்னை கூறினள் புன்னையது நலனே" (நற்றிணை-172.)

எனவும் வரும்.

அவற்றுட் பரிதியஞ்செல்வனைப் 'பருகும்' 'காலும்' என்றலும் புன்னைமரத்தினை 'நுவ்வை'யென்றலும் மரபன்மையின் வழக்கினுண் மாற்றுதற்கு உரியவாமென்பது கருத்து.

> " நிலவுக் குவித்தன்ன வெண்மணல் " (குறுந்-123.)

எனவும்,

---

* 'அன்னை' என்பதும் பாடம்.

"*இருப்பணித் தன்ன வேனங் காணின்" (பத்து-மலை-247.)
எனவும்,

"இருநூற் றன்ன விரும்பல் கூந்தல்"
எனவும் வருவனவும் அவை. (க)

557. ஏறு மேற்றையு மொருத்தலுங் களிறுஞ்
சேவுஞ் சேவலு மிரலையுங் கலையு
மொத்தையுந் தகரு முதளு மப்பரும்
போத்துங் கண்டியுங் கடுவனும் பிறவும்
யாத்த வாண்பாற் பெயரென மொழிப.

இதன் பொருள்: ஆண்பாற்பெயர் இவ்வெண்ணப்பட்ட பதினைந்தும், என்றவாறு.

'பிறவும்' என்றதனான் ஆணென்றும் விடையென்றும் வருவன போல்வனவுங் கொள்க.

இவற்றை வரைடறை கூறும்வழி உதாரணங் காட்டுதும். யாத்த ஆண்பாற்பெயா என்றதனாற் போத்தென்பது இளமைப்பெயரா மாயி னும் இங்ஙனம் ஆண்பாற்குச் சிறந்துவருமாறுபோலச் சிறவாது அதற் கென்பது கொள்க. (உ)

558. பேடையும்பெடையும்பெட்டையும்பெண்ணு
மூடு நாகுங் கடமையு மளகு
மந்தியும் பாட்டியும் பிணையும் பிணவு
மந்தஞ் சான்ற பிடியொடு பெண்ணே.

இதன் பொருள்: கூறப்பட்ட பதின்மூன்று பெயரும் பெண்மைப பெயர், என்றவாறு.

கடமையென்பதோர் சாதிப்பெயர் உண்டேனும் அதுவன்று, ஈண்டெண்ணப்பட்டது பெண்மைமேற்றெனறு கொள்க. 'அந்தஞ்

* 'இருப்பணிந்தன்ன' என்பதும் பாடம்.

சான்ற' என்பது முடிபமைந்தன இவையென்றவாறு. எனவே, ஆண் என்பது பெண்பெயராதலும் பெண் ஆணென்பன ஒருசார் புல்லிற்கும் சேர்தலுங் கொள்க; என்னை ? ஆனேறென்பது ஆவினுள் ஏறெனப் படுதலின். ஆணென்பது ஆண்பாற்குப் பொதுவாகலின் அது முடி பமையாதெனப்பட்டது. அது மேற்காட்டுதும். ஆண்மை பெண்மை புல்லிற்கின்மையின் அவையும் முடிபுடையன ஆகாவாயினுங் காயாப் பனையை ஆண்பனையென்றுங் காயப்பனவற்றைப் பெண்பனையென்றும் வழங்குப. இவையெல்லாம் வழக்காகலிற் செய்யுளுள் வருமாறு அறிந்து கொள்ளப்படும். இவற்றுக்கு மேல் வரையறைகூறும்வழி உதாரணங் காட்டுதும். (௩)

559. அவற்றுட்,
பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை.

இது, சிறத்தமுறையானே இளமைப்பெயருண் முற்கூறிய பார்ப் பினைக் கூறுவான் அதனோ டொப்புமைகண்டு பிள்ளைப்பெயருங் கூறு கின்றது.

இதன் பொருள் : இவ்விரண்டும் புள்ளிளமைக்குரிய, என்ற வாறு.

இவையெல்லாம் இக்காலத்து வழக்கினுள் அரியவாகலிற் சான் றோர் செய்யுளுட் காணப்படும். அல்லன வழக்கின்மேற் காட்டுதும்.

"மேற்காட் டிருந்த பார்ப்பினங்கள்"

எனவும்,

"இல்லிறைப் பள்ளிதம் பிள்ளையொடு வதியும்" (குறுந்-46.)

எனவும்,

"பைதற் பிள்ளைக் கிளிபயிர்ந் தாங்கு" (குறுந்-139.)

எனவும் இவை பருந்தும் ஊர்க்குருவியுங் கிளியுமென்னும் பறவை மேல் வந்தன. பிறவும் அன்ன. புள்ளுக்குலம் பலவாகலான் இச்

சூத்திரத்துள் அடங்கிய மரபு எத்துணையும் பலவாத னேக்கி முதற் சூத்திரத்துட் பார்ப்பினை முற்கூறினனென்பது. (௫)

560. தவழ்பவை தாமு மவற்றோ ரன்ன.

இதன் பொருள் : பார்ப்பும் பிள்ளையுந் தவழ்பவற்றிற்கும் உரிய, என்றவாறு.

அவை ஆமையும் உடும்பும் ஓந்தியும் முதலையும முதலாயின. ஆமையும் முதலையும் நீருள்வாழினும் நிலத்தியங்குங்கால் தவழ்பவை யெனப்படும். உதாரணம் :

"யாமைப் பார்ப்பி னன்ன
காமங் காதலர் கையற விடினே" (குறுந்-152.)

எனவும்,

"தன்பார்ப்புத் தின்னு மன்பின் முதலை" (ஐங்குறு-41.)

எனவும்,

"தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வனொடு
பிள்ளை தின்னு முதலைத்தவ னூரே" (ஐங்குறு-24.)

எனவும் வரும்.

'தாமும்' என்றதனான் ஊர்வன நடப்பனவுஞ் சிறுபான்மை பிள்ளைப்பெயர்க்கு உரியன கொள்க. அது பிள்ளைப்பாம்பென ஊர்வன மேல் வந்தது.

"பிள்ளை வெருகிற் கல்கிரை யாகி" (குறுந்-107.)

என நடப்பனமேல் வந்தது. மூங்காப்பிள்ளை என்பதும் ஈண்டே கொள்ளப்படும். பார்ப்பும் அவ்வாறே வருவன உளவேற், கொள்க. இதுவுந் தவழுஞ் சாதிக்கெல்லாம் பொதுவாகிய பரப்புடைமையின் இரண்டாவது வைத்தானென்பது. (௬)

561. மூங்கா வெருவெலி மூவரி யணிலோ
டாங்கவை நான்குங் குட்டிக் குரிய.

இது, மேல் எடுத்தோத்தானும் இலேசானும் அதிகாரப்பட்ட தவழ்வனவும் நடப்பனவும் பற்றிக் குட்டியென்னும் பெயரினையு முறை யன்றிக் கூறுகின்றது.

இதன் பொருள் : குட்டியெனப்படுவன இவை நான்கும், என்ற வாறு.

அவை மூங்காக்குட்டி வெருக்குக்குட்டி எலிக்குட்டி அணிற் குட்டியெனவரும். மூவரியணிலென்றதனை ஒழிந்த மூன்றுந் தம் முள் ஒருபிறப்பினவாம்; இவை யொருக்கரனவே என்பதுகொள்க. ஆங்கவை நான்கும் என்றதனால் தத்துவனவற்றுக்குங் குட்டிப்பெயர் கொடுக்கப்படும். 'தவளைக்குட்டி' யெனவரும. மேல் ஊர்வனவற்றுக் குந் தவழ்வனவற்றிலக்கணம எய்துவித்தமையாற் பாம்புக்குட்டியென் பதுங் கொள்க. மற்றுக் கீரியும் நாவியும்போல்பவற்றையுங குட்டி யென்னரோவெனின், அவை பிள்ளையென்றலே பெரும்பான்மையாக லின் 'உரிய'வென்றதனாற் சிறுபான்மை குட்டியென்பதுங் கொள்க. மூங்காவின் விகற்ப மென்பாருமுளர். (சு)

562. பறழெனப் படினு முறழாண் டில்லை.

இதன் பொருள் : மேற்கூறிய நான்கும் பறழெனவும்படும், என்ற வாறு.

இவை இக்காலத்து வீழ்ந்தன. மற்று முற்கூறிய நான்கினையும் இப்பெயரானே முற்கூறுக, முதற்சூத்திரத்துள் ஓதிய முறைமைக் கேற்பவெனின், அற்றன்று; அவற்றுக்கு இப்பெயர் சிறுபான்மையென் பான் பிற்கூறினனென்பது. உறழாண்டில்லையென்ற மிகையானே,

"கைம்மை யுய்யாக் காமர் மந்திக்
கல்லா வன்பறழ்க் கிளைமுதற் சேர்த்தி" (குறுந்-69.)

என்பதுங் கொள்க. (எ)

563. நாயே பன்றி புலிமுய லென்கு
மாயுங் காலைக் குருளை யென்ப.

இது, முறையானே நான்காம் எண்ணு முறைமைக்கணின்ற குருளையாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : நாயும் பன்றியும் புலியும் முயலும் என நான்கும் குருளையென்று சொல்லப்படும், என்றவாறு.

"திறவாக் கண்ண சாய்செவிக் குருளை"

எனவும்,

"விழியாக் குருளை மென்முலை சுவைபபக
குழிவயிற் றுஞ்சுங் குறுந்தாட் பன்றி"

எனவும்,

"இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை" (குறுந்-47.)

எனவும்,

"குருளை கோட்பட லஞ்சிக் குறமுயல்
வலையிற் றப்பாது மன்னுயி ரமைப்ப"

எனவும் வரும்.

'ஆயுங்காலை'யென்றதனால்,

"சிறுவெள் ளரவி னவ்வரிக குருளை" (குறுந்-119.)

என்பதுங் கொள்க. (அ)

564. நரியு மற்றே நாடினர் கொளினே.

இதன் பொருள் : நரியுங் குருளையெனப்படும், என்றவாறு.

"பிணந்தின் பெண்டிர்க்குக் குருளை காட்டிப்
புறங்காட் டோரி புலவுத் தசைபெறூஉம்"

என வரும்.

'நாடினர் கொளினே'யென்றதனானே,

" வெயிலாடு முசுவின் குருளை யுருட்டுங்
குன்ற நாடன் கேண்மை" (குறுந்-38.)

என்றாற்போல முசுவிற்குங் குருளைப்பெயர் கொடுக்க. (௯)

565. குட்டியும் பறழுங் கூற்றவண் வரையார்.

இதன் பொருள் : மேற்கூறிய ஐந்தினையுங் குட்டியென்றும் பற ழென்றுங் கூறுதல்வரையார், என்றவாறு.

அவை நாய்க்குட்டி பன்றிக்குட்டி புலிக்குட்டி முயற்குட்டி நரிக் குட்டி என வழக்கினுள் வந்தன.

" பாசிப் பரப்பிற் பறழொடு வதிந்த "

எனவும்,

" வயநா யெறிந்த வன்பறழ் தழீஇ "

எனவும்,

" புலிப்பற ழன்ன பூஞ்சினை வேங்கை "

எனவும்,

" பதவுமெயல் பற்றி முயற்பற ழோம்புஞ்
சீறா ரோனே நன்னுதல் "

எனவும்,

" நரிப்பற ழகவர நாய்முதல் சுரக்கும் "

எனவும் முறையானே வந்தன.

நாயெனச் செந்நாய் நீர்நாய் முதலாயினவும் அடங்குமென்பது. மூவரியணிலென்றவழிச் சொல்லப்பட்டவாறும் உய்த்துணர்க. பிற வும் அன்ன. (௧0)

566. பிள்ளைப் பெயரும் பிழைப்பாண் டில்லை
கொள்ளுங் காலை நாயலங் கடையே.

இதன் பொருள் : மேற்கூறிய ஐந்துசாதியுள்ளும் நாயொழித்து ஒழிந்த நான்கற்கும் பிள்ளையென்னும் பெயாக்கொடையும் உரித்து, என்றவாறு.

இவை செய்யுட்கண் வருவன கண்டுகொள்க. 'கொள்ளுங் காலை' யென்றதனுன் முற்கூறிய நாய்முதலாகிய நான்கும் விலக்கி நரிப் பிள்ளையென்பதே கோடலும் ஒன்று. (கக)

567. யாடுங் குதிரையு நவ்வியு முழையு
மோடும் புல்வா யுளப்பட மறியே.

இதன் பொருள் : இவ்வைந்து சாதியின் இளமைப்பெயர் மறியெனப்படும், என்றவாறு.

அவை,

"மறுத்துருத் தொகுத்த பறிப்புற விடையன்"

எனவும்,

"உள்ளல் வயிற்ற வெள்ளை மறி"

எனவும் யாட்டின்மேல் வந்தன. மறிக்குதிரையெனவும் மறிநூக்கிற் றெனவுஞ் சொல்லுதலின் இது குதிரைக்கும் உரித்தாயிற்று.

"நவ்வி நான்மறி கவ்விக்கடன் கழிக்கும்" (குறுந்-282.)

எனவும்,

"மறியாடு மருங்கின் மடப்பிணை தழீஇ" (அகம்-34.)

எனவும்,

"தெறித்துநடை மரபிற்றன் மறிக்கு நிழலாகி" (குறுந்-213.)

எனவும் இவை நவ்வியும் உழையும் புல்வாயும் முறையானே மறி யென்னும்பெயர் எய்தியவாறு அவ்வச்செய்யுளுட் கண்டுகொள்க.

கவ்வியும் உழையும் புல்வாயுள் அடங்குமன்றே, அவற்றை மூன்றாக ஓதியதென்னை ? நாயென்றதுபோல அடங்காதோவெனின், மாவென்பது குதிரையும் ஆனையும் புலியுஞ் சிங்கமும் முதலாயவற்றுக்கெல்லாம் பெயராகலின் அவ்வாறு ஓதானென்பது. ஒடும்புல்வாயென்றதனானே மடனுடையன நவ்வியெனவும் இடைநிகரன உழையெனவுங் கொள்க. எட்டாம் முறைமைக்கண் ஓதிய மறியினை ஐந்தாம்வழிக் கூறியவதனானே,

"செவ்வரைச சேச்கை வருடை மான்மறி" (குறுந்-187.)

என்றது போல்வன கொள்க. (கஉ)

## 568. கோடுவாழ் குரங்குங் குட்டி கூறுப.

இதன் பொருள் : கோட்டினையே வாழ்க்கையாகவுடைய குரங்குங் குட்டியெனறு கூறப்படும், என்றவாறு.

கோடுவாழ் குரங்கெனவே குரங்கின பிறப்புப்பகுதியெல்லாங் கொள்க. அவை குரஙகுக்குட்டி முசுக்குட்டி ஊகக்குக்குட்டியென்பன. உம்மை இறந்தது தழீஇயிற்றுதலான் மேற்கூறிய யாடுமுதலாகிய ஐந்துசாதிக்குங குட்டியெனனும்பெயா கூறப்படுமென்பது. அவை யாட்டுசகுட்டி குதிரைக்குட்டி நவவிக்குட்டி உழைமான்குட்டி புல்வாய்க்குட்டி என வரும். (கங)

## 569. மகவும் பிள்ளையும் பறழுமபார்ப்பு மவையு மன்ன வப்பா லான.

இதன் பொருள் : மேலைச்சூத்திரத்தெடுத்தோதிய குரங்கிற்குக் குட்டியென்னும் பெயரேயன்றி மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்புமெனப்பட்ட இந்நான்கும் குட்டியென்னும்பெயர்போல அக்குரஙகின் பகுதிக்கு உரியவாம, என்றவாறு.

"உயர்கோட்டு மகவுடை மந்திபோல" எனவும், "குரங்குப் பிள்ளை" எனவும், "வரையாடு வன்பறழ்த் தந்தை" (குறுந்-26) எனவும்,

"ஏற்பன வேற்பன வுண்ணும்
பார்ப்புடை மந்திய மலையிறந் தோரே"

எனவும் வரும். அன்னவென்பதனான் முன்னையவற்றோடொக்கும், மிகுதி குறைவு இலவென்பதாம்.

"வெயிலாடு முசுவின் குருளை யுருட்டும்" (குறுந்-38.)

என இலேசினாற் கூறிப்போந்தமையின் ஈண்டு அது கூறானாயினான். அன்றி, அஃது இத்துணைப் பயிலாமையானுமென்க. ஏழாமுறை நின்ற மகவினை ஈண்டு வைத்தான் அதிகாரப்பட்ட பெயாக்குரிமையா னென்பது. (கசு)

570. யானையுங் குதிரையுங் கழுதையுங் கடமையு
மானோ டைந்துங் கன்றெனற் குரிய.

இதன் பொருள்: ஐந்தாம் எண்ணுமுறைமைசகண் நின்ற கன்றென்னும் பெயர்க்கு இவை உரிய, எனறவாறு.

அவை யானைக்கன்று குதிரைக்கன்று கழுதைக்கன்று ஆன்கன்று என வரும்.

"கன்றுடை மடப்பிடிப் பூசல் பலவுடன்
வெண்கோட் டியானை விளிபடத் துழவும்" (அகம்-120.)

என்பது யானைக்கன்று.

"கன்றுபுகு மாலை நின்றோ ளெய்தி"

என்பது ஆன்கன்று. பிறவும் அன்ன உளவேற் கொள்க. இனி, உரியவென்றதனானே மான்கன்று குதிரைக்குட்டியென்பனவுஞ் சொல்லுப. (கயி)

571. எருமையு மரையும் வரையா ராண்டே.

இதன் பொருள்: எருமையும் மரையுங் கன்றெனப்படும், என்றவாறு.

அவை, எருமைக்கன்று மரைமான்கன்று என்பன வழக்கு.

"மன்றுடை மரையா ரூன்சுக
குன்ற நாடற் கண்டவெங் கண்ணே"

என வரும். வரையாரெனவே அவையெல்லாம்போலாது சிறுவர வின என்பது பெற்றாம். (கசு)

572. கவரியுங் கராமு நிகரவற் றுள்ளே.

இஃது, அவற்றொடு மாட்டெறிந்தது.

இதன் பொருள் : கவரியுங் கராமுங் கன்றெனப்படும், என்ற வாறு.

கவரிமான்கன்று கராக்கன்று என வரும். 'அவற்றுள்ளே' யென் பது முற்கூறிய ஏழனுண் முதனின்ற யானையோடொக்குமென்ற வாறு. இதன் பயம் 'குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை' (தொல்-மர-19) என வருகின்றபெயரும் இவற்றுக் கெய்துவித்தலா யிற்று. அது முன்னர்ச் சொல்லுதும். இவையெல்லாந் தம்மி னொத்த வரவின அன்மையின் வேறுவேறு சூத்திரஞ் செய்கின்றவா றாயிற்று. (கஎ)

573. ஒட்டக மவற்றோ டொருவழி நிலையும்.

இதன் பொருள் : சிறுபான்மை ஒட்டகமுங் கன்றெனப்படும், என்றவாறு.

அது ஒட்டகக்கன்று எனவரும். 'ஒருவழி'யென்றதனனே எவற் றினும் இது சிறுபான்மை யெனவுணர்க. (கஅ)

574. குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை.

இதன் பொருள் : ஒழிந்துநின்ற குழவிப்பெயர் குஞ்சரத்திற்கு உரிய, என்றவாறு.

அது,

" ஒய்யென வெழுந்த செவ்வாய்க் குழவி" (அகம்-164.)

என வரும். ஈகரவற்றுள்ளென மேற் குஞ்சரத்தோடொக்குமெனப் பட்ட கராத்தின்குழவியுங் கவரிக்குழவியும் வந்தவழிக் கண்டு கொள்க. (கக)

575. ஆவு மெருமையு மவைசொலப் படுமே.

இதன் பொருள்: ஆவும் எருமையும் அவைபோலக் குழவிப் பெயர்க்கொடை பெறும், என்றவாறு.

குஞ்சரம் ஆணும் பெண்ணுமென இருகூற்றன வாகலான் 'அவை' யென்றான். மக்கண்மேல் வருஙகாலும் இஃதொக்கும்.

" மக்கட் குழவி யெனவந் தனரே
நோவே மாகுத லறிந் துஞ்
சேயர் தோழி செய்ந்நாட் டோரே"

என்பது ஆண்குழவி.

" மோட்டெருமை முழுகுகுழவி
கூட்டுநிழற் றுயில்வதியும்" (பத்து-பட்டி-14.)

என்றது எருமைக்குழவி. (உ0)

576. கடமையு மரையு முதனிலை யொன்றும்.

இதன் பொருள்: இவையும் அப்பெயர்க்கு உரிய, என்றவாறு.

குஞ்சரம்போலக் குழவிப்பெயர்பெறுமென்பான் முதனிலை யொன்றுமென்றானென்பது. அவை வந்துழிக் கண்டுகொள்க. (உக)

577. குரங்கு முசுவு மூகமு மூன்று
நிரம்ப நாடி னப்பெயர்க் குரிய.

இதன் பொருள் : இம்மூன்றுங் குழவியென்னும் பெயர்க்கு உரிய, என்றவாறு.

'சிரம்பநாடின்' என்பது மூன்றுபெயரும் ஒருபிறப்பின் பகுதியாக லின் அம்மூன்றற்கும் ஒப்பவருமென்றவாறு.

இக்கருத்தானே 'கோடுவாழ்குரங்கு' (தொல்-மர-13) என்ற வழி இம்மூன்றுங் கொண்டாமென்பது. இவற்றுக்கு உதாரணங் காணுமையிற் காட்டாமாயினும். இலக்கணம் உண்மையின் அமையு மென்பது. (உஉ)

578. குழவியு மகவு மாயிரண் டல்லவை
கிழவ வல்ல மக்கட் கண்ணே.

இதன் பொருள் : குழவியும் மகவு மென்னும் இரண்டுமல்லது மக்கட்கணின்ற இளமை தமக்கு வேறுபெயருடையவல்ல, என்ற வாறு.

ஆணிளமையும் பெண்ணிளமையுமென இரண்டாகலின் அவற்றை அவையெனப் பன்மைகூறினான்.

"காவல், குழவிகொள் வாரி னோம்புமதி" (புறம்-5.)

எனவும்,

"மான்றேற் பள்ளி மகவொடு முடங்கி"
(பத்து-பெரும்பாண்-89.)

எனவும் வரும்.

'கிழவவல்ல' என்ற மிகையானே ஆண்பிள்ளை பெண்பிள்ளை யெனப் பிள்ளைப்பெயரும் மக்கட்பாற்படுவன கொள்க. (உங)

579. பிள்ளை குழவி கன்றே போத்தெனக்
கொள்ளவு மமையு மோரறி வுயிர்க்கே.

இதன் பொருள் : பிள்ளை குழவி கன்று போத்தென்னும் நான்கும் ஓரறிவுயிரின் இளமைப்பெயர், என்றவாறு.

ஓரறிவுயிரென்பன முன்னர்ச் சொல்லப்படும். ஓரறிவுயிரென்பது பண்புத்தொகை. 'கமுகம்பிள்ளை', 'தெங்கம்பிள்ளை' எனவும், "வீழ்இ ருழைக் குழவித் தீநீர்" (பத்து-பெரும்பாண்-357) எனவும், 'பூங்கன்று' எனவும், 'போத்துக்கால்' எனவும் வரும். வீழ்இருழை யெனப்பட்டது தெங்கு, போத்துக்காலென்பது கரும்பு. ஓரறிவுயிர்க்குக் கொள்ளவும் அமையும் என்னும் உம்மையை எச்சப்படுத்துப் பிற வழியுங் கொள்ளப்படும். அவை 'குழவிவேனில்' 'குழவித்திங்கள்' 'குழவிஞாயிறு' எனவும்,

"பகுவாய் வராஅற் பல்வரி யிரும்போத்து" (அகம்-36.)

எனவும்,

"புலிப்போத் தன்ன புல்லணற் காளை"(பெரும்பாண்-138.)

எனவும் இவையும் இளமைக்குறிப்பினவாகலிற் காட்டப்பட்டன. மற்று ஓரறிவுயிர் ஈண்டுக் கூறியதென்னையெனின், குழவிப்பெயர் அதிகாரப்பட்டமையானென்பது. மற்றுப் புல்லும் மரனும் உயிரெனப்படுமோவெனின் அவற்றை யுயிரென்றன் மரபுபட்ட வழக்காகலின் அம்மரபுங்கோடற்குக் கூறினன், மரம் உய்ந்ததென்பவாகலின். (உ௯)

580. நெல்லும் புல்லு நேரா ரண்டே.

இஃது, எய்தியது விலக்குகின்றது.

இதன் பொருள் : அந்நான்கு பெயரானும் நெல்லும் புல்லுஞ் சொல்லபபடா, எனறவாறு.

மற்றுப் 'புறக்கா ழனவே புல்லென மொழிப' (தொல்-மர-85) எனுமாகலான் மேற்காட்டிய கமுகு முதலாகிய புல்லும் விலக்குண்ணும் பிறவெனின், அற்றன்று; புல்லென்பது பலபெயரொரு

சொல்லாகலான் நெல்லென்னும் இனத்தானே வேறுபடுத்துப் புல்லென்பது உணவின்மேற் கொள்க. (உ௫)

581. சொல்லிய மரபி னிளமை தானே
சொல்லுங் காலை யவையல திலவே.

இது, புறனடைச்சூத்திரம்.

இதன் பொருள்: சொல்லிய மரபின் இளமை - 'பாடலுட் பயின்றவை நாடுங் காலை' (தொல்-அகத்-1) எனவும், 'பாடல் சான்ற புலனெறி வழக்கு' (தொல்-அகத்-53) எனவும் அகத்திணையியலுட் கூறிய புலனெறி வழக்கிற்குரிய இளமை; சொல்லுங் காலை அவையல திலவே—அவற்றுக்கு இலக்கணங்கூறுங்கால் வேறுபலவின்றி வரும் இங்ஙனம் வரையறைப்பட்டன இன்றி, என்றவாறு.

இளமையும் அவையலதிலவெனவே அதற்கு மறுதலையாகிய முதுமையாயின் அவையலதிலவென்பதோர் வரையறைப்படுத்து இலக்கணங் கூறப்படாவென்பது கருத்து. சொல்லுங்காலை யென்றதனாற் சொல்லாத இளமைப்பெயருங் கொள்க. அவை "நன்னுட் பூத்த காஞ்சி வேங்கை" (அகம்-85) எனவும், 'நாகுவாளை' எனவும், "கணைக் கோட்டு வாளைக் கமஞ்சூன் மடநாகு" எனவும், "எருமை நல்லான் கருநாகு பெற்றும்" (பத்து-பெரும்பாண்-165) எனவும் வரும். இவற்றுள் ஓரறிவுயிர் முதலாக ஐந்தறிவுயிரளவும் நாகென்னும் இளமைப்பெயா வரையறையின்றிச் சென்றது. வண்டென்பதற்கும் ஒக்கும், அது விரவுப் பெயராகலின். (உ௬)

582. ஒன்றறி வதுவே யுற்றறி வதுவே
யிரண்டறி வதுவே யதனொடு நாவே
மூன்றறி வதுவே யவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே யவற்றொடு கண்ணே
யைந்தறி வதுவே யவற்றொடு செவியே
யாறறி வதுவே யவற்றொடு மனனே
நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.

இது, மேல் அதிகாரப்பட்ட ஓரறிவுயிர் உணர்த்தும்வழி அவ்வி னத்தனவெல்லாங் கூறுதல் நுதலிற்று.

இதன் பொருள் : ஒன்றறிவதென்பது ஒன்றனையறிவது; அஃ தாவது உற்றறிவதென்பதும்: இரண்டறிவதென்பது அம்மெய்யுணர் வினோடு நாவுணர்வுடையதெனவும், மூன்றறிவுடையது அவற்றோடு நாற்றவுணர்வுடையதெனவும், நான்கறிவது அவற்றோடு கண்ணுணர் வுடையதெனவும்: ஐந்தறிவது அவற்றோடு செவியுணர்வுடையதென வும்: ஆறறிவுடையது அவற்றோடு மனவுணர்வுடையதெனவும், அம் முறையானே நுண்ணுணர்வுடையோர் நெறிப்படுத்தினர், என்றவாறு.

இது முறையாதற்குக் காரணமென்னையெனின், எண்ணுமுறை யாற் கூறினாரென்பது. அல்லதூஉம், எல்லாஉயிர்க்கும் இம்முறை யானே பிறக்கும் அவ்வவற்றுக்கோதிய அறிவுகளென்றற்கு அம்முறை யாற் கூறினாரென்பது. என்னை அதுபெறுமாறெனின், நேரிதினுண ர்ந்தோர் நெறிப்படுத்தினரென்பதனாற் பெறுதும். மற்று ஒன்றுமுதல் ஐந்திறுகிய பொறியுணர்வு மனமின்றியும் பிறப்பனபோல வேறுகூறிய தென்னையெனின், ஓரறிவுயிர்க்கு மனமின்மையின் அங்ஙனங் கூறினா ரென்பது. அதற்கு உயிருண்டாயின் மனமின்றாமோவெனின், உயி ருடையவாகிய நந்துமுதலாகியவற்றுக்குச் செவிமுதலாய பொறி யின்மை கண்டிலேயோவென்பது. அவ்வாறே ஒழிந்தவற்றிற்கும் மன வுணர்வில்லை யென்பாரும் மனமுண்டென்பாருமென இருபகுதியர். அவையெல்லாம் வல்லார்வாய்க் கேட்டுணர்க. அல்லதூஉம் பொறி யுணர்வென்ப தாமே உணரும் உணர்ச்சி; அங்ஙனம் உணர்ந்தவழிப் பின்னர் அவற்றை மனஞ் சென்று கொள்ளுமென்பதென்னையெனின் மனம் ஒன்றினை வினையாற்க மற்றொன்று கட்புலனாயக்கால் அதனைப் பொறியுணர்வுகொள்ள அதன்வழியே மனந் திரிந்து செல்லுமாலின். என்னை? மனனுணர்வு மற்றோர்பொருட்கண் நின்றகாலத்துப் பிறபொ ருட்கட் சென்றதெனப் படாதன்றே? பின்னர் அதனை அறி வித்தது பொறியுணர்வாகலான் அவை தம்மின்வேற்றுமை யுடையன வென்பது. அல்லதூஉந் தேனெய்யினை நாவின்பொறி உணர்ந்தவழி இன்புற்றுங் கண்ணுள் வார்த்து மெய்யுணர்வுணர்ந்தவழித் துன்புற்

றும், கறிதாயின மான்மதத்தினை மூக்குணர்வுணர்ந்தவழி இன்புற்றுங் கண்ணுணர்வுணர்ந்தவழி இன்பங் கொள்ளாமையும் வருதலின் அவை பொறியுணர்வெனப்படும். மனவுணர்வும் ஒருதன்மைத்தாகல் வேண்டுமாலெனின், ஐயுணர்வின்றிக் கனாப்போலத் தானேயுணர்வது மனவுணர்வெனப்படும். பொறியுணர்வு மனமின்றிப் பிறவாதெனின் முற்பிறந்தது மனவுணர்வாமாகவே பொறியுணர்வென்பது ஓரறிவின்றாகியே செல்லுமென்பது. அற்றன்றியும் ஒருவனுறுப் பிரண்டு தீண்டியவழி அவ்விரண்டும் படினும் ஒருகணத்துள் ஒருமனமே இருமனப்பட்டு அவ்வுறுப்பிரண்டற்கும் ஊற்றுணர்வு கெடாது கவர்ப்ப வாங்கிக் கைக்கொண்டு மீளுமென்பது காட்டலாகாமையானும் அஃதமையாதென்பது. (௨௭)

583. புல்லு மரனு மோரறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே.

இது, முறையானே ஓரறிவுடையனவுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : புறக்காழனவாகிய புல்லும் அகக்காழனவாகிய மரனும் ஓரறிவுடைய. பிறவும் அக்கிளைப் பிறப்பு உள்ளன, என்றவாறு.

கிளைப்பிறப்பென்பது கிளையும் பிறப்புமென்றவாறு. கிளையென்பன புறக்காழும் அகக்காழுமின்றிப் புதலுங் கொடியும் போல்வன. பிறப்பென்பன மக்களானும் விலங்கானும் ஈன்ற குழவி ஓரறிவின ஆகிய பருவமும் எஞ்ஞான்றும் ஓரறிவினவேயாகிய என்பில் புழுவுமென இவை. இவை வேறுபிறப்பெனக் கொள்க. மற்று இவற்றுக்கு அறிவில்லை பிறவெனின், பயிலத்தொடுங்காற் புலருமாகலின் ஓரறிவுடையவென வழக்குநோக்கிக் கூறினான், இது வழக்குநூலாதலின். அஃதேல், இவை உணர்ச்சியாயின் இன்பதுன்பங் கொள்ளுமோவெனின் அதற்கு மனமின்மையின் அது கடாவன்றென்பது. (௨௮)

584. நந்து முரளு மீரறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே.

இது, முறையானே ஈருணர்வுடையன வுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : நந்தும் முரளும் ஈரறிவாகிய ஊற்றுணர்வும் நாவுணர்வுமுடையன. பிறவும் அக்கிளைப் பிறப்பு உள, என்றவாறு.

இரை சுவைக்கோடலும் பிறிதொன்று தாக்கியவழி அறிதலு முடைமையின் மெய்யுணர்வோடு நாவுணர்வு முடையனவென்றவாறு. இவற்றுக்குக் கிளையென்பன கிளிஞ்சிலும் முற்றிலும் முதலாகிய கடல்வாழ் சாதியும் பிறவுமெனக் கொள்க. பிறப்பென்பன முற்கூறிய வாறே கொள்ளப்படும். (உக)

585. சிதலு மெறும்பு மூவறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே.

இது, மூவறிவின கூறுகின்றது.

இதன் பொருள் : சிதலும் எறும்பும் ஊற்றுணர்வும் நாவுணர்வும் மூக்குணர்வுமுடைய. அவற்றுக் கிளையும் பிறப்பும் அவ்வாறே மூவறி வுடைய, என்றவாறு.

இவை உற்றுணர்ந்துமீடலும் நாச்சுவைகோடலும் நெய்யுள்வழி மோந்தறிதலுமென மூன்றறிவினையுடையவாறு கண்டுகொள்க. இவற்றுக்குக் கண்ணுஞ் செவியுமின்மை எற்றான் அறிதுமெனின், ஒன்று தாக்கியவழியன்றி அறியாமையிற் கண்ணிலவென்பதறிதும். உரப்பிய வழி ஓடாமையிற் செவியிலவென்பதறிதும். இவற்றின் கிளையென் பன ஈயன்மூதா போல்வன. பிறப்பென்பன முற்கூறியவாறே மக்கட் குழவியும் விலங்கின் குழவியும் இம்மூன்றுணர்வாகிய பருந்தனவும் அட்டை முதலாகியவுமெல்லாங் கொள்க. (௩0)

586. நண்டுந் தும்பியு நான்கறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே.

நண்டுந் தும்பியும் நான்கறிவினவெனவும் அந்நாலறிவினை யுடைய கிளையும் பிறப்பும் வேறுளவென்பதூஉங் கூறியவாறு.

இதன் பொருள் : நண்டிற்குந் தும்பிக்குஞ் செவியுணர்வொழிந்த நான்கு உணாவும் உள அவற்றுக் கிளையும் பிறப்பும் பிறவும் உள, என்றவாறு.

மெய்யுடைமையின் ஊற்றுணர்வும் இரைகோடலின் நாவுணர்வும் நாற்றங்கோடலின் மூக்குணாவுங் கண்ணுடைமையிற் கண்ணுணர்வுமுடையவாயின. நண்டிற்கு மூக்குண்டோவெனின், அஃது ஆசிரியன் கூறலான் உண்டென்பதுபெறும். இவற்றுக்குக் கிளையென்பன வண்டுந் தேனீயுங் குழவியும் முதலாயின. பிறப்பென்பன நான்கறிவுடைய பிறசாதிகளென முற்கூறியவாறே கொள்க. (௬௧)

587. மாவு மாக்களு மையறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே.

இஃது, ஐயறிவுடையன கூறுகின்றது.

இதன் பொருள் : ஐயறிவுடையன விலங்கும் அவை போல்வன ஒருசார் மானிடங்களுமாம். அக்கிளைப்பிறப்புப் பிறவும் உள, என்றவாறு.

மாவென்பன நாற்கால்விலங்கு. மாக்களெனப்படுவார் மனவுணர்ச்சியில்லாதார். கிளையென்பன எண்கால் வருடையுங் குரங்கும் போல்வன. எண்காலவாயினும் மாவெனப்படுதலின் வருடைகிளையாயிற்று. குரங்கு நாற்காலவாகலிற் கிளையாயிற்று. பிறபென்பன கிளியும் பாம்பும் முதலாயின. மற்றுப் பாம்பிற்குச் செவியுங் கண்ணும் ஒன்றேயாகிக் கட்செவியெனப்படுமாகலின் ஐயறிவில்லை பிறவெனின், பொறியென்பன வடிவுநோக்கின அல்லவாகலின் ஒன்றே இரண்டுணர்விற்கும் பொறியாமென்பது. கிளியென்பது பறவையாகலின் அதனை வேறோதுகவெனின், முன்னையவற்றிற்கும் பறவையென்றோதியதிலனகலான் அவ்வச்சூத்திரங்களானே எல்லாம் அடங்கு

மென்பது. மற்றுப் புல்லும் மரனும் முதலாக இவ்விரண்டு பிறப் பெடுத்தோதி ஒழிந்தனவற்றையெல்லாம் பிறவுமுளவெனப் புறன டுத்ததென்னையெனின், அவை வரையறையிலவாகலின் அங்ஙனங்கூறி னன். அல்லதூஉம் மக்களும் புள்ளும் விலங்கும் முதலாயின ஓரறிவினவென்றும் ஈரறிவினவென்றும் எண்ணி வரையறுக்கப் படாமையானும் அவ்வாறுகூறினனென்பது. (௩௨)

588 மக்க டாமே யாறறி வுயிரே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே.

இஃது, ஆறறிவுயிர் கூறுகின்றது.

இதன் பொருள் : மக்களெனப்படுவார் ஐம்பொறியுணர்வேயன்றி மனமென்பதோர் அறிவும் உடையார். அக்கிளைப் பிறப்பு வேறும் உள, என்றவாறு.

முப்பத்திரண்டு அவயவத்தான் அளவிற்பட்டு அறிவொடு புணர்ந்த ஆடூஉ மகடூஉ மக்களெனப்படும். அவ்வாறு உணர்விலுங் குறைவுபட் டாரைக் குறைந்தவகை அறிந்து முற்கூறிய சூத்திரங்களானே அவ் வப் பிறப்பினுட் சேர்த்திக்கொள்ள வைத்தானென்பது. அவை ஊமுஞ் செவிடுங் குருடும்போல்வன. கிளையெனப்படுவார் தேவருந் தானவரும் முதலாயினோர். பிறப்பென்றதனாற் குரங்கு முதலாகிய விலங்கினுள் அறிவுடையனவெனப்படும் மனவுணர்வுடையன உளவா யின் அவையும் ஈண்டு ஆறறிவுயிராபடுங்குமென்பது. தாமேயெனப் பிரித்துக் கூறினமையான் நல்லறிவுடையாரென்றதற்குச் சிறந்தாரென் பதூஉங் கொள்க. (௩௩)

589. வேழக் குரித்தே விதந்து களிறென்றல்
கேழற் கண்ணுங் கடிவரை யின்றே.

மக்கடாமே ஆறறிவுயிரெனப் பிரித்துக் கூறினமையால் ஆண்பால் அதிகாரப்பட்டதுகண்டு மற்றை விலங்கினுள் ஆண்பாற்குரியன கூறிய தொடங்கியவாறு. சிறத்தமுறையாற் கூறாது களிற்றினை முற்கூறி

னென் அப்பொருள் விலங்கினுட் சிறந்தமையானென்பது. ஏறும் ஏற்றையும் பயின்ற வரவினவாகலின் முதற்சூத்திரத்துண் முற்கூறி னனென்பது.

இதன் பொருள் : யானைக்கு விதந்து களிறென்றலுரித்து ; கேழற்கண்ணுஞ் சிறுபான்மைவரும், என்றவாறு.

விதந்தென்ற விதப்பினாற் களிறென்பது சாதிப்பெயர்போலவும் நிற்குமென்பது. அஃதாவது, யானையென்னுஞ் சாதிப்பெயரினைக் களிறென்னும் பெயர்வந்து சிறப்பித்தாற் "கடுங்களிற் றொருத்தல்" (கலி-2) என்றும் ஆகுமென்பது. "இரிஸமானேறு" என்பதும் அதனாற் கொள்க. பன்றிக்கும் அவ்வாறு வருவனவுளவேற் கொள்க. கேழற்பன்றி என்பதனைக் களிற்றுப்பன்றியென்றுஞ் சொல் லுப. (௩௯)

590. புல்வாய் புலியுழை மரையே கவரி
சொல்லிய கராமோ டொருத்த லொன்றும்.

591. வார்கோட் டியானையும் பன்றியு மன்ன.

592. ஏற்புடைத் தென்ப வெருமைக் கண்ணும்.

இவை, உரையியைபுநோக்கி உடனெழுதப்பட்டன.

இதன் பொருள் : இவை ஒன்பதுபெயரும் ஒருத்தலென்னும் பெயருக்கு ஒன்றும், என்றவாறு.

இவற்றைப் பெரும்பான்மை சிறுபான்மைபற்றி மூன்றுசூத்திரத் தான் ஓதினனென்பது. உதாரணம், "காடுமீக் கூறுங் கோடேந் தொருத்தல்" என யானை ஒருத்தலென்றாயிற்று. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க. (௪௨)

593. பன்றி புல்வா யுழையே கவரி
யென்றிவை நான்கு மேறெனற் குரிய. (௪௩)

594. எருமையு மரையும் பெற்றரு மன்ன. (௬௯)

595. கடல்வாழ் சுறவு மேறெனப் படுமே. (௭0)

இம் மூன்றுசூத்திரத்தான் ஓதிய எட்டுச்சாதியின் ஆண்பாலும் ஏறெனப்படும், என்றவாறு.

" சாற்றுச்சுவ டொற்றுக் கடிபுனங் கவரு
மேற்றிளம் பன்றியி னிருளை வெரூஉம் "

எனவும்,

" வெருளேறு பயிரு மாங்கண் "

எனவும,

" பொரிமலர்ந் தன்ன *பொறியுடை மடமான்
திரிமருப் பேற்றொடு தேரறோர்க் கோடும்" (கலி-13.)

எனவும்,

" ஏற்றிளங் கவரி யெரியென வெருவப்
பூத்த விலவத்துப் பொங்க ரேறி"

எனவும்,

" ஏற்றெருமை நெஞ்சம் †வடிட்பி னிடந்திடு" (கலி-103.)

எனவும்,

" வரிமரற் பரவை மரையேறு கொறிக்கும்"

எனவும்,

" புலம்பயி ரருந்த ‡வண்ண னல்லேறு " (குறுந்-344.)

எனவும்,

" சுறவே றெழுதிய மோதிரந் தொட்டாள் " (கலி-84)

எனவும் வரும். பிறவும் அன்ன. (௭0)

---

* 'பொறியமடமான்' என்பதும் பாடம்.

† 'வடிம்பி னிடந்திட்டு' என்பதும் பாடம்.

‡ 'அண்ணலேற்றொடு' என்பதும் பாடம்.

596. பெற்ற மெருமை புலிமரை புல்வாய்
மற்றிவை யெல்லாம் போத்தெனப் படுமே.

597. நீர்வாழ் சாதியு ளறுபிறப் புரிய. (சஉ)

598. மயிலு மெழாலும் பயிலத் தோன்றும். (சங)

இதன் பொருள்: போத்தென்னும்பெயர் இப் பதின்மூன்று சாதியின் ஆண்பாற்கு முரியது, என்றவாறு.

மற்றிவையெல்லாமென்றதனாற் பன்றியும் ஒத்தியும் முதலாயினவுங் கொள்ளப்படும். நீர்வாழ்சாதியுள் அறுபிறப்பென்பன சுறவும் முதலையும் இடங்கருங் கராமும் வராலும் வாளையுமென இவை. பயிலத்தோன்றுமென்றதனானே நாரைமுதலியனவுங் கொள்க. மற்றிவை பயிலத்தோன்றுமெனிற் சூத்திரம் வேறு செய்ததென்னை? முதற்சூத்திரத்துள் எண்ணுக பிறவெனின், இவை பறவையுட் பயிலத்தோன்றுமாகலின் வேறோதினு னென்க. 'எறிபோத்து' 'உழுபோத்து' எனவும், "புலிப்போத் தன்ன புல்லணற் காளை" (பத்து-பெரும்பாண்-138) எனவும் 'மரைப்போத்து' எனவும் "சுவைத்தலை முதுபோத்து மறிக்கு விழலாகும்" எனவும் வரும்.

எல்லாமென்றதனாற் பன்றிப்போத்தெனவும் வரும்.

"முதலைப் போத்து முழுமீ னாரும்
பகுவாய் வராஅற் பல்வரி யிரும்போத்து"

எனவும்,

"வாளைவெண்போத் துணீஇய"

எனவும் நீர்வாழ்சாதியுட் சில வருமாறு.

"மயிற்போத் தூர்ந்த வயிற்படை நெடுவேள்"

எனவும்,

"போத்தோடு வழங்கா மயிலு மெழாலும்"

எனவும் வந்தவாறு.

'பயில' என்றதனால்,

"நாரைப்போத் தயிரை யாரும்"

எனவும் ஒழிந்தனவும் இவ்வாறே கண்டுகொள்க. மற்று முதலையும் இடங்கருங் கராமுந் தம்மின் வேறெனப்படுமோவெனின்,

"கராஅங் கலித்த குண்டுகண் ணகழி
யிடங்கருங் குட்டத் துடன்றொக் கோடி
யாமங் கொள்பவர் சுடர்நிழற் கதூஉங்
கடுமுரண் முதலைய நெடுநீ ரிலஞ்சி" (புறம்-37.)

என வேறெனக் கூறப்பட்டனவென்பது.

இனிச் செம்போத்தென்பதும் ஈண்டுக் கொள்ளாமோவெனின், அது பெண்பாற்கும் பெயராகலின் ஒருபெயரே பண்புகொள்பெயரா றென்பதுணர்க. (சரு)

599. இரலையுங் கலையும் புல்வாய்க் குரிய. (சரு)

600. கலையென் காட்சி யுழைக்கு முரித்தே. (சா)

601. நிலையிற் றப்பெயர் முசுவின் கண்ணும். (சக)

இவை மூன்றுசூத்திரமும் எண்ணிய மூன்றுசாதிக்கும் இரலையுங் கலையுமென்னும் ஆண்பாற் பெயர் இன்னவா றுரியவென்கின்றன.

இதன் பொருள் : இரலையுங் கலையுமென்பன புல்வாய்க்குரிய ; அவற்றுட் கலையென்பது உழைக்குரித்து ; அக்கலையென்பது முசுவிற்கு வருங்கால் உழைக்குப்போலச் சிறுவரவிற்றன்றி வரும், என்றவாறு.

"புல்வா யிரலை நெற்றி யன்ன" (புறம்-374.)

எனவும்,

"கவைத்தலை முதுகலை காலி னொற்றி" (குறுந்-213)

எனவும்,

"கள்ளியங் காட்ட புள்ளியம் பொறிக்கலை" (அகம்-97.)

எனவும்,

"மைபட்டன்ன மாமுக முசுக்கலை"

எனவும் வரும்.

முசுவிற்கு கிலைபெற்றதெனவே அத்துணை கிலைபேறின்றிக் குரங்கிற்கு வருவனவுங் கொள்க. அது,

"கருங்கட் டாக்கலை பெரும்பிறி துற்றென" (குறுந்–69.)

என வருமாற்றான் அறிக. (சுஅ)

## 602. மொத்தையுந் தகரு முதளு மப்பரும் யாத்த வென்ப யாட்டின் கண்ணே.

இதன் பொருள்: இக் கூறப்பட்ட நான்குபெயரும் யாட்டிற்குரிய, என்றவாறு. அவை,

"வெள்யாட்டு மொத்தை"

எனவும்,

"தகர்மருப் பேய்ப்பச் சுற்றுபு திரிந்த"

எனவும்,

"உதணெடுந்-தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றில்"

எனவும் வரும்.

அப்பரென்பது இக்காலத்து வீழ்ந்தது போலும். யாத்தவென்றதனாற் கடாவென்பதும் யாட்டிற்குப் பெயராகக் கொள்க. அது,

"கிலைக்கோட்டு வெள்ளை நரல்செவிக் கடாஅய்" (அகம்-155.)

என வரும்.

இனிக் குரங்கினை அப்பரென்றலுங் கொள்க. (சஎ)

603. சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணு
மாயிருந் தூவி மயிலலங் கடையே.

இதன் பொருள் : பறப்பனவற்றுள் ஆண்பாற்கெல்லாஞ் சேவற் பெயர் உரித்து, அவற்றுண் மயிற்காயின் அஃதாகாது, என்றவாறு.

"காமர் சேவ லேமஞ் செப்ப"

எனவும்,

"வளைக்கட் சேவல் வாளாது மடியின்"

எனவும்,

"தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்" (குறுந்-107.)

எனவும்,

"கானங் கோழிக் கவர்குரற் சேவல்"

எனவும்,

"உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்" (குறுந்-85.)

எனவும் வரும். பிறவும் அன்ன.

'மாயிருந் தூவிமயில்' என்றதனான் அவை தோகையுடையவாகிப் பெண்பால் போலுஞ் சாயலவாகலான் ஆண்பாற்றன்மை இலவென்பது கொள்க. எனவே, செவ்வேள் ஊர்ந்த மயிற்காயின் அதுவும் நேரவும்படுமென்பது. (சஅ)

604. ஆற்றலொடு புணர்ந்த வாண்பாற் கெல்லா
மேற்றைக் கிளவி யுரித்தென மொழிப.

இதன் பொருள் : ஏற்றையென்னுஞ்சொல் ஆற்றலொடு கூடிய ஆண்பாற்கெல்லாம் உரித்து என்றவாறு. அவை,

"குறுங்கை யிரும்புலிக் கொள்வ லேற்றை" (ஐங்குறு-216.)

எனவும்,

"செங்கா யேற்றை கம்மென வீர்ப்ப"

எனவும்,

"கொடுந்தாண் முதலைக் கொள்வ லேற்றை"

எனவும் வரும்.

இக் கருத்தினானே,

"பிணர்மோட்டு நந்தின் பேழ்வா யேற்றை" (அகம்-245.)

எனவும்,

"புன்றாள் வெள்ளெலி மோவா யேற்றை"

எனவுங் கூறினார்.

அவையும் அப்பெயரானே வழங்குதல் ஆற்றலுடையவாகத் தோன்றும். எல்லாமென்றதனாற் சிறுபான்மை ஆற்றல் இல்லாதனவுங் கொள்க. அது "சுடுகாட்டு ளேற்றைப் பனை" என்பது போன்று வருவன. பிறவும் அன்ன.

605. ஆண்பா லெல்லா மாணெனற் குரிய
பெண்பா லெல்லாம் பெண்ணெனற் குரிய
காண்ப வவையவை யப்பா லான.

இது, மேற்கூறிய ஆண்பாற்பெயர்க்கும் இனிவரும் பெண்பாற் பெயருக்கும் புறனடை.

இதன் பொருள் : ஆணென்னுஞ்சொல் எல்லாச்சாதியுள் ஆண் பாற்கும் உரித்து; பெண்ணென்னுஞ்சொல் எல்லாச்சாதியுட் பெண் பாற்கும் உரித்து; வழக்கினுள் அவ்வாறு காணப்படும் அவை, என்ற வாறு.

அவை ஆண்யானை, பெண்யானை; ஆண்குரங்கு, பெண்குரங்கு; ஆண்குருவி, பெண்குருவி என்றாற்போல்வன. இவை காணப்படும் எனவே இத்துணை விளங்கவாராது சிறுவரவினான் வருவனவுமுள

இருபாலு மல்லாதனவென்பது. ஆணலி பெண்ணலி எனவும், ஆண் பனை பெண்பனை எனவும் வரும். பிறவும் அன்ன. (௬0)

606. பிடியென் பெண்பெயர் யானை மேற்றே.

இது, முறையானே மூன்றும் எண்ணுமுறைமைக்கணின்றபெண் மைப்பெயர் கூறிய தொடங்கி ஆண்பாலிற் களிறு முற்கூறியவாறு போலப் பிடியினை முற்கூறியது.

இதன் பொருள் : பிடியென்னும் பெயர் யானைக்கண்ணது, என்றவாறு.

"பிடியடி முருக்கிய பெருமாப் பூசல்"

என வரும். பெயரென்றதென்னையெனின், அவை தொடங்குகின்ற தென்பது அறிவித்தற்கென்பது. (௬௧)

607. ஒட்டகங் குதிரை கழுதை மரையிவை
பெட்டை யென்னும் பெயர்க்கொடைக் குரிய.

இதன் பொருள் : ஒட்டகமுங் குதிரையுங் கழுதையும் மரை யாவும் பெட்டையென்னும் பெயர்பெறும், என்றவாறு.

ஒட்டகப்பெட்டை குதிரைப்பெட்டை கழுதைப்பெட்டை மரை யான்பெட்டை என வரும். (௬௨)

608. புள்ளு முரிய வப்பெயர்க் கென்ப.

இதன் பொருள் : எல்லாப்புள்ளும் பெட்டையென்னும் பெய ரான் வழங்குதற்குரிய, என்றவாறு.

அவை கோழிப்பெட்டை மயிற்பெட்டை யெனவரும். பிறவும் அன்ன. (௬௩)

609. பேடையும் பெடையு நாடி னொன்றும்.

இதன் பொருள் : பேடையும் பெடையுமென்னும் இரண்டும் முன்னர்நின்ற புள்ளிற்கு ஒன்றும், என்றவாறு.

அவை குயிற்பேடை அன்னப்பெடை என வரும். 'நாடின்'என் றதனாற் பெட்டையென்பது வழக்கினுட் பயிலாவென்பது. (ருச)

610. கோழி கூகை யாயிரண் டல்லவை
சூழுங் காலை யளகென லமையா. (ருரு)

611. அப்பெயர்க் கிழமை மயிற்கு முரித்தே.

இதன் பொருள் : கோழியுங் கூகையும் மயிலுமென்பனவற்றுக்கு அளகென்னும் பெயர் உரியது, என்றவாறு.

"மனையுறை யளகின் வாடலொடு பெறுகுவிர்"

என்பது கோழி. பிறவும் அன்ன. (ருசு)

612. புல்வாய் நவ்வி யுழையே கவரி
சொல்வாய் நாடிற் பிணையெனப் படுமே.

இதன் பொருள் : பிணையென்னும் பெண்பெயர்க்குரியன இவை நான்கும், என்றவாறு.

"அலங்கல் வார்கழை *யுதிரனென் ஞெக்கிக்
கலைபிணை விளிக்குங் கானத் தாங்கண்" (அகம்-128.)

எனவும்,

"சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை"

எனவும்,

"சிறுதலை நவ்விப் பிணையிற் றிரிந்த
நெறிகோட்டு"

எனவும்,

* 'முதிர்நென் ஞெக்கி' என்பதும் பாடம்.

"கவரி மான்பிணை நரந்தங் கனவும்"

எனவும் வரும்.

'சொல்வாய் நாடிற் பிணையெனப் படுமே' என்பது பிணையென்னுஞ் சொற்பொருளினை உண்மைநோக்கிற் பிரியாது பிணையும் பிறசாதிக் குஞ் சேவற்குஞ் சொல்லுமாயினும், மரபுநோக்கப் பிணையென்றற்குச் சிறப்புடையன இவை யென்றவாறு. (௬எ)

613. பன்றி புல்வாய் நாயென மூன்று
மொன்றியவென்ப பிணவின் பெயர்க்கொடை.

இதன் பொருள் : இவை மூன்றுசாதியும் பிணவென்னும்பெயர்க் குரியன, என்றவாறு.

"நெடுநீந்தாட் செந்தினைக் கெழுந்த கேழல்
குறுந்தாட் பிணவொடு குறுகல் செல்லாது"

எனவும்,

"குறியிறைக் குரம்பைக் குறத்தி யோம்பிய
மடநடைப் பிணவொடு கவர்கோட் டிரலை"

எனவும்,

"நாய்ப்பிண வொடுங்கிய கிழநரி யேற்றை"

எனவும்,

"முள்ளெயிற் றம்பிணப் பசித்தெனப் பசுங்கட்
செந்நா யேற்றைக் கேழ ருக்க"

எனவும் வரும்.

'ஒன்றிய' என்றதனான்,

"ஈருயிர்ப் பிணவின் வயப்பசி களைஇயர்"

எனப் புலிக்குங் கொள்க. பிறவும் அன்ன. (௬அ)

## 614. பிணவ லெனினு மவற்றின் மேற்றே.

இதன் பொருள்: பிணவலென்பதூஉம் அம்மூன்றற்கும் உரித்து, என்றவாறு.

" இரியற் பிணவ றீண்டலின் " என்பது பன்றி. " நான்முலைப் பிணவல் சேர்கலி தாஙெழித்து " எனபதும் அது. ஒழிந்தனவும் அன்ன. (௫க)

## 615. பெற்றமு மெருமையு மரையு மாவே.

இது, மேல் அந்தஞ்சான்றதென்னும் இலேசினானே ஆவென்பது தழீஇக்கொண்டமையின் அஃது இன்னுழியாகா என்கின்றது.

இதன் பொருள் : ஆவென்னும் பெயர் பெற்றமும் மரையும் எருமையும் பெறும், என்றவாறு

அவை "புனிற்றுப் பாய்ந்தெனக் கலங்கி" எனவும், "சேற்று நிலை முனைஇய செங்கட் காரா" (அகம்-46) எனவும், "மரையா மரல் கவர மாரி வறப்ப" (கலி-6) எனவும் வரும். (௬0)

## 616. பெண்ணும் பிணவு மக்கட் குரிய.

இதன் பொருள் : பெண்ணும் பிணவும் உயர்திணைப் பெண் மைக்குரிய, என்றவாறு.

பெண்ணென்பது 'பெண்பா லெல்லாம் பெண்ணெனற் குரிய' (தொல்-மர-50) என்றமையின், ஈண்டுக் கூறுதன் மிகையாம்பிறவெ னின், அற்றன்று ; அச்சூத்திரம் அஃறிணையதிகாரமாகலின், ஈண்டு விதந்தோதினனென்பது. ஒன்றெனமுடித்தலென்பதனான் உயர்திணை ஆணென்பதும் ஈண்டே கொள்ளப்படும். " பெண்கோ ளொழுக்கங் கண்டுகொள நோக்கி " எனவும், " ஈன்பிண வொழியப் போகி " (பத்து-பெரும்பாண்-90) எனவும் வரும். "ஆண்கட னுகலிற் பாண் கட னாற்றி " என ஆணென்பது உயர்திணைக்கண் வந்தது. பிறவும்

அன்ன. பிணுவென்னும் ஆகாரவிறுதி வன்கணமன்மையிற் குறியதன் இறுதிச் சினைகெட்டு உகரம்பெறுது நின்றது. மக்கட்குரியவெனவே உரியவன்றித்

"துறுகல் விடரளைப் பிணவுப்பசி கூர்ந்தெ தன" (அகம்-146.)

எனப புலிமுதலியனவற்றிற்குங் கொளக. (சுக)

617. எருமையு மரையும் பெற்றமு நாகே. (சுஉ)

618. நீர்வாழ் சாதியு ணந்து நாகே. (சுங)

இதன் பொருள்: இந்நான்கற்கும் நாகெனும்பெயர் உரித்து, என்றவாறு.

"எருமை நல்லான் கரிநாகு பெறூஉம்" எனவும், "உடனிலை வேட்கையின் மடநாகு தழீஇ யூர்வயிற் பெயரும் பொழுதின்" எனவும், "நாகிள வளையொடு பகன்மணம் புகூஉம்" (புறம்-266) எனவும் வரும். (சுங)

619. மூடுங் கடமையும் யாடல பெறா.

இதன் பொருள் : இவ்விருபெயரும் யாட்டிற்கேயுரிய பெண்மைப்பெயர், என்றவாறு.

இவை இப்பொழுது வழக்கினுள் அரிய. (சுச)

620. பாட்டி யென்பது பன்றியு நாயும். (சுரு)

621. நரியு மற்றே நாடினர் கொளினே. (சுசு)

இதன் பொருள் : பாட்டியென்று சொல்லப்படுவன பன்றியும் நாயும், நரியும், என்றவாறு.

பிறவும் அன்ன.

622. குரங்கு முசுவு மூகமு மந்தி.

இதன் பொருள் : இம்மூன்று சாதிப் பெண்பாலும் மந்தியென்னும் பெயர்பெறும், என்றவாறு.

"கைம்மை யுய்யாக் காமர் மந்தி" (குறுந்-69) எனவும், "கருமுக மந்தி செம்பி னேற்றை" எனவும் வரும்.

ஊக்கத்துக்கும் இஃதொக்கும்.

623. குரங்கி னேற்றினைக் கடுவ னென்றலு
மரம்பயில் கூகையைக் கோட்டா னென்றலுஞ்
செவ்வாய்க் கிளியைத் தத்தை யென்றலும்
வெவ்வாய் வெருகினைப் பூசை யென்றலுங்
குதிரையு ளாணினைச் சேவ லென்றலு
மிருணிறப் பன்றியை யேன மென்றலு
மெருமையு ளாணினைக் கண்டி யென்றலு
முடிய வந்த வவ்வழக் குண்மையிற்
கடிய லாகா கடனறிந் தோர்க்கே.

இது, மரீஇவந்து முடிந்த மரபுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : ஆண்குரங்கினைக் கடுவனென்றலும், மரப்பொதும்பினுள் வாழுங் கூகையைக் கோட்டானென்றலும், செவ்வாய்க் கிளியைத் தத்தையென்றலும், வெருகினைப் பூசையென்றலும், ஆண் குதிரையைச் சேவலென்றலும், இருணிறப் பன்றியை ஏனமென்றலும் எருமையேற்றினைக் கண்டியென்றலும், அவ்வாறுமுடிந்த வழக்குண்மையிற் கடியப்படா கடப்பாடு அறிந்தோர்க்கு, என்றவாறு.

"கடுவனு மறியுமக் கொடியோ னையே." ஆண்குரங்கு. இதனைக் கடியலாகாதெனப்பட்ட இழுக்கென்னையெனின், மக்கட்கும் வெருகிற்கும் அக்காலத்துப் பயின்றனபோலுமாதலின். கூகையைக் கோட்

டானென்றலும் வழக்காகலான் அமையும், மரம்பயில் கூகையென்றதென்னையெனின், மரக்கோடு விடாமையிற் கோட்டானென்னும் பெயர்பெற்றதென்றற்கு. தத்தையென்பது பெருகிளியாதலிற் சிறுகிளிக்கும் அப்பெயர் கொடுத்த லமையுமென்றவாறு. செவ்வாய்க் கிளியென்றதனைச் சிறுகிளிமேற்கொள்க. வெவ்வாய் வெருகென்றதனற் படப்பை வேலியும் புதலும் பற்றி விடக்கிற்கு வேற்றுயிர்கொன்னும் வெருகினை இல்லுறை பூசையின் பெயர்கொடுத்துச் சொல்லலும் அமையுமென்றவாறு. குதிரையைச் சேவலென்றல் இக்காலத்தரிதாயிற்று. அதுவுஞ் சிறகொடு சிவணுதாயினும் அதனைக் கடுவிசைபற்றிப் பறப்பதுபோலச் சொல்லுதல் அமையுமென்பது கருத்து. எருமையேற்றினையுங் கண்டியென்பபோலும். அது காணலாயிற்றில்லை. அதனை இலக்கணவகையானுடைய பெயரென்றலுமாம். இதுபொழுதின்றென்பது. கடனறிந்தோரென்றதனன் வழக்கினுஞ் செய்யுளினும் அவை வந்தமையிற் கடப்பாடறிவோர்க்குக் கடியலாகாதென்றவாறு. இன்னும் இப்பரிகாரத்தாலே கோழியை வாரணமென்றலும், வெருகினை விடையென்றலும் போல்வன பலவுங்கொள்க. அவை,

> "கான வாரண மீனுங்
> காடாகி விளியு நாடுடை யோரே" (புறம்-52.)

எனவும்,

> "வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ" (திருமுரு-219.)

எனவும்,

> "வெருக்கு விடையன்ன வெருஉேக்குக் கயந்தலை"

எனவும் வரும். (கஅ)

## 624. பெண்ணு மாணும் பிள்ளையு மவையே.

இதுவுமது. பெண் ஆணென்பன இருதிணைப்பெண்மைக்கும் ஆண்மைக்கும் பொதுவென்பன முற்கூறினுன், மேல் ஒன்றற்குரிய பெயர் மீஇவந்து பிறிதொன்றற்காயவழியுங் கடியலாகாதெனவின்ற

அதிகாரத்தான் இவையும் அவ்வாறே திரியினுங் கடியலாகாதென்றவாறு.

இதன் பொருள் : பெண்ணும ஆணும் பிள்ளையுமென வாளாது சொல்லியவழி உயர்திணைக்கேற்றன மரீஇவந்த மரபு, என்றவாறு.

மகக்குழவியென்பனவோவெனின், அவை அத்துணைப்பயின்றில உயர்திணைக்கென்பது. எடுத்தோதிய மூன்றும் ஆயின. வாளாதே பெண்வந்ததென்றவழி அஃறிணைப்பொருளென்பது உணரலாகாது, 'பெண்குரங்கு வந்தது' என விதந்தே கூறல்வேண்டுமென்பது. 'பெண் பிறந்தது' 'ஆண்பிறந்தது' 'பிள்ளைபிறந்தது' என அடையடாது சொல்லியவழி உயர்திணைக்கேயாம். அஃறிணைககாயின் அற்றன்றென்பது. (௬௬)

625. நூலே கரக முக்கோன் மணையே
யாயுங் காலை யந்தணர்க் குரிய.

இஃது, உயர்திணை நான்குசாதியும பற்றிய மரபு உணாத்துவான், முறையானே அந்தணாக்குரிய மரபுபட்டுவருங் கலப்பைவேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : முநநூலும குணடிகையும் முக்கோலும் யாமை மணையும் போல்வன அந்தணர்க்கு உரிய, என்றவாறு.

'ஆயுங்காலை' யென்றதனற குடையுஞ் செருப்பும் முதலாயினவும் ஒப்பன அறிந்துகொள்க.

உதாரணம் :

"எறித்தரு கதிர் தாஙகி யேந்திய குடைநீழ
லுறித்தாழ்ந்த கரகமு முரைசான்ற முக்கோலும்"

எனவும்,

"தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்துப்
படிவ வுண்டிப் பாாபபன மகனே"

எனவும் வரும்.

இன்னும் 'ஆயுங்காலை' யென்றதனன், ஒருகோலுடையார் இருவருளர், அவர் துறவறத்து நின்றாராகலின் உலகியலின் ஆராயப்படாரென்பது. முக்கோலுடையார் இருவருட் பிச்சை கொள்வானும் பிறண்டிருந்து தனதுண்பானும் உலகியலின் நீங்காமையின் அவரையே வரைந்தோதினனென்பது. மற்று அரசர்க்கும் வணிகர்க்கும் உரிய நூலினை ஈண்டு வரைந்தோதினதென்னையெனின், ஒருகோலுடையான் நூல்களைவானகலின் அவனுஞ் சிறுபான்மை அந்தணனெனப்படுமென்பது கோடற்குங் கரகமும் மணையும் உடையானென்றற்குமென்பது. நூலினை முற்கூறினன் பிறப்புமுறையானுஞ் சிறப்புமுறையானுமென்பது. இனிக் குடிமியுங் குசையும்போல் வணங்கூறிற்றிலன், அது முன்னரும் பின்னரும வருதலானும் மன்னரும் வணிகரும் பெறுதலானுமென்பது. (எ0)

626. படையுங் கொடியுங் குடையு முரசு
நடைநவில் புரவியுங் களிறுந் தேருந்
தாரு முடியு நேர்வன பிறவுந்
தெரிவுகொள் செங்கோ லரசர்க் குரிய.

இது, முறையானே அரசர்க்குரியன கூறுகின்றது.

இதன் பொருள் : கொடிப்படையுங் கொடியுங் குடையும் முரசுங் குதிரையும் யானையுந் தேருந் தாரும் முடியும் பொருந்துவன பிறவும் அரசர்க்குரிய, என்றவாறு.

பிறவும் என்றதனற் கவரியும் அரியணையும் அரண்முதலாயினவுங் கொள்க. தெரிவுகொள் செங்கோல் அரசரென்றதனனே செங்கோல் கொளப்பட்டது. தாரெனவே போர்ப்பூவுந் தார்ப்பூவும் அடங்கின. படையென்புழி நடைநவில் புரவியுங் களிறுந் தேரும் அடங்காவோவெனின், அடங்கும். அவைநோக்கிக் கூறினனல்லன். அவை பட்டஞ்சாத்தியவாதல் நோக்கிக் கூறப்பட்டன. அஃதேல், தேர்கூறியதென்னையெனின், அதுவும் அவைபோல அரசர்க்கே உரியதென்றுளதென்றற்கும், அதுபூண்ட குதிரையும் அவர்க்கேயுரியவென்

றுளவென்றற்குக் கூறினானென்பது. இக்கருத்தினாற்போலும் நடைகவில்புரவியெனச் சிறப்பித்து அதனை முற்கூறியதென்பது. எல்லாவற்றினுஞ் சிறந்ததாதலான் முடி பிற்கூறப்பட்டது. தெரிவுகொள் செங்கோல் அரசரென்பதனான் அரசரெல்லாந் தந்நாட்டு நன்றுந் தீதும் ஆராய்ந்து அதற்குத் தக்க தண்டஞ் செய்தற்கு உரிமையும் அதுவெனக்கொள்க. (எக)

627. அந்த ணாளர்க் குரியவு மரசர்க்
கொன்றிய வரூஉம் பொருளுமா ருளவே.

இது, மேலதற்கோர் புறனடை.

இதன் பொருள்: அந்தணாளர்க்கு உரியவென மேல் ஓதப்பட்டனவற்றுண் முந்நூலும் மணையும்போல்வன அரசசாதிக்குரியவாகியும் வரும், என்றவாறு.

'பொருளுமாருள'வென்றதனான், அந்தணாளர்க் குரியனவற்றுள் வேள்விக்கலப்பையொன்றிவருதல் பெரும்பான்மையென உணர்க. ஈண்டு அவற்றை விதந்தோதினான் ஒழிந்த புலனெறிவழக்கினுட் பயிலாமையினென்பது.

'அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமு
மைவகை மரபி னரசர் பக்கமு
மிருமூன்று மரபி னேனோர் பக்கமும்' (தொல்-புறத்-20.)

பற்றி வாகைப்பொருள் பிறத்தலின் அவற்றைப் புறத்திணையியலுட் கூறினான். ஆயினும், ஈண்டுத் தழீஇக்கொள்ளப்படும் மரபுவகையானென்பது. என்போலவெனின், 'அ இ உ அம் மூன்றுஞ் சுட்டு' (தொல்-எழுத்-நூன்-31) என நூன்மரபினுள் ஓதிய மூவகைச்சுட்டினை இடைச்சொலோத்தினுள் ஓதானாயினான், அது போலவென்பது. "கொன்றுகளம் வேட்ட ஞான்றை" (அகம்-36) எனவும் "அடுகளம் வேட்ட வடுபோர்ச் செழிய" (புறம்-26) எனவும் அரசர்க்கு வேள்விகூறினவாறு. பிறவும் அன்ன. (எஉ)

628. பரிசில்பா டாண்டிணைத் துறைக்கிழ மைப்
நெடுந்தகை செம்ம லென்றிவை பிறவும் [பெயர்
பொருந்தச் சொல்லுத லவர்க்குரித் தன்றே.

இஃது, ஐயம் அறுத்தது; அந்தணாளர்க்குரியன அரசர்க்குமுரியன உளவெனக் கேட்ட மாணாக்கன் அரசர்க்குரியனவும் அந்தணர்க்குரியசொல்லென்று ஐயுறுமாற் காத்தமையின். இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதியெனினும் அமையும். என்னை ? ஈண்டு ஓதப்பட்டவை அரசர்க்குரியவென்பது கொள்ளவைத்தமையின்.

இதன் பொருள்: பரிசில்–பரிசில்கடாநிலையும், பரிசில்விடையும் போல்வன; பாடாண்டிணைத்துறைக்கிழமைப்பெயர்–பாடாண்டிணைக் குரிய கைக்கிளைப் பொருள்பற்றியுங் கொடைத்தொழில்பற்றியும் பெறும்பெயர்; அவை காளை இளையோன் எனபன போல்வன: அவையும் நெடுந்தகை செம்மலெனபன முதலாயினவும் இவைபோல்வன பிறவும் புனைந்துரை வகையாற் சொல்லினலலது சாதிவகையாற் கூறுதல் அந்தணர்க்குரித்தன்று, என்றவாறு.

பரிசில்கடாநிலையும் பரிசில்விடையும் போல்வன கூறியுங் கைக்கிளைப்பொருள் கூறியுங் கொடைத்தொழில் கூறியும் அவற்றுக்கேற்ப எடுத்தோதிய பெயர்கூறியும் அந்தணரைத் தனமை வகையாற் செய்யுள் செய்யப் பெறாரென்பது கருத்து. புனைந்துரை வகையான் அவையாமாறு: ''எண்ணுணப பலவேட்டு மண்ணுணப் புகழ்பரப்பியும்'' என வரும். கொடுத்தற்றொழில் வேள்விக்காலத்ததெனவரையறுத்தலிற் பொருந்தக்கூறுதல் அவர்க்குரித்தன்றென்றுனென்பது; பாடாண்டிணைத்துறைப் பெயரென்னாது கிழமைப்பெயரென்றதென்னையெனின், அவை ஐந்திணைப்பெயராகி வருங்காலும் அவர்க்குரியவல்லவென்றற்கு. எனவே, அரசாக்காயின் இவையெல்லாம் உரியவென்பவாயிற்று. மற்றுப் பாடாண்டிணைக்குரியவல்லவெனமற்றைத்திணைக்கிழமைப்பெயர் உரியவாம் பிறவெனின், அஃது 'இடையிரு வகையோ ரல்லது நாடிற்-படைவகை பெறார்' (தொல்-மர-76) என மேற்கூறி விலக்குமென்பது. (எ-)

629. ஊரும் பெயரு முடைத்தொழிற் கருவியும்
யாருஞ் சார்த்தி யவையவை பெறுமே.

இது, மேற்கூறிய அந்தணர்க்கும் அரசர்க்கும் உரியனவற்றொடு ஒழிந்த சாதியோர்க்கும் ஒப்பன உடன்கூறுகின்றது.

இதன் பொருள்: நான்கு சாதியாரும் பிறந்த ஊரும் அவர்தம் பெயரும் அவர்சாதிக்கு உரித்தென்றற்கேற்ற கருவியும் யாருஞ் சார்த்தப்பட்டவை அவை பெறுப, என்றவாறு.

இம்மூன்றும் வரையறுத்துச் சொல்லப்படா எல்லாச் சாதியார்க்கும் ஒப்பச்செல்லுமென்பது கருத்து. என்னை? இவை சாதிபற்றி வேறுபடாப் பொருளாகலின். ஊரும் பெயருமென்பன, உறையூர் ஏணிச்சேரி முடமோசி, பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகன், கடியலூர் உருத்திரங்கண்ணன் என்பன அந்தணர்க்குரியன; உறையூர்ச் சோழன், மதுரைப்பாண்டியன் என்பன அரசர்க்குரியன; காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணன், மதுரை அறுவைவாணிகன் இளவேட்டன் என்பன வணிகர்க்குரியன; அம்பர்கிழான் நாகன், வல்லங்கிழான் மாறன் என்பன வேளாளர்க்குரியன. பூணி, உடைத்தொழிற் கருவியென்பன, அந்தணாளர்க்குச் சுருவையுஞ் சமிதைக்குறைக்குங் கருவியும் முதலாயின; வணிகர்க்கு நாவாயும் மணியும் மருந்தும் முதலாயின; வேளாளர்க்கு நாஞ்சிலுஞ் சகடமும் முதலாயின. பிறவும் அன்ன. அவையெல்லாம் அவரவர் செய்யுட்குரியவென்பது. (எ௰)

630. தலைமைக் குணச்சொல்லுந் தத்தமக் குரிய
நிலைமைக் கேற்ப நிகழ்த்துப வென்ப.

இதுவும் அது.

இதன் பொருள்: அந்நான்கு சாதியார் தலைமைக்குணம்படச் சொல்லுஞ் சொல்லும் அவரவர்க்குரிய நிலைமைக்கேற்ப நிகழ்த்தவும் படும், என்றவாறு.

அந்தணர் தலைமைக்குணங் கூறுங்காற் பிரமனோடு கூறியும், அரசரை மாயனோடு கூறியும், வணிகரை நிதியின்கிழவனோடு கூறியும், வேளாண்மாந்தரை வருணனோடு கூறியுந் தலைமைக்குணச்சொல் நிகழ்த்தப்படும். அவையெல்லாம் அவரவர் செய்யுளுட் கண்டு கொள்க. (எஏ)

631. இடையிரு வகையோ ரல்லது நாடிற்
படைவகை பெறாஅ ரென்மனார் புலவர்.

மேல் நான்கு வருணத்தாரையும் உடன் கூறிவந்தான், இது முதலும் கடையும் ஒழித்து இடைநின்ற இருவருணத்தார்க்கும் ஆவதோர் புறனடை கூறுகின்றது.

இதன் பொருள் : அரைசரும் வணிகருமல்லது படைப்பகுதி பெறார், என்றவாறு.

படைப்பகுதியென்பன வேலும் வாளும் வில்லும் முதலாயின நாடினென்பதனான் ஒருசார் அந்தணரும் படைக்குரியாரென்பது கொள்க. அவர் இயமங்கியாருந் துரோணனும் கிருபனும் முதலாயினாரெனக் கொள்க. வேளாணமாந்தர்க்கும் இஃதொக்கும். இவை விகாரமெனவும் எடுத்தோதிய வருணங்கட்கே இஃதியல்பெனவுங் கொள்க.

632. வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை.

இது, வணிகர் மரபு கூறுகின்றது.

இதன் பொருள் : வணிகர்க்குத் தொழிலாகிய வாணிகவாழ்க்கை உள்ளுறையாகச் செயயுள் செய்தல் பெரும்பான்மையுமாம், என்றவாறு.

அவையும் அவர் செய்யுளிற் காணப்படுமாறு அறிந்து கொள்க.

633. மெய்தெரி வகையி னெண்வகை யுணவின்
செய்தியும் வரையா ரப்பா லான.

இன்னும் வணிகர்க்கே உரிய தொழில் கூறுகின்றது.

இதன் பொருள் : பொருள் தெரிந்த வகையான் எண்வகைக் கூலமுஞ் செய்து விளைத்தலும் அவர்கடன், என்றவாறு.

அவையும் அவர் பண்டத்தோடு உபகாரப்படுமாகலின் வரையப் படாதென்றானென்பது. எண்வகையுணவென்பன பயறும் உழுந்துங் கடுகுங் கடலையும் எள்ளுங் கொள்ளும் அவரையுந் துவரையுமாம். (எஅ)

## 634. கண்ணியுந் தாரு மெண்ணின ராண்டே.

இதுவும் அது.

இதன் பொருள் : இவையும் வணிகர்திறத்தன, என்றவாறு.

கண்ணியென்பன சூடும் பூ. தாரென்பது ஒருகுடிப் பிறந்தார்க் குரித்தென வரையறுக்கப்படுவதாயிற்று. எண்ணப்படுமெனவே அவ ரவர்க்குரியவாற்றாற் பலவாகிவரும். அவை வந்தவழிக் கண்டு கொள்க. (எக)

## 635. வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்ல
## தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி.

இது, வேளாண்மாந்தர்க்குக் கூறப்படுந் தொழில் கூறுகின்றது.

இதன் பொருள் : வேளாண்மாந்தர் பலவகைப்பட்ட தொழில ரேனும் உழுந்தொழிலே பெரும்பான்மைத்தாகலான் அதனையே சிறப் பித்துச் சொல்லுதன் மரபு, என்றவாறு.

உழுதுண்டுவாழ்வாரென்பது இதன் பொருளாயிற்று. மற்றுப் பார்ப்பியன் முதலாகிய நால்வகைத் தொழிலும் வாகையுட் கூறின மையின் இசசூத்திரமும் மேலைச் சூத்திரங்களும் மிகையாம்பிற வெ னின், அற்றன்று ; பார்ப்பியலும் அரசியலும் வாணிகத்தொழிலுமாகி பொதுப்படநின்ற ஓதலும் வேட்டலும் ஈதலும் இவர்க்கு ஒத்தசிறப் பினவாகலானும் அவருள் வணிகர்க்கும் ஒழிந்த வேளாளர்க்கும் ஒத்த

செய்தியெனவாகிய உழவு தொழிலும நிரைகாத்தலும் வாணிகமு மென்பன அவற்றின் ஒத்த சிறப்பினவன்றி அவற்றுள்ளும் ஒரோ வொன்று ஒரோவருணத்தார்க்கு உரியவாமாகலானும் ஈண்டு அவை விதந்துகூறினுனென்பது. நிரைகாவலும் உழவுதொழிலும் வணிகர்க் கும் வேளாளர்க்குந் தடுமாறுதல்போலாது வாணிகவாழ்க்கைவேளாண் மாந்தர்க்குச் சிறுவரவிற்றெனவும் உழுதுண்டல் வணிகர்க்குச சிறுவர விற்றெனவும் எண்வகைக்கூலத்தோடு பட்டதே பெருவரவிற்றெண வுங் கூறினுன் இசகுத்திரங்களானெனபது. இதனது பயம் புலனெறி வழக்கினுள் இவர்க்கு இவை சிறந்த மரபென்றலாயிற்று. (அ௦)

636. வேந்துவிடு தொழிலிற் படையுங் கண்ணியும்
வாய்ந்தன ரென்ப வவர்பெறும் பொருளே.

இது நான்காம் வருணத்தார்க்கோர் புறனடை.

இதன் பொருள் : வேந்தர் கொடுப்பின் வேளாண்மாந்தர்க்குப் படைக்கலமுங் கண்ணியும் பெறும்பொருளாகச சொல்லப்படும், என்றவாறு.

வேந்து விடுதொழிலென்பது வேந்தனுற் கொடுககப்படுந் தண் டத்தலைமையாகிய சிறப்புக்காரணத்தானென்றவாறு; அகத்திணையிய லுள் 'உயர்ந்தோர்க்குரிய வோத்தினுன' என்புழிக் கூறப்பட்டதெ னின், வேளாளரையொழித்து ஒழிந்தோரைநோக்கிற்று அசகுத்திர மென்பது. மேற்கூறியவற்றையும மரபுபற்றி ஈண்டு வரையறைகூறு கின்றவாறெனக் கொள்க. அவையும் அவரவர் பாட்டுகசளுட் கண்டு கொள்க. (அக)

637. அந்த ணாளர்க் கரசுவரை வின்றே.

இஃது, எல்லாவற்றிலுஞ் சிறுவரவிற்றுகி அரசர்க்குரிய தொழில் அந்தணர்த்குரியவாகலின் ஈண்டுப் போதந்து கூறுகினறது.

இதன் பொருள் : அரசர் இல்வழி அந்தணரே அவ்வரசியல் பூண்டொழுகலும் வரையப்படாது, என்றவாறு.

மக்களைத் தின்ற மன்னவர்க்குப் பின்னை மறையோரான் அரசு தோற்றப்பட்டாற்போலக் கொள்க. (அஉ)

638. வில்லும் வேலுங் குழலுங் கண்ணியுந்
தாரு மாரமுந் தேரும் வாளு
மன்பெறு மரபி னேனோர்க்கு முரிய.

இது, முடியுடைவேந்தரல்லாக் குறுநிலமன்னர்க்குரியன கூறுகின்றது.

இதன் பொருள் : இவவெண்ணப்பட்டனவெல்லாங் குறுநில மன்னர்க்கு உரியன, என்றவாறு.

மன்பெறுமரபின் ஏனோரெனப்படுவார் அரசுபெறுமரபிற் குறுநில மன்னர் எனக் கொள்க. அவை பெரும்பாணாற்றுள்ளும் பிறவற்றுள்ளுங் காணப்படும். (அங)

639. அன்ன ராயினு மிழிந்தோர்க் கில்லை.

இஃது, எய்திய திகந்துபடாமைக் காத்தது.

இதன் பொருள் : மன்னவர்போலுஞ் செல்வத்தாராகி இழி குலத்தோர் நாடாண்டாராயினும் அவர்க்கு இவை கூறலமையாது, என்றவாறு.

'மன்பெறு மரபி னேனோர்' (தொல்-மர-83) எனவே, அரசர் வைசிடரன்றிக் கீழ் அமையாவாயிற்று. (அச)

640. புறக்கா ழனவே புல்லென மொழிப
வகக்கா ழனவே மரமென மொழிப.

இது, மக்களை வழங்குமாற்றுக்கண் மரபுகூறி இனி ஓரறிவுயிர்க்கு இன்னவாறு சொல்லுதல் மரபென்ப துணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : புறத்துக் காழ்ப்புடையனவற்றைப் புல்லென வும் அகத்துக் காழ்ப்புடையனவற்றை மரமெனவுஞ் சொல்லுப, என்றவாறு.

புறக்காழனவெனவே அல்வழி வெளிறென்பதறியப்படும். அவை பனையுந் தெங்குங் கமுகும் முதலாயின புல்லெனப்படும்; இருப்பையும் புளியும் ஆச்சாவும் முதலாயின மரமெனப்படும். இங்ஙனம் வரை யறைகூறிப் பயந்த தென்னை ? புறத்தும் அகத்துங் கொடிமுதலாயின காழ்ப்பின்றியும் அகின்மரம்போல்வன இடை யிடை பொய்ப்பட்டும் புல்லும் மரனும் வருவன உளவாலெனின், இரணடிடத்தும் ஏகாரம் பிரித்துக்கூறினமையானும் 'எனமொழிப' என்று இருவழியுஞ் சிறப் பித்து விதந்தமையானுஞ் சிறுபான்மை அவையும் புல்லும் மரனுமென அடங்குமென்பது.

"இருமபனம் வில்லின பசுநதோட்டுக் குடம்பை"

எனவும்,

"யாஅங் கொன்ற மரஞ்சுட் டியவின்" (குறுந்-198)

எனவும் வரும்.

"கலாவி னிலங்கு மணன் மருகிற்
புலாலஞ் சேரிப் புல்வேய் குரம்பை"

எனப் புறக்காழும் அகக்காழும் அல்லன புல்லெனப்பட்டனவென்பது. அது பனையோலையுமாகலிற் புறக்காழுடைய பனையுமாமென்பது. உதி மரக்கிளவியுமாமென்பது சிறுபான்மை. பிறவும் அன்ன. (அகூ)

641. தோடே மடலே யோலை யென்றா
வேடே யிதழே பாளை யென்றா
வீர்க்கே குலையென நேர்ந்தன பிறவும்
புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்.

இது, முறையானே புறக்காழனவற்றைச் சொன்மரபுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : எண்ணப்பட்ட வாய்பாடும் பிறவும் புல்லுறுப்பினைச் சொல்லும் வாய்பாடு என்றவாறு.

பிறவுமென்றதனாற் குருமபை நுங்கு நுகும்பு போந்தையென்றற் றொடக்கத்தனவுங்கொள்க.

"இரும்பனை வெண்டோடு *மிலைந்தோ னல்லன்" (புறம்-45.)
எனவும்,

"மாவென மடலு மூர்ப" (குறுந்-17.)
எனவும்,

"†துகடபு காட்சி யவையத்தா ரோலை" (கலி-94.)
எனவும் வரும். ஒழிந்தனவுங் கொள்க.

"வண்டோட்டு நெல்லின் வாங்குகதிர்க் கழனி" (பத்து-நெடுநல்-22) என்பதும் அது. 'நேர்ந்தனபிறவும்' என்பது கேட்டாரை உடம்படுவிப்பன பிறவுமென்றவாறு. "வெண்டோட்டுப் பெண்ணை வளர்ந்த நுங்கின்" எனவும் "பனைநுகும் பன்ன சினைமுதிர் வராலொடு" (புறம்-249) எனவும் வரும். பிறவும் அன்ன. (அக)

642. இலையே முறியே தளிரே தோடே
சினையே குழையே பூவே யரும்பே
நனையுள் ளுறுத்த வனையவை யெல்லா
மரனொடு வரூஉங் கிளவி யென்ப.

இஃது, அகக்காழனவற்றுறுப்பினைச் சொல்லும் மரபுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : எண்ணப்பட்டனவும் பிறவுமெல்லாம் மரத்துறுப்பினைச் சொல்லும் வாய்பாடு, என்றவாறு.

---

* 'மிலைந்தோ னல்லன்' என்பதும் பாடம்.

† 'துகடீர்பு' என்பதும் பாடம்.

'அனையவையெல்லாம்' என்ற புறநடையானே புல்லுந் தழையும் பொங்கரும் முதலாயின கொள்க. அவை "தேய மடைவயிற் றேக் கிலை குவைஇ" எனவும், "முறிமே யாக்கை" (பத்து-மலைபடு-313) எனவும், "யாஅ வொண்டளி ரரக்கு விதிர்த்தன" எனவும், "தோடுதோய் மலிர்நிரை யாடியோர்" எனவும், 'மேக்கெழும் பெருஞ்சினை யிருந்த தோகை" எனவும், "கொய்தழை யகைகாஞ்சித் துறையணி நல்லூரா" எனவும், "நனைத்த செருந்தி" எனவும், "அண்டர் மகளிர் தண் டழை யுடீஇயர்-மரஞ்செல மிதித்த மாஅல் போல" (அகம்-59) என் றாற்போல வருவனவுமெல்லாங் கொள்க.

மேலைச் சூத்திரத்துப் புல்லொடுவருமெனச் சொல்லினரெனவும், இச்சூத்திரத்து 'மரனொடுவரூஉங் கிளவி'யெனவிம் மிகைபடக் கூறிய தென்னையெனின், அம்மிகையானே எடுத்தோதிய புறக்காழனவும் அகக்காழனவுமன்றி அவற்றோடு தழீஇக்கொள்ளப்படுவனவுமெல்லாம் இவற்றுக் குரிய வென்பது கொள்க. அவை ஊகம்புல்லுஞ் சீழகம் புல்லும் பஞ்சாய் முதலியனவும் புழற்கால் ஆம்பல் முதலியனவும் புல் லெனப்பட்டடங்கி யவற்றின்பெயரும் பெறுமென்பது. பிடாவும் காயாமுதலிய புதலும் பிரம்புமுதலாகிய கொடியும் மரமெனப்பட்ட வற்று உறுப்பின்பெயர் பெறுமென்பது. அவை ஊகந்தோடு சீழகந் தோடு எனவும் பிடவிலை காயாம்பூ முல்லைப்பூ எனவும் வரும். பிறவும் அன்ன. மற்றுப் பிறப்பு முறையால் தளிர் முற்கூறாது இலை முற்கூறிய தென்னையெனின் புல்லினுள் ஒருசாரன இலையெனவும் பூவெனவும் படுமென அதிகாரங்கோடற்கென்க. அவை "ஈத்திலை வேய்ந்த வேய்ப்புறக் குரம்பை" எனவும், ஆம்பலிலை தாமரையிலை எனவும், ஆம்பற்பூ தாமரைப்பூ எனவும் வரும். பிறவும் அன்ன கொள்க.

இன்னும் இவ்விலேசானே புல்லிற்குரியன மரத்திற்கு வருவன வுங் கொள்க. அவை "ஈன்றவ டிதலைபோ லீர்பெய்யுந் தளிரொடும்" (கலி-32) என ஈர்க்கென்பது மாவிலைமேல் வந்தது. பிறவும் அன்ன. (அஎ)

643. காயே பழமே தோலே செதிளே
வீழோ டென்றாங் கவையு மன்ன.

இது, மேற்கூறிய இரண்டற்கும் பொதுவுறுப்புணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: இவையும் அவ்விருதிறத்தோடொக்கும், என்றவாறு.

உதாரணம்: தெங்கங்காய் கமுகங்காய் எனவும், வேப்பங்காய் மருதங்காய் எனவுங் காயென்பது அவ்விரண்டற்கும் வந்தது. பழமென்பதற்கும் இஃதொக்கும். பனந்தோல வேப்பந்தோல், பனஞ் செதிள் வேப்பஞ்செதிள், தாழைவீழ இத்திவீழ் என இவையும் இருபாற்குரியவாயின. மற்று இவையெல்லாம வரையறையின்றிச் செல்லுமாயிற் புறக்காழன அகக்காழனவென வரையறுத்துப் பயந்ததென்னை யெனின், அவ்விருபகுதியுள் அடஙககக்கூறியவெல்லாம் புல்லெனவும் மரமெனவும் படாவென்றற்கும் அவற்றுறுபபு ஒத்தியவாற்றாற் புல்லின் கண்ணும் மரத்தின் கண்ணும் பெருவரவினவா மென்றற்கு மென்பது. (அஅ)

644. நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்துங்
கலந்த மயக்க முலக மாதலி
னிருதிணை யைம்பா லியனெறி வழாஅமைத்
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்.

இஃது, உலகியலெல்லாம் மரபிற்றிரியாமையின் அதன் சிறப்புணர்த்தி அதற்குக் காரணமுங் கூறுகின்றது.

இதன் பொருள்: நிலனுந் தீயும் நீருங் காற்றும் ஆகாயமுமென் னும் ஐம்பெரும் பூதமுங் கலந்த கலவையல்லது உலகமென்பது பிறிதில்லாமையின் அவற்றைச் சொல்லுமாறு சொல்லாது இருதிணைப்பொருளென வேறுபடுத்தும் ஐம்பாலென வேறுபடுத்தும்

வழங்குகின்ற வழக்கெல்லாம் மரபில் திரியாத சொல்லொடு தழீஇ வரல்வேண்டும், என்றவாறு.

இதன் கருத்து: நிலம்வலிது தீவெய்து நீர்தண்ணென்றது வளி யெறிந்தது விசும்பு அகலியது என அஃறிணைவழக்கினவாயினும் இவை கலந்தவழியும் அவ்வாய்பாட்டான் வழங்காது உயர்திணை வாய்பாடு வேருகவும், அஃறிணைவாய்பாடு வேருகவும் அவைதம்முட் பகுதியாகிய ஐந்துபாற்சொல்லும் வெவ்வேருகவும் வழங்குகின்ற வழக்கிற்குக் காரணம் மரபல்லது பிறிதில்லை யென்றவாறு. எனவே, இம்மரபினை வலியுறுத்தவாறு. மற்று நிலம் நீர் தீ வளி ஆகாயமென ஒன்று ஒன்றனுள் அடங்குமுறையாற் கூறுதல் செய்யாது மயக்கக் கூறியதென்னையெனின், அவை கலக்குங்கால் ஒரோபொருளின் கண்ணும் அம்முறையானே நிற்குங்கொலென்று கருதினுங் கருதற்க, மயங்கிநிற்குமென்றற்கு அவ்வாறு கூறினனென்பது. (அக)

645. மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை
மரபுவழிப் பட்ட சொல்லி னை.

இது, மரபினையே வற்புறீஇயது.

இதன் பொருள் : வழக்கினகத்து வரலாற்றுமுறைமை பிறழாது வருதலே தக்கது, மற்றுச் செய்யுள்செய்த சான்ருேர் அதற்கேற்ற வகையாற் செய்யப்பெறுவராகலின், என்றவாறு.

அவர்க்கு இம்மரபுவேண்டுவதன்றுகொலென்று கருதினுங் கருதற்க. 'மரபேதானு, நாற்சொல்லியலான் யாப்புவழிப் பட்டன' (தொல்-செய்-80) என்றதனுன் மரபுவழிப்படுங்கொலென்பான் 'மரபு வழிப்பட்ட சொல்லினுன்' என்ருனென்பது. ஆண்டுக்கூறிய மரபு உலகியலாகலான் அவ்வுலகியல் அவ்வாருதற்குக் காரணம் ஈண்டுக் கூறிச் செய்யுட்கும் அதுவே காரணமெனக் கூறினனென்பது. இதனது பயன், செஞ்ஞாயிறென்பது வழக்கன்ருயினும் உண்மைநோக்கி அதனை செய்யுள்செய்யுஞ் சான்ருேர் அவ்வாறு வழங்கினுற்போல உயர்திணைப் பொருளையும் ஐம்பெரும்பூதங்கள் அஃறிணையான் வழங்

குதலுண்மை நோக்கி அவ்வாறுஞ் சொல்லப்பெறுபவோலென்று ஐயுற்றூனை ஐயம் அறுத்தவாறு. அஃறிணைப்பாற்கும் இஃதொக்கும். அல்லதூஉம் இன்ன செய்யுட்கு இன்னபொருளுரித்தெனவும் இனைப் பஃதியாற் பெயர்பெறுமெனவும் மரபுபற்றியே சொல்லப்படுமென்றற் கும் இனி சிறைமொழி மாந்தர் மறைமொழிபோல்வன சில மிறைக் கவி பாடினூராரென்பதே பற்றி அல்லாதாரும் அவ்வாறு செய்தன் மரபென்றற்கும் இது கூறினூனென்பது. அவை சக்கரஞ் சுழிகுளங் கோமூத்திரிகை ஏகபாதம் எழுகூற்றிருக்கை மாலைமாற்று என்றூற் போல்வன. இவை மந்திரவகையானன்றி வாளாது மக்களைச் செய் யுள் செய்வார்க்கு அகனைந்திணைக்கும் மரபன்றென்பது கருத்து. அல்லாதார் இவற்றை எல்லார்க்குஞ் செய்தற்குரியவென இழியக் கருதி அன்னவகையான் வேறுசில செய்துகொண்டு அவற்றிற்கும் இலக்கணஞ்சொல்லுப. அவை இத்துணையென்று வரையறுக்கலாகா. என்னை ? ஒற்றை இரட்டை புத்தி வித்தாரமென்றூற்போல்வன பல வுங் கட்டிக்கொண்டு அவற்றூனே செய்யுள் செய்யினும் கடியலாகா மையின், அவற்றிற்கு வரையறைவகையான் இலக்கணங்கூற லாகா வென்பது.

> "ஐபைதன் கையு ளிரண்டொழித்தெ னைம்பான்மேற்
> பெய்தார் பிரிவுரைத்த தில்லையால்."

எனவும்,

> "கோடாப் புகழ்மாறன் கூட லனையாளை
> * யாடா வடகி னுளுங்காணேன்." (திணை, 150-4)

எனவுஞ் சொல்லுவார் சொல்லுவனவற்றுக்கெல்லாம் வரையறை யின்மையின் அவற்றுக்கு இலக்கணங்கூறூர் பண்ணத்திப்பாற் படுப் பினல்லதென்பது. (௬௦)

646. மரபுநிலை திரியிற் பிறிதுபிறி தாகும்.

இது, மேற்போன வழக்கிற்குஞ் செய்யுட்கும் வருகின்ற இலக் கணத்திற்கும் பொது.

---

* 'ஆடா வடகினும் காணேன்போர்' என்பதும் பாடம்.

இதன் பொருள் : மரபினை நிலைதிரித்துச் சொல்லுபவெனின், உலகத்துச் சொல்லெல்லாம் பொருளிழந்து பிறிதுபிறிதாகும், என்றவாறு.

செவிப்புலனாய ஓசைகேட்டுக் கட்புலனாப பொருளுணர்வதெல்லாம் மரபுபற்றாக அல்லது மற்றில்லையென்றவாறு. (கக)

647. வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் டாக லான.

இது, வழக்கினுண் மரபினைப் பிழைத்துக் கூறுவனவும் உள வென்ப துணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : வழக்கென்று சொல்லப்படுவது உயர்ந்தோர் வழங்கிய வழக்கே. என்னை ? உலகத்து நிகழ்ச்சியெல்லாம் அவரையே நோக்கினமையின், என்றவாறு.

அவரையே நோக்குதலென்பது அவராணையான் உலகநிகழ்ச்சி செல்கின்றதென்றவாறு. எனவே, உயர்ந்தோரெனப்படுவார் அந்தணரும் அவர்போலும் அறிவுடையோருமாயினரெனபது. (கஉ)

648. மரபுநிலை திரியா மாட்சிய வாகி
யுரைபடு நூறா மிருவகை யியல
முதலும் வழியுமென நுதலிய நெறியின.

இது, மேற்கூறப்பட்ட மரபு வழக்கிற்கேயன்றி இலக்கணஞ் செய்வார்க்கும் வேண்டுமெனவும் அவ்விலக்கணம் இனைப்பகுதித் தெனவுங் கூறுகின்றது.

இதன் பொருள் : மரபுநிலையில் திரியாமை தமக்குக் குணனாக உடையவாகி எல்லாராலும் உரைக்கப்படும் நூல் இரண்டிலக்கணத்த வாகும் முதனூலெனவும் வழிநூலெனவுங் கருதிக்கொள்ளும் அடிப் பாட்டான், என்றவாறு.

'மரபுநிலை திரியிற் பிறிதுபிறி தாகும்' (தொல்-மர-91) என்பதனை இதற்குமேல் எய்துவித்தானன்றே, அதனான் மரபுநிலை திரியாமையே தமக்குத் தகுதியாவதெனவும் இவ்விருவாற்றானும் ஒன்றாற் செய்தலே மரபெனவுங் கூறியவாறு. 'நுதலியநெறி'யென்றதென்னையெனின், இனனதே முதனூல் இன்னதே வழிநூலென்பதோர் யாப்புறவில்லை; ஒருநூல்பற்றி ஒருவன் வழிநூல் செய்தவழி அவ் வழிநூல்பற்றிப் பின்னொருகாலத்து ஒருநூல் பிறந்ததாயின் அது வழிநூலெனப்பட்டு முன்னை வழிநூலே முதனூலெனப்படுமென்றற்கென்பது. இதனை சார்புநூலென்றுமோவெனின் வழிநூலுஞ் சார்புநூலுமாகலின் அங்ஙனங்கூறானாயினன். எற்றுக்கு? சார்புநூலினைப்பற்றி ஒருநூல் பிறந்தவழிச சார்பின்சார்பெனக் கூறல் வேண்டுவதாகலானும் அதனை சசாரந்து தோனறிற் சார்பென்னுஞ் சொல்லை மும்முறைசொல்லியும் அதன்பின் தோன்றிய நூற்கு நான் முறை சொல்லியும் எண்ணிசந்தோடுதலானுமெனபது. மற்று இரண்டாமெண்ணுமுறைமைச்சண்ன்ற நூலினையே வழிநூலெனக்கொண்டு மூன்றாவது தோன்றிய நூலே சாாபுநூலாகவும் அதன்பின்னர் நூல் செய்யப்பெறாரெனவுங கொளளாமோவெனின், முதனூலிற் கிடந்த பொருளை ஓர் உபகாரபபட வழிநூலசெய்த ஆசிரியன் செய்தக்காற் சார்புநூலெனப் பின்னா ஓா ஆசிரியன நூலசெய்ததனாற் பயநதென்னையெனக. என்றார்க்கு வழிநூலும் பிற்காலத்தரிதாமாயின் அதனையும் எளிதாகச் செயதலன்றே இதனாற் பயந்தெனின், அது தானும் பின்னொருகாலத்து அரிதாமாயின் அதனையும் எளிதாகச் செய்வானல்லனோ வென்று மறுக்க. இவவாராய்சசி வேண்டாவென்றற்கன்றே இவவிருவகையானும வருதலே மரபென்பானாயிற்றென்றொழிக. ஒன்றன்வழியேயன்றியுந தாந்தாம் அறிந்தவாற்றானும் நூல்செய்யப் பெறாரோவெனின், அது மரபன்று; அதுநோக்கியன்றே 'மரபுநிலை திரியிற் பிறிதுபிறி தாகும்' என்ற விதி நூலிற்கும் எய்துவித்துப் புகுந்ததென்பது. என்னை பிறிதுபிறிதாகுமாறெனின், ஒருபொருட்கண்ணே மாறுபட்ட இலக்கணங் கூறின் அவ்விரண்டும் அதற்கிலக்கணமாகாது. என்போல? மாணிக்க மணியினைச் செவ்வண்ணம் முதலாயின சில இலக்கணங்கூறிய நூல் கிடப்பக் கரு

வண்ணமுதலாயினவும் அதற்கிலக்கணமென்று ஒருவன் எதிர்நூ லென்பதோர் நூல் பிற்காலத்துச் செய்யுமாயின் அஃது அதன் இலக் கணமெனப்படாதாகலானென்பது. மற்றுக் காலந்தோறும் வழக்கு வேறுபடுதலின் வழக்குநூலும் வேறுபட அமையும்பிற எனின்,

‘வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் டாக லான’ (தொல்-மர-92.)

என்றமையானும் அங்ஙனங் காலந்தோறும் ஓரோர்நூல் செய்யின் வழக்கல்லது எஞ்ஞான்றும் அவ்விலக்கணத்தாற் பயமின்றாகியே செல்லுமாகலானும் அது பொருந்தாதென்பது. அல்லதூஉம் முற் காலத்து வழங்கிவந்ததனை வழுவென்று களைபவாயினன்றே பிற் காலத்துப் பிறந்தவழக்கு இலக்கணமெனத் தழீஇக்கொள்வதென்க. இந்நூல் இலக்கணத்தினை இவ்வோத்தின இறுதிக்கண் வைத்தான் வழக்குஞ் செய்யுளுமென்று விதந்து புகுந்த இரண்டிலக்கணமும் முடித்தல்லது அவற்றைக் கூறும் இலக்கணங் கூறலாகாமையினென் பது. இக்கருத்தறியாதார் செய்யுளியலினை ஒன்பதாம் ஓத்தென்ப. அல்லதூஉம் இந்நூலிலக்கணம் வழக்கிற்குஞ்செய்யுட்குமேயன்றி அங் ஙனமாகாப் பொருண்மேவும் பண்டம் முதலாயவற்றிற்கு இலக்கணஞ் செய்யுங்காலும் நியாயஞ்செய்யினுந் தமிழ்நூலதற்கிலக்கணம் எவ்வாற் றானும் இதுவே யென்றற்கும் ஈண்டுக் கூறினானென்பது. எனவே, பிறபாடைநூல்களாயின் இம்மரபு வேண்டுவதன்றாயிற்று. மற்று முதனூலினை இன்னதென்பது துணிந்து உரையாரோவெனின், அது வன்றே இனிக் கூறுகின்றதென்பது. (௧௫)

649. வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்.

மேல் ஒன்றற்கு முதனூலாகியும் ஒன்றற்கு வழிநூலாகியும் வந்து தடுமாறுமென்றான், இனி அவ்வாறன்றி ஒன்றே முதனூலாக வுஞ் சிறுபான்மை உண்டென்கின்றது.

இதன் பொருள்: செய்வினையின் பயன் துவ்வாது மெய்யுணர்வுடையனாகிய முன்னோனாற் செய்யப்பட்டதே ஒருதலையாக முதனூலாவது, என்றவாறு.

எனவே, மேலைச்சூத்திரத்து முதனூலும் வழிநூலுமெனப் பட்டன முதலுஞ் சினையும் போலத் தடுமாறுமென்பதூஉம் இதுவாயின் தடுமாறாது என்ஞான்றும் முதனூலாமென்பதூஉம் பெற்றாம்.

வினையென்பன இருவினை. இன் நீக்கத்துக்கண்வந்தது. விளங்கிய அறிவென்பது முழுதும் உணரும் உணர்ச்சி. அறிவினென நின்ற இன் சாரியை. இன்ன அறிவினொடு கூடிய முனைவன் அறிவின் முனைவனெனப்படும். முன்னோனை முனைவனென்பது ஓர்சொல் விழுக்காடாம். முன்னென்பதனை முனையென்பவாகலின்.

மற்று வினையினென்ற வேற்றுமை நிற்பதன் நிலையும் நீங்குவதன் நீக்கமுங் கூறுமாகலின் ஒருகாலத்து வினையின்கணின்று ஒருகாலத்து நீங்கினான்போலக் கூறியதென்னையெனின், அற்றன்று; வினைப்பயந் தொடர்ப்பாற்றுள்ளம் இலனென்பதன்றி அவர்க்குச் சில செய்கையுள வென்பது பல்லோர்க்கும் உடம்பாடாகலின், அவ்வினைக்கணின்றே, போகமும் பாவமும் மெய்யுணர்வுபற்றித் தெறப்பட்ட வித்துப்போலப், பிறப்பில்பெற்றியனாகி நீங்குமாகலின் அவ்வாறுகூறல் அமையுமென் பது. என்னை? குற்றங் கெடுத்து முற்ற உணர்ந்தோருங் கெடுப்ப தோர் குற்றமின்றி முழுதுணர்ந்தோரும் எல்லாம் பிறர்க்குறுதியாகிய ஆகமஞ்செய்யினுந் துறக்கம் முதலாகிய பயன்றுய்ப்பாரல்லராகலின். இனி முனைவனாற் செய்யப்படுவதோர் நூலில்லையென்பார் அவன் வழித் தோன்றிய நல்லுணர்வுடையார் அவன்பாற் பொருள்கேட்டு முதனூல்செய்தாரெனவும், அம்முனைவன் முன்னர் ஆகமத்துப் பிறந்த தோர் மொழியைப்பற்றி அனைத்துப்பொருளுங்கண்டு பின்னர் அவற்ற வற்றுக்கு நூல்செய்தார் அவரெனவும், அவ்வாகமத்தினையே பிற்காலத் தாரும் ஒழுக்கம் வேறுபடுந்தோறும் வேறுபடுத்து வழிநூலுஞ் சார்பு நூலுமெனப் பலவுஞ் செய்தாரெனவுங் கூறுப. அவை எவ்வாற்றா னும் முற்ற உணர்ந்தோர் செய்த நூலன்மையின் அவை தேறப்படா.

அல்லதூஉம் அவை தமிழ்நூலன்மையின் ஈண்டு ஆராய்ச்சியில

மற்று மேலைச்சூத்திரத்து முதலிய நெறியானே முதலும் வழியுமாமெனவே, எல்லார்க்கும் முதல்வனாயினான் செய்தது முதனூலேயாமென்பது பெறுதுமாகலின், ஈண்டு இச்சூத்திரங் கூறியதென்னையெனின், தாமே தலைவராவாரும் அத்தலைவரை வழிப்பட்டுத் தலைவராயினாரும் பலராகலின் தாமே தலைவராயினார் நூல் செய்யின் முதனூலாவ தெனின், அற்றன்று; தாமேதலைவராயினார் முற்காலத்துத் தமிழ்நூல் செய்திலராகலின் தலைவர்வழிநின்று தலைவனாகிய அகத்தியனாற் செய்யப்பட்டதும் முதனூலென்பது அறிவித்தற்கும், பிற்காலத்துப் பெருமானடிகள் களவியல்செய்தாங்குச் செய்யினும் பிற்காலத்தானும் முதனூலாவதென்பது அறிவித்தற்கும், அங்ஙனம் வினையினீங்கி விளங்கிய அறிவினான் முதனூல்செய்தானென்பது அறிவித்தற்கும் இது கூறினானென்பது. எனவே, அகத்தியமே முதற்காலத்து முதனூலென்பதூஉம் அதன்வழித்தாகிய தொல்காப்பியம் அதன் வழிநூலென்பதூஉம் பெற்றாம்.

என்றார்க்கு முந்துநூலெனப்பட்டன முற்காலத்து வீழ்ந்தனவெனக்கூறித் தொல்காப்பியர் அகத்தியத்தோடு பிறழவும் அவற்று வழிநூல்செய்தாரென்றக்கால் இழுக்கென்னையெனின், அது வேத வழக்கோடு மாறுகொள்வார் இக்காலத்துச் சொல்லினும் இறந்தகாலத்துப் பிறபாசாண்டிகளும் மூன்றுவகைச் சங்கத்து நான்குவருண்த்தோடு பட்டசான்றோரும் அதுகூறாரென்பது. என்னை? கடைச்சங்கத்தாருட் களவியற்பொருள்கண்ட கணக்காயனார்மகனார் நக்கீரர் "இடைச் சங்கத்தார்க்குங் கடைச்சங்கத்தார்க்கும் நூலாயிற்றுத் தொல்காப்பியம்" என்றாராகலானும், பிற்காலத்தார்க்கு உரையெழுதினோரும் அது கூறிக் கரிபோக்கினாராகலானும், அவர் புலவுத்துறந்த நோன்புடையாராகலாற் பொய்கூறாராகலானுமென்பது. இங்ஙனங் கூறுக்கால் இதுவும் மரபுவழுவென்று அஞ்சி அகத்தியர் வழித்தோன்றிய ஆசிரியரெல்லாருள்ளுந் தொல்காப்பியனாரே தலைவரென்பது எல்லா ஆசிரியருங் கூறுபவென்பது. எங்ஙனமோவெனின்,

"கூறிய குன்றினு முதனூல் கூட்டித்
தோமின் றுணர்த லொல்காப் பியன்ற
னாணையின் றமிழறிந் தோர்க்குக் கடனே."

இது பல்காப்பியப் புறனடைச் சூத்திரம்.

"வீங்குகட லுடுத்த வியன்கண் ஞாலத்துத்
தாங்கா நல்லிசைத் தமிழ்க்குவிளக் காகென
வானோ ரேத்தும் வாய்மொழிப் பல்புக
ழாணைப் பெருமை யகத்திய னென்னு
மருந்தவ முனிவ னாக்கிய முதனூல்
பொருந்தக் கற்றுப் புரைதப வுணர்ந்தோர்
நல்லிசை நிறுத்த தொல்காப் பியனும்"

என்பதனால் அகத்தியர் செய்த அகத்தியத்தினை முதனூலெனவும் அவர் வானோர் ஏத்தும் வாய்மொழிப் பல்புகழ் ஆணைப்பெருமையுடையாரெனவும் அவராற்செய்யப்பட்ட முதனூல் பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோருள் தலைவராயினார் தொல்காப்பியனாரெனவும் பன்னிருபடலத்துப புனைந்துறைவகையாற் பாயிரச்சூத்திரத்துள் உரைக்கப்பட்டது. இனிப், பன்னிரு படலம் முதனூலாக வழிநூல் செய்த வெண்பாமாலை ஐயனாரிதனாரும் இதுகூறினார். என்னை ?

"மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்
றன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த"

எனப் பாயிரஞ் செய்தற்கு உடம்பட்டமையினென்பது.

இவற்றானெல்லாம் அகத்தியமே முற்காலத்து முதனூலென்பதூஉம் தொல்காப்பியம் அதன் வழிநூலென்பதூஉம் அதுதானும் பனம்பாரனார் "வடவேங்கடந் தென்குமரி" (தொல்-பாயிரம்) எனக் குமரியாற்றினை எல்லையாகக் கூறிப் பாயிரஞ்செய்தமையிற் சகரர்

வேள்விக்குதிரை நாடித் தொட்ட கடலகத்துப் பட்டுக் குமரியாறும் பனைநாட்டோடு கெடுவதற்கு முன்னையதென்பதூஉம் அவ்வழக்குநூல் ஈண்டுப் பற்றியல்லது மூன்றுவகைச் சங்கத்தாருஞ் செய்யுட்செய்திலரென்பதூஉம் ஆசிரியரும் அவர்போல்வாரும் அவர்வழி ஆசிரியருஞ் செய்யுள்செய்த சான்றோருஞ் சொல்லாதன சொல்லப்படாவென்பதூஉம் அவருடம் படாதன சொல் உளவென்று எதிர்நூலென ஒருவன் பிற்காலத்து நூல்செய்யுமாயின் தமிழ்வழக்கமாகிய மரபினோடுந் தமிழ் நூலோடும் மாறுபட நூல்செய்தானாகுமென்பதூஉம் இனித் தமிழ் நூலுள்ளுந் தமது மதத்துக்கேற்பன முதனூல் உளவென்று இக்காலத்துச் செய்துகாட்டினும் அவை முற்காலத்து இலவென்பது முற் கூறிவந்த வகையான் அறியப்படுமென்பதூஉம் பாட்டுந் தொகையும் அல்லாதன சிலநாட்டிக்கொண்டு மற்று அவையுஞ் சான்றோர்செய்யுளாயின வழுவில் வழக்கமென்பார் உளராயின் இக்காலத்துள்ளும் ஒருசாரார்க்கல்லது அவர் சான்றோரெனப்படாரென்பதூஉம் இங்ஙனங் கட்டளை செய்யவே காலந்தோறும் வேறுபடவந்த வழிவழக்கும் இழிசினர் வழக்கும் முதலாயினவற்றுக்கெல்லாம் நூல்செய்யின் இலக்கணமெல்லாம் எல்லைப்படாது இகந்தோடுமென்பதூஉம் இறந்தகாலத்து நூலெல்லாம் பிறந்த பிறந்த வழக்குப்பற்றிக் குன்றக்கூறலென்னுங் குற்றந்தங்குமென்பதூஉம ஒன்றாகப் புறனடுத்து ஒருசூத்திரமே செய்துபோத அமையினன்றி ஒழிந்த சூத்திரங்களெல்லாம் மிகையாமென்பதூஉமெல்லாம் படுமென்பது. (கூசு)

650. வழியெனப் படுவ ததன்வழித் தாகும்.

இது, வழிநூலாமா றுணாத்துகின்றது.

இதன் பொருள் : நுதலிய நெறியானன்றி வழிநூலென்றற்குச் சிறப்புடையது அம்முதனூல்வழிப் பிறந்த வழிநூல், என்றவாறு.

அது தொல்காப்பியம். மற்றுப் பல்காப்பியம் முதலியனவோவெனின், அவை வழிநூலே ; தொல்காப்பியத்தின்வழித் தோன்றினவென்பது. என்னை ?

"கூறிய குன்றினு முதனூல் கூட்டித்
தோமின் றுணர்த லெல்காப் பியன்ற
னூணையின் றமிழறிந் தோர்க்குக் கடனே"

என்பவாகலானும், இவ்வாசிரியர் பல்காப்பியர், பல்காயனார் முதலாயினோர் அவ்வாறு கூறுராகலானுமென்பது. என்றூர்க்குத், தொல்காப்பியங் கிடப்பப் பல்காப்பியனூர் முதலியோர் நூல்செய்த தெற்றுக்கெனின், அவரும் அவர்செய்த எழுத்துஞ் சொல்லும் பொருளுமெல்லாஞ் செயதிலர், செய்யுளிலக்கணம் அகத்தியத்துப் பரந்துகிடந்ததனை இவ்வாசிரியர் சுருககசசெய்தலின் அருமைநோக்கிப் பகுத்துக்கூறினூராகலானும் அவர் தந்திரத்துக்கேற்ப முதனூலோடு பொருந்த நூல்செய்தாராகலானும் அமையுமென்பது. பிற்காலத்துக் காக்கைபாடினியாருந் தொல்காப்பியரோடு பொருந்தவே நூல்செய்தா ரென்பது. மற்று,

"வடதிசை மருங்கின் வடுகுவரம் பாகத்
தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்
வரைமருள் புணரியொடு கரைபொருது கிடந்த
நாட்டியல் வழக்க நான்மையின் கடைக்கண்
யாப்பின திலக்கண மறைகுவன் முறையே"

எனத் தெற்குக் குமரியன்றிக் கடலெல்லையாகியகாலத்துச் சிறு காக்கைபாடினியார் செய்த நூலினையும் அதன் வழிநூலென்றுமோ வெனின், ஈண்டுக்கூறிய பொருளெல்லாந் தழுவுமாற்றுற் செய்தது ஆராயின், அது வழிநூலாதற்கு இழுக்கென்னையென்க. இனிச் சில குன்றக்கூறினூர் தொகுத்து நூல்செய்தாராகலி னென் பாரும் உளர். ஒழிபொருளவாயினது தொகையெனப்படாமையின் அன்னாங் கூறுதல் வழிநூலிலக்கணமன்றென்பது. (௬௫)

**651. வழியி னெறியே நால்வகைத் தாகும்.**

இது, வழிநூல் இனைத்துவகைத்தென்கின்றது.

இதன் பொருள் : மேல் வழிநூலெனப்பட்டது நான்குவகையாற் செய்யப்படும், என்றவாறு.

இதன்பயன் ஒருநூலுள் ஒன்றல்லது பல வாராவெனவும் அதனானே நான்குவகைய வழிநூலெனவும் முதனூலாயின் ஒன்றேயா மெனவும் கூறியவாறாயிற்று. அவையாவன மேற்கூறுப. (கக)

652. தொகுத்தல்விரித்த றொகைவிரிமொழிபெயர்த்
ததர்ப்பட யாத்தலோ டனைமர பினவே.

இந்நான்கு வகையுங் காரணமாக மேற்கூறிய நால்வகை வழி நூலும் பெறலாம், என்றவாறு.

தொகுத்தலென்பது முதனூலுள் விரிந்ததனைச் சில்வாழ்நாட் சிற்றறிவின் மாக்கட்கு அறியத் தொகுத்துக்கூறல்; விரித்தலென்பது முதனூலில் தொகுத்துக் கூறுபட்டு விளங்காது நின்றதனை விளங்குமாற்றான் விரித்துக்கூறல். தொகைவிரியென்பது அவ்விருவாறும்பற்றித் தொகுத்து முன்னிறீஇ அந்நிறுத்த முறையானே பின் விரித்துக் கூறுதல். மொழிபெயர்த்தென்பது பிறபாடையாற் செய்யப்பட்ட பொருளினைத் தமிழ்நூலாகச் செய்வது. அதுவுந் *தமிழ்நூலுள் வழி நூற்கு மரபாமென்றவாறு. அதர்ப்படவென்பது நெறிப்படவென்றவாறு. நெறிப்படுதலென்பது அவ்வாறு மொழிபெயர்த்துச் செய்யுங்கால் அது கிடந்தவாற்றானே செய்யப்படும். தொகுத்தும் விரித்துந் தொகைவிரியாகவுஞ் செய்ததனாற் பயமில்லைத் தமிழர்க்கும் ஆரியர்க்கு மென்பது. மொழிபெயர்த்தெனவே, பொருள்பிறழாமை பெற்றாம். வழக்குநூலுள்ளும் மொழிபெயர்த்து யாக்கப்படுவன உளவோவெனின் அற்றன்று ; அது வேண்டுமே ? வேதப்பொருண்மையும் ஆகமப்பொருண்மையும் நியாயநூற் பொருண்மையும் பற்றித் தமிழ்ப்படுக்குங்கால் அவற்றிற்கும் இதுவே இலக்கணமென்றற்கு மொழிபெயர்த்தலையும் இவற்றுக்கட் கூறினானென்பது. இனிப், படர்ந்துபட்ட பொருண்மை

* முன் அச்சுப் பிரதியில் 'தமிழ்நூல் உள்வழி நூற்கு மரபாமென்றவாறு' எனக் காணப்படுகிறது.

யவாகிய மாபுராணம், பூதபுராணமென்பன சில்வாழ்நாட்சிற்றறிவின் மாக்கட்கு உபகாரப்படாமையின், தொகுத்துச் செய்யப்பட்டு வழக்கு நூலாகிய தொல்காப்பியம் இடைச்சங்கம் முதலாக இன்றுகாறும் உள தாயிற்றெனக்கொள்க. (கஎ)

653. ஒத்த சூத்திர முரைப்பிற் காண்டிகை
மெய்ப்படக் கிளந்த வகைய தாகி
யீரைங் குற்றமு மின்றி நேரிதின்
முப்பத் திருவகை யுத்தியொடு புணரி
னூலென மொழிப நுணங்குமொழிப் புலவர்.

இஃது, எல்லா நூற்கும் ஆவதோர் இலக்கணமுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : ஒத்த சூத்திரத்தினை உரைநடாத்தல்வேண்டினவழிப் பிறந்த காண்டிகையும், அக்காண்டிகையானும் விளங்காத காலத்து அதனையும் விளங்கக்கூறும் உரைவிகற்பத்துமாகிப் பத்து வகைக் குற்றமுமின்றி நுண்பொருள்'வாகிய முப்பத்திருவகை உத்தியோடு பொருந்திவரின் அதனை நூலென்றுசொல்லுப நுண்ணிதின் உணர்ந்துரைக்கும் புலவர், என்றவாறு.

ஒத்தசூத்திரமென்றதனான் நூலின்வேறாகிய இருவகைப் பாயிரமுஞ் சூத்திரத்தோடு ஒத்த இலக்கணத்தவென்பது கொள்க. உரைப் பினென்றதனான் 'உண்ணின் றகன்ற உரையொடு பொருந்தி' (தொல்-செய்-166) வருதலை நூலிலக்கணமெனச் செய்யுளியலுட் கூறிப்போந்தாம்; அங்ஙனம் வேறாகிப் பொருந்திவருமெனப்பட்ட உரையின்றிச் சூத்திரத்தானே பொருள் நிகழ்ந்த காலமும் உண்டென்பதாம். இதனது பயம், உரையுங் காண்டிகையுமின்றிச் சூத்திரத்தானே சொற்படுபொருள் உரைத்தலுமுண்டு, அஃது அவற்றையொழிய ஆகா திக்காலத்தென்றலாயிற்று.

உரைப்பினென்னும் வினையெச்சங் கிளத்தலென்பதனோடு முடியும். வகையென்றதனான் உரையெனப்பட்டதுதானும் அக்காண்டிகையின் மெய்ப்படக்கிளந்ததேயாகலின் அவ்விரண்டுஞ் செய்யுளியலுட் கூறிவந்த உரைவிகற்பமேயென்பதுணர்த்தியவாறு. அஃதேற் காண்டிகையென்றாற்போல இதற்குப்பெயர் வேறுகூறானோவெனின் வேண்டியார் வேண்டியவாறு 'மறுதலைக்கடாஅ மாற்றமும்' (தொல்-மர-104) எல்லையின்றி இகந்துவருவனவெல்லாம் உரையுள் எழுதப்படாமையின், அதுவுங் காண்டிகைப்பகுதியேயென்பது அறிவித்தற்கு வேறுபெயர் கூறாது மெய்ப்படக் கிளந்த வகையென்றேபோயினானென்பது. மற்று இல்லதற்கும் இலக்கணஞ்சொல்லுவார்போல ஈரைங்குற்றமுமின்றியென்றதென்னையெனின் அவற்றை எதிர்மறுத்துக்கொள்ளும் பத்துவகைக் குணமுங் கோடற்குத் தந்துகூறினானென்பது. அவை 'எதிர் மறுத் துணரின் றிறத்தவு மவையே' (தொல்-மர-109) என்புழிச் சொல்லுதும். அல்லதூஉம் இவைகூறியவதனானே பிறிதொருபொருள் கொள்ளப்படும் இடங்களும் உள, அவைநோக்கி அங்ஙனங்கொள்ளாதனவுந் தொகுத்து உடன்கூறினானென்பது. அவையும் அவற்று விரிச்சூத்திரத்துட் கூறுதும். ஈரைங்குற்றமுமென்ற உம்மையை எச்சப்படுத்துப் பிறவுங் குற்றம் உளவென்பதுங் கொள்க. அவை முதனூலோடு மாறுகோடலும் யாப்பினுட்சிதைதலும் போல்வன. அவை முன்னர்ச்சொல்லுதும். நேரிதினென்றதனான் முதல்வன் செய்த நூலாயினும் வழிநூலாயினும் அவ் வழிநூலின் முழுவதூஉந் தெரிந்துணரும் நுண்ணுணாவினோர்க்கே முப்பத்திருவகை உத்தியும் புலனாவதெனக்கொள்க. அவையும் முன்னர்ச்சொல்லுதும். வகையதாகியென்பது புணரினென்பதனோடு முடிந்தது. புணரினென்பது மொழிபவென்பதனோடு முடிந்தது.

ஒத்தசூத்திரத்தினை உரைநடாத்தல்வேண்டிற் காண்டிகைப் பொருளினை விளங்கச் சொல்லும் உரைவிகற்பத்ததாகியெனவே சூத்திரமுங் காண்டிகையும் உரையுமென மூன்றும் அவற்றோடு குற்றமின்மையும் உத்திவகையுங் கூட்ட நூலிலக்கணம் ஐந்தாயின. இதனது பயம், இவற்றது விரிச்சூத்திரங்களான் உய்த்துணர்வான் எடுத்தோதித்

தொகுத்துக்காட்டலாயிற்று. மற்றுக் குற்றத்தினை இடைவைத்து உத்திவகையினை ஈற்றுக்கண்வைத்ததென்னையெனின், ஈரைங்குற்றமுமின்றி வரும் இலக்கணம் முதனூற்கண் இல்லையென்பது 'முதல் வன்கண்' (தொல்-மர-106) என்புழிச் சொல்லுமாகலின், அவைபோல முதனூற்கண் உத்திவகையும் வாரா, சிறுவரவின வென்றற்கென்பது.

இனி, ஒத்தவென்றதனுற் பொதுப்பாயிரமுஞ் சிறப்புப்பாயிர சூத்திரமுந் தம்மின்வேறென்றலும் அவ்விருவகைப்பாயிரவுரையுஞ் சூத்திரவுரையும் வேறெழுதப்படுமென்றலுஞ் சூத்திரவுரையுட் பாயிரவுரை மயங்கிவருவன உளவென்றலும் அவ்விருவகையுரைக்கும் வேறுயினும் அவ்வுரைசெய்தான் பெயர் கூறுதன் முதலாகிய பாயிரவுரை கூற அமையுமென்றலுஞ் சூத்திரந்தானே பாயிரமில்லாதவழிப் பாயிரம்போல நூன்முகத்து நிற்குமென்றலும் அங்ஙனம் நின்றவழிப் பொதுப்பாயிரமுஞ் சிறப்புப்பாயிரமும் உரைவகைத்தாற்பெய்துரைத்தலும் அவ்விருவகைப்பாயிரமுஞ் செய்தார் இன்னாரென்றலுமென்று இன்னோரன்ன கோடலாயிற்று. இவையெல்லாஞ் சூத்திரத்தோடு ஒத்த இலக்கணமேயாதலின் ஒத்தவென்னும் மாட்டேற்றா னடங்கின.

அவை வருமாறு, "வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்" என்னும் பொதுப்பாயிரமும், 'வடவேங்கடந் தென்குமரி' (தொல்-பாயிரம்) என்னுஞ் சிறப்புப்பாயிரமும் ஒழிந்த சூத்திரங்கள்போல நூற்பாவகவலாகி நூலின்வேறாகி இன்றியமையாவாயின. அவற்றிற்குச் சூத்திரவுரையோடு மயங்காமல் வேறுரையும் ஆண்டெழுதப்பட்டன. எழுத்தெனப்படுப என்னுஞ் சூத்திரத்தினை நிறீஇ என்பது சூத்திரமெனவும், இவ்வதிகாரம் என்னபெயர்த்தோவெனவும், இவ்வதிகாரம் யாதனை நுதலியதெனவும், அவற்றிற்கு விடைகூறலும், இவ்வதிகாரம் எனைப் பகுதியான் உணர்த்தினனெனவுங் கூறி ஒழிந்த ஒத்திற்கும் இவ்வாறே சூத்திரவுரையோடு பாயிரவுரை மயங்கச் சொல்லியவாறும் அவற்றவற்றுட் கண்டுகொள்க.

இனி, இவ்வுரைசெய்தார் யாரோவென்றவழி, மதுரைக் கணக்காயனார்மகனார் நக்கீரரென உரையெழுதினன் பெயர் கூறுதலுஞ் சூத்திரஞ்செய்தான்பெயர் கூறுதலோடு ஒத்த இலக்கணத்ததாயிற்று.

" அன்பி னைந்திணைக் களவெனப் படுவ
தந்தண ரருமறை மன்றல் லெட்டனுட்
கந்தருவ வழக்க மென்மனார் புலவர்" (இறையனார்-1)

என்பது பாயிரமின்றித் தானே நூன்முகத்துநின்று இருவகைப் பாயிரவுரையும் பெய்து உரைக்கப்பட்டது. 'வடவேங்கடந் தென் குமரி' என்னுஞ் சிறப்புப்பாயிரஞ்செய்தார் பனம்பாரனாரெனவும் "வலம்புரிமுத்திற் குலம்புரி பிறப்பும்" என்னும் பொதுப்பாயிரஞ்செய் தான் ஆத்திரையன் பேராசிரியனெனவும் பாயிரஞ்செய்தான்பெயர் கூறியவாறு. 'என்பதுபாயிரம்' 'என்னுதலிற்றோ'வெனப் பாயிரவுரைக்கு முகவுரைவந்தவாறு கண்டுகொள்க. பிறவும் அன்ன. (கஅ)

654. உரையெடுத் ததன்முன் யாப்பினுஞ் சூத்திரம்
புரைதபவுடன்படக் காண்டிகைபுணர்ப்பினும்
விடுத்தலும் விலக்கலு முடையோர் வகையொடு
புரைதப நாடிப் புணர்க்கவும் படுமே.

இஃது, ஐயம் அறுத்தனுதலிற்று; என்னை? மேற்கூறிய சூத்திரம் உரைபெறுங்காற் காண்டிகையும் உரையும் வேறுவேறு பிறக்கக்கண்ட மாணாக்கன் ஒழிந்தனவும் ஒன்றொன்றனை ஒழித்துவருங்கொலென்று ஐயுற்றாற்குக் காண்டிகையும் உரையுமே கண்டாய் ஒன்று ஒன்றனை ஒழிந்துவருவன வென்று ஐயம் அறுத்தமையின். மேலதற்கே புறனடையெனவும் அமையும்.

இதன் பொருள் : உரையெடுத்து அதன்முன் யாப்பினும்—காண்டிகையினை விளக்குங்கருத்தினாலும் அக்கருத்தின்றியும் அச்சூத்திரத்திற்கு உரைதொடர்ந்தெழுதினும் ; சூத்திரத்தினை அதுவென்று சுட்டினான் 'முற்படக் கிளத்தல் செய்யுளு ளுரித்து' (தொல் - சொல் - கிள - 39) என்பதனா னெனவுணர்க.

சூத்திரம் புரை தப உடன்படக் காண்டிகை புணர்ப்பினும் - அச்சூத்திரத்திற்கு இடையின்றிக் காண்டிகை பொருந்தச்செய்யினும்

'புணாதப' என்பதனுன் மேல் இடைபுகுமெனப்பட்ட பாயிரவுரை யின்றிச் செய்த காண்டிகைக்கும் பெரும்பான்மையெனக் கொள்க. 'உடன்பட' என்பதனுற் காண்டிகையல்லாத முகவுரைக்கண்ணே முன் னும்பின்னுங் காண்டிகைபெய்து உரைத்தலுங்கொள்க. கொள்ளவே, முற்கூறிய ஐந்தும் ஒருங்குவருதலும் இவ்வாறே பெற்றும்.

விடுத்தலும் விலக்கலும் உடையோர் வகையொடு—கடாவிற்கு விடைகூறுவாரும் போலி மறுப்பாருஞ் சொல்லுஞ் சொற்பகுதியோடு; 'வகை' யென்றதனுன் அவவிருபகுதியுங் காண்டிகைக்கு வருங்காற் குறிப்பினுற் கொள்ளவருமெனவும் உரைக்கண வருங்காற் கூற்றினுற் கொள்ளவருமெனவுங் கொள்க. அஃதேற் கூற்றினுற் கோடன் 'மறுதலைக் கடாஅ மாற்றமு முடைத்தாய்' (தொல்-மர-104) என வருகின்ற சூத்திரத்திற்பெறுதுமெனின், அற்றன்று; அது பிறன்கோள் பற்றி மறு தலைக் கடாஅ மாற்றமுங் கூறுதற்குச் சொல்லினுன்; அஃது அன்னதன்றி அறியாது வினவுந் துணையேயாகலின் வேறென்பன. விடுத்தலெனவே வினவினை விடுத்தல்பெற்றும். விலக்கலெனவே அஃதல்லாப் போலியை விலக்குதலெனபது பெற்றும்.

புரை தப நாடிப் புணர்க்கவும படுமே—காண்டிகையிரண்டும் உரையிரண்டுமென்று வருகின்ற நான்கன்கண்ணும் இடை அந்தர மின்றிப் புணர்க்கவும்படும் அவவிருபகுதியும், என்றவாறு.

அஃதாவது, காண்டிகைப்பகுதி இரண்டற்கும் விடுத்தலும் விலக்கலும் உடையோர் குறிப்பினுற் கொள்ளவைத்தலும் ஒழிந்த உரையிரண்டன் கண்ணும் அவை கூற்றினுற் கொள்ள வைத்தலு மென உணர்க. உம்மை இறந்தது தழீஇயிற்று. என்னை? காண்டி கையும் உரையும் ஒன்று ஒன்றனை ஒழித்தும் வருமென்றமையின். ஒழியாதுவருதல் உடன்படவென்றதனுல் தழுவப்பட்டது. இவற் றிற்கு உதாரணமாமாறு தத்தம் விரிச்சூத்திரத்துட்சொல்லுதும்.(கக)

655. மேற்கிளந் தெடுத்தயாப்பி னுட் பொருளொடு
சில்வகை யெழுத்தின் செய்யுட் டாகிச்

சொல்லுங் காலே யுரையகத் தடக்கி
நுண்மையொடு புணர்ந்த வொண்மைத்தாகித்
துளக்க லாகாத் துணைமை யெய்தி
யளக்க லாகா வரும்பொருட் டாகிப்
பலவகை யானும் பயன்றெரி புடையது
சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்

இது, சிறந்த முறையானே சூத்திரமாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : மேற் கிளந்து எடுத்த யாப்பினுட் பொருளொடு—'சூத்திரந் தானே, ஆடி நிழலி னறியத் தோன்றி- நாடுத லின்றிப் பொருணனி விளங்க - யாப்பினுட் டோன்ற யாத்தமைப் பதுவே' (தொல்-செய்-169) என மேற் செய்யுளியலுள் விதந்தோதிய இலக்கணமுடைத்தாய்:

எனவே, வழுவமைக்கின்ற கிளவியாக்கத்து முதற்கண்ணே வினையியலுட் கூறப்படும் இலக்கணத்தினை ஆண்டு ஓர் உபகாரப் படக் கூறியதுபோல அடிவரையின்மைக்கு ஆண்டுக்கூறியதல்லவிச் சொல்லப்பட்ட இலக்கணம், ஈண்டு இனிக் கூறுகின்ற இலக்கணத் தோடு கூடி மரபெனவேபடும் என்றுணும். ஆண்டுப் பொது வகையாற் கூறிய நூலிற்கும் இஃதொக்கும்; என்னை ? பலசூத் திரந் தொடர்ந்து நூலாகி ஈண்டே மரபுகூறப்படுதலின். உரையாயின் அன்னதன்றி நால்வகையுரையுள் ஏற்பன பகுதிவேறுபடும் மரபு கூறுகின்றமையின் அது செய்யுளியலுட்கூறியவாறுபோலாதுவேறெனவேபடும் ஈண்டென்பது. இனி, முற்கூறிய பாயிர இலக்கணத்தினை இன்றியமையாது சூத்திரமென்றற்கும் இதுவே ஒத்தாகக் கொள்க. என்னை? மேற்புறத்துநின்று மேற்கிளந்தெடுத்த யாப்பெனவேபடு மாகலினென்பது. இதனது பயம் பாயிர இலக்கணங்களோடு பொருந் தச் சூத்திரஞ் செய்த லென்பதாயிற்று. இஃது ஒப்பக்கூறலென்னும் உத்திவகை. மேற்கிளந்தெடுத்த இலக்கணமாவது, ஆடிநிழற்போல்

பொருளானுந் தேர்தல்வேண்டாமற் பொருட்பெற்றி உணர்கின்றாங்குச் சூத்திரத்தொடருள் இலக்கியமின்றாயினும் அதனை இதுகேட்டான் காணுமாற்றாற் செய்தலாயிற்று. இனி மேற்கிளந்தெடுத்த பாயிர இலக்கணச்சூத்திரத்தோடு பொருந்துங்காற் பொதுப்பாயிர இலக்கணம் பொருந்தா, சிறப்புப்பாயிர இலக்கணம் எட்டுமே பொருந்துவனவெனக்கொள்க. அஃதென்னைபெறுமாறெனின், மேற்கிளந்த யாப்பென்றது எடுத்த யாப்பென்றதனானே ஒருநூற்குச் சிறப்புவகையான் இன்றியமையாதாகி எடுத்துக்கொள்ளப்படுவது 'வடவேங்கடந் தென்குமரி' என்றாற்போலுஞ் சிறப்புப்பாயிரமாகலானும், பொதுப் பாயிரம் எல்லாநூன்முகத்தும் உரைக்கப்படுமென்றற்கும் அங்ஙனங் கூறப்பட்டது.

சில்வகை எழுத்தின் செய்யுட்டாகி—அடிகிழவின் அறியச்செய்யுங்கால் அதுபோல ஒருவழிப் பொருளடக்கி ஒருவழி வெள்ளிடை கிடப்பச் செய்யப்படாது பொருட்கு வேண்டுஞ் சில சொல்லாற் செய்யுஞ் செய்கைத்தாக்கி ; செய்யுளென்றான் அடிவரைச் செய்யுளின் வேறுபட்ட பொருட்பாட்டிறாகிய அடிவரைப்பாட்டினுட் சிறப்புடைய ஆசிரியத்தானும் வெண்பாவானுஞ் செப்பவும்படுஞ் சூத்திரமென்றற்கென்பது. என்னை ? மண்டிலப்பாட்டின் உடம்பொடு புணர்த்துச் சூத்திரஞ் செய்தமைபானுஞ் சின்மென்மொழியிற் றாய பனுவல் வெண்பாட்டாகி வருமாதலானுமென்பது.

சொல்லுங் காலை உரையகத்து அடக்கி—பொருளானும் போலியானுஞ் சொல்லுவார் சொல்லுங்கால் அவ்வுரையெல்லாந் தன்னகத் தடக்கி; நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத்தாகி—பருப்பொருட்டாகிய பாயிரம்போலாது நுண்பொருட்டாகிய பொருள் கேட்டார்க்கு வெள்ளிதன்றி உள்ளுடைத்தாகி; துளக்கலாகாத் துணைமை எய்தி—முன்னும் பின்னுங் கிடந்த சூத்திரங்களானே தன்னுட்பொருள் இன்றியமையாதாகலெய்தி ; எனவே, ஒன்றொன்றனை இன்றியமையாத உறுப்புப்போலச் செய்யல் வேண்டுமென்றவாறாயிற்று; அளக்கலாகா அரும்பொருட்டு ஆகி—அளத்தற்கரிய பெரும்பொருட்டாகி; பல்வகையானும் பயன் தெரிபுடையது—பலவாற்றானும் பொருள்

விளக்க வருவது; சூத்திரத்து இயல்பென யாத்தனர் புலவர்—இவை யெல்லாஞ் சூத்திரத்திலக்கணமென்று முதனூல்செய்த ஆசிரியராற் சொல்லப்பட்டன, என்றவாறு.

இஃதியல்பெனவே இவற்றிற் சிறிய வேறுபட்டன விகாரமென் றாறும்.

'உகரமொடு புணரும் புள்ளி யிறுதி
யகரமு முயிரும் வருவழி யியற்கை'
(தொல்-எழுத்-தொகை-21.)

என்றவழி யகரமும் உயிரும் வருவழியெனவே இது நிலைமொழித் தொழிலென்பது, ஆடிநிழலின் அறியத்தோன்றிற்று. இனி, நிலைமொழித்தொழில் வேறுகூறினமையின் 'மயங்கா மரபி னெழுத்து முறை காட்டி' (தொல்-பாயிரம்) எனப் பாயிர இலக்கணத்துடன் பொருந்துவதாயிற்று. இனி, எண்வகையாற் பரந்துபட்ட புள்ளியீற்றுச் சொல்லினை யெல்லாம் உகரமொடுபுணரும் புள்ளியென அடக்கினமையிற் சில்வகையெழுத்தின் செய்யுளுமாயிற்று. யகரமும் உயிரும் வருவழி இயற்கையென வருமொழிப்பரப்பெல்லாம் அடக்கினமையின் அதற்கும் இஃதொக்கும், இதனைப்பற்றியெழுந்த பொய்ப்பொருளும் மெய்ப்பொருளும் பலவாகலின் உரையகத்தடக்கலும் உடைத்தாயிற்று. தொகைமரபினுள்ளும் உயிர்மயங்கியலினுள்ளும் புள்ளி மயங்கியலினுள்ளுங் குற்றியலுகரப்புணரியலினுள்ளும் பரந்துபட்ட பொருளினை நுழைந்து வாங்கிக்கொள்ள வைத்தமையின் நுண்மை யொடுபுணர்ந்ததூஉமாயிற்று. இசசூத்திரம் பொருளுரைத்தவழியும் வெள்ளிதன்றி உள்ளுடைத்தாகலின் நுண்மையுடைத்தெனவும்பட்டது. 'குறியதன் முன்னர்த் தன்னுரு பிரட்டலும்' (தொல்-எழுத்-தொகை-18) என்பதூஉம் 'ஞகாரை யொற்றிய தொழிற்பெயர் முன்னர்' (தொல்-எழுத்து-புள்ளி-1) என்பதூஉம் முதலாயவற்றிற்கும் இஃது இன்றியமையாதாகலும் இதற்கு அவை இன்றியமையாவாகலும் உடைமையின், துளக்கலாகாத் துணைமையெய்தியதூஉமாயிற்று. இருபத்துநான்கீறும் இருபத்திரண்டுமுதலும்பற்றி எழுந்த மொழிகளெல்

லாம் வேற்றுமைக்கண்ணும் அல்வழிக்கண்ணும் இருமொழித்தொழி லும் ஒருவகையால் தொகுத்துச்கூறினமையின் அளக்கலாகா அரும் பொருட்டாதலும் பெற்றாம். இங்ஙனம் வருதல் இயல்பெனவே சிறிய வேறுபட்டுவருவன உளவாயின் அவையும் அமையுமென்றானும். அவை,

‘ அந்நா லேந்து மூன்றுதலை யிட்ட
முன்னுறக் கிளந்த வுயர்திணை யவ்வே’
(தொல்-சொல்-வினை-11.)

என்றாற்போல்வனவும் பிறவும இலேசுசொல்லும் இயல்பன்றி விகார மெனப்படும. (௬௦௦)

## 656. பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பிற் கரப்பின்றி முடிவது காண்டிகை யாகும்.

இது, முறையானே காண்டிகையாமாறுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : குற்றமில்லாத சூத்திரத்தனதுபட்ட இலக் கணத்துள் ஒன்றுங் கரவாது முடியச்செய்வது காணடிகையாம், என்ற வாறு.

பழிபபில்சூத்திரமென்றதனற் காண்டிகைசெய்யத்தகாதென்று இகழ்ச்சிப்படப் பரந்தன உளவாயின் மறுத்துச்செய்கவென்பதாம். இதனை வருகின்ற காண்டிகைக்கும் அகலவுரைக்கும் ஏற்பித்துக் கொள்க.

உதாரணம்: “எழுத்தென்ற சிறப்பித்துச சொல்லப்படுவன அகரமுத, னகர விறுவாய் முப்பஃது’ என்று சொல்லுவார் ஆசிரியர், சார்ந்து வரலிலக்கணத்த மூன்று மல்லாத இடத்து” எனவரும். பிற வும் அன்ன. இனி மறுத்துச செய்யுங்கால்,

‘ வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட் டயர்ந்த காந்தளும்’ (தொல்-புறத்-5.)

என்பது தெய்வச்சிறப்பினை அறியுஞ் சிறப்போடு வெவ்வாயுடைய வேலனது வெறியாட்டினை ஆடிய காந்தளுமென்றாற்போல வருவன பலவுங்கொள்க. இங்ஙனங் கூறிய உதாரணங் காட்டல்வேண்டாமையை உணர்ந்து உரைநடந்தகாலமும் உடையவாகும் முற்காலத்து நூல்க ளென்பது கருத்து. அஃதேல், உதாரணத்தோடுவருங் காண்டிகை யிலவோவெனின், அது வருகின்ற சூத்திரத்துட் சொல்லுதும். கரப் பில்லதென்றது முடிவதென்றான் அதனாற் பரந்துபட்ட சூத்திரத் தினை அங்ஙனம் மறுததுச்செய்யாது தொகுத்துக் காண்டிகைதான் உரைக்குங்கால் உட்பொருளெல்லாம் விளங்காமற் கரந்துசெய்தலும் உண்டென்பது கொள்க. அது 'வெறிபறி சிறப்பின் வெவ்வாய் வேலன் - வெறியாட் டயர்ந்த காந்தளும்' என்பது முதலாக இக் கூறப்பட்ட இருபத்தொரு துறையுங சரந்தையெனப்படுமெனறாற் போல மாட்டென்னுஞ் செய்யுளுறுப்பினைத் தோற்றுவாய் செய்து விடுதல். பிறவும் அன்ன. (கoஅ)

657. விட்டகல் வின்றி விரிவொடு பொருந்திச்
சுட்டிய சூத்திர முடித்தற் பொருட்டா
வேது நடையினு மெடுத்துக் காட்டினு
மேவாங் கமைந்த மெய்ந்நெறித் ததுவே.

இது, மேலதற்கோர் புறனடை எய்தியதன்மேற் சிறப்புவிதியு மாம். என்னை ? காண்டிகையை மேலதனோடு இருவகைய என்ற மையின்.

இதன் பொருள் : விட்டகல்வின்றி விரிவொடு பொருந்தி—சொற் படுபொருள் சொல்லுங்கால் தொடர்மொழிகளைத் தொகைநிலை பய னிலை முதலாயவற்றாற் பகுத்துக்கூறாது பகுத்துக்கூறும் உரைவிகற் பம் போன்று மற்றப்பொருள் தோன்றி ; விடுத்தலென்பது, கண்ண ழிவு ; அக்கண்ணழிவான் அகன்றுபடுதல் விட்டகல்வெனப்பட்டது. அங்ஙனம் அகன்றுபடுதலின்றியெனவே, இஃது இன்னவேற்றுமைத் தொடர் இஃது இன்னபயனிலைத்தொடரென்றாற்போலச் சொன் னிகழ்ச்சியுடைத்தாயின் அஃது உரையெனப்படுமென்றானும்.

சுட்டிய சூத்திரம் முடித்தற் பொருட்டு—இது நியமச்சூத்திரம் அதிகாரச்சூத்திரமென்றாற்போல முதற்கட் சொல்லிய சூத்திரப்பெயரினை அவ்வாறாகி முடிந்த முடிபுசொல்லுதல் பொருட்டாக; ஏதுநடையினும்—நியமச் சூத்திரமென்றானும் பிறிதொன்றென்றானும் மேற்கொண்டக்கால் இன்னது காரணத்தினெனக் காரணங்கூறும் வழக்கினானும்; எடுத்துக்காட்டினும்—அங்ஙனங் காரணங் கூறியக்கால் அதற்கேற்பது ஒன்றாயினும் உதாரணமாயினும் வழிநூற்காயின் முதனூல் எடுத்துக்காட்டுதலாயினும ஒன்றுபற்றியும்; மேவாங்கமைந்த மெய்ந்நெறித்து அதுவே—சூத்திரஞ்செய்த ஆசிரியன் வேண்டியதே சொல்லி விடும பொருளிலக்கணத்திற்று மேற் கூறிவருகின்ற காண்டிகை, என்றவாறு.

இது,'மெய்ந்நெறி' யென்பது சூத்திரத்துச் சொல்லிற் கருதிய பொருளிலக்கணம். அதனை அவன் வேண்டியாங்குச் சொல்லி முடிப்பினல்லது சூத்திரத்துச் சொற்கண் வந்த சொல்லாராய்ச்சியும் எழுத்தாராய்ச்சியும் அறியவேண்டுவனவெல்லாஞ் சொல்லாரென்பது கருத்து. இதனை ஏற்றச்சண் வைத்ததனானே வருகின்ற உரையும் இங்ஙனம் விட்டகல்வினறி வருதலுடைத்தெனக் கொள்க.

உதாரணம்: ' இயற்கைப பொருளை யிற்றெனக் கிளத்தல்' (தொல்-சொல்-கிளவி-19) என்பது தன்றன்மையான் ஈசழ்பொருளை இன்னதன்மைத்தென்று சொல்லுகவென்றவாறு. அது நிலம்வலிது நீர் தண்ணிது தீவெய்து வளியுளரும் என்றாற்போல்வன. இதற்குக் கருத்தோதுதல் பாயிரவகையாற் பெறுமெனபது 'உரைப்பிற் காண்டிகை' (தொல்-மர-98) என்புழிக் கூறிவந்தாம். மற்று, 'உயர்திணையென்று சொல்லுப ஆசிரியர் மக்சட் சுட்டின்கண், அஃறிணையென்று சொல்லுப ஆசிரியர் அவரல பிறவற்றுக்கண், அவ்விருதிணைப்பொருண்மேலும் இசைக்குஞ் சொல்லினை' யென்றக்காலும் 'வேற்றுமையெனப்பட்ட பொருள் ஏழு' என்றக்காலும் உதாரணங்காட்டுமாறென்னை? அவற்றவற்றுட்பின் வேறு சூத்திரங்களான்,

ஆடூஉ வறிசொன் மகடூஉ வறிசொற்
பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி'

(தொல்-சொல்-கிள-2)

எனவும்,

" ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்று"

(தொல்-சொல்-கிள-3)

எனவும்,

' அவைதாம், பெயர்ஐ யொடுகு
இன்அது கண்' (தொல்-சொல்-வேற்-3)

எனவும் உதாரணங் கூறுமாலெனின், அவை தூளச்சலாகாத் துணைமையெய்தி னின்றமையின் அவ்வாறு உதாரணம் ஆண்டுக்காட்டாக்காலும் அமையும், அவற்றைப் பிற்கூறுமாகலினென்பது. அல்லதூஉம் எதிரதுநோக்கி உயர்திணைசொன் மூன்றும் அஃறிணைச் சொல் இரண்டுங் காட்டியக்காலும் இழுக்கன்றென்பது. ஒழிந்தவற்றிற்கும் இஃதொக்கும். (கoஉ)

658. சூத்திரத் துப்பொரு ளன்றியும் யாப்புற
வின்றி யமையா தியைபவை யெல்லா
மொன்ற வுரைப்ப துரையெனப் படுமே.

இது மேல் 'ஒத்த சூத்திர முரைப்பிற் காண்டிகை மெய்ப்படக் கிளந்த வகையதாகி' (தொல்-மர-98) என நிறுத்தமுறையானே காண்டிகையினை மெய்ப்படக்கிளந்த வகை யுணர்த்துதல்நுதலிற்று.

இதன் பொருள் : மேற் 'பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பின்' (தொல்-மர-101) வருதலும், அதுவே ஏதுவும் எடுத்துக்காட்டும் உடைத்தாகி வருதலுமென இருவகையும் உடைத்தென்றான், இனிச் சூத்திரத்துப்பொருளன்றியும் ஒருதலையாக அதற்கு இன்றியமையாது பொருந்துவனவெல்லாம் அதனோடு கூட்டிச் சொல்லுதல் உரையெனப் படும், என்றவாறு.

அவை 'இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல்' (தொல்-சொல்-கிள-19) என்றவழி எடுத்தோத்தின்றி இலம்வலிதாயிற்றென்னும் வழுவமைதிகோடலும் 'ஒத்த சூத்திரம்' என்றவழிப் பாயிரம் ஒத்த சூத்திரமென்றுகோடலும் இன்னோரன்னகொள்க. எல்லாமென்றதனாற் சூத்திரப்பொருளேயன்றி எழுத்துஞ்சொல்லும்பற்றி ஆராயும்பகுதியுடையவாதல் வேண்டும் அவ்வுரையென்பது கொள்க. இனி, மேற் காண்டிகைக்கு ஓதிய இலக்கணஙகளுள் இதற்கேற்பனவெல்லாம் அதிகாரத்தாற் கொள்ளபபடும். அவை ஏதுவும் நடையும் எடுத்துக்காட்டுஞ் சூத்திரஞ்சுட்டுதலுமென்று இன்னோரன்ன கொள்க. இவையெல்லாந் தழுவுதற்குப் போலும் 'இன்றி யமையா தியைபவையெல்லாம்' என்று எடுத்தோதுவானாயிற்றெனபது. (கூ௱கூ)

659. மறுதலைக் கடாஅ மாற்றமு முடைத்தாய்த்
தன்னூ லானு முடிந்த நூலானு
மையமு மருட்கையுஞ் செவ்விதி னீக்கித்
தெற்றென வொருபொரு ளொற்றுமை கொளீஇத்
துணிவொடு நிற்ற லென்மனார் புலவர்.

இதுவுங காண்டிகைபோல உரையும் இருவகைத்தென்பது அறியுமாற்றான் எய்தியதன்மேற் சிறப்புவிதி யுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : மறுதலைக் கடாஅ மாற்றமும் உடைத்தாய்—மறுதலைமாற்றத்தினை இடைசெறித்துக் கடாவுதலும் அதற்கு மறுமாற்றமாகிய விடைகூறுதலும் உடைத்தாய் ; தன் நூலானும—உரையெழுதுவானாற் கூறப்படுகின்ற உரை தனக்கு முதனூலாகிய சூத்திரத்தானும் ; இதனானே உரையின்றிச் சூத்திரமே நூலெனப்படுவதூஉமாயிற்று : முடிந்த நூலானும்—அதன் முதனூலானும் ; முடிந்த நூலென்பது இணைநூலென்பாரும் உளர் : இணையன கூறத் தான் கூறானாயின் அது குன்றக்கூறலென மறுக்க. அங்ஙனங் கொள்ளும் பொருண்மை யுளவாயின் அவை 'சூத்திரத்துப்பொருளன்றியும்' என்பதனான் அடங்கும். மற்று முதனூலாற் கூறியபொருள் சில

குன்றக்கூறினன்போல முடிந்தநூலாற் கொள்க என்றதென்னை யெனின், அற்றன்று ; இப்பொருண்மை முடிந்தநூலினும் உண் டென்று எடுத்துக்காட்டப்படுமென்றுனென்பது. இது, மேல் 'எது நடையினு மெடுத்துக் காட்டினும்' (தொல்-மர-102) என்றவழிப் பெறுதுமாயினும் முதனூலல்லது எடுத்துக்காட்டப்பெறுஅரென்றற்கு ஈண்டு வரைந்துகூறினுனென்பது. எனவே, இணைநூலும் அவற்று வழிநூலும் எடுத்துக்காட்டுங்கால் தனக்கு முதல்வராயினுரை நாட்டி அவர் கருத்தேபற்றிப் பிறர்செய்தாரெனினல்லது பிறர்மேல் தலைமை சீறீஇ அவர்கருத்துப்பற்றி இவர் செய்தாரெனக்கூருர். அங்ஙனங் கூறின் அவர் நூற்கே உரையெழுதுவா னல்லனேயெவன மறுக்க. இனி 'வினையி னீங்கி விளங்கிய வறிவின் முனைவ' (தொல்-மர-94) ணுற் செய்யப்பட்ட முதனூற்காயின் முடிந்த நூல் எடுத்துக்காட்டுத லென் னும் இவ்விலக்கணமின்றென்பதுகொள்க, ஒருதலையன்மையென்னும் உத்திவகைபற்றி யென்பது.

ஐயமும மருட்கையுஞ் செவ்விதின் நீக்கி—ஐயவுணர்வும் பொய் யுணர்வுஞ் செம்பொருளினுன் நீக்கி; தெற்றென ஒருபொருள் ஒற் றுமை கொளீஇ—அச்செம்பொருள் கருவியாகக் கேட்பான் உணர்வு மருட்கை நீக்கி மெய்யுணர்ந்து தெற்றெனவும் இரட்டுறுதனீக்கி ஒற்றுமைசொளுத்தியும்; துணிவொடு சிற்றல் என்மனுர் புலவர்— கவர்படச் சொல்லாது ஒருபொருள் துணிந்துரைத்து மாறுதலும் அதி காரத்தான் சின்ற உரையிலககணம், என்றவாறு.

மறுதலையும் மாற்றமுமென்பது கடா விடை; ஐயமும் மருட் கையுஞ் செவ்விதினீக்கல ஒருபுடை யொப்புமையுடைய போலியும் அதற்கு ஒன்றும் இயைபில்லாத பொய்ப்பொருளுமெனப்படும். 'பிறிது பிறிதேற்றலு முருபுதொகவருதலும்' (தொல்-சொல்-வேற்,-ம-21) என்றவழிப் பிறிதென்று ஒருகாற்சொல்ல ஆறுமுருபெனவும் பின் னெருகாற் பிறிதென ஒழிந்த உருபெல்லாந் தழுவுமெனவுஞ் சொல்லு தல் போலியெனப்படும். என்னை? அவ்வாறுவதனேடு ஏழாமுருபும் பிறவுருபேற்கும் வழக்குள்வழி ஒன்றனைக்கொண்டமையின் அஃது ஒருபுடையொப்புமையுடைத்தாகி அப்பொருளன்றெனவும்படாது மற்

றென்றனைக் கோடல்பொருளெனத் துணியவும்படாது ஐயவுணர்வு செய்தலையின் அது போலியாயிற்று. இனிப், 'பிறிதுபிறிதேற்றலும் உருபுதொக வருதலும்' என்னும் இரண்டும்மையும் பொருளிலவென்று பிறிது பிறிதேற்றலும் உருபுதொக வருவதற்கண்ணென்று பொருள் கூறுதல் போல்வன சூத்திரத்தின் கருத்தறியாது பொய்யைமெய் யென்று மயங்கிய மருட்கையெனப்படும். இவ்விரண்டனையும் நீக்கி உண்மை உணர்த்துதல் உரையெனப்படுவதாயிற்று. சிறப்பென்பது சிறந்த அவ்வுரையென்றவாறு. தன் நூலானும் முதனூலானும் ஐயமும் மருட்கையும் நீங்குககால் அவற்றுட்கிடந்த செம்பொருளானே நீக்கப்படுமென்பது இரண்டுகண்ணுனுங் கூர்மையாற் பாரத்தானென்பதுபோலக் கொள்க. (௪௦௪)

660. சொல்லப் பட்டன வெல்லா மாண்பு
மறுதலை யாயினு மற்றது சிதைவே.

இது, வழிநூற்கே ஆவதோர் வேறுபா டுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : மேற்கூறிய சூத்திரமுங் காண்டிகையும் உரையு மென்னும் மூன்றற்குஞ் சொல்லப்பட்ட இலக்கணமெல்லாஞ் சிதையாது மாட்சிமைப்படினும் முதனூலோடு மாறுகொள்ளின் அவற்றான் எல்லாஞ்சிதைந்ததெனவேபடும அந்நூல், என்றவாறு.

மறுதலையாயினுமென்ற உம்மை எதிரது தழீஇயிற்று; மேற்கூறும் பத்துவகைக் குற்றமுமேயன்றி வழிநூற்கு இதுவுங் குற்றமாமென்றமையின் ஈரைங்குற்றமுமின்றி என்பதனை நோக்க இறந்தது தழீஇயிற்றுமாம். இதனானே, பிற்காலத்து நூல்செய்வார் நூலிலக்கணம் பிழையாமற் செய்யினும் முற்காலத்து நூலோடு பொருண்மாறுபடச் செய்யின் 'அது மரபன்று வழிநூற்கென விலக்கியவாறாயிற்று. எனவே, முதனூற்காயின் இவ்வாராய்ச்சியின்றென்பது கருத்து. என்னை ? முதல்வனூன் மாறுபடுதற்கு அதன் முன்னையதோர் நூல் இன்மையினென்பது. அல்லதூஉம் 'மற்றது' என்று ஒருமை கூறினமையானும் இது வழிநூற்கே விலக்கிற்றென்பது கொள்க. மற்று

மேல் 'முதலும் வழியுமென நுதலிய நெறியின' (தொல்-மர-93) எனவே முதனூலின் வழித்து வழிநூலென்பதூஉம் மறுதலையாயிற் சிதைவென்பதூஉம் பெறுதுமாதலின் இச்சூத்திரம் மிகையாம் பிறவெனின், அற்றன்று; முதல்வழியென்பன முன்னும் பின்னுங் காட்டினன்றி மாறுபடாமைக் கூறல்வேண்டு மென்பதூஉம் பெறுதுமாகலின் அது கூறல்வேண்டுமென்பது. பெறுமாகலின் இது கூறல்வேண்டுமென்பது. அல்லாக்கால் முன்னோர்நூலின் முடிபு ஒருங்கொவ்வாமைப்பின்னோன்வேண்டும்விகற்பங்கூறுவான்செல்லுமென்பது. (கo௯).

## 661. சிதைவில வென்ப முதல்வன் கண்ணே.

இது, மேற்கூறிய வழிநூற்குப்போல முதனூற்கே ஆவதோர் வேறுபா டுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: மேற் பொதுவகையாற் கூறப்பட்ட நூலிலக்கணம் ஐந்தனுள் ஈரைங்குற்றமுமின்றியென முன்னே ஓதிய இலக்கணம் ஒன்று; முதனூற்காயின் அம்மரபின இலக்கணம் வேண்டுவ தன்று, என்றவாறு.

சிதைவிலக்கணத்தைச சிதைவென்று ஓதினன் ஆகுபெயரானென உணர்க. மற்று 'வினையினீங்கி விளங்கிய அறிவின்' முனைவற்குச் சிதைவிலவென்பது அறிவானே உணர்வவெனின், எடுத்தோத்துக் களைந்து உய்த்துணர்தல் பயமின்றென்பது. அல்லதூஉம் முதனூற்கு முன்னையதோர் நூலினை இலக்கியமாகப் பெறினன்றே முதல்வன்றன் நூலிலக்கணஞ் செய்வது. மற்று அன்னதோர் நூலின் அவன்செயாத நூலிலக்கணம யானசெயதேனெனவும் அவற்றுச் சிதைவினையே முதனூற்கண் இலலையென்றதூஉம் ஒழிந்த நானகும் முதல்வனூற்கண்ணே உளவாகலின் அவற்றை இலக்கணங்கூறினன் எனவும் இனிக் குற்றங்களும் பிற்றோன்றுமகொலெனறு அஞ்சி இங்ஙனம் அவற்றை வரையறுத்து யான் பாதுகாக்கின்றேனெனவும் ஆங்ஙனம் பாதுகாத்து இவ்விலக்கணங்கள் ஓதிற்றும் அவன்முதனூலே இலக்கியமாகப்பெற்றனவுங் கூறியது கூறல்போல்வன வேறோற்

பொருள் விளக்குமாயிற் குற்றமன்றென்பதனையும் யானே கூறியதன்றி முதல்வனுயிற் சில்வகையெழுத்தின் செய்யுட்டாகவே அவற்றை வேறுவேறு விதித்துப் பரந்துபடச் செய்யுமெனவும் இவையெல்லாம் அறிவித்தற்குச் 'சிதைவிலவென்ப முதல்வன்கண்' என்றானென்பது. மற்று முதல்வன் யாப்பே கூறுமாயின் அந்நூற்குத் தந்திரவுத்தியும் வேண்டுவதன்றாம் பிறவெனின், அங்ஙனமே முதனூற்காயின் முப்பத்திருவகையுத்திவாராது சிறுபான்மையான் வருமென்றற்கன்றே ஈரைங்குற்றமுமின்றி நேரிதின் முப்பத்திருவகை யுத்தியொடு புணர்ந்தெதன ஈண்டு விலக்கப்பட்ட குற்றத்தின் பின்னர் அவ்வுத்தியை வைத்தகருத்தென்பது ஆண்டுக் கூறவாமாயிற்றென்பது. மற்று முதனூலினன் நூல் இலக்கணங் கூறுனோவெனின் கூறினனே யன்றோ? தான் ஒருவகையான் நூல்செய்து மற்று அதுவே நூலிலக்கணமெனப் பிற்காலத்தார்க்கு அறியவைத்தமையினென்பது. மற்றுச் சிதைவில வென்பார் யாரோவெனின் நிகழ்காலத்தாசிரியரும் எதிர்காலத்தாசிரியருமென உணர்க. (கoக)

662. முதல்வழி யாயினும் யாப்பினுட் சிதையும்
வல்லோன் புணரா வாரம் போன்றே.

இ-ள், முதனூலொடு மறுதலைப்படுதல் வழிநூற்குக்குற்றமென்கின்றது.

இதன்பொருள்: முதல்வழியாயினும் யாப்பினுட்சிதையும் - அதிகாரத்தானே முதனூலினைக் குற்றமின்றி வருவவென்று ஈண்டு இலக்கணங்கூறல் வேண்டுவதன்றென்றான் இனி அம்முதனூலினை மாறுபடாமல் ஆண்டோதிய பொருண்மை கூறுமாயினும் நால்வகையாப்பினுண் முதனின்ற மூன்றும் பற்றி வழிநூற்குக் குற்றம்பிறக்கும்: மற்று மொழிபெயர்த்தலொழியக் கொள்ளுமாறென்னையெனின், யாப்பினுட் சிதையுமென்று இடமும் இடத்தியல் பொருளுமாக ஓதினுதலின் அஃதொழிக்கப்படும். மற்று அஃதொழிக்குமாறென்னையெனின், தமிழ்நாட்டு வழக்கிற்கு முதனூலாகிய அகத்தியத்துண் மொழிபெயர்த்துச் செய்யவேண்டும் பொருளிலவாகலானும் பிறபா

டைக்கும் பொதுவாயின பொருளவாயின் அவையுந் தமிழ்வழக்கு நோக்கியே இலக்கணஞ் செய்யப்படுமாகலானும் அவர்க்கும் மொழி பெயர்த்தல் வேண்டுவதன்றாகலின் அதுவே ஒழிக்கப்படும். இக்கருத் தினானன்றே 'வழியி னெறியே நால்வகைத் தாகும்' (தொல்-மர-96) என வழிநூலையே விரித்து நால்வகை யாப்பிற்கும் உரிமை கூறிய தென்பது. அங்ஙனம் முதனூற்கு மொழிபெயர்த்தலின்மையின் யாப் பொன்றும் பற்றிச் சிதைவுபிறவாது, ஒழிந்தனபற்றி வழிநூற்குச் சிதைவுண்டாமென்பது கருத்து.

வல்லோன் புணரா வாரம் போன்றே - வாரம்புணர்ப்பான் வே றொருவனுயவழி முதற்கூறு புணர்ந்தாற் புணர்தவாற்றோடு பொருந் தச செய்யாதவாறுபோல, என்றவாறு.

வாரமெனபது கூறு; என்னை ? ஒருபாட்டினைப் பிற்கூறுசொல் லுவாரை "வாரம்பாடுந் தோரியமகளிரும்" என்பவாகலின். யாப்பி னுட் சிதைத்தலென்பது முதனூலும வழக்குநூலாயின் இழிநதோர் வழககும் வழக்கன்றோவெனக் கூட்டிவிரித்து யாத்துச செய்யினும், அழன் புழன் என்பனபோல்வன இக்காலததிலவென்று களைந்து தொகுத்து யாத்துசசெயயினுந், தொகைவிரியும மயங்குமாற்றன விரிந்தது தொகுத்தலென்னும் நூற்புணர்ப்பினைத் தொகைவிரி யெனும்யாப்பெனக் கூறியதல்லாதவழித் தொகுத்து யாத்தே செய்த லும் இம்மூவகை யாப்பினொடு மெய்த்திறங கூறுவலென மொழி பெயாத்தலை மயக்கிச் கூறுதலுமெல்லாம் யாப்பினுட் சிதைவேயாம். அது பண்ணும் பாணியும முதலாயின ஒப்பினும் வல்லோன் புணர்ந்த இன்னிசை யதன் நீர்மைபபடக் காட்டா. வாரம் புணர்ப்பான் புறநீர தாகிய இசைபடப் புணர்த்தல் போல்வதாயிற்று. மற்று இழிந்தோர் வழக்கினைப் பிற்காலத்து உயர்ந்தோருந் தகுதிபற்றி வழங்குபவாக லான் அவையும் அமையாவோவெனின், அவை சான்றோர் செய்யுட் குதவாது; கற்றுணர்நதாருங் கற்றுணராதாரும் மற்று அவை கேட்டே மனமகிழ்வாரைப்பற்றி இகழ்ந்தனவாயினும் ஒற்றுமைப்பட்டு ஒருவகை யில்லா. பெற்ற காலந்தோறும் பிறிதுபிறிதாகிக் கட்டளைப்படுத்து.

நூல்செய்வார்க்குங் கையிகந்து வரையறை யின்றுமாகலின் அஃது இலக்கணமெனப்படாதென்பது. (௧௦எ)

664. சிதைவெனப் படுபவை வசையற நாடிற்
கூறியது கூறன் மாறுகொளக் கூறல்
குன்றக் கூறன் மிகைபடக் கூறல்
பொருளில மொழிதன் மயங்கக் கூறல்
கேட்போர்க் கின்னா யாப்பிற் றாதல்
பழித்த மொழியா னிழுக்கங் கூற
றன்னா னொருபொருள் கருதிக் கூற
லென்ன வகையினு மனங்கோ ளின்மை
யன்ன பிறவு மவற்றுவிரி யாகும்.

இது, நிறுத்த முறையானே ஈரைங் குற்றமும் உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: சிதைவு எனப்படுபவை வசையற நாடின்-குற்றமென்றற்குச் சிறப்புடையனவற்றைக் குற்றந்தீர ஆராயின்: இவற்றை எனப்படுபவென்பதென்? குற்றமாதற்குச் சிறந்திலவாம் பிறவெனின்; இவ்வாசிரியர் எஞ்ஞான்றுங் குற்றத்திற்கு இலக்கணங் கூறாராகலான் இலக்கணத்தோடு கூறுந் துணைப் பயம்படுதலும் ஒருவாற்றாற் சிறப்பெனவேபடுமென்பது. அல்லதூஉம் ஒழிந்த செய்யுட்காயின் இவையனைத்தும் ஆகாவென்பது ஈண்டே தழாஅல்வேண்டுமாகலானுஞ் செய்யுட்காயின் அவை அமையாச் சிறப்பு உடைமையானும் இது வழக்குஞ் செய்யுளுமேயன்றி அவற்றின் வேறுபடவுஞ் செய்யப்படும் நூலிலக்கணமாகலானும் எழுவகை வழுப்போல அமைவனவே கூறாது நூலுள் வரப்பெறாதனவும் வரைந்து கூறினானென்பது. அமைவன 'வற் றினஞ்சார்த்தி ஒழிந்தனவுங் கூறினான்; அல்லாக்கால், அவையே குற்றமாகி ஒழிந்தன புகுதப்பெறுவான் செல்லுமென்றஞ்சியென்பது. 'வசையற நாடின்' என்றதனான் இன்னனக் குற்றமென்று வரையப்பட்

டனவற்றைக்கொண்டு புகுந்து மற்றொருபொருள் கொள்ளின் அவை வசையற்றனவாமென்பது. அவை கூறியதுகூறன், மாறுகொளக்கூறல், மிகைபடக்கூறல் பொருளிலமொழிதன் மயங்கக்கூறல் என்னும் ஐந்துமாயின. கூறியது கூறல் முன்னொருகாற் சொல்லிய பொருள் பின்னுமொருகாற் சொல்லுதல். அது 'உட்குவரத் தோன்று மீரேழ் துறைத்து' (தொல்-புறத்-1) எனவும், 'வந்த வீரேழ் வகையிற் றாகும்' (தொல் புறத்-3 எனவும் இருகாற்சொல்லி ஒருகாற் பயன்கொண்டவாறு. மாறுகொளக்கூறல் 'மரப்பெயர்க் கிளவிக் கம்மே சாரியை' (தொல்-எழுத்-குற்-10) என்றவழிப் புல்லினையும் மரமென அடக்குதல். இக்கருத்து நோக்கியும் போலும் ஆண்டு 'ஒன்றென முடிப்பின் தன்னின முடித்த' லென்பதனாற் புல்லினையும் மரமென்று தழீஇயின அக்கருத்தென்பது. குன்றக்கூறல் சொல்லப்புகுந்த பொருளினை ஆசறக்கூறாது ஒழியப்போதல்: இஃதோர் பயன்படாக்குற்றம் மிகைபடக்கூறல் சில்வகை யெழுத்தின் செய்யுட்டாகச்செய்யாது சூத்திரத்துட் சிலசொன் மிகையாகச்செயதல் போல்வன: அவை 'ஆயீ ரியல புணர்நிலைச் சுட்டு' (தொல்-எழுத் புண-5) என்றாற்போல்வன. இங்ஙனம் மிகைபடச் செய்யுங்கால முன்னின்ற சொல்லிற்கு ஒன்றும் இயைபில்லன கூறலாகா என்னை? 'மூப்பாற் புள்ளியு மெழுத்தோரன்ன' (தொல் எழுத்-நூன்-2) என்றவழி அவைதாம் முப்பாற் புள்ளியுமெனப் பன்னிலை கொண்டுமாறிப் பின்னர் 'எழுத்தோரன்ன' என்றது ஆண்டு இயைபில்லதோர் சொல்லென்று இலேசுபடாது தான் சொல்லுகின்ற பொருட்கும் இயைபுபடச் சொல்லியே மிகைப்படுத்தல் வேண்டுமென்பது என்னை? எழுத்தெனப்படுப என்பதனுண மூன்றுமே சிறப்புடையவென்பது கொண்டானுயிற் பின்னர் அம்மூன்றினையுஞ் சிறப்பில்லா முப்பதினோடும் ஒக்குமென உவமிக்கலாகாதெனவும் மாட்டேற்றுச் சூத்திரங்களானெல்லாம் ஒப்புமைபெறுவதல்லது சிறப்பின்மை காட்டப்படாதாகலானும் முப்பஃதுமே சிறந்தனவென்னுங் கருத்தினனாயின் மூன்றுஞ் சிறப்பிலவென்பது முதற்சூத்திரத்துட் பெறப்படுமாகலின் பின்னர் இவ்விலேசு கூறிச் சிறப்பழித்தல் வேண்டாவாகலானும் பலபொருட்கேற்பி னல்லது கோடலன்றி ஐபுறற்றோறுஞ் சூத்திரஞ்செய்யானுக

லானும் எழுத்தோரன்னவென்பது ஆண்டு இயைபில்லதோர் சொல் லென்றதனை ஆண்டுப் பெய்து இலேசுகொண்டானெனல் ஆகாதென் பது. பொருளிலமொழிதல் - நானுதலியபொருளன்றி என்மனார்புல வரென்றாற்போல வழிநூல்வாய்பாட்டு மாத்திரையே பயனாகச்செய் வன. மயங்கக்கூறல்-சிறத்தமுறைடானன்றி 'அத்தி னகர மகரமுனை யில்லை' (தொல்-எழுத்-புண-23) என மயங்கக்கூறிப் பிறிதொன்று கோடல் ; கேட்போர்க்கின்னா யாப்பிற்றாதல் - சூத்திரஞ்செய்யுள் கேட் போர்க்கு இன்னாதிசைப்பச் செய்தல் ; பழித்தமொழியான் இழுக்கங் கூறல் - முடிவில்லாத சொல்லானும் இழிந்த சொல்லானும் எடுத்து முடிப்பனவற்றை மறுமுடிபுபற்றி இழுக்கங் கூறலாயிற்று. தன்னா னொருபொருள் கருதிக்கூறல் - முன்னோரால் கூறவும்படாது வழக்கி னுள்ளதுமன்றித் தனதுள்ளே ஒரு பொருள்படைத்துக் கூறுதல் ; ஆனென்பது ஒரு சொலலெனத் தானெனபதோர் சொற்றாய் மெய்யி னுள் உணரநின்றது. தன்னாற் றானொரு பொருள்படைத்துக் குறு கச்செய்தன் மூன்றாவதெனினும் இழுக்காது. என்னை? நுதலிக் கூறலென்னும் பயனிலைக்குத் தானெனனும் பெயர் வெளிப்படாது நின்றது வெளிப்படுத்துக்கொளப் பெறுதுமாதலின். என்னவகை யினு மனங்கோளின்மை - எவ்வாற்றானும் பொருளறிதற்கு அரிதாகச் செய்தல். இவைநான்குங் குன்றக்கூறலொடு கூட்ட ஐந்தும் எஞ் ஞான்றும் பயன்படாதனவாயின. அன்னபிறவும் அவறறுவிரியாகும்- அவைபோல்வன பிறவும் ஈரைங்குற்றமென்னப்பட்ட தொகை எண் ணிற்கு அவவாறு தொகுததற்கேற்ற விரியெண்ணும் இவையும் இவைபோல்வனபிறவும், என்றவாறு.

விரிந்தது தொகுத்தலென்பதனான் எதிரதுநோக்கி ஆண்டுத் தொகுத்தானாதலின் ஈண்டு அவற்றைத் தொகைகூறாது விரித்தென் னுனென்பது. பிறவும் என்றதனான் வெற்றெனத் தொடுத்தன் மற் றொன்றுவிரித்தல் சென்று தேய்ந்திறுதல் நின்றுபயனின்மை என்றாற் போல்வனகொள்க. இவை மேல் ஈரைங்குற்றமுமென உம்மையால் தழுவியவற்று விரியாயின முதனூலொடு மாறுதலும் யாப்பினுட் சிதைதலும் இவைபோல ஒரோவழி வாரா; அந்நூலின் முழுவதூஉங்

கொள்ளக் கிடந்தமையின் ஈண்டவை புறனடையால் தழுவப்பட்ட வாறென்பது. இவையெல்லாங் குற்றமென்று களையப்படுவனவாயி னும் ஈரைங் குற்றமுமின்றியென முதற்சூத்திரத்துள் ஓதிப்புகுந்தான், அல்லாக்கால் இவற்றுட் சில நூலுட் புகுதுமாறும் அவற்றாற் பயன் கொள்ளுமாறும் இன்மையினென்பது. பயன்கொள்ளப்படுவன ஐந் தென்பது மேற்காட்டினும்.

இனி, அப்பதினொன்குங் குற்றமேயாகி வருமாறு :

" தன்மை யுவமை யுருவகந் தீவகம்
பின்வரு நிலையே முன்ன விலக்கே
வேற்றுப் பொருள்வைப்பு வேற்றுமை யெனாஅ "

எனவும்,

" உருவக முவமை வழிநிலை மடக்கே
விரிசுடர் விளக்கென மரீஇ வருவன "

எனவுஞ் சிலசூத்திரங்களை முதனிறீஇப் பின்னரும் அவ்வாய்பாட் டானே,

" தன்மை யுவமை யுருவகந் தீவகம்
பின்வரு நிலையே முன்ன விலக்கே
வேற்றுப் பொருள்வைப்பு வேற்றுமை யென்றாங்
கெண்வகை யியல செய்யுட் கணியென
மையறு புலவர் வகுத்துரைத் தனரே "

என்றாற்போலப் பின்னரும் அவ்வாறே சூத்திரஞ்செய்தல் (1) கூறி யது கூறலாய்ப் பயன்படாதாயிற்று. என்னை ? இவற்றது வேறுபாடு தொகைச் சூத்திரத்துத் துணிந்தெண்ணியதனானே பெற்றவழிப் பின்னும் அவ்வாறே மற்றோர் சூத்திரஞ்செய்ததனாற் பயந்தின்மையி னென்பது.

" அன்றென வொருதலை துணிந்த குறமை
நன்றறி புலவர் காட்டுதற் குரிய "

என்றாற்போல்வன வரையாது குற்றமென்றதனையே சான்றோர்க் காயிற் குற்றமாகாதென்றல் (2) மாறுகொளக் கூறலாம், செய்யுட்கெல் லாம் அணியிலக்கணங் கூறுவான் குற்றங் கூறும்வழி வரைந்துகூறு தலின். செய்யுட்குரிய பொருட்படை யெல்லாவற்றுள்ளும் நல்லன வுந் தீயனவும் இவையென்று சொல்லப் புகுந்தான் அவற்றுட் சில சொல்லியொழிதலும் வழக்கொடு மெய்ப்பொருளும் ஆராய்வலென்று புகுந்தான் அவற்றுள் வழக்கிற்கு வேண்டுவ கூறி மெய்ப்பொருள் ஆராய்ச்சி முழுவதூஉஞ் சொல்லாது நெகிழ்ந்துபோதலும் எடுத்துக் கொண்ட நூலுட் காட்டும் இலக்கணங்களைச் சூத்திரத்தான் அடிவரை செய்வனென்று புகுந்து சில மறுத்துச் செய்து சிலவற்றுக்குச் செய் யாதுபோதல் போல்வனவும் (3) குன்றக்கூறலாம். அவை முடிந்த நூலிற் கண்டுகொள்க.

“இடையிடை திரியா திபனெறி மரபி
னுடைப கருப்பொரு ளொரோவழித் துவன்றவு
மிடற்கை மரபி னுரிப்பொரு டோன்றவும்
பன்னிரு காலமும் நால்வகை யிடத்தொடுந்
தொன்னெறி மரபிற் றோன்றினர் செயலே”

எனச் சூத்திரஞ்செய்து நாற்பத்தெட்டினும் நாற்பத்தெட்டு காலமுந் தொக்க சூத்திரத்தால்,

“துடைப்பன துடைத்துச செயற்கை போல
வழியிட னொழித்துக் காலங் கூறுவல்”

என்று புகுந்து அக்காலத்துள்ளுஞ் சிறுபொழுது கூறாது இட இலக் கணமே கூறி இடத்திற்குச் சுருங்க வேறுசூத்திரஞ் செய்தவாறு போலாது அதற்கு இன்றியமையாதனவெல்லாங் குன்றாமற் கூறாது சென்றுபட்ட பரப்பிற்றாகச் சூத்திரஞ் செய்தல்போல்வன (4) மிகை படக்கூறலாம். அஃதாவது இன்னிளவேனிலென்பது,

“தண்ணிழ லறல்யாற் றடைகரைத் துறைதொறு
மிலங்கு முலைக்க ணேப்பக் கோங்கவிழ்ந்து

வண்டுதா தூதுந் தண்டளிக் காவிற்
பருமல ருதிர்ந்து குருகுகமழ் பரப்பின்
மண்வயிறு குளிர்க்குந் தண்ணறுங் கயத்து
விழவிரு நடுவ ணழலவிர் தாமரைத்
தாள்கறித் தருந்தும் வாளெயிற் றிளமீன்
புள்ளுக வெறிப வெள்ளென்று பிறழும்
பளிங்கு நெகிழ்ந்தன்ன துளங்காத் தெண்ணீர்
தளிர்குடைந்து தெவிட்டிய குயில்குனிந்து குடிப்ப
மரவந் தாழ்ந்த கரைமரச் சாரற்
றேனுறு தேறல் வேனற் கண்ணும்
வாரார் கொல்லென நீர்வார் கண்ணொடு
புலம்புடை மகடூஉக் கலங்கக ரெய்த
யாறுங் குளனுங் காவு மாடி
யோருயிர் மைந்தரு மகளிருங் களிப்பக்
காம விழவொடு கன்னியர் நோற்ப
கலவுஞ் சாந்தும் பலவயிற் பயன்படத்
துன்பக் காலந் துடைத்தனர் பெறாஉ
மின்பக் கால மென்மனார் புலவர் ''

என்றாற்போலப் பற்றிக்கூறிப் பெருஞ்சூத்திரஞ் செய்த வழியும் பரு வத்திற்கு வரையறையிலக்கணம் போதுதலின்றி விடுதலாயிற்று.

இனி,

'அம்மூன் றென்ப மன்னைச் சொல்லே'

(தொல்-சொல்-இடை-4.)

எனவும்,

'அப்பா லெட்டே யும்மைச் சொல்லே'

(தொல்-சொல்-இடை-7.)

எனவும்,

'ஆயீ ரைந்தொடு பிறவு மன்ன'

எனவும் இன்னோரன்ன பலவும மிகைபடச் செயதார் இவவாசிரிய ராகவிற் பிற்காலத்து நூல்செய்தார்க்கும் மிகைபடச்செய்தல் அமையு

மென்பாருமுளர். அற்றன்று, 'யாவயின் வரினுந் தொகையின் றியலா' (தொல்-சொல்-இடை-42) எனப்பட்ட எண்ணுகலின் தொகைகூறினமையானும் வழக்காதலானும் அதுமுதலாக அல்லது சூத்திரச்செய்யுளுஞ் செய்யாராகலானும் அங்ஙனந் தொகைதொடராக் கால் இரண்டாகப்பட்டு விகாரவகையால் தொகுத்தானுமெனவும் அவை பலசொல்லாகலால் தொகுக்கப்படுவனவல்லவெனவுஞ் சொல்லி மறுக்க. அல்லதூஉம் மன்னென்பதோர் இடைசொல். அது தானடைந்த சொற்பொருளன்றித் தனக்கு வேறுபொருளின் மையிற் பொருள்பற்றி மூன்றெனலாகாது, பலபொருளொரு சொல் எனப்படுவதன்றி. அதனன் அதனைநோக்கி மூன்றென்றானல்லன், அஃது அடுத்த சொல்லினை மன்னைச் சொல்லென்றான், அவை மூன் றன்றி எத்துணையும் பலவாயினும் ஒன்றாயினும் மூன்று பகுதிப்படு மென்று கோடற்கென்பது. ஒழிந்த இடைசொல்லாயினும் அவற் றிற்கும் இஃதொக்கும். மன்னைசசொல்லென்பது வேற்றுமைத் தொகையேயன்றிப் பண்புத்தொகையாகலுமுடைத்து. மன்னடுத்த சொல்லினையும் மன்னென ஆகுபெயராற் கூறினானென்பது.

> "வழக்கு வழிப்பட்ட சொல்லி று திரியினும்
> படைத்துக் கொண்ட சொல்லொடு சிவணித்
> திரிசொல் லென்றே செப்பினர் புலவர்
> வரிவளைப் பணைத்தோண் மடநல் லோயே"

என்றாற்போல இயைபில்லன கூறுதல் (5) பொருளில்மொழிதலாம். இவை ஒழிந்த செய்யுட்காயின் தடங்கண்ணுயென்றாற்போல் வரப் பெறுமென்றற்கு ஒத்தென்னையெனின், அது செய்யுள் செய்வார் வேண்டியவாறு செய்பவாகலின் ஈண்டுச் 'சில்வகையெழுத்தின்' செய்யுட்டாகச் செய்யுநூற்கே இது விலக்கினமையின் அதன் திறத் துக் கடாவின்றென மறுக்க. (6) மயங்கக்கூறலென்பது 'மயங்காமரபி னெழுத்துமுறை காட்டுவல்' என்று புகுந்தாற்போல இன்னது சொல்லுவலென்று புகுந்தான் மெய்ந்நூலும் வழக்குநூலும் உடனு ராய்தலும் ஆரியமுந் தமிழும்போல்வன உடனுராய்தலும் போல்வன. (7) கேட்போர்க்கின்னுயாப்பாவது "கதநபம" "சஞயவ" "உயிர்முன்

பின்வல்லினம்' "லரயநதாமென" என்றாற்போலச் சூத்திரச்சுருக்கமும் மொழிக்கு முதலாமெழுத்தும் ஈறாமெழுத்தும் பொதுவகையான் அடங்க ஓதுதற்பயனோக்கி இங்ஙனம் இன்னுவோசைத்தாகச் சூத்திரஞ்செய்தல்போல்வன. (8) பழித்தமொழியானிழுக்கக்கூறல் "விளாமெனிறுதி பழமொடு புணரிற்-றளாவியற் றன்றி யியற்கை யாகும்" என்றாற்போல விளாமென்பதோர் வழுச்சொல்லாற் சூத்திரஞ்செய்தல். ஒன்றற்கொன்றென்பதனை "ஒன்றினுக்கொன்று" எனச் சூத்திரஞ் செய்தலும் அது. (9) தன்னானொருபொருள் கருதிக் கூறலென்பது மலேபடுகடாத்தினை ஆனந்தக் குற்றமெனப் பிற்காலத்தானொருவன் ஒருசூத்திரங் காட்டுதலும் பதமுடிப்பென்பதோர் இலக்கணம் படைத்துக் கோடலும்போல்வன. (10) என்னவகையினு மனங்கோளின்மை வருமாறு: 'இருதிணைப் பிறந்த வைம்பாற் கிளவிக்கும்' (தொல்-சொல்-பெயர்-7) என்னுஞ் சூத்திரத்திற்கும் 'எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி' (தொல்-எழுத்-புணர்-26) என்பதற்கும் வேறுபொருள் உரைப்பாருரைக்குமாற்றான் அறியப்படும். (11) இனி மற்றொன்றுவிரித்தலென்பது ஆறுறுப்பும் பாவினமுங் கூறுவலென்று புகுந்து பொருளாராய்ச்சி பலவுங் கூறுதல். இதுவும் இன்னோரன்ன மிகைபடக்கூறலாய் அடங்குமெனினும் அமையும். (12) சென்றுபயனின்மை யென்பது பிற்காலத்துத் தோன்றிய வழக்கே பற்றி அவற்றிற்குங் குற்றந்தீர இலக்கணங்காட்டியவழி அது சான்றோர் செய்யுட்குப்பயன்படாது தம்மோரன்ன செய்யுட்குப் பயன்பட்டொழியச் செய்தல். அவை வந்தவழிக்கண்டுகொள்க. பாட்டியன் மரபெனக் காட்டுவனவும் அவை. (13) இனி வெற்றெனத்தொடுத்தலென்பது கேட்போர்க்கின்னா யாப்பின்பாற் பட்டு அடங்கும். (14) சென்றுதேய்ந்திறுதலென்பது சொல்லப்புகுந்த தொருபொருள் எல்லாவிடத்துஞ் சொல்லப் படுவதாகவும் ஈற்றுக்கண் மாய்ந்து மாறுவது. அதுவுங் குன்றக்கூறலாய் அடங்கும். ஒழிந்தனவும் அன்ன.

மற்றுக் கூறியதுகூறன் முன்வைத்ததென்னையெனின், அந்நூலுட்போலச் செய்யுட்கண்ணும் பயன்படவரின் அமையுமென்றற்கென்பது. அவை "வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்"

(நாலடி-4-9) எனவும், "வஞ்சியான் வஞ்சியார் கோ" எனவுஞ் சொல்வகையான் இரட்டித்தவாறு. இனியமைவனவற்றிடையே குன்றக் கூறல் வைத்தான் அவற்றுத்துணைச் சிறப்பிலவென்று ஐயுறுமை யென்பது. இவ்வாசிரியர் யாண்டும் இலக்கணமேகூறி இவ்விலக்கணத்திற் பிறழவருதலைக் குற்றமென்று கொள்ள வைப்பினன்றி இல்லாதகுற்றங்கட்கு இலக்கணங்கூறுதார் இது கூறினார் 'எதிர்மறுத் துணரின் றிறத்தவுமவை' என வருகின்ற சூத்திரத்தான் இவையும் இலக்கணத்திற்கு உபகாரப்படுதலினென்பது. (௬0௪)

665. எதிர்மறுத் துணரின் றிறத்தவு மவையே.

இது, மேற் குற்றம்பத்துங் கூறி இனிக் குணமும் பத்துளவென்கின்றது. மேலெல்லாம் இவ்வாசிரியன் இலக்கணவழக்கினையே விதந்தோதி அதனிற்பிறழ்ந்தது குற்றமென்று கொள்ளவைத்தான்; இவ்வோத்தினுள் ஈரைந்குற்றமுமென்பன சில குற்றங் கூறினான், இது மாறுகொளக்கூறலாகுசொல்லோவெனின், அற்றன்று; இவையும் இலக்கணமே கூறினனென்பான் இவற்றையெதிர்மறுத்துக் கொள்ளவென்றானென்பது. இதனது பயன உள்ளதுசொல்லுதலே யன்றி இல்லது சொலலுதலும் நூலிலக்கணமென்றறிவித்தலாயிற்று. அவை 'பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா' (தொல்-சொல்-வேற்-9) எனவும, 'வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது' (தொல்-சொல்-வினை-1) எனவும வரும. எனவே, கூறியது கூறாமையும் மாறுகொளக் கூறாமையுங் குன்றக்கூறாமையும் போல்வனவும் பத்து உள நூலிலககணமென்றானும். மேல் ஈரைங்குற்றமுமின்றி என்றதல்லது அவற்றை நாட்டிக்கொண்டு எதிர்மறுத்துக் கோடல்பெறாமையின் இதுகூறினானென்பது. (௬0௫)

666. ஒத்த காட்சி யுத்திவகை விரிப்பி
னுதலிய தறித லதிகார முறையே
தொகுத்துக் கூறல் வகுத்துமெய்ந்நிறுத்தன்
மொழிந்த பொருளோ டொன்ற வவ்வயின்

மொழியா ததனை மூட்டின்று முடித்தல்
வாரா ததனான் வந்தது முடித்தல்
வந்தது கொண்டு வாராத துணர்த்தன்
முந்து மொழிந்ததன் றலைதடு மாற்றே
யொப்பக் கூற லொருதலை மொழியே
தன்கோட் கூறன் முறைபிற பூாமை
பிறனுடம் பட்டது தானுடம் படுத
லிறந்தது காத்த லெதிரது போற்றன்
மொழிவா மென்றல் கூறிற் றென்ற
முன்குறி யிடுத லொருதலை யன்மை
முடிந்தது காட்ட லாணை கூறல்
பல்பொருட் *கேற்பி னல்லது கோட
ருகுத்த மொழியான் வகுத்தனர் கோடன்
மறுதலை சிதைத்துத் தன்றுணி புரைத்தல்
பிறன்கோட் கூற லறியா துடம்படல்
பொருளிடை யிடுத லெதிர்பொரு ளுணர்த்தல்
சொல்லி னெச்சஞ் சொல்லியாங் குணர்த்த
றந்துபுணர்ந் துரைத்தன் ஞாபகங் கூற
லுய்த்துக்கொண்டுணர்த்தலொடுமெய்ப்படநாடிச்
சொல்லிய வல்ல பிறவவண் வரினுஞ்
சொல்லிய வகையாற் சுருங்க நாடி
மனத்தி னெண்ணி மாசறத் தெரிந்துகொண்
டினத்திற் சேர்த்தி யுணர்த்தல் வேண்டு
நுனித்தகு புலவர் கூறிய நூலே.

* 'சேட்பின்' என்பது முன் அச்சுப் பிரதிப்பாடம்.

இது, முறையானே இறுதிக்கணின்ற முப்பத்திருவகை யுத்தியுங் கூறி மற்றும் இந்நூலுள் அதிகாரம் மூன்றற்கும் வேண்டும் புறனடை யுங் கூறுத னுதலிற்று.

இதன் பொருள் : ஒத்த காட்சி யுத்திவகை விரிப்பின்—முற் கூறிய குற்றங்களோடு ஒப்பத்தோன்றுந் தோற்றத்தினை உடைய வாகிய உத்திக்கூற்றினை விரித்துச்சொல்லின் :

பத்துவகைக் குற்றத்தோடும் ஒத்துவருமெனவே இவையும் நூற்கணன்றி ஒழிந்த செய்யுட்கு வருங்கால் விலக்கப்படுதலும் முற் கூறிய குற்றம்போல இவையம் வேறு சில பொருள் படைத்தலு முடையவாயின. காட்சியுத்தி யென்று இவற்றைக் கூறியவதனுன் நூலுட்காணப்படுமென்ற ஐந்து குற்றத்தோடும் ஒத்தல்கொள்ளப் படும், அவ்வந்நூற்குப் பயம்படவரும் பகுதியானென்பது. உத்தி யென்பது நூல்செய்யுங்கால் இயல்புவகையாகிய வழக்குஞ்செய்யுளும் போலச் செவ்வனஞ்சொல்லுதல் ஒண்மை யுடைத்தன்ளும் பிற வெனின், அற்றன்று ; அவ்வாறு செய்தக்கால் நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத்தாகல்வேண்டுமென்பது முன்னர்ச்சொல்லினும். ஈண்டுச்செவ்வனஞ் சொல்லாத தந்திரவுத்தி வகையும் அவ்வாறே ஒண்மையுடையவாமென்பது கருத்து. என்ளுர்க்குச் செவ்வனஞ் செய்தலை உத்தியென்னுஞேவெனின், அது சொல்லாமை முடிந்த தாகலினன்றே உத்தியென்னுது இவற்றை உத்திவகையென்பானுயிற் றென்பது. அஃதேல், இவற்றை முன் தொகுத்தான்போல விரிப்பி னென்றதென்னையெனின், முன்னர் எதிரதுநோக்கி (மரபியல்-98) முப்பத்திரண்டெனத் தொகைகூறிப் பின்னர் மனத்தி னெண்ணி மாசறத் தெரிந்துகொண்டு இனத்திற்சேர்த்துணர்த்தல் வேண்டு மென்கின்ளுனகலான் அங்ஙனம் இனம்பற்றி அவற்ளுடு அடங்கு வனவெல்லாம் அவற்று விரியாகுமென்னுங் கருத்தினுற் கூறினு னென்பது.

"அவனிவ னுவனென வரூஉம் பெயரு
மவளிவ ளுவளென வரூஉம் பெயரு
மவரிவ ருவரென வரூஉம் பெயரும்

யான்யா மாமென வரூஉம் பெயரும்
யாவன் யாவள் யாவ ரென்னு
மாவயின் மூன்றே டப்பதி னைந்தும்
பாலறி வந்த வுயர்திணைப் பெயரே''

(தொல்-சொல்-பெயர்-8.)

என்பதனுள், 'ஆவயின் மூன்றோ டப்பதி னைந்தும்' எனத் தொகுத்துக் கூறியவழி அது மிகைபடக் கூறலாகாது. என்னை? உம்மையெண்ணுகலின் தொகையின்றியுஞ் சில்வகையெழுத்திற் செய்யுட்டாக வழக்கியலானே சுருங்கச்செய்வதோர் ஆறுளதாயினும் அப்பதினைந்துமெனத் தொகுத்துக் கூறல் உத்திவகையான் அமையு மாகலினென்பது கருத்து. இங்ஙனந் தொகைகூறுதல் வெள்ளிதன்றி ஒள்ளிதாகல். அவை, பதினைந்துபெயருமே ஒருசிகரனவென்பது அறியலாகுமென்பது. இனி, 'மெய்பெறு மரபிற் றொடைவகை தாமே' (தொல்-செய்-101) என்னுஞ் சூத்திரம்போல்வன பிறி தொருபொருள் பயக்குமென்றலும் அச்சூத்திரத்துட் காட்டப்பட் டது. இவ்வாற்றான் இவ்வுத்திவகை எல்லா நூற்கும் இன்றியமையா வாயின. மற்று வகையெனப்படாது செவ்வனஞ்செய்யும் உத்திய வன யாவையெனின், 'இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல்' (தொல்-சொல்-கிள-19) என்றாற்போலச் சொல்லியொழிவன. பிறவும் அன்ன.

விரிப்பினென்ற வினையெச்சஞ் சேர்த்தியுணர்த்தல் வேண்டு மென்ற முற்றுவினைகொண்டு முடிந்தது. மெய்ப்படநாடியென்பன போல்வனவற்றுக்கும் இதுவே முடிபு. அதற்கு நூலென்னும் பெயர் கொடுத்து முடிக்க. நூலையென்று ஐகாரம் விரிப்பின் வேண்டுமென் பது தன்பாலானும் பிறன்பாலானும் பெற்றதோர் பெயர்கொண்டு முடியும்.

(1) நுதலியதறிதல்—சூத்திரத்துள் ஓதிய பொருளாற் சொல்லப் படும் பயன் இல்லதுபோலச் சொல்லியதனுனே அதற்கேற்ற வகையாற் கருதியுணரப்படுபொருள் இன்னதென்று கொள்ள வைத்தல் : அது,

'வேறுவினைப் பொதுச்சொ லொருவினை கிளவார்'
(தொல்-சொல்-கிளவி-46.)

எனவும்,

'சிறப்பி னாகிய பெயர்நிலைக் கிளவிக்கு
மியற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்'
(தொல்-சொல்-கிளவி-41.)

எனவும் இவை வழுவற்க வழுவமைக்க என்னும் இருபகுதியுள் வழுவமைத்தற்கெழுந்தனவென்பது கருதினுன் ஆசிரியனென்பது அறிய வந்தன. இதனை முதறகண்வைததுப்போய் இறுதிக்கண்ணே உய்த்துக்கொண்டுணர்தலை வைத்தான் இதுவும் அதுபோல் உய்த்துக்கொண்டுணர்தல் ஒருவகையானுடைததாயினும் அதனுற் பெற்றபயன் பிறிதுமொன்று உளதாதல் வேற்றுமையுடைமையினெனபது. அது முன்னர்ச்சொல்லுதும்.

இனி, மூவகைத தமிழ்வழக்கமும் முதலியதும் அவற்றுள் இயற்றமிழே முதலியதும் அதிகாரம் முதலியதும அதிகாரத்துள் ஒத்து முதலியதும் ஒத்தினுட சூத்திரம் முதலியதுமெனவும் இவை முதலிய தறிதற்பகுதியாய் அடஙகுமென்பான் 'மனத்தினெண்ணி மாசறத் தெரிநதுகொண்டு இனததிற்சேர்த்தி யுணர்த்தல்வேண்டு' மென்றினன்றுனென்பது. மேல்வருகின்றவறறுக்குமொக்கும். அஃதேல், இதனை ஆண்டுவைத்து மறறதனை ஈண்டுவைப்பினும் இஃதொக்கும பிறவெனின், அற்றன்று ; நூலின்வேறுகிய பாயிரத்துள்ளாயினும் இந்நுதலியதறிதல் வருதலும் உத்தியெனறற்கு இதனை முன்வைத்தானென்பது.

(2) அதிகாரமுறை—என்பது முன்னின்ற சூத்திரப்பொருண்மை பின்வருஞ் சூத்திரத்திற்கும பெறறபாலன பெறவைத்தல்: அவை,

'இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல்' (தொல்-சொல்-கிள-19) என்றவழி இற்றெனக் கிளத்த லுரிமைபூண்டதன்றே, அதனைச் 'செயற்கைப் பொருளை யாக்கமொடு கூறல்' (தொல்-சொல்-

கிள-20) என்புழியுங்கொள்ளவைத்தலும்; 'குற்றிய லிகர நிற்றல் வேண்டும்' (தொல்-எழுத்-மொழி-1) என்பதனைக் 'குற்றியலுக ரம் வல்லா றூர்ந்து' (தொல்-எழுத்-மொழி-3) நிற்றல் வேண்டும் என்று கொள்ளவைத்தலும் போல்வன.

இனி, வழக்கியலும் வழக்கியலாற் செய்யப்பட்ட செய்யுளியலும் பற்றி எழுந்த இலக்கணம் இயற்றமிழெனப்படும்; அசசெய்யுளின்றி அமையாத இசையிலக்கணம் இசைத்தமிழெனப்பெயரெய்தி அவ் வியற்றமிழ்ப் பின்னர் வைக்கப்பட்டதெனப்படும்; இவ்விரண்டன்வழி நிகழ்த்தும் கூத்திலக்கணங் கூறிய நாடகத்தமிழ் அவற்றுப்பின்னர்த்தா மென முறைமை கூறுதலும்: இனி இயற்றமிழுள்ளும் எழுத்ததிகாரத் தோடுசொல்லதிகாரத்திற்குஞ் சொல்லதிகாரத்தோடு பொருளதிகாரத் திற்கும் இயைபு கூறுதலும்: அதிகாரத்துள் ஓத்துப் பலவாகலின் அவைஒன்றன்பின்ஒன்று வைத்தற்கு இயைபு கூறுதலும்: அவ்வாறே சூத்திரத்திற்கு இயைபு கூறுதலுமெல்லாம அதிகாரமுறைமைக்கு இனமென்று சேர்த்தியுணரப்படும். பிறவும் அன்ன.

அதிகாரமென்ற பொருண்மையென்னையெனின் முறைமை யெனவும் இடமெனவுங் கிழமையெனவுங் கொள்ளப்படும. அவற் றுள் ஈண்டு அதிகாரமென்ருெழியாது முறைமையெனவுங கூறினமை யின் அதிகாரமென்பது முறைமைப்பொருட்டன்றி முன்னேரிடத்து நிறுத்தியதன் வழிமுறையாற் பொருள்கோடல் கொள்க. என்னை ? முன்னும் பின்னும் நின்ற சூத்திரம் இரண்டனையும் ஓரிடத்தனவாகக் கருதல்வேண்டும்: அங்ஙனங கருத்தாதலியைபுகொண்டு ஒன்றன் பொருண்மை ஒன்றற்கு வருவித்தல் அரிதாகலானும அங்ஙனம் இடம் பற்றுக்கால் ஒருவன்செய்த நூலோடு பிறிதொருநூற்கு இயைபு, கூறுதவாறுபோல எழுத்ததிகாரத்தோடு சொல்லதிகாரத்திடை இயைபுகூறல் வேண்டுவதனருவான் செல்லுமாதலானுமென்பது. எனவே, இடமெனப்பட்டதுதானே முறைமைப்பொருளும் படுமாயி னும் இச்சூத்திரத்துள் அதிகாரமெனவும் முறைமையெனவுங கூறினமையின் ஈண்டு இடமுறைமையென்பதே கருத்தாயிற்று. இதனானே

உடன்பிறந்தாருள் ஒருவற்குரியது வழித்தோன்றினார்க்கும் ஒருவழி உரியவாறுபோல முன்னர்நின்ற விதி பின்னர்வந்ததற்கும் வேண்டிய வழிக் கொள்ளப்படுமென்பது உத்திவகையாயிற்று.

இனியொருசாரார் இங்ஙனம் வரைந்துகொண்ட இடத்துள்ளே யாற்றொழுக்குப்போலவன்றி இடையிடையும் பெறுமென்பது நோக்கி அரிமாநோக்குந் தேரைப்பாய்த்துளும் பருந்துவிழுக்காடும் ஆகி வருமெனவுஞ் சொல்லுப. அவையும் இனத்திற்சேர்த்தி யுணர்த்தவே படுமென்பது.

(3) தொகுத்துக்கூறல்—தொகுத்தியாத்த நூலுள்ளுந் தொகுத்துக் கூறுதல் :

அவையாவன, எழுத்து முப்பத்துமூன்று சொல்லிரண்டு பொருளிரண்டு என ஆசிரியன்றானே தொகை கூறுதல்போல்வன.

> ' இருதிணை மருங்கி னைம்பா லறிய
> வீற்றினின் றிசைக்கும் பதினோ ரெழுத்தும்.'
> (தொல்-சொல்-கிளவி-10.)

எனப் பலசூத்திரத்து விரிந்தன தொகுத்தலும்,

> ' ஆவயின் மூன்றே டப்பதி னைந்தும்
> பாலறி வந்த வுயர்திணைப் பெயர்.'
> (தொல்-சொல்-பெய-8.)

என ஒரு சூத்திரத்து விரித்துத் தொகுத்தலும் போல்வனவும் அதன் பகுதியாய் அடங்கும்.

(4) வகுத்துமெய்ந்நிறுத்தல்—அங்ஙனந் தொகுத்துக்கூறிய வழி எழுத்து முப்பத்துமூன்றென்ற தொகையினைக் குற்றெழுத்தும் நெட்டெழுத்தும் உயிரும் உயிர்மெய்யும் வல்லினமும் மெல்லினமும் இடையினமுமென்றாற்போலவும் உயர்திணை அஃறிணையென்ற தொகையினை ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பலவென்றாற்போலவும் வகுத்தல்:

'உயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமையு
மாயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையும்.'

(தொல்-சொல்-பெய-6.)

எனவும்,

'இயற்சொ றிரிசொ றிசைச்சொல் வடசொலென்
றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே.'

(தொல்-சொல்-எச்-1.)

எனவும் வருவனவும் அவை. இவற்றுள் இருதிணையெனக்கூறிப் பெயர் மூன்று, வினை மூன்றென்றலும்; இனி அகத்திணை புறத்திணையெனக்கூறி அகம்புறமெனக்கோடலும்; இனமென்றது, அவை குற்றெழுத்து நெட்டெழுத்தென முற்கூறியனவே மற்றொரு பெயர் பெற்றாற்போலாது சொல்வகையான் மூன்றாவதோர் சொல் வேறு பெற்றமையினென்பது. இங்ஙனங் கொள்ளாக்கால் இருதிணைப்பெயரும் வினையும் மும்மூன்றெனல் ஆகாதன்றோவென்பது.

'சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப வறிந்திசி னோரே.'

(தொல்-சொல்-பெய-4.)

என்றவழி,

'இடைச்சொற் கிளவியு முரிச்சொற் கிளவியு
மவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப.'

(ஷை-ஷை-ஷை-5.)

என வகுத்தலும் இனி ஆராய்ந்த இயற்சொல்லொடு வேறு மூன்று சொற்கூட்டி நான்கென்றலும் அவ்வாறே இனமெனப்படும். என்னை? ஒழிந்த மூன்றுசொல்லும் இயற்சொல்லின் வேறுபட்டமை கூறுமாகலினென்பது. அஃதேல் எழுத்து முப்பத்துமூன்றெனக் கூறிப் பின்னர் இருநூற்றொருபத்தாறுயிர்மெய்க் குப்பைகோடலும் வேற்றெழுத்தாகி வருமென்பது வகுத்து மெய்ந்நிறுத்தலென்பதனாற் கொள்ளாமோவெனின், கோடுமன்றே; 'புள்ளி யில்லா வெல்லா

மெய்யும்' என்புழி, 'உருவுரு வாகி யகரமொ டுயிர்த்தலும்' என ஆசிரியன் இரண்டெழுத்தின் கூட்டமாகச் சூத்திரஞ்செய்திலனாயி னென்பது. மெய்யென்றதனான் வகுத்தவற்றைப் பின்னும் வகுத்து கிறுத்தல் கொள்ளப்படும். என்னை? இயற்சீர்பத்தெனவும் ஆசிரிய வுரிச்சீராறெனவும் வகுத்தவற்றை,

> 'இயற்சீ ரிறுதி நேரவ ணிற்பி
> னுரிச்சீர் வெண்பா வாகு மென்ப.' (தொல்-செய்-19.)

என இயலசைமயக்கமாகிய நான்கனையே இயற்சீரெனவும்,

> 'வெண்பா வுரிச்சீ ராசிரிய வுரிச்சீ
> ரின்பா நேரடிக் கொருங்குநிலை யிலவே.'
>
> (தொல்-செய்-23.)

என்றவழி ஆசிரியவுரிச்சீர் ஆறனுள் இரண்டனை ஒழித்து உரியசை மயக்கமாகிய நான்கனையே ஆசிரியவுரிசச்சீரெனவும் வகுத்து நின்ற மையினென்பது. மெய்யென்றதனான் வகுத்தவற்றைப் பின்னும் வகுத்துநிறுத்தல் கொள்ளப்படும். என்னை? 'இயலசை மயக்க * * * மாசிரிய வுரிச்சீர்' (தொல்-செய்-13) என்று பகுத்தோதியவாற்றா னென்பது. அக்கருத்தினானன்றே ஒழிந்த இரண்டனையுங் 'கலித் தளை மருங்கிற் கடியவும்படா' (தொல்-செய்-24) என இறந்தது தழீஇ உரைப்பானாயிற்றென்பது.

(5) மொழிந்த பொருளோ டொன்ற வவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்தல்—எடுத்தோதியபொருண்மைக்கு ஏற்ற வகையான் அப்பொருண்மைக்கட் சொல்லாததொன்றுகொள்ள வைத்தல் :

முட்டின்றி முடித்தலென்றதனான் எடுத்தோதாததும் எடுத்தோதியதனோடு ஒக்குஞ்சிறப்பிற்றென்றவாறும். அதுபோல்வன அதற்கு இனமெனப்படும். மற்று இதனை அருத்தாபத்தியென்னுமோவெனின், என்னுமன்றே, 'பிறசீ ருள்வழித் தன்றளை வேண்டிப' என்னும் பொருட்டன்றித் தன்சீரோடு இயற்சீர்வந்து தளைகொள்ளுமென

மொழியாததோர் பொருள்கோடலினென்க. இனி, 'மஃகா னுற்றும் பகர விறுதியும்' என்றவழி ஒழிந்த நான்கெழுத்தும் ஈற்றினிற்குமென்று கோடல் போல்வனவும் அதன் இனமெனப்படும். என்னை? ஒன்றெனமுடித்த றன்னினமுடித்தலெனினும் இழுக்காது. இனிச், 'சீரியை மருங்கி னோரசை யொப்பின்' (தொல்-செய்-56) என்றவழி ஒன்றாதது இயற்சீர்வெண்டளை யென்றுகேட்டால் அருத்தாபத்தியாகி 'எடுத்த மொழியினஞ் செப்பலு முரித்து' (தொல்-செய்-61) என்ற வழக்கியலானே வழுவன்றி அடங்குமென்பது.

(6) வாராததனான் வந்தது முடித்தல்—ஒருபொருண்மைக்குவேண்டும் இலக்கணம் நிரம்ப வாராததோர் சூத்திரத்தானே அங்ஙனம் வந்த பொருண்மைக்கு வேண்டும் முடிபுகொள்ளச்செய்தல்: அது,

> 'தொடர லிறுதி தம்முற் றாம்வரின்
> லகரம் றகரவொற் றாகலு முரித்தே.'
>
> (தொல்-எழுத்-உயிர்-12.)

என அதற்குக் கேடு வாராத சூத்திரத்தானே லகரம் றகரவொற்றாய் வருமெனப்பிரித்துத் திரிபு கூறியதே பற்றாக லகரம் ஆண்டு நில்லாது கெடுமென்று கொள்ளவைத்ததனானே சிற்சில வித்திப் பற்பல கொண்டாரென்று வந்த புணர்ச்சி முடித்தவாறு கண்டுகொள்க. 'எல்லா மென்னு மிறுதி முன்னர் - வற்றென் சாரியை முற்றத் தோன்றும்' (தொல்-எழுத்-உரு-17) என்றவழி எல்லாமென்னும் விரவுப்பெயருள் உயர்திணைகூறி வற்றுச்சாரியை பெறுமையான் அது பெற்று வந்த அஃறிணைக்கூறே முடித்தலும் அது. பிறவும் அன்ன.

இனி இங்ஙனம் முடிபுகோடலன்றி ஆண்டுக் குறியிடுதலும் ஆட்சியுங் குறியீடும் ஒருங்குநிகழ்ந்தது பின்னர் ஆட்சிக்கண் வாராமையும் வந்தவழிப் பிறவற்றோடு கூறுதலும் அதற்கு இனமெனப்படும். அவை 'அவ்வகை யொன்பதும் வினையெஞ்சு கிளவி' (தொல்-சொல்-வினை-31) என முடிந்ததனை மீண்டும் 'நெறிப்படத்தோன்று மெஞ்சுபொருட் கிளவி' (தொல்-சொல்-எச்ச-34) எனக் குறியிடுதல் எச்சவியலுள்

வந்ததாயினும் முன்னர் அக்குறியீடுவந்ததின்மையின் அது வாராத தெனப்படுமாகலின் அஃது ஈண்டுக் குறியிடுதலாயிற்று. வினையியலுட் பெயரெச்சமென்று ஆளுதலும் அது. வண்ணச்சினைச்சொல் முற்றுச் சொல் என்பனவுங் குற்றியலிகரத்தைப் புள்ளியென்றலும் ஆட்சியுங் குறியீடும் ஒருங்கு நிகழ்ந்தனவாகலின் அவையும் இனி வாராமையான் வந்தழிவந்தழி அவ்வாறு ஆண்டானென்பது. இனிப் புள்ளியென மேல் ஆளவாராததனைப் புள்ளியென்று ஆள்வனவற்றொடு மயக்கங் கூறுதலென்பது, 'அவைதாஅம், குற்றிய லிகரங்குற்றியலுகர - மாய்த மென்ற - முப்பாற் புள்ளியு மெழுத்தோ ரன்ன' (தொல்-எழுத்-நூன்-2) என்புழிக் குற்றியலிகரம் புள்ளியென்று யாண்டும் ஆளவாராமையானும் அதுதான் அவ்வழி வரவேண்டுதலானும் அங்ஙனம் புள்ளியென்று ஆளவருங் குற்றுகரத்தோடும் ஆய்தத்தோடும் உடன் கூறுதலாயிற்று. இங்ஙனம் உடன்கூறுங்காற் புள்ளியுங் குற்றிகரமு மெனச் சூத்திரம்பெறுதல் வேண்டுவதாவான் செல்லுமென்பது. இனி, 'ஆ ஏ ஓ அம்மூன்றும் வினா' (தொல்-எழுத்-நூன்-32) எனவும் 'மாறுகோ ளெச்சமும் வினாவு மையமும்' (தொல்-எழுத்-உயிர்-88) எனவுங் கூறுவனவும் அவை. என்னை? இடைச்சொல்லோத்தினுள் வினாவென்றோதாத ஆகாரம் வாராததுடன் ஆண்டு வினாவென்று ஓதிய ஏகார ஓகாரங்களுள் 'ஆ ஏ ஓ அம்மூன்றும் வினா' என்று உடன் கூறினமையானும் அவ்வாறு இடைச்சொல்லோத்தினுள் எடுத்தோதாத மாறுகோளெச்சத்தோடும் ஐயத்தோடும் ஆண்டோதிய வினாவினையும் எண்ணினையும் எழுத்தோத்தினுள் விதந்துடன் கூறினமையானுமென்பது. இது நோக்கிப்போலும் 'ஈற்றசையிவ்வைந் தேகாரம்' (தொல்-சொல்-இடை-9) என இடைச்சொல்லினை எழுத்துச்சாரியை பெய்தோதிய கருத்தானே இப்பொருண்மை கொள்ள வைப்பானுமாயிற்றுமென்பது. மற்று இவை எதிரதுபோற்றலாகாவோவெனின், அது பொருட்படைக் கண்ணதெனவும் இவை ஆட்சியுங் குறியீடும் பற்றியதோர் பகுதி யெனவுங் கூறிவிடுக்க. அஃதேற், குறியீட்டால் ஈண்டாராயானோவெனின், இவை உத்தி வகையாகலானும் அதுதானே உத்தியெனப் படுமாதலானும் அதனை ஈண்டு ஆராயானென்பது.

(7) வந்ததுகொண்டு வாராததுணர்த்தல்—பின்னொருவழிவந்தது கொண்டு முன்வாராததோர் பொருள் அறியவைத்தல்: அது,

'ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகும்' (தொல்-எழுத்-உயிர்-2) என்பது. 'எஞ்சிய மூன்று மேல் வந்து முடிக்கு - மெஞ்சு பொருட் கிளவி யிலவென மொழிப' (தொல்-சொல்-எச்ச-43) என வந்தது கொண்டு மேற்கூறப்பட்ட எழெச்சத்திற்கும் மேல் வந்து முடிக்குஞ் சொல் வாராததனை வருமென்றுணர்ந்துகொள்ளவைத்தமையின் இதுவும் அதுவேயாயிற்று.

'ஆயிரு திணையி னிசைக்குமன சொல்லே' (தொல்-சொல்-கிள-1) என்றவழித் திணையென்னும் பெயர் எப்பொருட்கும் எய்துவித்தல் ஒரு சூத்திரத்துள்ளே கோடலின் அதனை அதற்கு இன மென்று கொள்ளப்படும். பிறவும் அன்ன.

(8) முந்து மொழிந்ததன்றலைதடுமாற்று— முன்னொருகாற் கூறிய முறையன்றிப் பின்னொருகால் தலை தடுமாறாகக் கூறுதல்: அது,

'பன்னீ ருயிரு மொழிமுத லாகும்' (தொல்-எழுத்-மொழி-26) எனவும், 'உயிர்மெய் யல்லன மொழிமுத லாகா' (தொல்-எழுத் மொழி-27) எனவும், உயிரும் மெய்யும் கிறுத்தமுறையானன்றிக் 'கதநப மவெனு மாவைந் தெழுத்து-மெல்லா வுயிரொடுஞ் செல்லு மார்' (தொல்-எழுத்-மொழி-28) எனவும் மெய்பற்றி வரையறை கூறுதலும் 'எல்லா மொழிக்கு மிறுதியு முதலு-மெய்யே யுயிரொன் றுயீ ரியல' (தொல் எழுத்-புண-1) என முற்கூறிய முறைபிறழக் கூறுதலுமாயின. மெய்யும் உயிரும் பற்றி விதந்து வரையறுப்பினும் அஃது இரண்டற்குஞ் செல்லுமென்று கோடற்கும், இனி இயல்பு வகையான் ஈருக ஒருதலையாக உடையன மெய்யென்றற்கும் அவ்வாறு கூறினுனென்னுமோவெனின்; அங்ஙனமே அக்கருத்தினு னன்றே 'ஒத்தகாட்சி' யெனக் குற்றத்தோடு ஒப்புமைகூறி மற்றுப் பொருள் பயத்தலின் அமையுமென்று கொள்வாமாயிற்றென்பது. இனி, 'மூன்றுதலை யிட்ட முப்பதிற் றெழுத்தின்' (தொல்-எழுத்-புண-1) என்றாற்போல்வன இனமெனப்படும். 'புள்ளி யில்லா

வெல்லா மெய்யும்' (தொல்-எழுத்-நூன்-17) என்பது மெய்முற்கூறி னமையின் இதுவும் இதற்கு உதாரணமெனப்படும். மற்று மயக்கங் கூறலோடு இதனிடை வேற்றுமை யென்னையெனின், அஃது 'இன் னேவற்றே' (தொல்-எழுத்-புண-17) என சிறுத்தமுறையாற் கூறாது மற்று அதுவேபற்றாக மற்றொருபொருள் கொள்ளப்படும். இஃது இன்னதன்றி இங்ஙனம் மயங்கக்கூறல்வேண்டும் பொருண்மைத்தாகி வருமென்பது. அஃதேல் இது மாறுகொளக்கூறலென்னுங் குற்ற மாகாவோவெனின், ஆகாது. என்னை ? இது முற்கூறிய பொரு ளினை மாறுபடாமையானும் சிறுத்தமுறை தலைதடுமாற வைக்குந் துணையாகலானுமென்பது.

(9) ஒப்பக்கூறல்—ஒன்று கூறுங்கால் இருபொருட்குறித்ததென்று இரட்டுறச்செய்தல். அது,

'இன்னி னிகர மாவி னிறுதி
முன்னர்க் கெடுத லுரித்து மாகும்'(தொல் எழுத-புண 18.)

என்றாற்போல்வன.

'வினையெஞ்சு கிளவியு முவமக் கிளவியும்' (தொல்-எழுத்-உயிர்-2) எனவும், 'அன்ன வென்னு முவமக் கிளவியும்' (தொல்-எழுத்-உயிர்-8) எனவும் இனமல்லனவற்றை உடனெண்ணுதலும், 'மாமரக் கிளவியு மாவு மாவும்' (தொல்-எழுத்-உயிர்-29) என மாட்டெறியுங்கால் வேறுவேறு விதியுடையனவற்றை ஒருங்கு மாட் டெறிதலும் ஆண்டு ஆறு வல்லெழுத்தினையும் உடன்கோடலும் நிலைமொழித்தொழிலொடு வருமொழித் தொழிலும் ஒப்புக்கொண்டு மாட்டெறிதலும் போல்வன ஒபபக்கூறலென்னும் பகுதியாய் அடங்கு மென்பது.

(10) ஒருதலை மொழிதல்—ஓர் அதிகாரத்திற் சொல்லற்பாலதனை வேறு அதிகாரத்துச் சொல்லிய இலக்கணமே ஆண்டுங் கொள்ளவைத்தல் : அது,

'அ இ உ அம்மூன் றுஞ் சுட்டு' (தொல்-எழுத்-நூன்-31) என வும் 'ஆணும் பெண்ணு மஃறிணை யியற்கை' (தொல்-எழுத்-புள்ளி-8)

எனவும் இவை எழுத்ததிகாரத்துக் கூறியவாற்றானே சொல்லதிகாரத்துள்ளும் அவ்விலக்கணங் கொள்ள வைத்தமையின் அப்பெயர்த்தாயிற்று.

உடம்பொடுபுணர்த்துச் சொல்லுவன அதற்கு இனமெனப்படும். என்னை? விதியல்லாதது விதிபோல மற்றொருவழிச் சேறலின்.

(11) தன்கோட்கூறல்—சொல்லாதன பிறவுளவாயினும் அந்நூற்கு வேண்டுவதே கொள்வலெனறல்: அது,

'அஃதிவ ணுவலா தெழுந்து புறத் திசைக்கு
மெய்தெரி வளியிசை யளவுநுவன் றிசினே.'
(தொல்-எழுத-பிறப்-20.)

எனவும்,

'சகரக் கிளவியு மவற்றோ ரற்றே
அஐ ஔவெனு மூன்றலங் கடையே'
(தொல்-எழுத்-மொழி-29.)

எனவும்,

'குற்றெழுத் தைந்து மொழிநிறை பிலவே'
(தொல்-எழுத்-மொழி-11.)

எனவும்,

'பாடலுட் பயின்றவை நாடுங் காலை' (தொல்-அகத்-3.)

எனவும் வரும்.

இவ்வாற்றானே 'அளபிற் கோட லந்தணர் மறைத்து' (தொல்-எழுத்-பிறப்-20) ஆயினும் அது கூறினேனெனவும், இயற்சொல் லிற்கல்லது நிலமொழியாக்கங் கூறேனெனவும், வழக்குஞ் செய்யுளும் ஆராய்வலென்று புகுந்தான் பாடலுட் பயின்ற வழக்கே கூறுவலென வுங் கூறுதலின் அவை தன்கோட்கூறுதலாம்.

இனி ஒன்பதுமயக்கத்துண் மெய்ம்மயக்கங்கூறி ஒழிந்தன கூறாமையும், வினைத்தொகையும் பண்புத்தொகையும் எடுத்தோதி முடியாமையும்,

'நாடக வழக்கினு முலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்' (தொல்-அகத்-53.)

பற்றிப் பொருளிலக்கணங் கூறுவலென்றலும், பெரும்பான்மை இலக்கணவழக்கென்ப என்றலும், அதனானே சிறுபான்மையை மயக்கமென்றலும், அம் ஆம் எம் ஏம் என்பன முதலாயவற்றை அங்ஙனம் பகுத்தோதுதற்பயனும், அவை வினையின்றி அவ்வினைசெய்தான்மேல் நிகழ்கின்ற கூறுதலுமே பற்றி 'வினைசெயன் மருங்கிற் காலமொடு வருநவும்' (தொல்-சொல்-இடை-2) என்று இடைச்சொல்லோடு ஓதுதலும் போல்வன அதற்கு இனமெனப்படும். என்னை? இவை தாங் கூறுவலென்று புகுந்தவற்றுள்ளும் ஒருபொருளானவற்றை வரைந்துகொண்டமையின் அவற்று விரியெனப்பட்டன.

(12) முறைபிறழாமை—காரணமின்றித் தான் சிலபொருள் எண்ணி நிறுத்தியபின்னர் அம்முறைபிறழ்ந்தாலுங் குற்றமில்வழியும் அம்முறையினையே இலக்கணமாகச் சொல்லுதல் : அது,

'பெயர் ஐ ஒடு கு இன் அது கண்விளி யென்னு மீற்ற' (தொல்-சொல்-வேற்-3) என நிறுத்தமுறையாற்பற்றி எழுவாய்வேற்றுமை இரண்டாவது மூன்றாவதெனப் பெயர்கொடுத்தல்

'அகரமுத னகரவிறுவாய்' (தொல்-எழுத்-நூன்-1) எனவுங், 'கைக்கிளைமுதலாப் பெருந்திணையிறுவாய்' (தொல் அகத்-1) எனவும், வழக்கியலானும் இலக்கணவகையானும் உள்பொருளை விதந்தே எண்ணி நிறுத்தாதவழியும், 'அவற்றுள், அஇஉஎஒ' எனவும், 'அவற்றுள், நடுவ ணைந்திணை நடுவண் தொழிய' (தொல்-அகத்-2) எனவும் முறைபிறழாமற்கோடல் அதற்கு இனமெனப்படும்.

(13) பிறனுடம்பட்டது தானுடம்படுதல்—உள் பொருள் இன்றாயினும் வழக்கியலாற் கொள்பொருள் இதுவெனக்கூறுதல் : அது,

'பண்டியன் மருங்கின் மரீஇய மரபு' (தொல்-சொல்-வேற்,ம-7.) என்றாற்போல்வனவற்றான் அறிக.

இனி, 'மீயென மரீஇய விடம்வரை கிளவியும்' (தொல்-எழுத்-உயிர்-48) என்புழி மேலென்பது இலக்கணமென்று எடுத்தோதிய தனை மரூஉவென்றமையின் அதுவும் அதன்பாற்படும். என்னை? முதனூலுட்கொண்டவாறறிந்து மற்று அதனைத் தான் இச்சொல் இன்னவாறுயிற்றென்று இலக்கணங்கூறாது உடம்படுதலின். மற்று அதனை இனமென்பதெற்றுக்கு? இதுதானே பிறனுடம்பட்டது தானுடம்பட்டதாகாதோ முதனூலாசிரியன உடம்பட்டதாகலி னெனின், அற்றன்று; முதனூலாசிரியனைப் பிறனென்னுமையானும், முதனூலின் வழித்தாகிய நூலுள் அவன் உடம்பட்டதொன்றுஉடம் படுமென்று உத்திவகையாற்கொள்ளாது முழுவதூஉங் கொள்ளு மாகலானும் அவ்வாய்பாடு கூறலாகாதென்பது. இனி முதனூன் மேலென்பது மீயெனமரீஇயிற்றென்று விதந்தோதப்பட்டதனை அங்ஙனங் கூறாது மீயென மரீஇயிற்றென்று வாளாது கூறினமை யின் அதனை இனமென்று கொண்டாமென்பது. எனவே, ஈண் டுப் பிறனென்றது வழக்கினுள்ளோரை நோக்கியாயிற்று. என்றற்கு ஒழிந்த வழிநூலாசிரியரைப் பிறனென்றானென்னுமோவெனின், அவருடம்பட்டது உடம்பட்டதனாற் பயந்ததென்னை? முதனூலிற் பிறழாமை நூல்செய்யுமாயினென மறுக்க. அல்லதூஉம் இசைநூலுங் கூத்தநூலும்பற்றிப் பிறன் கோட்கூறலென்பதனாற் பிறனென்னி னன்றி இயற்றமிழ்க்கண்ணே முதனூலாசிரியனைப பிறனென்னு னென்பது. அஃதேல் வழக்குநூல்செய்வான் அவ்வழக்கினை வழங்கு வாரைப் பிறனென்னுமோவெனின் இலக்கணமும் வழக்குமென இரண்டனுள் இஃதிலக்கணமாதலின் அவ்வழக்கினுள் வழங்கு வாரைப் பிறனென்றல் அமையுமன்றேவென்பது. என்றற்கு அவ ருடம்பட்டது உடம்படுதல் உத்திவகையென்ப தெற்றுக்கு? அஃது இயல்பேயன்றேவெனின், அங்ஙனம மரீஇயினும் இலக்கணமென்பது திரிபில்லாதாகலிற் றிரிபுபடும் வழக்கினை உடம்படுதல் இலக்கணமன் றாயினும் அது வழக்கினுள்ளார் வேண்டுமாற்றான் இலக்கணமேயா மென்பது கருத்து; அல்லாக்கால் என்னேபோல எட்குப்பையுந் தன் றன்மையான் உள்பொருளாகலும் வேண்டுமன்றேவென்பது.

(14) இறந்தது காத்தல்—என்பது, முற்கூறியவோர் சூத்திரப் பொருண்மை பின்னொரு சூத்திரத்தான் விலக்குதல் : அது,

'பால்கெழு கிளவி நால்வர்க்கு முரித்தே' (தொல்-பொரு-5) எனக் கூறிய பின்னர் 'நட்பி னடக்கை யாங்கலங் கடையே' (தொல்-பொரு-6) என்றாற்போல விலக்குதல்.

நூற்புறனடையும் ஒத்துப்புறனடையும் அதிகாரப்புறனடையும் போல்வன அதற்கு இனமெனப்படும். அவை,

'ஈறியன் மருங்கி னிவையிவற் றியல்பெனக்
கூறிய கிளவிப் பல்லா றெல்லா
மெய்த்தலைப் பட்ட வழக்கொடு சிவணி
யொத்தவை யுரிய புணர்மொழி நிலையே'
(தொல்-எழுத்-தொகை-29.)

எனவும்,

'புள்ளி யிறுதியு முயிரிறு கிளவியுஞ்
சொல்லிய வல்ல வேனைய வெல்லாம்'
(தொல்-எழுத்-உரு-30.)

எனவும் வருவனபோல்வன.

(15) எதிரதுபோற்றல்—வருகின்ற சூத்திரப் பொருண்மைக்கேற்ப வேறொருபொருண் முற்கூறுதல் : அது,

'ஈறாகு புள்ளி யகரமொடு நிலையும்'(தொல்-எழுத்-தொகை-19.) என வருகின்றதனை நோக்கி,

'ஆறனுருபி னகரக் கிளவி
யீறா ககரமுனைக் கெடுதல் வேண்டும்'
(தொல்-எழுத்-புண-13)

எனக் கூறுதலும்,

'பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை' (தொல்-சொல்-வினை-30) என வருகின்றதனை நோக்கித்,

'தன்மைச் சொல்லே யஃறிணைக் கிளவியென்
றெண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்'
(தொல்-சொல்-கிளவி-43.)

என வழுவமைத்தலும் போல்வன.

இனி, ஒரு சூத்திரத்துள்ளே, 'ஈருகு புள்ளி யகரமொடு நிலையும்' (தொல்-எழுத்-தொகை-19) என வருவதனை நோக்கிக் கூறிய 'குற்றொற் றிரட்ட லில்லை' (தொல்-எழுத்-தொகை-19) என்றல் அதற்கு இனமெனப்படும்.

(16) மொழிவாமென்றல்—ஒருபயனோக்கி முற்கூறுது மென்றல்: அவை,

'உணரக் கூறின் முன்னர்த் தோன்றும்' (தொ-எழு-மொ-2) எனவும், 'கடப்பா டறிந்த புணரிய லான' (தொல்-எழுத்-மொழி-4) எனவும், 'அவ்வே, இவவென வறிதற்கு மெய்பெறக் கிளப்ப' (தொல் சொல்-விளி-2) எனவும வரும். இங்ஙனங் கூறிய தனுற் பயன் குற்றுகரவீற்றுக்கணன்றிப் புணர்மொழிக்குற்றிகர மின் றென்பதூஉம், இனிப் புணர்மொழிக்குற்றுகரம் பெருவரவிற்றென் பதூஉம் அறிவித்தலாயிற்று. 'அவவே, இவ்வென வறிதற்கு மெய் பெறக் கிளப்ப' என்பதூஉம் 'அவ்விளி யேலா' என்றதூஉம் அவ் விளியிலக்கணமென்றற் பயம் பட வந்தது. ஈற்றுப் பொதுவினல் விளியேற்குமென்று ஓதப்பட்ட பெயருள் இவை விளியேலாவென விளிவிலக்கல் வேண்டுதலானும் நீவாராவென்பது இயல்புவிளியன் றென விலக்குதலும் விளியிலக்கணமேயாதலானுமென்பது.

இனி,

'மெய்பெறக் கிளந்த பொருள்வரைந் திசைக்கு
மைகார வேற்றுமைத் திரிபென மொழிப'

எனவும்,

'மெல்லெழுத் தியற்கை சொல்லிய முறையான்
ஙஞநம வென்னு மொற்று மாகும்மே'
(தொல்-எழுத்-தொகை-1.)

எனவும் வருவன அதன்பாற்படும். என்னை? அவையும் முன்னர்ப் போய் மொழிவனவற்றை அவாவினின்றமையி னென்பது.

(17) கூறிற்றென்றல்—முற்கூறியதோர் இலக்கணத்தினை மற்றொரு பொருட்கும் விதிக்கவேண்டிய வழி, அவ்விலக்கணத்தினை மீட்டுங்கூறாது மேற்கூறியவாற்றானே கொள்கவென்பான் அவை கூறினமென்று நெகிழ்ந்து போதல்: அவை,

> 'கைக்கிளை முதலா வெழுபெருந் திணையு
> முற்கிளந் தனவே முறைநெறி வகையின'
>
> (தொல்-செய்-185.)

எனவும்,

> 'எண்வகை யியனெறி பிழையா தாகி
> முன்னுறக் கிளந்த முடிவின தருவே'
>
> (தொல்-செய்-205.)

எனவும் வரும். இவை அகப்பொருட்கும் புறப்பொருட்கும் ஒதிய இலக்கணஞ் செய்யுளுள்ளும் அவ்வாறெய்துவித்தவாறாயிற்று.

'முதலெனப் படுவ தாயிரு வகைத்தே' (தொல்-அகத்-17.)

எனவும்,

'மெய்பெறு வகையே கைகோள் வகையே' (தொல்-செய்-188.)

எனவும்,

> 'மாத்திரை யளவு மெழுத்தியல் வகையு
> மேற்கிளந் தன்ன வென்மனார் புலவர்.' (தொல்-செய்-2.)

எனவும் வருவன அதற்கு இனமெனப்படும். என்னை? கைக்கிளை பெருந்திணைக்கும் இவையே முதலென்றலானுந் திணையுங் கைகோளும் போல்வன புறப்பொருட்குஞ் சோடற் பயன்பட வைத்தமையானும் முற்கூறிய மாத்திரையும் எழுத்தும் பிறவாற்றாற் செய்யுட்குப் பயன்படுமாற்றான் வேறுபட்டதல்லது அவை மேற்கூறிய மாத்திரையும் எழுத்துமே என்றமையானு மென்பது.

(18) தான் குறியிடுதல்—உலகு குறியின்றித் தன்னூலுள்ளே வேறு குறியிட்டாளல் : அவை,

உயர்திணை அஃறிணையெனவும், கைக்கிளை பெருந்திணையெனவுஞ் சொல்லிற்கும் பொருளிற்கும் வழக்கியலானன்றி ஆசிரியன் தானே குறியிடுதல். வண்ணச் சினைச்சொன் முற்று வினைச்சொல் லென ஆட்சியுங் குறியீடும் ஒருங்கு நிகழ்ந்தனவும் வினையெஞ்சு கிளவியும் பெயரெஞ்சுகிளவியுமென்று ஆண்டு, 'ஆயீ ரைந்து—நெறிபடத் தோன்று மெஞ்சுபொருட் கிளவி' எனக் குறியிடுதலும் அது.

'இரண்டாகுவதே
ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி'
(தொல்-சொல்-வேற்-10.)

எனவும்,

'மூன்றனு மைந்தனுந் தோன்றக் கூறிய
வாக்கமொடு புணர்ந்த வேதுக் கிளவி'
(தொல்-சொல்-வேற்,ம-9.)

எனவும் பெயர் கொடுத்தல் அதற்கு இனமெனப்படும்.

(19) ஒருதலையன்மை—'வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகும்' என விரித்தாற்போலாது இலக்கணங் கூறி ஒழிதல் : அது,

'குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
யுயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே'
(தொல்-எழுத்-மொழி-5.)

என்றக்கால் யாண்டும் ஒருதலையாக வாராது, வருஞான்று வருவது ஆண்டென்று கொள்ளவைத்தல். இனிச் சொல்லோத்தினுள் வேற்றுமையென்று ஓதப்பட்ட எட்டனுள் எழுவாய் வேற்றுமையினையும் விளிவேற்றுமையினையும் வேற்றுமையென்னாது எழுத்தோத்தினுள் அல்வழியென்றல் போல்வன அதற்கு இனமெனப்படும்.

(20) முடிந்தது காட்டல்—சொல்லுகின்ற பொருட்கு வேண்டுவன வெல்லாஞ் சொல்லாது தொல்லாசிரியர் கூறினாரென்று சொல்லுதல்:

அஃது, ஒன்றறிவது உற்றறிவதென்றற்கும், இரண்டறிவது உற்றுஞ் சுவைத்தும் அறியுமென்றற்கும் முறைமையாற் சூத்திரஞ் செய்வான் அவை அவ்வாறாதற்குக் காரணங் கூறாது, 'நேரிதி னுணர்ந் தோர் நெறிப்படுத் தினரே' (தொல்-மர-27) என முடிந்தது காட்டல்.

'நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறே' (தொல்-எழுத்-நூன்-7) என்றாற் போல்வன அதற்கு இனமெனப்படும்.

(21) ஆணை கூறல்—இவ்வாசிரியன் கருத்து இதுவெனக் கொள்ள வைத்தல் : அது,

'அம்மி னிறுதி கசதக் காலைத்
தன்மெய் திரிந்து ஙஞந வாகும்' (தொல்-எழுத்-புண-27.)

எனக் கருவியோத்தினுட் சாரியை மகரம் பகரவருமொழிக்கண் திரியாதென்று போய்ச் செய்கையுள் வல்லெழுத்தினது இயற்கை மெல்லெழுத்தாதல் அறிவித்தற்கு அல்வழி யெல்லா மெல்லெழுத்தாகுமெனச் சொல்லுதல் போல்வன. ஙஞந ஆதற்கும் இஃதொக்கும்.

'ஓம்படை யாணையிற் கிளந்தவற் றியலாற்
பாங்குற வுணர்த லென்மனார் புலவர்'
(தொல்-சொல்-உரிச்-98.)

என்றாற் போல்வன அதற்கு இனமெனப்படும். மற்றுத் தன்கோட் கூறலோடு இதனிடை வேற்றுமை யென்னை யெனின், அது தந்திரஞ் செய்யும் பகுதிக்கண்ணது, இஃது அன்னதன்றிப் புணர்ச்சிக்கட் சிறப்புடைய நிலைமொழி வருமொழிக்குத் திரிபுபோலாதென்று கருவியாகிய இடைச்சொற்காயின் இத்துணை யமையுமென்று ஆணை செய்தலின் அப்பெயர்த்தாயிற்று.

பல்பொருட் கேற்பின் நல்லது கோடல்—ஒரு சூத்திரத்துட் பயந்த சொற்ருெடர் பலபொருட் கேற்றதாயினும் நல்லது கொள்கின்ருரெனக் கருதி அவ்வாறு செய்தல் : அவை,

'ஒருவ ரென்னும் பெயர்நிலைக் கிளவி
யிருபாற்கு முரித்தே தெரியுங் காலை'
(தொல்-சொல்-பெய-37.)

என்றவழி ஒருவரென்பதொரு சொல் தற்கண்ணே இருபாலாரையுந் தழீஇ நிற்குமெனவும் அது கருவியாக இருபாலாரையுஞ் சொல்லப்படுமெனவுங் கவர்ந்தவழி, 'தன்மை சுட்டிற் பன்மைக் கேற்கும்' (தொல்-சொல்-பெய-38) என்பதனோடு படுத்துநோக்க இருபாலாரையும் ஒருசொல் தற்கட்டழீஇ நிற்றலே நல்லதென்று கொள்ள வைத்தல்

'நும்மெ னிறுதி யியற்கை யாகும்' என்புழி எழுத்து விகாரமுடையதனைக் களைந்து சாரியைக் கண்ணே இயற்கை கோடலும் அதனபாற்படும். இதனை எற்புழிக் கோடலெனவும் ஒருபுடைச் சேறலெனவுஞ் சொல்லுப.

(22) தொகுத்தமொழியான் வகுத்தனர்கோடல்—ஒருவாயபாடு எடுத்தோதப் பலவாய்பாடு அதற்குவந்துபூணுமென்று வகுத்துக் கொள்ளவைத்தல் : அது,

'செய்து செய்யூச் செய்பு செய்தெனச
செய்யியர் செய்யிய செயின்செயச செயற்கென
வவ்வகை யொன்பதும் வினையெஞ்சு கிளவி'
(தொல்-சொல்-வினை-31.)

எனவும்,

'காப்பி னொப்பி னூர்தியி னிழையின்'
(தொல்-சொல்-வேற்-11.)

எனவும் ஒருவாய்பாடு தொகுத்து ஓதியவாற்ருனே பலவாய்பாடு வகுத்துக் கொள்ளவைப்பதென்பது. செய்தென்பதனை நக்கு வந்து

கண்டு நின்றுபாடிப் போயெனப் பலவாக்குதலும், முற்றுவாய்பாடு பலவுமாக்குதலும், இனிக் காப்பினென்றவழிப் புரத்தல் புறந்தர வோம்புதல் போற்றலெனப் பலவாக வகுத்தலுங் கண்டுகொள்க.

'உருவென மொழியினும்' (தொல்-சொல்-கிளவி-24) என்றலும், 'இதன திதுவிற்று' (தொல்-சொல்-வேற்,ம-27) என்றலும் போல்வன அதற்கு இனமெனப்படும்.

(23) மறுதலைசிதைத்துத் தன்றுணிபுரைத்தல்—ஒருபொருளினை ஒருவன் வேறுபடக்கொள்வதோர் உணர்வுதோன்றியக்கால் அவ்வேறு பாட்டினை மாற்றித் தான் துணிந்தவாறு அவற்கும் அறிவுறுத்தல். இது மறுதலைசிதைத்தலுடைமையின் வாளாது தன்கோட் கூறலின் அடங்காதாயிற்று.

உதாரணம் :

'மூவள பிசைத்த லோரெழுத் தின்றே'
(தொல்-எழுத்-நூன்-5.)

எனவும்,

'நீட்டம் வேண்டி னவ்வள புடைய'
(தொல்-எழுத்-நூன்-6.)

எனவும்,

'குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கும்'
(தொல்-எழுத்-மொழி-8.)

எனவும் மூன்றுமாத்திரையான் ஓரெழுத்து உண்டென்பாரை விலக்கி வழக்கியலான் இல்லையென்று தன்றுணிபு உரைத்தவாறு. உயிர் மெய் வேறெழுத்தன்றென்பான்,

'புள்ளி யில்லா வெல்லா மெய்யு
முருவுரு வாகி யகரமோ டுயிர்த்தலும்'
(தொல்-எழுத்-நூன்-17.)

எனவும்,

'மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே'
(தொல்-எழுத்-நூன்-18.)

எனவும் வேறுபடாது கூறுதலும் அது.

வழக்கினுள் அறியாதார் மாட்டு ஒன்றுபோல இசைப்பனவா யினும் அன்றென்று கூட்ட முணர்த்தினமையின்,

'மொழிப்படுத் திசைப்பினுந் தெரிந்துவே றிசைப்பினு
மெழுத்திய றிரியா' (தொல்-எழுத்-மொழி-20.)

என்றலும் அதன்பாற் சார்த்தியுணரப்படும். பிறவும் அன்ன.

(24) பிறன்கோட்கூறல்—தன்னூலே பற்றுகப் பிறநூற்குவருவ தோர் இலக்கணங்கொள்ளுமாறு கூறுதல்: அது,

'அரையளபு குறுகன் மகர முடைத்தே
யிசையிட னருகுந் தெரியுங் காலை' (தொ-எழு-நூன்-13)

எனவும்,

*'அளபிறந் துயிர்த்தலு மொற்றிசை நீடலும்'
(தொல்-எழுத்-நூன்-33.)

எனவும்,

'பண்ணைத் தோன்றிய வெண்ணான்கு பொருளுங்
கண்ணிய புறனே நானான் கென்ப' (தொல்-மெய்ப்-1.)

எனவும் இவை அவ்வந்நூலுட் கொள்ளுமாற்றான் அமையுமென்ற வாறாயின.

'அளபிற் கோட லந்தணர் மறைத்து' (தொல்-எழுத்-பிறப்-20.) என்பது அதற்கு இனமெனப்படும். என்னை? அவர்மதம்பற்றி இவர்கொள்வதோர் பயனின்றாகலினென்பது.

(25) அறியாதுடம்படல்—தானோதிய இலக்கணத்தின் வேறுபட வருவன தான் அறிந்திலனாகக் கூறி அதன்புறத்துச் செய்வ தோர் புறனடை: அவை,

* 'அளவிறந்திசைத்தலும்' என்பதும் பாடம்.

'கிளந்த வல்ல வேறுபிற தோன்றினுங்
கிளந்தவற் றியலா னுணர்ந்தனர் கொளலே'
(தொல்-சொல்-வேற்,ம-35.)

எனவும்,

'வருவ வுளவெனினும் வந்தவற் றியலாற்
றிரிவின்றி முடித்த றெள்ளியோர் கடனே'
தொல்-செய்-243.)

எனவும் வரும். இறந்தது காத்தலோடு இதனிடை வேற்றுமை யென்னையெனின், இறந்ததென்பது தான் துணிந்து சொல்லப்பட்ட பொருளாகல்வேண்டும். இஃது இன்னதன்றிச சொல்லப்படாத பொருண்மேற்றாகி அதுவுந் தான் துணிப்பப்படாதபொருளாகித் தான் நூல்செய்த காலத்தே உள்ளவற்றுள் ஒழிப்பப்போயின உளவாயினுங் கொள்கவென்பான் வேறுபிறதோன்றினும் எனவும் வருபவுளவெனி னும் எனவுந் தேற்றாது அதன் ஐயப்பாடுதோன்றச் சொல்லுதலின் இது வேறென்க. முழுதுணர்ந்தாற்கல்லது பழுதறச சொல்லலாகாமை யின் அஃது அவையடக்கியல்போல்வதோர் உத்தியெனக் கொள்க.

'குறியதன் முன்னர்த் தன்னுரு விரட்டலு
மறியத் தோன்றிய நெறியிய லென்ப'
(தொல்-எழுத்-தொகை-18.)

எனவும்,

'செல்வழி யறிதல் வழக்கத் தான' (தொல்-எழுத்-புள்-17.)

எனவும் வருவன அதற்கு இனமென வுணர்க.

(26) பொருளிடை யிடுதல்—வேற்றுமைப்பொருளினைச் சொல்கின்ற பொருண்மைக்கிடையே பெய்துசொல்லுதலும், சொல்கின்ற பொருட்கு இயைபுடையதனை ஆண்டுச் சொல்லாது இடையிட்டுப்போய்ப் பிறிதொருவழிச சொல்லுதலும் போல்வன: அவை,

'முறைப்பெயர்க் கிளவி யேயொடு வருமே' (தொல்-சொல்-விளி-19) என்றாற்போலச் சொல்கின்ற உயர்திணைப் பெயரிடை விரவுப்பெயர் பெய்துரைத்தலும் போல்வன. வழுவமைக்கின்ற கிளவி

யாக்கத்துள் ஓதாது எச்சவியலுட்போக்கி, 'அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்' (தொல்-சொல்-எச்ச-46) எனச் சொல்லுதலும் போல்வது.

'தானென் பெயருஞ் சுட்டுமுதற் பெயரும்
யானென் பெயரும் வினாவின் பெயரு
மன்றி யனைத்தும் விளிகோ ளிலவே'
(தொல் சொல்-விளி-20.)

என்றவழித் தானென்னும் விரவுப்பெயரினை இடைப்பெய்து விலக்குதலும் வேற்றுமைக் கிளவியோத்தினுட் கூறாது எஞ்சிநின்ற வேற்றுமைத் தொகை முதலிய எச்சங்களை எசசவியலுட் சொல்லுதலும் போல்வனவும் அதன்பாற் சார்த்தியுணர்க.

(27) எதிர்பொருளுணர்த்தல்—தான் கூறிய இலக்கணத்திற் சில பிற்காலத்துத் திரிபுபடினும் படுமென்பது முதற்கால முதனூலுங்கொண்டுணர்ந்த ஆசிரியன் எதிர்காலத்து வருவது நோக்கி அதற்கேற்றதோர் இலக்கணங் கூறிப்போதல்:

'மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி யொன்பஃ தென்ப
புகரறக் கிளந்த வஃறிணை மேன'
(தொல்-எழுத்-மொழி-49.)

என்று ஓதிய இலக்கணத்துச் சில பிற்காலத்துக் குறையவருதல் எதிர்பொருளெனப்படும். அதனைத் தான் உணர்ந்து, 'கடிசொ லில்லைக் காலத்துப் படினே' (தொ-சொல்-எச் 56) என்று கூறவே முற்கூறிய பொருளினை வற்புறுத்தலாம் அதுவென்பது. இங்ஙனந் திரிபுபடுதல் அறிந்தே கூறுதலானும் எதிர்பொருளாதலானும் இஃதறியாது உடம்படுதலினடங்காதாயிற்று.

'பொய்யும் வழுவுந் தோன்றிய பின்ன
ரையர் யாத்தனர் கரணம்' (தொல்-கற்-4.)

என்பதூஉம் அதன்பாற்படும்.

(28) சொல்லினெச்சஞ் சொல்லியாங் குணர்த்தல்—சொல்லினாற்றலாற் பெறப்படும் பொருளினையும் எடுத்தோதியாங்குக் கொள்ள வைத்தல் : அஃது,

'எஞ்சிய வெல்லா மெஞ்சுத லில' (தொல்-எழுத்-மொழி-44) என்புழி எல்லாமென்பதனை எச்சப்படுத்தற்காகாதன இருபத்தாறு கொண்ட வழியும் அதனையெடுத்தோதிற் சிறப்பின்றென்று கொள்ளற்க என்பது இதன் கருத்து.

எச்சவியலுட் கூறிய பொருள் அகத்தோத்துக் கூறிய பொருளோடு ஒப்பக்கூறுதலும் அதன்பாற்படும்.

'மொழிந்த பொருளோடொன்ற வவ்வயின்மொழியாததனை முட்டின்று முடித்த'லோடு இதனிடை வேற்றுமை யென்னையெனின், அஃது எடுத்தோதப்பட்ட பொருட்கண்ணதெனவும் இஃது எடுத்தோத்தினோடு ஒக்கும் எச்சப்படவைத்துக்கொள்ளும் இலக்கணங்களெனவும் அதனோடிதனிடை வேற்றுமையுணர்க.

(29) தந்து புணர்ந்துரைத்தல்—உள்பொருளல்லதனை உளபோலத் தந்து கூட உணர்த்தல்; அவை,

'அளபெடை யசைநிலை யாகலு முரித்தே' (தொல்-செய்-17) எனவும் 'குறிலிணை யுகர மல்வழி யான' (தொல்-செய்-5) எனவுங் கூறுங்கால் அளபெடையினை எழுத்துப்போலவுங் குற்றுகரத்தினைக் குற்றெழுத்துப் போலவும் ஓதுதல் போல்வன.

'மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்' (தொல்-எழுத்-புண-2) எனவும், 'மெய்யுயிர் நீங்கிற் றன்னுரு வாகும்' (தொல்-எழுத்-புண-37) எனவும் மேற்கூறிய புள்ளியினையே ஒருபயனோக்கி மீட்டும் புள்ளி பெறுமெனக் கூறுதல் அதற்கு இனமெனப்படும்.

'குறுமையு நெடுமையு மளவிற் கோடலிற்
றொடர்மொழி யெல்லா நெட்டெழுத் தியல'
(தொல்-எழுத்-மொழி-17.)

என்பதேபற்றி, 'நெடியதன் முன்ன ரொற்றுமெய் கெடுதலும்' (தொல்-எழுத்-தொகை-18) என்புழித் தொடர்மொழியே நெட்டெழுத்தாக்கிக் கோடலும் அது.

(31) ஞாபகங்கூறல்—சூத்திரஞ் செய்யுங்கால் அதற்கு ஓதிய இலக்கணவகையானே சில்வகையெழுத்தின் செய்யுட்டாகவும் நாடுதலின்றிப் பொருணனி விளங்கவுஞ் செய்யாது அரிதும் பெரிதுமாக கலிந்து செட்டு மற்று அதனானே வேறுபல பொருளுணர்த்தல்: அது,

'மெய்பெறு மரபிற் றொடைவகை தாமே * * * உணர்ந்திசி னோரே' (தொல்-செய்-101) என வருதல். இதனாற்கொண்ட பொருண்மையெல்லாஞ் செய்யுளியலுட் காட்டப்பட்டன.

'எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி
யக்கி னிறுதிமெய்ம் மிசையொடுங் கெடுமே'
(தொல்-எழுத்-புண-26.)

என்றாற் போல்வன அதற்கு இனமெனப்படும். பிறவும் அன்ன.

(32) உய்த்துக்கொண்டுணர்தல்—ஒருவழி ஒருபொருள் சொல்லியக்கால் அதன்கண்ணே மற்றொரு பொருளினையுங் கொணர்ந்து கொண்டறியுமாறு தோன்றச் செய்தல் : அவை,

'நெட்டெழுத் திம்பருந் தொடர்மொழி யீற்றுங்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே' (தொ-எழு-மொ-3.)

என இடனும் பற்றுக்கோடும் கூறி அதனான் ஈறு ஆக்கங் கோடலும்,

'குற்றிய லுகர முறைப்பெயர் மருங்கி
னொற்றிய நகரமிசை நகரமொடு முதலும்'
(தொல்-எழுத்-மொழி-34.)

என முதலாக்கங் கூறியதனானே இடனும் பற்றுக்கோடும் அதுவே யெனக் கோடலும் போல்வன.

பெயர்வினைக்கு ஓதிய இலக்கணம் ஒழிந்த சொற்குஞ் செல்,

வனஞ் செல்லுமென்றுகோடல் அதற்கு இனமெனப்படும். பிறவும் அன்ன.

மற்று நுதலியதறிதலொடு இதனிடை வேற்றுமையென்னை யெனின், அது வாளாது பயமில கூறியதுபோலக் கூறியவழி இவ் வாறு கூறியது இன்னகருத்துப் போலுமென்று அறியவைத்தலும், உரைவகையானும் நுதலியதறியச் சொல்லுதலுமாம்; இஃது அன்ன தன்றி அச்சூத்திரந் தன்னான் ஒருபொருள் பயந்ததன்றிலும் பின் னொருபொருள் பெறவருதலின் இது வேறென்பது. மற்று ஞாபகங் கூறலோடு இதனிடை வேற்றுமை யென்னையெனின், பயமில்லது போலவும் அரிதும் பெரிதுமாகவும் இபற்றி எளிதுஞ்சிறிதுமாக இபற் றுது சூத்திரஞ்செபதல் வேறுபாடே சித்தமாகத் தோற்றிக் கொள் வதோா பொருள்பெற வைத்தலின் இதுவும் வேறெனப்படுமெனபது,

மெய்ப்பட நாடிச் சொல்லிய அல்லபிற அவண் வரினும்—உய்த் துக்கொண்டுணாதலோடு மேற்கூறிய முப்பத்திரண்டும் இசசூத்திரத் துள் எடுத்தோதிய பொருளவகையான் ஆராய்ந்து சொல்லப்பட்டன வன்றே? அங்ஙனஞ் சொல்லாதன பிறவும் இந்நூலுள் வரினும்; சொல்லிய வகையாற் சுருங்க நாடி—உத்திவகையென வகுத்துக் கொ ண்டு ஓதிய முப்பத்திரண்டு பகுதியான் அடங்குமாறு ஆராய்ந்து; மன த்தின் எண்ணி மாசறத் தெரிந்துகொண்டு—ஓதப்பட்ட உத்திபலவும் ஒருங்குவரினும் உள்ளத்தால் தெள்ளிதின ஆராய்ந்து மபக்கமதிர வேறுவேறு தெரிந்து வாங்கிக்கொண்டு; இனந்திற் சேர்த்தி உணர்த் தல்வேண்டும்—முப்பத்திரண்டற்கும் ஏற்றவகையான் இனஞ்சார்த்தி மற்று அவற்றை இன்னதிதுவெனப் பெயர்கூறல்வேண்டும், அங்ஙனந் தொகுகின்றவழியும் வேறுவேறுகொண்டு; நுனித்தகு புலவர் கூறிய நூலே—தலைமைசான்ற ஆசிரியராற் கூறப்பட்டநூல், என்றவாறு.

எண்ணிய முப்பத்திரண்டுமல்லன தோன்றினும் அவற்றுள் அடக்கி அவைதாம் ஒருங்குவரினும் வேறு தெரிந்து இனந்தோறுஞ் சேர்த்துதலை அவாவிநிற்கும் ஈண்டு ஓதிய நூலென்பது கருத்து.

சொல்லிய அல்ல பிற அவண் வருமாறும், அவை சொல்லியவகை யாற் சுருங்க நாடி இனத்திற் சேர்த்துமாறும் மேற் காட்டப்பட்டன. இனி ஒருங்கு பலவுத்திவந்தவழி உள்ளத்தால் தெள்ளிதினெண் ணித் தெரிந்துகொண்டு இனத்திற் சேர்த்துதல் வருறுமாறு:

'அன்ன பிறவுங் கிளந்த வல்ல
பன்முறை யானும் பரந்தன வரூஉ
முரிச்சொ லெல்லாம் பொருட்குறை கூட்ட
வியன்ற மருங்கி னினைத்தென வறியும்
வரம்புதமக் கின்மையின் வழிநனி கடைப்பிடித்
தோம்படை யாணையிற் கிளந்தவற் றியலாற்
பாங்குற வுணர்த லென்மனார் புலவர்'

(தொல்-சொல்-உரி-98.)

எனறவழி,

'அன்ன பிறவுங் கிளந்த வல்ல
பன்முறை யானும் பரந்தன வரூஉ
முரிச்சொல்'

என்பது இறந்தது காத்தலாம். என்னை? இசையுங் குறிப்பும் பண்பு மேயன்றிச் சீர்த்தியும் புனிறும் போல்வன வேறும் உள, எடுத்தோதப் பட்டன எனவும்; எடுத்தோதாது இசையுங் குறிப்பும் பண்புமன்றிச் சேணென்றுந் தொறுவென்றும் வருவன உளவென்றுங் கூறினமை யின். 'வரம்புதமக் கின்மையின்' என்பது எதிர்பொரு ளுணர்த்த லும் அறியாதுடன்படலுமாம். 'ஓம்படையாணை' என்பது ஆணைகூற லாம். இங்ஙனம் ஒரு சூத்திரத்துட் பல வந்தவழி ஒன்றே உத்தி யென்றுணராது மனத்தினெண்ணி மாசறத் தெரிந்துகொண்டு இவ் வாற்றான் இனத்திற் சேர்த்துக என்றான் ஆசிரியனென்பது.

'மரபுநிலை திரியா மாட்சிய வாகி
யுரைபடு நூறா மிருவகை நிலைய' (தொல்-மர-93.)

என்பது முதலாக இத்துணையும் வழக்குநூலிலக்கணங் கூறினான், எழு நிலத்தெழுந்த செய்யுளின் இதுவும் ஒன்றாகலின் இதனைச் செய்யு

ரியலிற் கூறினன், ஈண்டு மரபு கூறும் வழி ஒழிந்த செய்யுட்கும் போலாது நூலிற்குப் பொருட்படையாகிய யாப்புக் குற்றங்களும் உத்தி வகையுள் கூறல் வேண்டுதலிற் கூறினனென்பது. அங்ஙனங் கூறாக்கால் பாட்டின் மரபு கட்டுரைபோலவுங் கட்டளை அரங்கின்றி வட்டாடியது போலவும் வரம்பின்றி வேண்டியவாறு நூல்செய்தல் விலக்கின்றாவான் செல்லும். செல்லவே, எழுசீரானாகிய முடுகியலடியானும் எத்துணையும் நீண்டதோர் வஞ்சிப்பட்டானும் பிறவும் வேண்டியவாறுஞ் சூத்திரஞ்செய்தலும், ஒருவன் பெயரினை அவ்வச் சூத்திரச்செய்யுளுட் சார்த்துவகையாற் பெய்துகூறலும், உணர்த்தப்படும் பொருளினை முதனூலுட் கிடந்தவாறுபோலாது மரபுநிலை திரியச் செய்தலும், நால்வகை யாப்பொடு மாறுபடச்செய்தலும், வேண்டியவர் வேண்டியவாற்றாற் சிலபொருள்களை வேறுதோற்றிக்கொண்டு நூல்செய்தலும் விலக்கின்றாகல் படுமென்பது.

இனி, உத்திவகையும் அவ்வாறே இன்றியமையாதன வெனப்படும். என்னை? உணர்த்தப்படும் பொருள் இதுவென்று அறிவித்தலும், எழுத்துச் சொற்பொருளெனப் பகுத்துக்கொண்டு அதிகாரஞ் செய்தலும், உணர்வு புலங்கொள்ளுமாற்றால் தொகுத்துக் காட்டலும், மற்று அவற்றை வகுத்துக்காட்டிய வழிப் பயமில்கூறலென்று கருதாமல் அது தன்னோடு பயம்படச்செய்தலும், முதனூலாயினவெல்லாம் நூற்பொருளுணர்தற்குக் கருவியுஞ் சூத்திரச்சுருக்கத்துக் கேதுவாகலும் உடைமையின் அவையும் வேண்டப்பட்டன வென்பது.

இனி, அவற்றை இத்துணையென வரையறுக்கால் எத்துணையும் பலவாகி இகந்தோடுதலும் வழிநூன் முதனூல்வழித் தன்றாகலும் படும். முப்பத்துமூன் றெழுத்தென்றானாயினும் அப்பெற்றித்தன்றி அறுபத்தாறாகக் கொள்ளவைத்தானென்று உத்திகூறலும் உடம்படுவானாதல் செல்லுமென மறுக்க.

இனி, தனித்தகு புலவர் கூறிய நூல் என்றதனானே, பாயிரச் செய்யுளுஞ் சூத்திரச்செய்யுளும் ஆசிரியப்பாவும் வெண்பாவும் பெற்று வருதலும், அவ்விருபாவும் பெற்றுவருதலும், பாட்டுப்போல எல்லா

வுறுப்பும் பெறுதற்குச் செல்லாவென்பதூஉம் மாத்திரை முதலாகப் பாவீறாக வந்த பதினொன்றும் வண்ணங்களுள் ஏற்பன கொள்ளினுங் கொள்ளுமெனவும் யாப்புறுக்கொள்ளுங்கால் ஈண்டோதிய மரபுங் கொள்ளப்படுமெனவுங் கொள்க. உரைக்குங் காண்டிகைக்கும் இவற்றுள்ளும் ஏற்பன அறிந்து கொள்க.

இன்னும் நுனித்தகு புலவர் என்றதனானே தந்திரமுஞ் சூத்திரமும் விருத்தியுமென மூன்றும் ஒருவரேயன்றி ஒன்று ஒருவர் செய்தலும் இரண்டு செய்தலும் பெறப்படுமென்றலும், ஒருசாலை மாணாக்கருந் தம்மாசிரியருந் தம்மிடை நூல்கேட்ட மாணாக்கரும் பாயிரஞ் செய்யப் பெறுபவென்றலும், பொதுப்பாயிரமுஞ் சிறப்புப்பாயிரமுமென அப்பாயிரந்தாம் இரண்டாமென்றலும், ஈவோன்றன்மையும் ஈதலியற்கையுங் கொள்வோன்றன்மையுங் கோடன்மரபுமென்ற நான்குறுப்புடையது பொதுப்பாயிரமென்றலும் அதன்வழியே கூறப்படுஞ் சிறப்புப்பாயிரந்தான் எட்டிலக்கணமுடைத்தென்றலும், அவை ஆக்கியோன் பெயரும் வழியும் எல்லையும் நூற்பெயரும் யாப்பும் நுதலிய பொருளுங் கேட்போரும் பயனுமெனப்படுமென்றலும், அவைதாம் நூற்கின்றியமையாவெனக் கொள்ளப்படுதலுங் கூறிமுடிக்க.

சிறப்புப்பாயிரத்தானே நூலிலக்கணம் ஒருவகையான் உணரப்படும். பொதுப்பாயிரத்தானே ஆசிரியரும் மாணாக்கரும் நூலுரைத்தலும் நூல்கேட்டலும் மாசறவறிந்து உரைநடாத்துவாராப. அதனானே இவை நூன்முகத்தினின்று விலாவுமென்பது. (கக0)

" நுண்மா ணுழைபுல மில்லா னெழினல
மண்மாண் புனைபாவை யற்று." (குறள்-41-7.)

" ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப் பியனடி
பல்காற் பரவுது மெழுத்தொடு
சொல்கா மருபொருட் டொகைதிகழ் பொருட்டே."

மரபியன் முற்றும்.

பொருளதிகாரம் முற்றும்.

தொல்காப்பியம் முற்றும்.

தொல்காப்பியம் பொருளதிகாரம்

# சூத்திரமுதற்குறிப்பகராதி


| | பகுதி-பக்கம். |
|---|---|
| **அ** | |
| அஃதான்றென்ப ... | 3-301 |
| அஃதொழிந்தொன்றி... | 3-314 |
| அகத்திணைமருங்கின் ... | 1-150 |
| அகப்பாட்டுவண்ணை ... | 4-518 |
| அகவலென்ப .. | 3-300 |
| அகன்றபொருள்கிடப்பி. | 4-512 |
| அசைப்புவண்ணம் ... | 4-521 |
| அங்கதந்தானே ... | 4-387 |
| அங்கதப்பாட்டவற் ... | 4-465 |
| அசைகூனாகும் ... | 3-240 |
| அசைசீர்த்தாகும் ... | 3-288 |
| அசையுஞ்சீரும் ... | 3-185 |
| அச்சமுநாணும் ... | 2-365 |
| அடக்கியல்வாரம் ... | 4-410 |
| அடிதொறுந்தலை ... | 3-310 |
| அடிநிமிர்கிளவி ... | 4-487 |
| அடியிகந்துவரினும் ... | 4-487 |
| அடியிறந்துவருதல் ... | 3-225 |
| அடியின் சிறப்பே ... | 3-227 |
| அடியுள்ளனவே ... | 3-224 |
| அடியோர்பாங்கினும் ... | 1- 61 |
| அடுக்கியதோற்றம் ... | 3-151 |
| அடைநிலைக்கிளவி ... | 4-402 |
| அணங்கே விலங்கே .. | 3- 18 |
| அதுவேதானுமிருநால்... | 1-206 |
| அதுவேதானுமீரு ... | 4-476 |
| அதுவே தானுமிரு ... | 4-481 |
| அதுவேதானும் பிசி ... | 4-486 |
| அதுவே, வண்ணக ... | 4-406 |
| அந்தணாளர்க்கரசு ... | 4-579 |
| அந்தணாளர்க்குரியவும் ... | 4-574 |
| அந்தமில்சிறப்பின் ... | 2-854 |
| அந்நிலைமருங்கின்வஞ்சி . | 3-222 |
| அந்நிலைமருங்கினறமுத . | 4-359 |
| அப்பெயர்க்கிழமை ... | 4-560 |
| அமரர்கண் முடியும் ... | 1-298 |
| அம்பலுமலரும் ... | 2-592 |
| அம்போதரங்கம் .. | 4-437 |
| அயலோராயினும் ... | 1 -91 |
| அருண்முந்துறுத்த ... | 2-732 |
| அலரிற்றோன்றுங் ... | 2-735 |
| அல்குறைவரல் ... | 3 -35 |
| அல்ல குறிப்படுதலும் .. | 2-585 |
| அவர்றுட், சூத்திரந் ... | 4-477 |
| அவற்றுட், பாஅவண்ணம ... | 4-515 |
| அவற்றுட், டார்ப்பும் ... | 4-534 |
| அவற்று ணடுவணைந் ... | 1- 4 |
| அவற்று, ணூலெனப் ... | 4-475 |
| அவற்றுண், மாத்திரை . | 3-168 |
| அவற்றுள், ஒத்தாழிசை . | 4-395 |
| அவற்றுள். ஓதலுந் ... | 1 -67 |
| அவனறிவாற்ற ... | 2-640 |
| அவன் குறிப்பறிதல் ... | 2-730 |
| அவன் சோர்புகாத்தல்.. | 2-749 |
| அவன் வரம்பிறத்தல் ... | 2-573 |
| அவைதாம், அன்ன ... | 3-101 |
| அவைதாம், நூலினா... | 4-474 |
| அவைதாம், பாஅவண்ணை | 4-514 |

பகுதி-பக்கம்.

அவையடக்கியலே ... 4-367
அவையு முளவே ... 3- 51
அவ்வயாக்களும் ... 4-511
அவ்வியலல்லது ... 3-303
அளபெடை தலைப்பெய. 3-307
அளபெடையசைநிலை... 3-197
அளபெடைவண்ணம் ... 4-517
அளபெழினவையே ... 3-329
அளவடி மிகுதி ... 3-269
அளவியல் வகையே ... 4-473
அளவுஞ் சிந்தும் ... 3-268
அறக்கழிவுடையன ... 2-812
அறத்தொடு நிற்கும் ... 2-791
அறுசீரடியே ... 3-277
அறுவகைப்பட்ட ... 1-243
அன்புதலைப்பிரிந்த ... 2-754
அன்புறுதகுந ... 2-831
அன்பேயறனே ... 2-809
அன்னபிறவும ... 3 -45
அன்னராயினும் ... 4-580
அன்னவகையான் ... 2-580
அன்னவாங்க ... 3-105
அன்னவென்கிளவி ... 3-107
அன்னையென்னை ... 2-858

ஆ

ஆங்கவையொருபால் ... 3- 25
ஆங்காங்கொழுகும் ... 2-588
ஆங்ஙனம் விரிப்பின் ... 3-252
ஆசிரியப்பாட்டின் ... 4-462
ஆசிரியமருங்கினும் .. 3-281
ஆசிரியம்வஞ்சி ... 4-356
ஆசிரிய நடைத்தே ... 4-360

பகுதி-பக்கம்.

ஆண்பாலெல்லாம் ... 4-558
ஆயர்வேட்டுவர் ... 1 -56
ஆயிருதொடைக்கும் ... 3-316
ஆய்பெருஞ்சிறப்பின் ... 2-577
ஆவுமெருமையும் ... 4-543
ஆறின தருமையும் ... 2-590
ஆற்றது பண்பும ... 2-743
ஆற்றலொடு புணர்ந்த... 4-557

இ

இசைநிலைநிறைய ... 3-215
இசைதிரிந்திசைப்பி ... 2-775
இடித்துவரை ... 2-725
இடைச்சுரமருங்கில் ... 4-498
இடைநிலைப்பாட்டு ... 4-396
இடைநிலைப்பாட்டே ... 4-399
இடையிருவகையோர்... 4-577
இதுநனிபயக்கும் ... 4-507
இமையோர்தேஎத்தும்... 2-862
இயங்குபடையரவம் ... 1-189
இயலசை மயக்கம ... 3-191
இயலசைமுதலிரண் ... 3-177
இயலசையீற்றுமுன் ... 3-195
இயற்சீரிறுதிமுன் ... 3-203
இயற்சீர்பாற்படுத் ... 3-216
இயற்சீர்வெள்ளடி ... 3-272
இயைபு வண்ணம் ... 4-517
இரட்டைக்கிளவி ... 2-125
இரந்துகுறையுற்ற ... 2-841
இரலையுங்கலையும ... 4-555
இரவுக்குறியே ... 2-582
இருசீரிடையிடின் ... 3-332
இருவகைக்குறி ... 2-418

பகுதி-பக்கம்.

இருவகைப்பிரிவு ... 1- 28
இருவகையுகரமொடு ... 3-173
இலையே முறியே ... 4-582
இவ்விடத்திம்மொழி ... 4-509
இழுமென்மொழியான் . 4-526
இளிவேயிழவே .. 3- 10
இறப்பேயிகழ்வே ... 4-506
இறுவாயொன்றல் ... 3-328
இறைச்சிதானே ... 2-828
இறைச்சியிற் பிறக்கும்... 2-829
இனிதுறுகிளவியும் ... 3-134
இன்சீரியைய ... 3-220
இன்பத்தைவெறுத்தல் . 3- 51
இன்பமுமிடும்பையும் ... 4-510
இன்பமும் பொருளும... 2-349

ஈ

ஈரசைகொண்டு ... 3-188
ஈற்றயலடியே ... 3-282

உ

உடம்புமுயிரும் ... 2-787
உடனுறையுவமம் ... 2-851
உணர்ப்புவரை ... 2-726
உண்டற்குரிய ... 2-807
உயர்ந்ததன்மேற்றே ... 3- 89
உயர்ந்தோர் கிளவி ... 2-811
உயர்ந்தோர்க்குரிய ... 1- 78
உயர்மொழிக்கிளவி ... 2-849
உயர்மொழிக்குரிய ... 2-844
உயிரிலெழுத்தும் ... 3-237
உயிருஞ்சிறந்தன்று ... 2-485
உயிருளாளும் ... 2-875
உய்த்துணர்வின்றி ... 4-507

பகுதி-பக்கம்.

உரிப்பொருளல்லன ... 1- 40
உருட்டுவண்ணம் ... 4-522
உரையெடுத்ததன் ... 4-599
உவமத்தன்மையும் ... 3-147
உவமப்பொருளின் ... 3-121
உவமப்பொருளை ... 3-124
உவமப்போலி ... 3-127
உவமையும் பொருளும் . 3- 97
உழிஞைதானே ... 1-204
உழைக்குறுந்தொழிலும் . 2-746
உள்ளுறுத்திதனை ... 1-134
உள்ளுறைதெய்வம் ... 1-133
உள்ளுறையுவமம் ... 1-130
உறுகணோம்ப ... 2-848
உறுப்பறைகுடிகோள் ... 3- 21
உற்றுழியல்லது ... 2-798

ஊ

ஊருமயலும் ... 4-495
ஊரும்பெயரும் ... 4-576
ஊரொடுதோற்றமும் ... 1-307

எ

எஞ்சாமண்ணசை ... 1-188
எஞ்சியோர்க்கும் ... 1-114
எண்ணருப்பாசறை ... 2-750
எண்ணிடையொழிதல் . 4-412
எண்ணுவண்ணம் ... 4-521
எண்வகையியனெறி ... 4-508
எதிர்மறுத்துணரின் ... 4-622
எத்திணைமருங்கினும் ... 1- 80
எச்சிலமருங்கிற் ... 1- 54
எருத்தேகொச்சகம் ... 4-438

| | பகுதி-பக்கம். |
|---|---|
| எருமையு—வரை ... | 4-541 |
| எருமையு—அன்ன ... | 4-553 |
| எருமையு—நாகே ... | 4-569 |
| எல்லாவாயிலும் ... | 2-753 |
| எல்லாவுயிர்க்கும் ... | 2-820 |
| எழுசீரடியே ... | 3-279 |
| எழுசீரிறுதி ... | 3-291 |
| எழுத்தளவெஞ் ... | 3-233 |
| எழுத்துமுதலா ... | 3-292 |
| எழுத்தொடுஞ் ... | 4-485 |
| எழுநிலத்தெழுந்த ... | 4-474 |
| எளித்தலேத்தல் ... | 2-793 |
| எள்ளலிளமை ... | 3- 7 |
| என்னவிழைய ... | 3-107 |
| **ஏ** | |
| ஏந்தல்வண்ணம் ... | 4-522 |
| ஏமப்பேரூர் ... | 1- 89 |
| ஏவன்மரபினே ... | 1- 63 |
| ஏழெழுத்தென்ப ... | 3-228 |
| ஏறியமடற்றிறம் ... | 1-138 |
| ஏறுமேற்றையும் ... | 4-533 |
| ஏற்புடைத்தென்ப ... | 4-552 |
| ஏனைப்பிரிவு ... | 2-766 |
| ஏனையுவமந்தா ... | 1-135 |
| ஏனையொன்றே ... | 4-405 |
| ஏனோர்பாங்கினும் ... | 1- 58 |
| **ஐ** | |
| ஐவகையடியும்விரிக்குங். | 3-242 |
| ஐவகையடியுமாசிரியக்... | 3-254 |
| **ஒ** | |
| ஒட்டகங்குதிரை ... | 4-559 |
| ஒட்டகமவற்றொடு ... | 4-547 |
| ஒண்டொடிமாதர் ... | 4-492 |
| ஒத்தகாட்சி ... | 4-626 |
| ஒத்தசூத்திரம் ... | 4-599 |
| ஒத்தாழிசைக்கலி ... | 4-392 |
| ஒத்தாழிசையும் ... | 4-369 |
| ஒத்துமூன்றாகும் ... | 4-408 |
| ஒப்புமுருவும் ... | 2-860 |
| ஒப்பொடுபுணர்ந்த ... | 4-482 |
| ஒரீஇக்கூறலும் ... | 3-146 |
| ஒருசிறைநெஞ்ச ... | 2-789 |
| ஒருசீரிடையிட்டு ... | 3-331 |
| ஒருதலையுரிமை ... | 2-822 |
| ஒருநெறிப்பட்டாங் ... | 4-503 |
| ஒருநெறியின்றி ... | 4-478 |
| ஒருபாற்கிளவி ... | 2-819 |
| ஒருபான்சிறுமை ... | 4-435 |
| ஒருபொரு-வெள்ளடி ... | 4-141 |
| ஒருபொரு-சூத்திரத் ... | 4-476 |
| ஒருபோகியற்கை ... | 4-420 |
| ஒரூஉவண்ணம் ... | 4-520 |
| ஒழிந்தோர்கிளவி ... | 4-493 |
| ஒழுகுவண்ணம் ... | 4-520 |
| ஒற்றளபெடுப்பினும் ... | 3-200 |
| ஒற்றெழுத்தியற்றே ... | 3-179 |
| ஒற்றொடுபுணர்ந்த ... | 4-529 |
| ஒன்றறிவதுவே ... | 4-536 |
| ஒன்றாத்தமரினும் ... | 1-102 |
| ஒன்றேமற்றும் ... | 4-481 |
| ஒன்றேவேறே ... | 2-354 |
| **ஓ** | |
| ஓதல்பகையே ... | 1- 67 |

பகுதி-பக்கம்.

க

கடையுமனையும் ... 4-543
கடல்வாழ்சுறவும் ... 4-553
கடுப்பவேய்ப்ப ... 3-109
கட்டுரைவகையான் ... 4-384
கணையும்வேலும் ... 1-226
கண்ணியுந்தாரும் ... 4-578
கண்ணினுஞ்செவி ... 3- 80
கரணத்தினமைந்து ... 2-604
கலந்தபொழுதும் ... 1- 51
கலித்தளைமருங்கிற் ... 3-210
கலித்தளையடிவயின் ... 3-211
கலிவெண்பாட்டே ... 4-466
கலியென்காட்சி ... 4-555
கல்விதறுகண் ... 3- 20
கவரியுங்கராமு .. 4-542
கழிவினும்வரவினும் ... 2-721
களவலராயினும் ... 2-556
களவுங்கற்பும் ... 2-734
கற்புங்காமமும் ... 2-718
கற்புவழிப்பட்டவள் ... 2-833
கற்பெனப்படுவது ... 2-596
கனவுமுரித்தால ... 2-783

கா

காஞ்சிதானே ... 1-274
காமக்கடப்பினுள் ... 2-731
காமக்கூட்டந் ... 2-572
காமஞ்சாலாவிளமை ... 1-135
காமஞ்சான்ற ... 2-769
காமஞ்சொல்லா ... 2-481
காமத்திணையில் ... 2-430
காமநிலையுரைத்தலும் ... 2-751

பகுதி-பக்கம்.

காமப்பகுதி ... 1-304
காமப்புணர்ச்சியும் ... 4-488
காயேபழமே ... 4-584
காருமாலையும் . 1- 16

கி

கிழக்கிடுபொருளோடு ... 3- 94
கிழவன்றன்னொடுங் ... 4-496
கிழவிசொல்லின் ... 3-132
கிழவிநிலையே ... 2-760
கிழவிமுன்னர் ... 2-756
கிழவோட்குவமம் ... 3-135
கிழவோள்பிறள்குணம . 2-833
கிழவோற்காயினிடம் ... 3-137
கிழவோற்காயினுர ... 3-133
கிழவோனறியா ... 2-570
கிழவோன்வினை ... 2-736
கிளரியவகையில் ... 4-487

கு

குஞ்சரம்பெறுமே ... 4-542
குடையும்வாளும் ... 1-214
குட்டமெருத்தடி ... 4-372
குட்டியும்பறழும் ... 4-538
குரங்கினேற்றினை ... 4-570
குரங்குமுசுவு-மந்தி ... 4-570
குரங்குமுசுவு-மூன்று ... 4-543
குழவிமருங்கினும் ... 1-306
குழவியுமகவும ... 4-544
குறளடிமுதலா ... 3-262
குறித்தெதிர்மொழிதல் . 2-757
குறிப்பேகுறித்தது ... 2-362
குறியெனப்படுவது ... 2-582
குறிலிணையுகரம் ... 3-176

பகுதி-பக்கம்.

குறிலேநெடிலே ... 3-172
குறுஞ்சீர்வண்ணம் ... 4-517
குறையுறவுணர்தல் .. 2-579
குற்றியலுகரமும ... 3-184

கூ

கூதிர்வேனில் ... 1-259
கூழைவிரித்தல் ... 3- 33
கூற்றுமாற்றமும் ... 4-459

கை

கைசக்கிளைதானே ... 4-376
கைசகிளைமுதலா ... 1- 1
கைக்கிளைமுதலாவெழு . 4-488

கொ

கொச்சகமராகம் ... 4-377
கொச்சகவொருபோ ... 4-421
கொடிநிலைகந்தழி ... 1-313
கொடுப்போரினறியும் ... 2-599
கொடுப்போரேத்தி ... 1-317
கொண்டுதலைக் ... 1- 48
கொள்ளார்தேஎங ... 1-206
கொற்றவள்ளை ... 1-315

கோ

கோடுவாழ்குரங்கும் ... 4-540
கோழிகூகை ... 4-560

சி

சிதலுமெறும்பும் ... 4-549
சிதைவிலவென்ப ... 4-611
சிதைவெனப்படுபவை... 4-614
சித்திரவண்ண ... 4-518

பகுதி-பக்கம்.

சிறந்துழியையம் ... 2-358
சிறப்பேநலனே ... 3- 92
சினனேபேதைமை ... 2-856

சீ

சீரியைமருங்கின ... 3-261
சீர்கூறுதல் ... 3-241
சீர்நிலைதானே ... 3-230

சு

சுட்டிக்கூறா ... 3- 97
சுரமெனமொழிதலும் ... 2-810

சூ

சூத்திரத்துப்பொருள் ... 4-607
சூழ்தலுமுசாததுணை ... 2-578

செ

செம்பொருளாயின ... 4-387
செயபொருளசசமும் ... 2-832
செய்யுடடாமே ... 4-389
செய்யுண்மருங்கின் ... 4-530
செய்யுண்மொழியால் ... 4-525
செலவிடையழுங்கல ... 2-759
செல்வம்புலனே ... 3- 23
செவியுறைதானே ... 4-368
செறிவுநிறைவும் ... 2-799

சே

சேரிமொழியால் ... 4-528
சேவற்பெயர்க்கொடை . 4-557

சொ

சொல்லப்பட்டன ... 4-610
சொல்லியகிளவி ... 2-724

பகுதி-பக்கம்.

சொல்லியதொடை ... 4-342
சொல்லியமரபின் ... 4-546
சொல்லெதிர்மொழிதல் . 2-432
சொல்லொடுங் ... 4-508
சொற்சீரடியும் ... 4-383

ஞ

ஞகாரைமுதலா ... 4-528

ஞா

ஞாயிறுதிங்கள் ... 4-505

த

தடுமாறுவமம் ... 3-150
தத்தமரபிற் ... 3-113
தந்தையுந்தன்னையும் ... 2-5[illegible]1
தம்முறுவிழுமம் ... 2-835
தரவியலொத்து ... 4-403
தரவிற்சுருங்கித் ... 4-409
தரவின்றாகித் ... 4-421
தரவும்போக்கும் ... 4-444
தரவேதானுநான்கு ... 4-408
தரவேதானுநாலடி ... 4-398
தலைமைக்குணச் ... 4-576
தலைவரும்விழுமம் ... 1- 91
தவலருஞ்சிறப்பி ... 3-127
தவழ்பவைதாமும் ... 4-535
தற்புகழ்கிளவி ... 2-755
தனிக்குறின்முதலசை... 3-177
தன்சீருள்வழி ... 3-259
தன்சீரெழுத்தின் ... 3-239
தன்சீர்வகையினும் ... 3-256
தன்பாவல்வழி ... 3-208
தன்வயிற்கரத்தலும் ... 2-790

பகுதி-பக்கம்.

தன்னுமவனும் ... 1- 81
தன்னுறுவேட்கை ... 2-571

தா

தாஅவண்ணம் ... 4-516
தாயத்தினடையா ... 2-817
தாயறிவுறுதல் ... 2-591
தாய்க்குமுரித்தால் ... 2-783
தாய்க்கும்வரையார் ... 2-570
தாய்போற்கழறி ... 2-748
தாவில்கொள்கை ... 1-243
தாவினல்லிசை ... 1-329
தானேசேறலும் ... 1- 69
தானையானை ... 1-228

தி

திணைமயக்குறுதலும் ... 1- 30

து

துகளொடும் பொரு ... 4-390
தும்பைதானே ... 1-224
துள்ளலோசை ... 3-302
துன்புறுபொழுதினும்... 2-757

தூ

தூக்கியல் வகையே ... 3-304
தூங்கலோசை ... 3-302
தூங்கல் வண்ணம் ... 4-521

தெ

தெய்வமஞ்சல் ... 3- 66
தெய்வமுணவே ... 1- 52
தெரிந்தனர் விரிப்பின் .. 4-349
தெரிந்துடம் படுதல் ... 3- 40

பகுதி-பக்கம்.

தே

தேரும் யானையும் ... 2-805

தொ

தொகுத்தல் விரித்தல் ... 4-595
தொடைவகை நிலையே.. 4-351
தொல்லவை யுரைத்த ... 2-740
தொன்மைதானே ... 4-526

தோ

தோடே மடலே ... 4-581
தோழிதாயே ... 2-771
தோழிதானே ... 2-578
தோழியின் முடியும் ... 2-574
தோழியுஞ் செவிலியும.. 3-137
தோழியுள்ளுறுத்த ... 2-681

ந

நகையேயழுகை ... 3-6
நடுவு நிலைத்திணை ... 1- 23
நட்பினடக்கை ... 2-785
நண்டுந் தும்பியும் ... 4-549
நந்து முரளும் ... 4-548
நரியுமற்றே நாடினர் ... 4-537
நரியுமற்றே நாடினர் ... 4-569
நலிபு வண்ணம் ... 4-518

நா

நாடகவழக்கினும் ... 1-142
நாட்ட மிரண்டு ... 2-360
நாயே பன்றி ... 4-537
நாவிரண்டாகும் ... 3- 5
நாவிரண்டாகும் ... 3-115
நாவெழுத்தாதி ... 3-228

பகுதி-பக்கம்.

நாற்சீர் கொண்ட ... 3-223
நாற்ற முந்தோற்றமும்... 2-190

நி

நிகழ்தகை மருங்கின் ... 2-826
நிகழ்ந்தது கூறி ... 1-122
நிகழ்ந்தது நினைத்தற் ... 1-120
நிம்பிரி கொடுமை ... 3- 79
நிரனிறுத்தமைத்த ... 3-152
நிரனிறுத் தமைத்தலும்.. 3-308
நிரைமுதல் வெண்சீர் ... 3-270
நிரையவணிற்பின் ... 3-290
நிலந்தீநீர்வளி ... 4-584
நிலம் பெயர்ந்துறைதல்... 2-742
நிலையிற்றப்பெயர் ... 4-555
நிறைமொழிமாந்தர் ... 4-484

நீ

நீர்வாழ் சாதியுளறு ... 4-554
நீர்வாழ் சாதியுணந்து ... 4-569

நு

நுண்மையுஞ் சுருக்கமும் 4-483

நூ

நூலேகரகம் ... 4-472

நெ

நெடுஞ்சீர் வண்ணம் ... 4-517
நெடுவெண்பாட்டேகுறு 4-374
நெடுவெண்பாட்டேமுந். 4-463
நெல்லும்புல்லும் ... 4-545

நே

நேரவணிற்பின் ... 3-194

பகுதி-பக்கம்.

நேரிணைமணியை ... 4-477
நேரீற்றியற்சீர் ... 3-288
நேர்நிலை வஞ்சிக் ... 3-232

நோ

நோயு மின்பமும் ... 2-777

ப

பகற்புணர் களனே ... 2-584
படையியங்கரவம் ... 1-153
படையுங்கொடியும் ... 4-573
பண்ணைத்தோன்றிய ... 3- 1
பண்பிற் பெயர்ப்பினும்... 2-405
பத்தெழுத்தென்ப ... 3-228
பரத்தைமைமறுத்தல ... 2-729
பரத்தை வாயிலென ... 4-504
பரத்தை வாயிருறல் ... 2-821
பரிசில் பாடாண்டிணை ... 4-575
பரிபாடல்லே ... 4-376
பரிபாட்டெல்லை ... 4-473
பழிப்பில சூத்திரம் ... 4-604
பறழெனப்படினும் ... 4-536
பனியெதிர் பருவம் ... 1- 19
பன்றிபுல்வாயுழையே ... 4-552
பன்றிபுல்வாய் நாயென.. 4-561
பன்னூறு வகையினும... 2-576

பா

பாங்கருஞ் சிறப்பிற் ... 1-275
பாங்கனிமித்தம் ... 2-418
பாடாண்பகுதி ... 1-295
பாட்டிடைக்கலந்த .. 4-486
பாட்டிடைவைத்த ... 4-47
பாட்டி யென்பது ... 4-569

பகுதி-பக்கம்.

பாட்டுரை நூலே ... 3-294
பாணன் கூத்தன் ... 4-494
பாநிலை வகையே . 4-449
பாராட்டெடுத்தன் ... 3- 38
பார்ப்பாரறிவர் .. 4-502
பார்ப்பான் பாங்கன் ... 4-493
பால்கெழுகிளவி ... 2-784
பாவிரி மருங்கினை ... 4-360

பி

பிடியென் பெண்பெயர்... 4-559
பிணவலெனினும ... 4-562
பிள்ளை குழவி ... 4-544
பிள்ளைபெயரும் ... 4-539
பிறப்பே குடிமை ... 3- 73
பிறிதொடுபடாது ... 3-126
பின்பனிதானும் ... 1- 27
பின்முறையாக்கிய ... 2-746

பு

புகுமுகம்புரிதல் ... 3- 29
புணர்தல் பிரிதல் ... 1- 42
புணர்ந்துடன்போகிய... 2-679
புதுமை பெருமை ... 3- 15
புலத்தலு மூடலும் ... 2-727
புல்லுதன்மயக்கும் ... 2-704
புல்லு மரனும ... 4-548
புல்வாய் கல்வி ... 4-560
புல்வாய் புலியுழை ... 4-552
புள்ளுமுரிய ... 4-559
புறக்காழனவே ... 4-580
புறஞ்செயச் சிதைத்தல். 3- 43
புறத்திணை மருங்கின்... 1-148

பகுதி-பக்கம்.

புறத்தோராங்கட் ... 2-751
புறநிலை வாயுறை ... 4-471
புறப்பாட்டு வண்ணம் ... 4-519

பூ

பூப்பின் புறப்பாடீராறு ... 2-761

பெ

பெண்ணுமாணும் ... 4-571
பெண்ணும்பிணவும் ... 4-562
பெயரும்வினையுமென் ... 1- 55
பெருமையுஞ் சிறுமை ... 3- 99
பெருமையுஞ்-மென்ப ... 3-118
பெருமையு முரணும ... 2-364
பெறற்கரும் ... 2-681
பெற்றமுமெருமை ... 4-562
பெற்றமெருமை ... 4-554

பே

பேடையும் பெடையும் ... 4-533
பேடையும் பெடையுநாடி 4-559

பொ

பொய்யும் வழுவும ... 2-601
பொருளெனமொழிதலும் 2-808
பொருளேயுவமம் ... 3- 98
பொருள் வயிற்பிரித 1- 79
பொழிப்புமொரூஉவும் ... 3-308
பொழுதுதலைவைத்த ... 2-836
பொழுதுமாறுமுட்கு ... 1- 97
பொழுதுமாறுகாப் ... 2-799

போ

போக்கியல்வகையே ... 4-402

பகுதி-பக்கம்.

போலமறுப்ப .. 3-111

ம

மகவும் பிள்ளையும் ... 4-540
மக்கடாமே .. 4-551
மக்கணுதலிய ... 1-145
மங்கலமொழியும் ... 2-855
மண்டிலங்குட்டம் ... 4-373
மயிலுமெழாலும் ... 4-554
மரபுநிலைதிரிதல் ... 4-585
மரபுநிலை திரியா-என்ப 1-126
மரபுநிலைதிரியா-செறியின 4-587
மரபுநிலை திரியின் ... 4-586
மரபே தானும் ... 3-295
மருட்பாவேனை ... 3-302
மறங்கடைக்கூட்டிய ... 1-164
மறுதலைக் கடாஅ ... 4-608
மறைந்தவற காணடல் ... 2-431
மறைந்த வொழுக்கத் ... 2-589
மறைவெளிபபடுதலுந் ... 4-490
மனையோள் கிளவி ... 4-500
மனைவிதலைத்தாட் ... 2-738
மனைவிமுன்னர் ... 2-738
மனைவியுயர்வும் ... 2-825
மன்னர் பாங்கிற் ... 1- 76

மா

மாட்டு மெச்சமும் ... 4-513
மாத்திரைமுதலா ... 4-351
மாத்திரை யெழுத்தியல் 3-159
மாயோன் மேய ... 1- 12
மாவு மாக்களும் ... 4-550
மாற்றருங் கூற்றம் ... 1-276
மாற்றருஞ் சிறப்பின் ... 4-531

பகுதி-பக்கம்.

மி

மிக்கபொருளினுட் ... 2-814

மு

முச்சீரானும் ... 3-239
முச்சீர் முரற்கையுண் ... 3-284
முடுகியல்வரையார் ... 3-280
முடுகுவண்ண ... 4-52
முட்டுவயிற் கழறன் ... 3- 62
முதலுஞ்சினையுமென்ற 3- 94
முதலெல்பபடுவதா ... 1- 52
முதலெனப்படுவது ... 1- 12
முதலொடு புணர்ந்த ... 2-417
முதல் கருவுரி ... 1- 6
முதல்வழியாயினும் ... 4-612
முதற்றொடை பெருகி... 4-410
முக்காலல்லது ... 2-575
முந்நீர் வழக்கம் ... 1- 79
முயற்சிக்காலத் ... 2-581
முழுமுதலரண ... 1-204
முறைப்பெயர் ... 2-816
முற்றியலுகரமும் ... 3-181
முன்னிரையுறினும் ... 3-193
முன்னிலைப் புறமொழி 2-739
முன்னிலையாக்கல் ... 2-369
முன்னிலையசான்றும் ... 1-141
முன்னிலைய மூன்றும் ... 2-415

மூ

மூங்காவெருகெலி ... 4-536
மூடுங் கடமையும் ... 4-569
மூப்பேபிணியே ... 3- 12
மூவாறெழுத்தே ... 2-228

பகுதி-பக்கம்.

மூவைந்தெழுத்தே ... 3-228
மூன்றுறுப் படக்கிய ... 4-478

மெ

மெய்தெரிவகையின் ... 4-577
மெய்தொட்டுப்பயிறல் ... 2-374
மெய்பெறுமரபிற் ... 4-345
மெய்பெறுவகையே ... 4-492
மெய்ப்பெயர்மருங் ... 1-311
மெல்லிசை வண்ணம் ... 4-516

மே

மேலோர் முறைமை ... 1- 74
மேலோர் மூவர்க்கும் ... 2-601
மேவிய சிறப்பின் ... 1- 71
மேற்கிளந்தெடுத்த ... 4-600

மை

மைந்து பொருளாக ... 1-225

மொ

மொத்தைதபுந்தகரும் ... 4-556
மொழிகரந்துசொல் ... 4-389
மொழியினும் பொரு ... 3-326
மொழியெதிர் ... 2-756

மோ

மோனையெதுகை ... 3-306

யா

யாறுங்குளனும் ... 2-767
யாடுங்குதிரையு ... 4-539
யானையுங்குதிரையும் ... 4-541

வ

வசையொடு நசையொடு 4-392

வஞ்சிச்சீரென ... 3-204
வஞ்சிதானே ... 1-187
வஞ்சித்தூக்கே ... 3-285
வஞ்சி மருங்கினும் ... 3-212
வஞ்சிமருங்கின் ... 3-208
வஞ்சி யடியே ... 3-238
வண்டேயிழையே ... 2-359
வண்ணகந்தானே ... 4-407
வண்ணந்தாமே ... 4-523
வண்ணநதானே ... 4-514
வண்ணம் பசந்து ... 2-786
வருத்த மிகுதி ... 2-823
வரை விடைவைத்த ... 2 477
வல்லிசை வண்ணம ... 4-516
வழக்கெனப்படுவது ... 4-587
வழக்கொடு சிவணிய ... 1-308
வழங்கியன மருங ... 1-300
வழிபடுதெய்வ ... 1-363
வழியினெறியே ... 4-594
வழியெனப்படுவது ... 4-593
வனப்பியறூனே ... 4-523

வா

வாகைதானே ... 1-242
வாயிலுசாவே ... 4-505
வாயிற்கிளவி ... 2-850
வாயுறை-யவை ... 4-364
வாயுறை-வயங ... 4-366
வார்கோட்டியானை ... 4-522
வாழ்த்தியல வகையே... 4-361

வி

விட்டகல்வின்றி ... 4-605
விரவியும் வருஉம் ... 3- 88
விராஅயதளையும் ... 3-272
விராஅய்வரினும் ... 3-255
விருந்தே தானும் ... 4-527
வில்லும் வேலும் ... 4-580
வினைபயன் மெய்யுரு ... 3- 82
வினையினீங்கி ... 4-589
வினையுயிர்மெலி ... 3- 49
வினைவயிற்பிரி ... 2-772

வெ

வெண்சீரற்றசை ... 3-218
வெண்டளை விரவி ... 3-274
வெண்பாட்டீற்றடி ... 3-287
வெண்பாவியலினும் ... 3-291
வெண்பாவுரிச்சீர் ... 3-209
வெளிப்படவரைதல் ... 2-593
வெளிப்படைதானே ... 2-594
வெறியறிசிறப்பின் ... 1-165

வே

வேட்கை மறுத்து ... 2-804
வேட்கையொருதலை ... 2-366
வேண்டியகல்வி ... 2-763
வேந்துவிடுதொழில் ... 4-579
வேந்துவிடுமுனைஞர் ... 1-151
வேந்துவினையியற்கை ... 1- 78
வேந்துறு தொழிலே ... 2-764
வேறுபடவந்த ... 3-139
வேழக்குரித்தே ... 4-551
வேளாண்மாநதா ... 4-578

வை

வைகுறுவிடியல் ... 1- 20
வைசிகன்பெறுமே ... 4-577

"ஈட்டு மகத்திணையு மேய்ந்த புறத்திணையுங்
காட்டு களவியலுங் கற்பியலு—மீட்டும்
பொருளியன்மெய்ப் பாடுவமம் போற்றிய செய்யுண்
மரபியலு மாம்பொருளின் வைப்பு"

"பூமலர்மென் கூந்தால் பொருளியலிற் சூத்திரங்க
ளாவவறு நூற்றறுபத் தைந்தாகு—மூவகையா
லாயிரத்தின் மேலு மறுநூற் றொருபதென்ப
பாயிரத்தொல் காப்பியங்கற் பார்."

[இவ்வெண்பாக்களால் பொருளதிகாரச் சூத்திரங்கள் 665 என்பதும், தொல்காப்பிய முழுதுக்குமுள்ள சூத்திரங்கள் 1610 என்பதும் விளங்கும். முன் அச்சுப்பிரதியில், பொருளதிகாரச் சூத்திரங்கள் 666 ஆகக் காணப்படுவது, 462 ஆவது சூத்திரத்தை 463 என இலக்கமிட்ட அச்சுப்பிழையாலே யொழிய வேறல்ல.]

அறிக்கை : உதாரணச் செய்யுள்களுக்கு முதற் குறிப்பகராதி, பிழைதிருத்தங்கள், ஆராய்ச்சிக் குறிப்புக்கள் முதலியன தனிப்புத்தகமாக வெளியிடப்படும்.

# குறிப்பு

170-ஆவது பக்கம் 20-ஆவது வரிமுதல் 171-ஆவது பக்கம் 4-ஆவது வரிவரையில் உள்ள உரைப் பகுதியில், 'குற்றுகரம்' 'குற்றியலுகரம்' எனவருவனவற்றை முறையே 'குற்றிகரம்' 'குற்றியலிகரம்' எனத் திருத்திக்கொள்க.

• இப்பிழை மயக்கத்துக் கிடந்தராக் கூடியதாதலால் ஈண்டுத் தனியே எடுத்துக் காட்டப்பட்டது.

…கம்பெனியாரால் தமது 'மினெர்வா' அச்சக…
பதிப்பிக்கப்பட்டது.

